# சிந்தனை

தொகுதி -XIV
இதழ்-2

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஜுலை-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி -XIV ஜூலை -2004 இதழ்-2

# சிந்தனை

ஆசிரியர்

பேராசிரியர் கார்த்திகேசு குகபாலன்

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CINTANAI**

The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and November every year.

CINTANAI is a refereed Journal, Its referees come from University scholars and the National scholarly community.

Editor

**Prof.Karthigesu Kugabalan,**
B.AHons(Cey) M.A, Ph.D(Jaf)
Post M.A Dip.in Population Studies (Madras)
Dept of Geography, University of Jaffna.

Associate Editor

**Dr.S.Sivalingarajah,**
B.A Hons, M.A, Ph.D (Jaf),
Dept of Tamil, University of Jaffna.

Managing Editor

**Prof.S.Krishnarajah**
B.A Hons(Jaf), M.A (Mysore)
Dept. of History,
University of Jaffna,

Editorial Board

**Prof.N.Ganakumaran** M.A, Ph.D
**Dr.M.Vedanathan** M.A, Ph.D
**Mrs.S.Krishnakumar** M.A
**Dr.P.Pushparatnam** M.A, Ph.D
**Mr.M.Sinnathamby** M.A, M.Phil,
**Dr.K.Visakaruban** M.Phil, Ph.D
**Mrs.K.Reveendra** M.Phil,
**Mr.T.Sanathanan** M.Phil,

Editorial Communications should be addressed to the Editor.

Business Communications should be addressed to the Managing Editor

Books for review should be sent to the Editor.

Annual subscription — Local: Rs 600/= — Foreign: £ 20 : $30

Published by — The Faculty of Arts, University of Jaffna, Jaffna, SriLanka.

Printed by — Harikanan Printers, K.K.S Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **சிந்தனை** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் ஆய்விதழாகும். இவ் இதழ் ஆண்டுக்கு மும்முறை மார்ச், ஜூலை, நவம்பர் மாதங்களில் வெளியிடப்படுகின்றது. பிரசுரிக்கப்படும் கட்டுரைகள்: பொருளியல், புவியியல், அரசியல், வரலாறு, தொல்லியல், சமூகவியல், கல்வியியல், மானிடவியல், மெய்யியல், மொழியியல், தமிழ், வடமொழி, சமயம், நாகரிகம் முதலிய துறைகளில் உள்ள பொருட் கூறுகள் பற்றியனவாக அமையும்.

* **சிந்தனை**யில் வெளியாகும் கட்டுரைகளின் தகுதி, பல்கலைக்கழக சிரேஷ்ட ஆய்வாளர்களாலும், இலங்கையின் ஏனைய சிரேஷ்ட ஆய்வாளர்களாலும் நிர்ணயிக்கப்படுகின்றது.

* **சிந்தனை**யில் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட விரும்புவோர் கட்டுரையின் இரு பிரதிகளைத் தட்டச்சில் பதிப்பித்து ஆசிரியருக்கு அனுப்புதல் வேண்டும். அடிக்குறிப்புக்கள், உசாத்துணை விபரங்கள் ஆகியன கட்டுரையின் இறுதியில் அமைதல் வேண்டும்.

* **உசாத்துணை** விபரங்கள் பின்வரும் ஒழுங்குமுறையில் தரப்படுதல் வேண்டும். கட்டுரை எனில்: ஆசிரியர் பெயர், முதலெழுத்துக்கள், அடைப்புக்குறியினுள் வெளியிடப்பட்ட ஆண்டு, கட்டுரைத் தலைப்பு, சஞ்சிகையின் பெயர், தொகுதி இலக்கம், கட்டுரை இடம்பெற்றுள்ள பக்கங்கள்.

நூல் எனில்: ஆசிரியர் பெயர், முதலெழுத்துக்கள், அடைப்புக்குறியினுள் வெளியிடப்பட்ட ஆண்டு, நூலின் தலைப்பு, பதிப்பு விபரம், வெளியிடப்பட்ட இடம், வெளியிட்டோர் விபரம்.

* **கட்டுரை** அனுப்புவோர் தங்கள் பெயர், பட்டங்கள், பதவிகள், அலுவலக முகவரி ஆகிய விபரங்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித்தாளில் குறித்து அனுப்புதல் வேண்டும். கட்டுரையின் தலைப்பினையும் ஆங்கிலத்தில் குறிப்பிடுக. அனுப்பப்படும் கட்டுரைகள் ஆய்வு வளர்ச்சிக்கு வழங்கும் பங்களிப்பினைச் சுருக்கமாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

* **சந்தா** கொடுப்பனவுகள் சிந்தனையின் நிர்வாக ஆசிரியருக்கு இலங்கையில் காசுக்கட்டளை, தபாற்கட்டளை, காசோலை மூலமும் பிறநாடுகளிலிருந்து வங்கிக் கட்டளைகள் மூலமும் அனுப்பப்பட வேண்டும். மாற்றிதழாக சிந்தனையினைப் பெற விரும்புவோர் நிர்வாக ஆசிரியருடன் தொடர்பு கொள்க.

* **ஆண்டுச் சந்தா** விபரம்: உள்ளூர் ரூபா 600.00 வெளியூர் : £ 20 அல்லது : $30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரை ஆசிரியர்கள்

1. திரு.க. அருந்தவராஜா
   B.A.Hons (Jaf)
   விரிவுரையாளர்,
   வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்,

2. திரு.க.அன்ரன் டயஸ்.
   B.A. Hons M.Phil (Jaf)
   சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II
   மெய்யியல் ஆங்கிலத்துறை,
   யாழ். பல்கலைக்கழகம்

3. கலாநிதி (திருமதி) இ.கயிலைநாதன்
   B.A.Hons (Kelaniya)M.Phil,Ph.D(Jaf)
   சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I
   மொழியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்

4. கலாநிதி செ.யோகராசா
   B.A.Hons; B.Phil (Colombo)
   M.A , Ph.D (Jaf)
   (Dip in Edu.(Jaf)
   சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I
   தலைவர் , மொழித்துறை,
   கிழக்குப் பல்கலைக்கழகம்.

5. கலாநிதி கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்
   B.A.Hons, M.Phil (Jaf)
   Ph.D (Tanjavour)
   P.G.Dip in J.M.C.(Madurai)
   P.G.Dip in T.A (Karaikkudi)
   சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II
   தமிழ்த்துறை,
   யாழ். பல்கலைக்கழகம்.

6. பேராசிரியர்.நா.ஞானகுமாரன்
   B.A.Hons, (Kelaniya)
   M.A (Jaf) Ph.D (Jabalpur)
   இணைப்பேராசிரியர்,
   மெய்யியற்றுறை,
   யாழ். பல்கலைக்கழகம்.

7. திருமதி.ஜெ.இராசநாயகம்
   B.A. Hons M.Phil (Jaf)
   சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II
   கல்வியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.

8. பேராசிரியர். செல்லையா கிருஷ்ணராசா
   B.A.Hons (Jaf) M.A. (Mysore)
   இணைப்பேராசிரியர்
   வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

9. பேராசிரியர். கா.குகபாலன்
   B.A.Hons (Ceylon) M.A,PhD (Jaf)
   Post M.A.Dip in Population Studies (Madras)
   இணைப்பேராசிரியர்,
   புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்

10. திரு. பொ.செங்கதிர்ச்செல்வன்
    B.A. Hons, M.Phil (Jaf)
    சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II
    தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

11. திரு.க.தேவராசா
    B.Sc (Business Administration)
    M.A.(Jaf).
    சிரேஷ்ட விரிவுரையாளர், தரம். I
    தலைவர், வணிகத்துறை
    யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | யாழ்ப்பாணக் குடாநாட்டின் புகையிலை வர்த்தகத்தில் மலையாளம்<br>திரு.க.அருந்தவராஜா | 1–10 |
| 2. | இந்துக்களின் கனவுக் கோட்பாடு<br>திரு. க. அன்ரன் டயஸ் | 11–22 |
| 3. | இந்துசமயத்தில் பழமொழிகள்<br>கலாநிதி (திருமதி) இ. கயிலைநாதன் | 23–32 |
| 4. | இலங்கைப் புகலிட நாவல்கள்<br>கலாநிதி.செ.யோகராசா | 33–50 |
| 5. | யாழ்ப்பாணத் தமிழரிடையே வழங்கும் "சத்தியம் செய்தல்"<br>குறித்த நம்பிக்கை வழக்கம்<br>கலாநிதி.கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் | 51–61 |
| 6. | மெய்யியலில் கெடுதி பற்றிய பிரச்சினை – ஓர் ஆய்வு<br>பேராசிரியர். நா.ஞானகுமாரன் | 62–74 |
| 7. | முன்பள்ளிக் குழந்தைகளிடையே காணப்படும்<br>பிரச்சினைகளும், அவற்றைக் கையாளும் முறைகளும்.<br>திருமதி.ஜெ.இராசநாயகம். | 75–83 |
| 8. | இலங்கையில் கிடைத்த பார்வதி வெண்கலச் சிலைகள்<br>பேராசிரியர். செல்லையா கிருஷ்ணராசா | 84–96 |
| 9. | இந்து மக்களின் பரம்பல் – கலாசார குடிப் புள்ளியியல் நோக்கு.<br>பேராசிரியர். கா.குகபாலன் | 97–111 |
| 10. | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் இலக்கணச் சுருக்கம் : ஓர் அறிமுகம்<br>திரு.பொ.செங்கதிர்ச்செல்வன் | 112–118 |
| 11. | தந்திரோபாய உருவாக்கற் செய்முறையில் வெளிச்சூழல் ஆய்வின் பங்கு<br>திரு.க.தேவராசா | 119–129 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் குடாநாட்டின் புகையிலை வர்த்தகத்தில் மலையாளம்

திரு. க.அருந்தவராஜா

## ஆய்வுச் சுருக்கம்

*மலையாளப் புகையிலை வியாபாரமானது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் மத்திய பகுதிவரை யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் பொருளாதாரத்திலே பாரிய தாக்கத்தினை உண்டாக்கிய ஒரு வியாபார நடவடிக்கையாகக் காணப்படுகின்றது. இவ்வியாபார நடவடிக்கையின் தோற்றம், அதன் போக்கு, அதன் வீழ்ச்சி போன்ற விடயங்களைப் பெருமளவுக்கு அக்காலப்பகுதியில் வெளிவந்த ஆதாரங்களுடன் இங்கு ஆராயப்படுகின்றது.*

### அறிமுகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்கால பகுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இலங்கையின் வட பகுதிக்கும் இந்தியாவின் திருவாங்கூர் என்ற இடத்துக்கும் இடையிலே பிரபலமாக நடைபெற்ற ஒரு வியாபார நடவடிக்கையே மலையாளப் புகையிலை வியாபார நடவடிக்கையாகும். இந்நடவடிக்கையின் மூலம் அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாடு பெருமளவு வருமானத்தினைப் பெற்றுக் கொண்டது. இவ்வியாபாரம் தொடர்பாக வெளியீடுகளோ ஏனைய ஆக்கங்களோ பெருமளவுக்கு வரவில்லையென்றே கூற வேண்டும். அந்தவகையில் இக்கட்டுரையில் இவ்வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் வெளிவந்து கொண்டிருந்த ஈழகேசரி, இந்துசாதனம் போன்ற பத்திரிகைகள் பிரதான ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மலையாளப் புகையிலை வியாபாரம் தொடர்பான விடயங்களை அறிந்து கொள்வதற்கு இவை மிகவும் சிறந்த ஆதாரங்களாக இன்றும் காணப்படுகின்றன.

### குடாநாட்டின் பொருளாதாரம்

இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருக்கின்ற இலங்கைத்தீவின் வட பகுதியில் காணப்படுகின்ற குடாநாடே யாழ்ப்பாணக் குடாநாடாகும். இது தனக்கென்ற சில குணஇயல்புகளையும், சமூகக் கட்டுப்பாடுகளையும், வழக்காறுகளையும், பொருளாதார ஒழுங்கு முறைகளையும் நீண்ட காலமாகவே பேணி வந்துள்ளது. இத்தகைய யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்றில், அதன் வளர்ச்சியில் பொருளாதார நடவடிக்கைகள் கணிசமான பங்கினை நீண்ட காலமாகவே வகித்து வந்திருக்கின்றன. எனினும் காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ற வகையில் இவற்றின் தன்மைகள் காலத்திற்குக் காலம் மாறுபடுவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக விவசாயமே இதன் அடிப்படையாக இருந்தாலும் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பயிர்கள் இவ்விடத்தினை நிரப்பிக் கொண்டன.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து ஏறத்தாளநான்கு நூற்றாண்டுகள் வரை ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி இங்கே காணப்பட்டது. இவர்கள் தமது ஆட்சிக்காலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில் விவசாயத்தின் வளர்ச்சிக்கு தம்மாலான பங்கினை வழங்கியிருந்தனர். நெல், குரக்கன், வரகு போன்ற தானியங்களும் எள்ளு, பயறு, வாழை, கமுகு, கரும்பு பருத்தி போன்றவையும் இக்காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டன[1]. நெசவுக் கைத்தொழில், சாயக் கைத்தொழில் போன்றவையும் வளர்ச்சி கண்டிருந்தன. இவற்றினை விட வெளிநாடுகளுடனான வாணிபமும் குறிப்பிடத்தக்களவு நடைபெற்றதென்றெ கூறவேண்டும்.

யாழ்ப்பாண அரசு நிலைத்திருந்த காலத்திலும் சரி போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் வட இலங்கையினை ஆட்சி செய்த காலப்பகுதியலும் சரி யாழ்ப்பாணமும் தென்னிந்தியாவும் வர்த்தக அடிப்படையில் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தன.[2] குறிப்பாக மலையாளம், சோழ மண்டலக்கரை ஆகிய வற்றுடன் நடைபெற்ற வர்த்தகமானது யாழ்ப்பாணத்தின் உயிர் நாடியாக இருந்து வந்தது. யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பனம் பொருட்கள் உட்பட பல பொருட்கள் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. யாழ்ப்பாணமக்களுக்கு நாளாந்தம் தேவைப் படுகின்ற பல்வேறு பொருட்கள் மலையாளத்திலிருந்தும் தமிழ் நாட்டிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டன. இத்தகைய வியாபார நடவடிக்கையானது தொடர்ந்து வந்த ஆங்கிலேயர் காலத்திலும் நீடித்தது.

### மலையாளப் புகையிலை வியாபாரம்

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் நடுப் பகுதியில் வடபகுதியில் முக்கியமான வாணிப நடவடிக்கையாக மலையாளப் புகையிலை வியாபாரம் இருந்து வந்தது. இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து பெருமளவு புகையிலை மலையாளத்துக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டது.

அதே நேரத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்ற ஐரோப்பியர்களின் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குப் பிறநாடுகளிலிருந்து புகையிலை இறக்குமதி செய்யப்பட்டமைக்கான ஆதாரங்களும் உண்டு. யாழ்ப்பாணச்சரித்திரம் என்ற நூலில் போர்த்துக்கேயர் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட புகையிலை தொடர்பாக எடுத்துக் காட்டப்பட்ட பின்வரும் கூற்று இதனைத் தெளிவாக்குகின்றது.

"புகையிலை வரியும் குத்தகையாய் விற்கப்பட்டது. குத்தகைக்காரனைத் தவிர ஒருவரும் புகையிலை விற்கக் கூடாது எனவும் பிற தேசங்களிலிருந்து புகையிலை விற்பதற்கு வருவிக்கப்பட்டால் அதனைக் குத்தகைக் காரனுக்கு விற்றுப் போட வேண்டுமெனவும், அவனுடைய உத்தரவுச் சீட்டு இல்லாமல் எவரும் புகையிலை வைத்திருக்கப்படாதெனவும், வேளாளரும், பரதேசிகளும் தங்கள் உபயோகத்திற்கு மாத்திரம் வேண்டிய புகையிலை வைத்திருப்பதேயொழிய சந்தையில் விற்கப்படாதெனவும், களவாக கொண்டு வரப்பட்டால் குத்தகைக்காரன் அதைப்பற்றி பாக்றருக்கு அறிவிக்க வேண்டுமெனவும் கட்டளையிருந்தது."[3]

போர்த்துக்கேயர் காலத்தில் மட்டுமன்றி ஒல்லாந்தர் காலத்திலும் பிறதேசங்களிலிருந்து வருகின்ற புகையிலைக்கு 100க்கு 30 வீதம் வரி அறவிட்டிருந்ததனையும் அறிய முடிகிறது.[4] பொதுவாக இம்மலையாளப் புகையிலை வியாபாரத்தில் அரசாங்கத்திற்கு கிடைத்த வருமானம் பற்றியும் போர்த்துக்கேயர்களின் ஆட்சிக் காலத்திலிருந்து சான்றுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்துள்ளன. குத்தகைக்காரர்களுக்கு மட்டுமே புகையிலை விற்பனை செய்யவேண்டு மென்று அரசு சட்டமொன்றை ஏற்படுத்தியதுடன் 1645 இல் அரசாங்கத்திற்கு இப்புகையிலை வியாபாரத்தின் மூலம் 5000 பர்தாக்கள் வரியாகவும் கிடைத்தது.[5]

**ஆங்கிலேயர் காலத்தில் மலையாளப் புகையிலை வியாபாரம்**

ஆங்கிலேயர் காலத்தில் நடைபெற்ற மலையாளப் புகையிலை வியாபாரமானது சுமாத்திராவில் உள்ள அல்ஜினுக்கும் இந்தியா விலுள்ள திருவாங்கூருக்கும் இடையிலே நடைபெற்றது.[6] இவ்வாறு பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட புகையிலையைக் கொண்டே அரிசியும் ஏனைய உணவுப் பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டன. தொடர்ந்தும் பலகாலமாக நடைபெற்ற இவ்வியாபாரமானது, யாழ்ப்பாண மக்களின் பொருளாதாரத்தின் உயிர் நாடியாக இருந்து வந்தது.

சாப்பிடுவதற்காக உபயோகிக்கப்பட்ட புகையிலையே தொடக்க காலங்களில் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு முதன் முதலாகக் கொண்டு செல்லப்பட்டது. நாசி நோய், சலரோகம் முதலிய நோய்களுக்கு புகையிலை உண்பது மிகவும் அமைதியினைக் கொடுப்பதாக அக்காலத்தில் நம்பப்பட்டது. மேலும் சுவாசக்குழாயில் தோன்றுகின்ற நோய்களுக்கு இது மிகவும் ஏற்றது என எண்ணியதன் காரணத்தினாலும் திருவாங்கூர் அரசாங்கம் இதனை ஆதரித்தது.

இப்பின்னணியில் திருவாங்கூர் அரசாங்கம் அக்காலத்தில் இப் புகையிலையைக் கொள்வனவு செய்து அனுப்புவதற்காக இங்குள்ளவர்களுடன் உடன்பாடும் செய்து கொண்டது. மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு செல்லப்படுகின்ற புகையிலையைச் சேமித்து வைக்கின்ற நோக்குடன் இந்தியாவில் கொல்லம், ஆலப்பள்ளி போன்ற இடங்களில் அரசாங்கம் பண்டகசாலைகளையும் அமைத் திருந்தது. ஆரம்பகாலத்தில் இறக்குமதி செய்யப்படுகின்ற புகையிலை அரசாங்கத்திற்கு சொந்தமாகி விடுவதுடன் தீர்வைகளும் அதற்கு விதிக்கப்படவில்லை. இறக்குமதி செய்யப்பட்ட புகையிலையை அரசாங்கம் அங்கிருந்து பிரபல வியாபாரிகளுக்கு நிலையான விலைக்கு விற்பனை செய்து வந்தது. எனவே இவற்றிலி ருந்து, ஆரம்பகாலங்களில் மலையாளப் புகையிலை வியாபாரம் அரசாங்கத்தின் பொறுப்பில் இருந்ததினை அறிய முடிகின்றது.

**தரகர் முறையின் தோற்றம்**

பிற்பட்ட காலங்களில் திருட்டுத்தன மாகச் சிலரினால் திருவாங்கூர் சமஸ்தானத்திற்குள் புகையிலை அனுப்பப் பட்டதன் காரணத்தினால் 1864 இல் அரசாங்கம் ஒரு சட்டத்தினைப் பிறப்பித்தது. இதன்படி இப்புகையிலை வியாபாரத்தினை எவரும் நடத்தலாமெனவும் அதேநேரம் முதலில் இறக்குமதி செய்யப்படுகின்ற புகையிலை அரசாங்கப் பண்டகசாலைக்கு முதலில் கொண்டு வரப்பட்டுத் தீர்வை கொடுக்கப் பட்டதன் பின்பே விற்பனை செய்யப்பட வேண்டுமென அதில் கூறப்பட்டது[7].

இக்கட்டத்திலிருந்துதான் தரகர் முறை இவ்வியாபாரத்தில் ஆரம்பித்தது. இவர்கள் திருவாங்கூர் அரசாங்கத்திற்கு ஒரு தொகைப் பணத்தினைக் கொடுத்து அவர்களிடம் அனுமதியினைப் பெற்றதன் பின்னர் (Licence) தமது கடமைகளை மேற்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டகசாலையிலிருந்து புகையிலையை அகற்றுகின்றபோதே பண்டகசாலை வரியாக சிறிதளவு பணம் கொடுக்கப்படுதல் வேண்டும். பண்டகசாலையில் புகையிலை இருக்கும்வரை அரசாங்கமே அதற்கு முழுப்பொறுப்பும் கொண்டிருக்கும். அக்காலத்தில் மாதமொன்றுக்கு ஒரு சிறப்பம் புகையிலைக்கு மூன்றுசதம் வாடகைப் பணமாகக் காணப்பட்டது. இவ்வாறு வாடகைப்பணம் குறைவாகக் காணப்பட்டதால் வியாபாரிகள் பெருமளவுக்கு நன்மையடைந்தனர் என்றே கூற வேண்டும்.

இப்பண்டகசாலை முறையினால் சில அனுகூலங்களும் கிடைக்குமென அக்காலத்தில் எதிர்பார்க்கப்பட்டது.

* வீடுகளின் வாடகைப் பணத்திலும் பார்க்க அரசாங்கத்தின் பண்டகசாலைக்கு மாதாந்தம் கொடுக்கின்ற வாடகைப் பணம் குறைவாக இருந்தமை.
* வியாபாரிகள் காவலாளிக்கு சம்பளம் வழங்கப்பட வேண்டிய தேவை ஏற்படவில்லை.
* புகையிலை இறக்குமதி செய்யப்பட்டு ஆறு மாதங்கள் கடந்ததன் பின்னரே அவை விற்பனை செய்யப்படும். அதுவரை வாடகையும் தீர்வையும் கொடுக்க வேண்டியதில்லை. உடனே பண்டகசாலையிலிருந்து எடுத்துச் சென்றால் தீர்வையும் வாடகைப் பணமும் கொடுக்க வேண்டி ஏற்படும். இதனால் புகையிலை விற்பனை செய்யத் தொடங்கும் வரையான ஐந்து மாதங்களுக்கு ஏற்படுகின்ற வட்டிப் பணமும் வீணாகும்.

1864 தொடக்கம் தொடர்ந்து 20 வருடங்கள் மலையாளப் புகையிலை வியாபாரம் விருத்தி கண்டமையினால் திருவாங்கூர் அரசாங்கத்திற்கு தீர்வை வருமானம் அதிகரித்துச் சென்றது. இக்காலப் பகுதியில் விதிக்கப்பட்ட தீர்வைகளும் அதிகரித்தன.

### தீர்வை அதிகரிப்பு

திருவாங்கூர் அரசாங்கம் தனது வருமானத்தினை அதிகரிக்கின்ற நோக்குடன் காலத்துக்குக் காலம் தீர்வையின் அதிகரிப்பினை மேற்கொண்டது. இதனால் எதிர்ப்புகள் பலவற்றையும் அவ் அரசாங்கம் சந்திக்க வேண்டியேற்பட்டது. 1885இல் யாழ்ப்பாணப் புகையிலைக்கும் கோயம்புத்தூரிலிருந்து அனுப்பப்படுகின்ற புகையிலைக்கும் தீர்வையினை கண்டிக்கு 90 ரூபாவாக அரசாங்கம் அதிகரித்தது. தொடர்ந்து 1910 இல் சென்னை அரசாங்கம் இந்தியாவுக்குள் பிறநாடுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்ற புகையிலையின் தீர்வையினை 90ரூபாவிலிருந்து 900ரூபாவாக அதிகரித்தது. இந்த ஏற்பாடு திருவாங்கூருக்குள் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு செல்லப்படுகின்ற புகையிலைக்கு மட்டுமன்றி ஆலப் பள்ளி, கொல்லம் கொச்சி முதலிய துறைமுகங்கள் ஊடாக அனுப்பப்படுகின்ற புகையிலைக்கும் ஏற்புடையதாக இருந்தது.

இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் பிரபலம் வாய்ந்த அரசியல் தலைவர்களிலொருவராக விளங்கிய அ.சபாபதி என்பவர் இந்தியா சென்று யாழ்ப்பாணப் புகையிலைக்கு 900 ரூபா வரியாக விதிக்கப்படுவது நியாயமற்றதெனவும், அதனை முன்பிருந்தபடி 90 ரூபா தீர்வையுடன் மலையாளத்திற்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கும்படியும் கோரியிருந்தார். இதற்கிணங்க திருவாங்கூர் அரசாங்கம் முன்பிருந்தபடி 90 ரூபாவை தீர்வையாக விதிப்பதற்கு உடன்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து 1912ஆம் ஆண்டளவில் திருவாங்கூருக்குள் இறக்குமதி செய்யப்படுகின்ற யாழ்ப்பாணப் புகையிலையின் தீர்வை 90 ரூபாவிலிருந்து 110 ரூபாவாக உயர்த்தப்பட்டது. அதே நேரம் கோயம் புத்தூரிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற புகையிலையின் தீர்வை 60ரூபாவிலிருந்து 100ரூபாவாகவும் உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு திருவாங்கூர் அரசினர், காலத்திற்குக் காலம் புகையிலையின் வரியினை உயர்த்தி வந்தனர். 1939இலும் இவ்வாறான தொரு தீர்வை அதிகரிப்பு ஏற்பட்டது. அப்போது ஒரு கண்டிக்கு 200 ரூபாவாக தீர்வை உயர்த்தப்பட்டது. இதனை அக்காலப் பகுதிகளில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்துகொண்டிருந்த இந்து சாதனம் பத்திரிகை பின்வருமாறு குறை கூறுகின்றது.

"இந்திய அதிகாரிகள் யாழ்ப்பாணப் புகையிலையின் தீர்வைகளை இப்படிக் காலந்தோறும் உயர்த்திக்கொண்டு வந்தார்களேயொழிய கோயம்புத்தூர், திருநெல்வேலி முதலிய ஊர்களிலிருந்து திருவாங்கூர் செல்லும் புகையிலைக்கு எக்காலத்திலும் தீர்வை விலை உயர்த்தப்படவில்லை."[8]

குறிப்பாக இந்தியாவின் பகுதிகளிலிருந்து அனுப்பப்படுகின்ற புகையிலைக்கு தீர்வை குறைவாக விதிக்கப்பட, யாழ்ப்பாணத்திலிருந்து திருவாங்கூருக்கு அனுப்பப்படுகின்ற புகையிலைக்கு அதிகளவு தீர்வை விதிக்கப்பட்டதனால் அதனைக் கண்டித்து யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் கிளர்ச்சிகள் ஏற்படத் தொடங்கின. இது தொடர்பாக வியாபாரிகள், விவசாயிகள் ஆகியோர் அடங்கிய கூட்டமொன்று 1959 யூலை 16இல் புன்னாலைக் கட்டுவன் ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வாறு காலத்துக்குக் காலம் வரிகள் உயர்த்தப்பட்டு வந்தமைக்கு அக்காலப் பகுதியில் பல காரணங்கள் கூறப்பட்டு வந்தன. அவற்றில் ஒன்று அக்காலப் பகுதியில் தென்னிந்தியத் தொழிலாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் பல நெருக்கடிகளை ஏற்படுத்தி வந்ததென்பது முக்கிய காரணமாகும். மற்றைய காரணம் புகையிலை வரிகளை உயர்த்தி வருவதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியை பாதுகாத்து அவற்றினை அதிகரிப்பதென்பதாகும். தொடக்க காலங்களில் 15,00,000ரூபா பெறுமதியான புகையிலை மலையாளத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பட்டு வந்த கிளர்ச்சிகளின் பலனாகத் தீர்வை 65 ரூபாவாகக் குறைக்கப்பட்டு 135 ரூபாவாக திருவாங்கூர் அரசாங்கம் தீர்வையை மாற்றிக்கொண்டது. இதற்காக இலங்கை அரசாங்கம் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகையாக 1,00,000, ரூபாவை வழங்கியது.

இவ்விதமான பிரச்சினைகள் காரணமாக புகையிலைச் செய்கையில் பொருளாதாரம் தங்கி நிற்பது உகந்ததல்ல எனவும், மலையாளத்தை நம்புவதில் பயன் ஏற்படாது போன்ற கருத்துக்கள் அக்காலப் பத்திரிகைகள் பலவற்றில் வெளிவந்தன. இத்தகையதொரு கருத்தினை சமகாலத்தில் வெளிவந்து கொண்டிருந்த ஈழகேசரிப் பத்திரிகை பின்வருமாறு முன்வைக்கின்றது.

"மலையாள மக்கட்கு ஏற்ற புகையிலை பயிரிடும் சாமர்த்தியம் வாய்ந்த யாழ்ப்பாணக் கமக்காரர் பீடி,சிகரட் என்பன தயாரிப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ற புகையிலைச் செய்கை பண்ணவியலாது எப்போதும் மலையாளத்தை நம்பி வாழ்ந்து வருவதா? பல முறை இந்த ஆபத்திற்கு யாழ்ப்பாண மக்கள் ஆளாக வேண்டியிருக் கின்றது."[9]

பொதுவாக 1930 ஆம் ஆண்டின் பின்பாக திருவாங்கூரில் வாழ்ந்த விவசாயிகள் பெருமளவு நிதிநெருக்கடியினை எதிர்நோக்கியி ருந்தனர். இதற்குக் காரணம் அவர்கள் தமது உற்பத்திப் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்முடியாமல் போனமையாகும்.[10] இதன் காரணமாக அங்கே யாழ்ப்பாணப் புகையிலையை சில காலத்திற்கு உயர்வான விலைக்கு விற்பனை செய்ய முடியாமல் போயிற்று. அதே நேரத்தில் தொடர்ந்து திருவாங்கூருக்கு கோயம்புத்தூர், திருநெல்வேலி போன்ற இடங்களிலிருந்து புகையிலைஅனுப்பப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதனை உறுதிப்படுத்துகின்ற வகையிலே இந்து சாதனம் என்ற பத்திரிகையில் எஸ். அருளம்பலம் என்பவர் வரைந்த கட்டுரையில் பின்வரும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

"திருவாங்கூரில் தேங்காய் நல்ல நிலையில் விற்கப்பட்ட காலத்தில் எம் புகையிலை அங்கு மானமாக விற்கப்பட்டது. ஆனால் இங்கே வியாபாரம் வீழ்ச்சியடைய மக்கள் பணப் பிரச்சினையால் சிறந்த நல்ல புகையிலையை வாங்கி உபயோகிக்க முடியாது போயிற்று. இது மாத்திரமன்றி எமது சொந்தப் புகையிலை வியாபாரிமார் சிலவருடம் மலையாளப் புகை யிலைச் செய்கையில் ஈடுபட்டு யாழ்ப்பாணம் அனுபவிக்கும் முறையினைக் காட்டிக் கொடுத்து விட்டனர்.[11]

புகையிலை வியாபாரத்தின் இத்தகைய நெருக்கடிக்குத் தீர்வு காணுகின்ற நோக்கில் மலையாளப் புகையிலை வியாபாரிகள் முன்னூறுபேர் வரையானவர்கள் வர்த்தகக் கைத்தொழில் அமைச்சருக்கு அப்போதைய புகையிலை வியாபாரத்தின் நிலைமை பற்றியும் அதற்கு வேண்டிய முறைகளைக் கையாண்டு வியாபாரத்தினை விருத்தி செய்ய உதவி செய்யுமாறு கோரியும் விண்ணப்பம் ஒன்றினைச் சமர்ப்பித்திருந்தனர்.

இதன்போது பின்வரும் உதவிகள் அமைச்சரிடம் கோரப்பட்டிருந்தன.

- கோயம்புத்தூர் புகையிலைக்கும் யாழ்ப்பாணப் புகையிலைக்கும் ஒரேயள வான தீர்வையினை அறவிட வேண்டும்.
- புகையிலை துறைமுகத்தினை வந்தடைந்த உடனேயே தீர்வையினைக் கணிக்காமல் முன்பிருந்த முறைப்படி விற்பனை செய்கின்ற நேரத்தில் கணக்கிட வேண்டும்.
- யாழ்ப்பாணப் புகையிலையை இறக்குமதி செய்வதற்கு கொச்சித் துறைமுகத்தினை திறக்க வேண்டும்.
- திருநெல்வேலி முதலிய இடங்களுக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற புகையிலை யின் தீர்வையினைக் குறைக்க வேண்டும்.[12]

பொதுவாக மலையாளப் புகையிலை வியாபாரத்தின்போது யாழ்ப்பாண மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக் கியிருந்தனர். குறிப்பாகப் பண்டகசாலையில் புகையிலையைக் கொண்டு ஒப்படைக்கின்ற போது அது காணப்பட்ட நிறைக்கும் விற்பனை செய்யப்படுகின்ற அல்லது அங்கிருந்து அகற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தில் காணப்பட்ட நிறைக்கும் இடையிலே பாரிய வேறுபாடுகள் இருந்தன. இத்தகையதொரு நிலைமைக்கு அக்காலத்தில் பல காரணங்கள் கூறப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது புகையிலையைக் கடல் மார்க்கமாகக் கொண்டு செல்கின்ற போது அது ஈரமடை கின்றதெனவும், பின்னர் அது உலர்வதனால் இத்தகையதொரு நிலைமை ஏற்படுவதாகவும் கூறப்பட்டது. மேலும் புகையிலையினை உப்புத் தண்ணீர் தெளித்து உலர்த்துகின்றபோதும், சிப்பமாக்கப்படுகின்ற வேளையிலும் மேற்கூறப்பட்ட நிலைமை உண்டாவதாகக் கருதப்பட்டது.

மேற்கூறப்பட்ட பிரச்சினைகளைத் தவிர காலத்துக்குக் காலம் தீர்வைகள் உயர்த்தப் படுதல், தரகர்களின் கெடுபிடிகள் தொல்லைகள் போன்ற பிரச்சினைகளையும் அக்காலப் பகுதியில் மலையாளப் புகையிலை வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் எதிர்நோக்கினர்.

**ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் தோற்றம்.**

1934 இல் மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கம் தாபிக்கப்பட்ட நிகழ்வானது இவ்வியாபாரத்தில் ஒரு முற்போக்கான நடவடிக்கையாகக் கருதப்படுகின்றது. இச்சங்கம் வியாபாரிகளின் கைகளிலிருந்து வந்த வியாபாரத்தினை பொறுப்பேற்று நடத்தி அதில் வெற்றியும் கண்டது. இதன் காரணமாக வியாபாரிகள், தரகர்களின் தொல்லைகள் இவ்வியாபாரத்தில் ஓரளவுக்கு குறைக்கப் பட்டன. இச்சங்கமானது புகையிலை வியாபாரி களிடமிருந்து புகையிலையினை நேரடியாகவே பெற்றுக்கொண்டது.

ஐக்கிய வியாபரச் சங்கம் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி அக்காலத்தில் வெளி வந்த தமிழ்ப்பத்திரிகைகள் பல எடுத்துக் காட்டுகின்றன. இவ்விடயம் தொடர்பாக ஈழகேசரிப் பத்திரிகையில் வலியுறுத்தப்பட்ட ஒரு செய்தி பின்வருமாறு

"ஒரு ஐக்கிய சங்கத்தை அமைத்து அச்சங்கத்தாலே புகையிலையைத் தங்கள் செலவில் மலையாளத்திற்கு அனுப்பச் செய்யவேண்டும்...... இப்படி ஐக்கிய முறைப்படி வியாபாரத்தை நடத்த அரசினரே முன்வரவேண்டும்."[13]

இச்சங்கத்தின் தோற்றம் பற்றித் தனது மற்றொரு வெளியீட்டில் ஈழகேசரிப் பத்திரிகை பின்வருமாறு மகிழ்ச்சி தெரிவிக்கின்றது.

"கமக்காரருக்கு நிறைந்த நன்மைகளை செய்ய முற்பட்ட சங்கத்தை இப்போதே ஆதரித்து நிற்பது யாவரதும் கடனாகும்"[14]

இச்சங்கத்தின் வருகையினால் பாதிப் படைந்த பலரும் இதன் நடவடிக்கைகள் பற்றிக் குறை கூற முற்பட்டனர். குறிப்பாக தனிப்பட்ட ரீதியில் வியாபாரத்தினை மேற் கொண்டவர்கள் இச்சங்கம் அனுபவமற்றவர்களால் ஆரம்பிக்கப் பட்டதெனவும் இவர்கள் மூலம் அனுப்பப்படு கின்ற புகைலையைக் கொள்வனவு செய்யக் கூடாதெனவும் தென்னிந்தியாவிலிருந்து இச்சங்கத்தின் வருகையை விரும்பாதவர்கள் பிரச்சாரங்களில் ஈடுபட்டனர்.

1951 காலப்பகுதியில் இலங்கை – இந்திய நாடுகளுக்கிடையிலே வியாபார ஒப்பந்த மொன்றினைமேற்கொள்ளும் பொருட்டு ஒரு தூதுக்குழு இலங்கை வந்தது. எனினும் இவ்வியாபாரம் தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளையும் அக்குழு மேற்கொள்ள வில்லை. இலங்கை அரசும் போதிய அக்கறையை இவ்விடயத்தில் காட்டவில்லை.

1953இல் புகையிலை வியாபாரம் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை மேற்கொள் வதற்கு ஒரு குழு இலங்கையிலிருந்து இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றது. இக்குழுவில் சி.இராசரத்தினம், சு.நடேசன், வி.குமாரசாமி போன்ற பலர் அடங்கியிருந்தனர். இப்பேச்சுவார்த்தைகளின் முடிவில் 2500 கண்டிப் புகையிலையை நான்கு வருடங் களுக்குப் பெற்றுக்கொள்வதாகவும் இறக்கு மதித் தீர்வையில் சலுகை காட்டுவதா கவும் இந்திய அரசாங்கம் அறிவித்தது. இதில் மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கத்திற்கு மட்டும் 1660 கண்டிப் புகையிலையை அனுப்புவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் இந்திய அரசாங்கம் தான் செய்துகொண்ட உடன்பாட்டின்படி சரியான முறையில் நடந்து கொள்ளவில்லை. இதன் காரணமாக 130 கண்டிப்புகையிலை 1954 மே 16வரை இலங்கையில் தேங்கியிருந்தது.

இவற்றினைக் கருத்தில் கொண்டு சமகாலத்தில் வெளிவந்து கொண்டிருந்த ஒரு பத்திரிகையின் செய்தியில் பின்வரும் ஆலோசனை யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு கூறப்பட்டிருந்தது.

"இலங்கை அரசினர் இவ்விடயத்தை நன்கு ஆராய்ந்து ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய முன்வரவேண்டும். விநியோகம் செய்ய எப்போதும் மலையாளத்தை நம்பியிருப்ப தனால்தான் இந்தப் பரிதாப நிலை ஏற்படு கின்றது. யாழ்ப்பாணப் புகையிலையை விற்பனை செய்ய வேறுநாடுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டும். அல்லது காலத்திற்கேற்ற வேறுவிதப் புகையிலையை உண்டாக்கும் முறையை யாழ்ப்பாணக் கமக்காரர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.[15]

**வீழ்ச்சி நிலை**

1956இல் மலையாளப் புகையிலை வியாபாரத்தில் வீழ்ச்சித் தன்மையொன்று தெளிவாகத் தெரிந்தது. அக்காலப் பகுதியில் வெளிவந்து கொண்டிருந்த ஈழகேசரி வியாபாரத்திற்கு முடிவு காலம் நெருங்கி விட்டதாக பின்வருமாறு கூறுகின்றது.

"யாழ்ப்பாணத்து கமக்காரர்களின் உயிர்நாடியாக இருந்து நூறு வருடங்கள் அவர்களின் சீவனோபாயத்திற்கு உதவி புரிந்த மலையாளப் புகையிலை வியாபாரம் 1957ஐ அடுத்த வருட ஆரம்பத்துடன் முடிவடை கின்றது என்ற செய்தி துயரடைய வைக்கின்றது. இதனால் 25000 மக்கள் பாதிப்படைய வாய்ப்பதிகம்"[16]

இவ்வியாபாரம் 1960ஆம் ஆண்டை அடுத்த காலங்களில் முற்றாக வீழ்ச்சியடைந் தது. ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் என்றால் இலங்கையில் ஏனைய பகுதிகளில் உள்ள மக்களுக்கு இரண்டு பொருட்களே கண்முன் தெரியும். அவை பனையும் அதன் பொருட்களும். மற்றையது சுருட்டும் புகையிலையும்"[17] அவ்வளவு தூரத்திற்கு யாழ்ப்பாண மக்களின் பொருளாதாரத்தின் உயிர்நாடியாக இவை காணப்பட்டன. 1612இல் நமது நாட்டில் போர்த்துக்கேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட புகையிலை அல்வாய், கொக்குவில், கோண்டாவில், இணுவில், வேலணை, அனலைதீவு போன்ற இடங்களில் பெருவாரி யாகப் பயிர் செய்யப்பட்டது. இவ்வாறு பல ஆண்டுகளாக யாழ்குடாநாட்டு மக்களின் வாழ்வில் செல்வாக்குச் செலுத்திய இவ்வியாபாரத்தின் வீழ்ச்சிக்குப் பல காரணிகள் துணைநின்றன. குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இவற்றின் பிரதியீட்டுப் பொருட்களின் வருகை, இந்தியாவில் புகையிலை உற்பத்தியின் அதிகரிப்பு, இப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர் கள் வேறு தொழில்களை நாடியமை, மற்றும் அரசியல் காரணிகள் போன்ற பல காரணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் மலையாளப் புகையிலை வியாபாரம் வீழ்ச்சி கண்டது.

**முடிவுரை**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஐரோப்பியர் களால் அறிமுகப்படுத்தப்பட்ட புகையிலைச் செய்கை அவர்களின் காலத்திலேயே குடாநாட்டு மக்களால் முன்னெடுக்கப்பட்டு உலகறியச் செய்யப்பட்டது. அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒவ்வொரு பகுதியி லும் புகையிலை செய்கை பண்ணப்பட்டது. மதில்கள் புகையிலையால் நிறைந்தன. சுருட்டுக் கொட்டில்கள் மூலைக்கு மூலை இருந்தன. மலையாளத்திற்கு அனுப்பப்பட்ட புகையிலை தரமானதாகவும் அவர்களால் அக்காலத்தில் விரும்பப்பட்டதாகவும் காணப்பட்டது. இந்தியாவின் பிறபகுதியிலிருந்து புகையிலை திருவாங்கூருக்கு அனுப்பப்பட்டாலும் குடாநாட்டுப் புகையிலைக்கு தனி மதிப்பு இந்தியாவில் இருந்தது. அக்காலத்தில் ஐக்கிய வியாபாரச் சங்கம் அமைக்கப்பட்டு ஒழுங்கான முறையில் இவ்வியாபாரம் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. தென்னி லங்கை அரசாங்கம் இதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்தைக் கண்டு பொறாமை அடைந்தது. மேலும் அரசின் ஆதரவு இவ் வியாபாரம் தொடர்பாகக் குடாநாட்டு மக்களுக்கு இருக்கவில்லையென்றே கூறவேண்டும். இவ்வாறு பலகாலம் செல்வாக்குப் பெற்று விளங்கிய இவ்வியாபாரம் இருபதாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து தனது செல்வாக்கினை இழந்து சென்றதனை அவதானிக்க முடிகிறது.

## அடிக்குறிப்புக்கள்

1. பத்மநாதன், சி; (1992)– "ஆட்சிமுறை" யாழ்ப்பாண இராச்சியம், சிற்றம்பலம், சி.க.(பதிப்பாசிரியர்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம், ப – 123
2. மேற்படி, ப – 125
3. இராசநாயகம், செ; (1999) யாழ்ப்பாணச் சரித்திரம் ஏசியன் – எடுக்கேசனல் சர்வீசஸ், புதுடில்லி – சென்னை, ப – 150
4. மேற்படி, ப – 215
5. Abeyasinghe Tikiri; (1886), Jaffna under the Portugues, Lake House Innestments (Ltd), Colombo, p.37
6. Bancil.P; (1971) Ceylon Agriculture a perpective Dhanatraiandsons, Delhi, p.242
7. ஈழகேசரி, 1933 ஜனவரி 01, ப – 04
8. இந்துசாதனம், 1939 ஜீலை 05, ப – 02
9. ஈழசேகரி, 1951 செப்ரம்பர் 02, ப – 04
10. ஈழகேசரி, 1933 ஜனவரி 01 ப – 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அருளம்பலம், எஸ்; (1935) ஆகஸ்ட் 22, "சுருட்டு வியாபரம்" இந்து சாதனம் ப – 01, ப – 06

12. ஈழகேசரி, 1933 யூலை 02, ப – 08

13. ஈழகேசரி, 1933 யூலை 16, 02 – 08

14. ஈழகேசரி, 1934 யூலை 02, ப – 08

15. ஈழகேசரி, 1954 மே 16, ப – 06

16. ஈழகேசரி, 1956 டிசம்பர் 23, ப – 07

16. குணராசா, க; சுருட்டுக் கைத்தொழில், யாழ்ப்பாணம், ப – 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் கனவுக் கோட்பாடு

திரு.க.அன்ரன் டயஸ்

## ஆய்வுச் சுருக்கம்

*அடிப்படையில் இந்துக்களின் கனவுக் கோட்பாடு உளவியல் அடிப்படையினைக் கொண்டிருந்த போதிலும், கனவின் தோற்றம் இறைவனைச் சார்ந்ததெனவும் அதன் தொழிற்பாடு வருவதுரைத்தல் எனவும் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டது. இக்கட்டுரை அவ்விளக்கத்தை மீளாய்வு செய்து உளவியல் இயல்பை எடுத்துக்காட்ட முயல்கிறது.*

### அறிமுகம்

மனித இனம் பண்டைய காலந்தொட்டே கனவுகள் குறித்து அதீத ஆர்வம் காட்டி வந்துள்ளது. எகிப்தியர்கள் கனவு வியாக்கியானத்திற்கென பல நூல்களை உருவாக்கியுள்ளனர். பபிலோனியர்கள் கனவு வியாக்கியானம் செய்வோரை நியமித்திருந்தனர். 2ம் நூற்றாண்டில் Artemidorui என்பார் கனவுக் குறியீடுகளின் வியாக்கியானத்திற்கான நூலொன்றை உருவாக்கியிருந்தார். சமயங்கள் அனைத்தும் கனவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. இந்து சமயமும் இதற்கு விதிவிலக்கல்ல. மனித வாழ்வுடன் கனவுகள் பிரிக்க முடியாத வகையில் பின்னிப் பிணைந்துள்ளன. கனவுகள் பண்டைய காலங்களில் சமயம்சார் முறையில் முக்கியத்துவத்தைப் பெற்றிருக்க, நவீன காலத்திலோ உளவியல்சார் முறையினால் முக்கியத்துவம் பெறுகின்றன. எவ்வாறாயினும் இந்து மரபிலும் சரி ஐரோப்பிய மரபிலும் சரி கனவுகள் மனிதனின் அக்கறைக்குரியதொன்றாக எக்காலமும் இருந்து வந்துள்ளது.

கனவின் தீர்க்கதரிசன இயல்பையும் முன்னுரைத்தற் பண்பையும் இந்துக்கள் ஏற்றுக் கொள்கின்றனர். கடவுளே கனவுகளைத் தோற்றுவித்து அவற்றின் மூலம் எதிர்கால நிகழ்வுகளை முன்னறிவிக்கின்றாரென நம்புகின்றனர். கனவை வாழ்க்கையின் பிரதிபலிப்பாகக் கொள்பவர்கள், நிகழப்போகும் நன்மை தீமைகளை முன்னறிவிக்கும் கருவியாகக் கருதுகின்றனர். எனவே கனவு அவர்களது வாழ்க்கையைச் செப்பனிடும் கருவியாகிறது. அதுமட்டுமன்றி சமயப் போதனைகளின் வடிவமாகவும் ஆன்மீக உணர்தலின் பகுதியாகவும் கனவுகள் அமையலாம் எனவும் நம்புகின்றனர். ஆதலால் கனவு பெரும் முக்கியத்துவத்தைப் பெற்றது. சமகால மேற்கத்தேயத்தைப் பொறுத்தவரை உளவியற் கல்வி பெற்ற விருத்தியினால் கனவுகளை உளவியல் ரீதியில் அணுகும் போக்கு விருத்தி பெற்றதனால் கனவின் வருவதுரைத்தற் பண்பு நிராகரிக்கப்பட்டு உளவியற் பண்பு வற்புறுத்தப்பட ஏதுவாயிற்று.

கனவுகள் பற்றிய கொள்கைகள் நாட்டுக்கு நாடு, கலாச்சாரத்திற்கு கலாச்சாரம், சமயத்திற்கு சமயம், மொழிக்கு மொழி வேறுபட்ட வகையில் காணப்படுகின்றனவாயினும் அவற்றிற்கிடையே சில பொதுத் தன்மைகளைக் காணுதலும் இயலுவதே. கனவுகள் மெய்மையின் பிரதிபலிப்பாகவோ, தெய்வீகத்தைக் கொண்டனவாகவோ, குணப்படுத்தும் அனுபவங்களாகவோ, வியாக்கியானப் படுத்தப்பட்டாலும் கனவின் இயல்பு, அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாக்கியானம், குறியீடுகளின் வியாக்கி யானம் என்பவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்ய முயலும்போது அங்கு உளவியல் அணுகு முறைகள் தவிர்க்க முடியாதபடி இடம்பெறுவதை அவதானிக்கலாம். கனவையும், கனவுக் குறியீடுகளையும் குறிப்பானாகக் கருதிக் கொண்டால் அவற்றின் குறிப்பீடுகள் எப்பொழு தும் உளநிலை அனுபவங்களாகவே அமையு மென்பதனால் பகுப்பாய்வு உளவியல் அணுகு முறை இவ்வாய்வின் முறையிலாகிறது. பகுப் பாய்வு உளவியலின் பிரகாரம் கனவுகள் யாவும் கூட்டு நனவிலியின் வெளிப்பாடுகளே அதாவது கனவுகள் தொன்மைவகை வெளிப்பாடுகளாம் (யுங்), இந்துக்களின் கனவுக்கோட்பாடு கனவு தெய்வீகமூலத்தைக் கொண்டதெனவும், அது வருவதுரைத்தற் பண்புடையதெனவும் வற்புறுத்துகிறதேயொழிய கனவின் உளவியல் இயல்பை அங்கீகரிக்கவில்லை. கனவைக் காண்பவர்கள் தனிமனிதர்களே என்பதால் கனவு குறித்த இந்துக்களின் கொள்கையை மனிதனை மையப்படுத்திய உளப்பகுப்பாய்வு வழி/ பகுப்பாய்வு உளவியல் வழி மதிப்பிட இக்கட்டுரை முயல்கிறது.

**கனவு**

அனைத்து மனிதனிடத்தும் உறக்க நிலை வெளிப்பாடாக கனவு உளது. எமக்குள்ளேயே நிகழும் காட்சி [1](Vision within us) என கனவை வரைவிலக்கணப்படுத்தும் பிளேட்டோ, நாம் விழிப்பு நிலையில் இருக்கும் பொழுதும் புறவுலகுடன் தொடர்பாய் இருக்கும் போதும் பெறப்பட்டவை ஞாபகப் படுத்தப்படுகிற தென்கிறார். ஒருவர் துயில் நிலையில் உள்ள போது நிகழும் ஒருவகையான கற்பனையே கனவு என்கிறார் அரிஸ்டோட்டில்.[2] இவ்விடயங் கள் அனைத்தையும் தொகுத்துக் கூறுவது போன்று உறக்கத்தில் உள்ளத்தை ஊடறுத்துக் செல்லும் சிந்தனைத்தொகுதிகள், படிமங்கள், தற்புனைவுகளே கனவாகும் எனவும் துயில் நிலையில் நிகழும் ஒரு காட்சி எனவும் Oxford Dictionary வரைவிலக்கணப்படுத்து கிறது.[3]

**உளப் பகுப்பாய்வு**

கனவு பற்றிய உளப்பகுப்பாய்வு மரபின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். இக்கோட் பாட்டின் பிதாமகர் சிக்மன்ட்பிராய்டாவார். அவரது அபிப்பிராயப்படி (1) பொது உளவியல் முறைகளினால் ஆராய முடியாதிருக்கும் உளச்செயற்பாடு பற்றியதொரு விசாரணையைக் குறிக்கவும், (11) நரம்பியல் பிறழ்வுகளின் சிகிச்சைக்கான விசாரணை சார்ந்ததொரு முறையைக் குறிக்கவும், (111) படிப்படியாக ஒரு புதிய விஞ்ஞானத்துறையாக உருப்பெற்றதும். பகுப்பாய்வுமுறைகளின் பிரகாரம் பெறப்பட்டது மான உளவியல் தகவல்களின் தொகுதியைக் குறிக்கும் பெயரே உளப்பகுப்பாய்வாகும்.[4] நனவு, நனவிலி என உளத்தைப் பகுத்து, மனித நடத்தைகள் அனைத்துக்கும் நனவிலியுளமே அடித்தளமாகும் எனும் கருதுகோளின் அடிப்படையில் உளப்பகுப்பாய்வு செயற்படு கிறது. அவ்வகையில் கனவுகளின் தோற்றத் திற்கும் நனவிலியே காரணம் என்பது உளப்பகுப்பாய்வின் கருத்தாகும்.

நனவிலி என்பது நனவு நிலையில் அறிய விரும்பாத அனைத்து விடயங்களையும் களஞ்சியப்படுத்துகின்ற உளத்தின் பகுதியாகும். சமூகத்தால் அங்கீகரிக்க முடியாத விருப்புக்கள், நிறைவேறாத ஆசைகள், பாலியல் பற்றுக்கள், சிறுபராய பாலியல் விருப்புக்கள், தீயசிந்தனை கள், துயர ஞாபகங்கள், நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களது அசௌகரியம் தரவல்ல உணர்வுள்ளடக்கங்கள், அலைக் கழிக்கும் நினைவுகள், ஆக்கிரமிப்பு உந்தல்கள் என்பன ஒடுக்கப்பட்ட நிலையில் (Repressed) நனவிலி யின் உள்ளடக்கமாக அமைகிறது. இவ்வுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்கமே கனவைத் தோற்றுவிக்கிறது. ஒடுக்கப்பட்ட விருப்புக்களின் நிறைவேற்றம் (wish fulfilment) கனவுகளில் நிகழ்வதாக பிராய்ட் கருதினார். சிறப்பாக ஒடுக்கப்பட்ட பாலியல் விருப்புக்களின் நிறைவேற்றத்திற்கு கனவுகள் துணை புரிகின்றன என்பது அவரது அபிப்பிராயம்.

மேலோட்டமாய் பார்க்கும்போது, கனவுகளுக்கும் ஒடுக்கப்பட்ட பாலியல் விருப்புக்களுக்கிடையே தொடர்புகள் காணப்படாவிடினும் ஆழ்ந்து ஆராயும்போது பாலியற் தொடர்பைக் கண்டு கொள்ள முடியும் என்பது அவரது முன்மொழிவாகும் நேரடியாய் பாலியல் அனுபவங்களோடு தொடர்பில்லாத கனவுகளில் இடம் பெறும் குறியீடுகளின் குறிப்பீடுகளை ஆராய்ந்தால் அவை பாலியலோடு தொடர்பு கொண்டுள்ளமை புலனாகும் என அவர் குறிப்பிட்டார்.

### தனியாள் உளவியல்

உளப்பகுப்பாய்வின் பிறிதொரு பரிமாணம் அல்பிரட் அட்லரால் முன் மொழியப்பட்ட தனியாள் உளவியலாகும். நனவிலி எனும் கருத்தாக்கத்தை ஏற்கும் அட்லர் அதன் உள்ளடக்கம் அதிகார உந்தல் என்கிறார். (Urge to power). தாழ்வுச்சிக்கல் (inferiority complex), உயர்வுச்சிக்கல் (superiority complex) எனும் கருத்தின் அடிப்படையிலேயே அவரது கொள்கை அமைகிறது. தாழ்வுச்சிக்கல் உயர்வுச்சிக்கல் என்பவற்றின் விளைவாகக் கனவுகள் தோன்றுகின்றனவெனவும் அதனோடு தொடர்புடைய குறியீடுகளே கனவில் தோன்றுகின்றனவெனவும் அவர் கருதுகின்றார்[5] தாழ்வுநிலைச் சிக்கல் வழியாகவோ உயர்வுநிலைச் சிக்கல் வழியாகவோ அதிகார உந்தல்களை அனுபவிக்க கனவுகள் உதவுகின்றன என்பது அட்லரின் கருத்தாகும். அட்லரின் கொள்கைகூட விருப்பு நிறைவேற்றமே. ஏனெனில் இது அதிகாரத்திற்கும் மேம்பாட்டிற்குமான விருப்பாகும்.

### பகுப்பாய்வு உளவியல்

உளப்பகுப்பாய்வுவழிவந்த கார்ள்யுங் நனவிலி எனும் எண்ணக்கருவை ஏற்றுக் கொள்ளினும் அதனை வகைப்படுத்துவதிலும், உள்ளடக்கத்தை வரையறுப்பதிலும் பிராய்டிலிருந்து வேறுபடுகிறார். அவரது கோட்பாடு பகுப்பாய்வு உளவியல் என கூறப்படுகிறது. உள்ளத்தின் இருண்ட பகுதியென நனவிலியை வருணிக்கும் யுங், நேரடியாக அவதானிக்க முடியாததாயினும் நனவுநிலையை ஊடறுக்கும் நனவிலிச் செயற்பாடுகளை இரண்டு வகையாக நோக்கமுடியும் என்கின்றார். அவை முறையே ஆள்சார்நனவிலி, (Personal Unconscious) கூட்டுநனவிலி (Collective unconscious) ஆகும்.[6] கூட்டுநனவிலி பெருமளவில் மனித நடத்தையைப் பாதிக்கிறதென்பதும் அதுவே கனவுகளின் தோற்றத்திற்கு மூலமாகிறதென்பதும் யுங்கினது அபிப்பிராயமாகும்.

### ஆள்சார் நனவிலி

தனிநபர் மூலத்தையுடையதும், தனிநபரால் ஈட்டப்பட்ட அல்லது தனிமனித ஆளுமையை உருவாக்கும் இயல்பூக்கச் செயன்முறைகளின் விளைவாகவும் ஆள்சார் நனவிலி இனங்காணப்படுகிறது. மறக்கப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட விடயங்கள் மட்டுமல்ல படைப்பாற்றல் மிக்கதும், மீண்டெழமுனையும் விடயங்களும் இதன் உள்ளடக்கமாகும்.[7] ஆள்சார் நனவிலி பூரணமாகத் தனியாளிற்குரியது. தனிமனித அனுபவங்களுக்கும் விருப்புகளுக்கும் ஏதுவானது. ஆள்சார் நனவிலி பற்றி யுங்கும் பிராய்டும் ஒரேவிதமான விளக்கமுடையவர்களாகவே காணப்படுகின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூட்டுநனவிலி**

மூலம் (Source) எதுவென நிச்சயமாக அறியமுடியாத விடயங்களின் வகுப்பொன்றும் நனவிலியில் உளதாகக்கூறும் யுங் அதனைக் "கூட்டுநனவிலி" எனப் பெயரிட்டழைக்கிறார்.[8] விபரிக்கமுடியாத மூலங்களிலிருந்து பெறப்படுவதும், தனிநபரால் ஈட்டப்படாததுமான விடயங்களை கூட்டுநனவிலி உள்ளடக்கியுள்ளது. இது ஐதீகப் பண்பைக் கொண்டது. அவை குறிப்பிட்ட தனியொரு உள்ளத்தின் உடமையல்ல, மனித இனத்தின் பொதுப்பாணியாகும். இது தனிநபரால் ஈட்டப்பட்டதல்ல, மாறாக மனித இனத்திற்கே பொது உடமையாயுள்ளது. எனவே இது கூட்டு இயல்பைப் பெற்றுள்ளதெனலாம். கூட்டு இயல்பு வாய்ந்த இப்பாணியை யுங் தொன்மவகை (Archetype) என்கிறார். இலகுவாகக் கூறுவதாயின் கூட்டுநனவிலியிலுள்ள தொன்மம்சார் இயங்குமாற்றல்களின் வெளிப்பாட்டு வடிவமே இதுவெனலாம். இன்று எமது கூட்டு நனவிலியிலுள்ள தொன்மவகைகள் கணக்கிட முடியாக் காலங்களிலிருந்து தொடர்ந்துவரும் எமது மூதாதையர்களின் அனுபவங்களின் திரட்டு எனவும், உணர்வுசார் வாழ்க்கையின் எச்சங்கள் எனவும் கூறலாம். தொன்மவகையென்பது வடிவம் மட்டுமல்ல, ஐதீகநிலைப்பட்ட அர்த்தம்கொண்ட பண்புக் கூறுகளின் (Mythological motif) தொகுதி என்கிறார். நம்பத்தகாத கதைகள், ஐதீகங்கள், புராணங்கள், நாட்டார் இலங்கியங்கள் என்பவற்றில் கூட்டுநனவிலியின் தூய வடிவத்தைக் காணலாம். புராண, நாயகர்களின் உருவங்கள்,யாழி (ட்ராகன்) ஐதீகப்பண்பு கொண்ட மிருகங்கள், பறவைகள் போன்றவை இதற்கு உதாரணங்களாகும். இத்தகைய பண்புக்கூறுகள் புராதன காலத்திலிருந்து உலகம் முழுவதும் வழங்கிவருகிறது. நனவிலியுளத்திலிருந்து பெறப்படும் இத்தகைய ஐதீகம்சார்பண்புகள் (தொன்மவகைகள்) தனிநபர்சாராதவை இவற்றையேகூட்டுநனவிலியென அழைக்கிறார் யுங்.[9] இவை தனிமனித பிறப்புக்கு முந்திய இருப்புடையன. டேக்காட்டின் உடன்பிறந்த எண்ணங்கள் (Innate ideas) எனும் கருத்திற்கு சமாந்திரமானது. இவை உலகப் பொதுவானவை, கூட்டுப்பண்பு வாய்ந்தவை, அனைத்துத் தனிநபரிலும் ஒரே தன்மையாகக் காணப்படுபவை. கூட்டுநனவிலி தனிமனிதரால் உருவாக்கப்படுவதோ அன்றி விருத்தியாக்கப் படுவதோ அல்ல, மரபுரிமையாக வருவதாகும்.

தாய் (Mother), அனிமா (Anima), அனிமஸ் (Animus), அர்ப்பணிப்பு (Sacrifice), நாயகன் (Hero), போன்றவை தொன்மவகைகளுட் சிலவாகும். தொன்மவகைகளுக்கான உதாரணங்களை இனங்கண்டு அவற்றின் அர்த்தத்தையும், ஐதீகம்சார் பண்பையும் தெளிவுபடுத்தும்போது கனவுகளின் உளவியல் இயல்பைக் கண்டுகொள்ளமுடியும். உளப்பகுப்பாய்வின் மேற்படி சுருக்க விளக்கத்தினடியாக கனவு பற்றிய இந்துக்களின் கருத்தை அணுக முயற்சிப்போம்.

**இந்துக்களின் கனவு பற்றிய நம்பிக்கை**

பண்டைய இந்துக்களிடம் காணப்படும் கனவு தொடர்பான எண்ணங்களை உபநிடதங்கள், வேதாந்த சூத்திரம், சொப்பன சாத்திரம், பஞ்சாங்கம் சினேந்திரமாலை முதலான நூல்களில் காணமுடிகிறது. கனவு பற்றிய நம்பிக்கை அக்காலச் சமுதாய மக்களின் வாழ்க்கைப் பிரதிபலிப்பாக இடம் பெற்றமையை இந்நூல்கள் வாயிலாக உணர முடிகிறது. கனவுகள் மெய்யானவை மெய்யான வாழ்க்கையுடன் தொடர்புடையவை என இம்மரபு ஏற்றுக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய இந்துக்களிடம் காணப்பட்ட கனவு பற்றிய நம்பிக்கையை நோக்குமிடத்து அவை பௌதீதவதீதக் காரணங்களால் தோற்றம் பெறுபவை என்ற நம்பிக்கை நிலவி வந்துள்ளது. கனவுகள் தெய்வீக மூலத்தையுடையவை அல்லது கடவுளிடமிருந்து வருபவை என்பது பிரதான எண்ணமாகும். கனவு கடவுளின் படைப்பு, ஆன்மாவினுடையதல்ல எனும் குறிப்பு வேதாந்த சூத்திரத்தில் காணப்படுகிறது.[10] மேலும் தனிப்பட்ட ஆன்மாக்கள் தனது கனவில் காணும் பொருட்கள் அவற்றால் உருவாக்கப்பட்டதல்ல, அவை விசேடமாக மேல்நிலை நபரால் (Supreme person) உருவாக்கப்படுகிறது[11] எனப் பிறிதொரு வேதாந்த சூத்திரம் கூறுகிறது. இதனால் கனவுகள் பெரும் முக்கியத்துவமுடையனவாகக் கருதப்பட்டன. இயற்கையிகந்த சக்திகளிடமிருந்து கனவுகள் தோன்றுகின்றன எனும் கருத்து மேலைத்தேயத்தாரிடமும் காணப்பட்டுள்ளது.[12]

கடவுளிடமிருந்து வரும் கனவுகள், வழிகாட்டுதல், தெய்வீக உதவியை உறுதிப்படுத்தல், தீர்க்கதரிசனம் கூறுதல், எச்சரிக்கை செய்தல் முதலான பண்புகளைக் கொண்டது. இவ்வியல்பு மேலைத்தேயத்தவரின் கனவு தொடர்பான கோட்பாட்டுடன் வேறுபட்டுச் செல்லவில்லை. ஏனெனில் Macrobius, Artemidorus ஆகியோர் நிகழ் காலத்துடன் அல்லது கடந்த காலத்துடன் தொடர்புடைய கனவுகள், எதிர்காலத்துடன் தொடர்புடைய கனவுகள் என கனவுகளை இரு வகைப்படுத்தி எதிர்காலத்துடன் தொடர்புடைய கனவுகள் பின்வரும் இயல்புடையன என்கின்றனர்.[13]

1. கனவில் நேரடியாகப் பெறப்படும் தீர்க்கதரிசனம்
2. எதிர்கால நிகழ்வுகளை முன்னறிவித்தல்
3. வியாக்கியானத்தை வேண்டிநிற்கும் குறியீட்டுக் கனவு

இந்துக்கள் கனவுகளின் தீர்க்கதரிசன இயல்பை (Prophetlic Nature) ஏற்றுக்கொள்கின்றனர்.[14] பின் நிகழப்போவன பற்றி சில குறியீடுகள் அடையாளங்கள், முன்குறித்துக் காட்டுதல்கள், கனவுகள்வழி வெளிப்படுத்தப்பட்டமையை இந்து இலக்கியங்களில் மிகச் சாதாரணமாகக் காணலாம். நேரடியாகக் கடவுளோ அல்லது தூதுவர்கள், சேவகர்கள் மூலமாகவோ இத்தகைய தீர்க்கதரிசனங்கள் கூறப்படுவதை அவதானிக்கலாம் மிக உயர்வான கடவுளால் கனவுப் படிமங்கள் உருவாக்கப்படுவதனால் அவை தீர்க்கதரிசன முக்கியத்துவமுடையன என வேதாந்த சூத்திரம் கூறுகிறது.[15]

எதிர்கால நிகழ்வொன்றை முன்னறிவிக்கும் கனவின் இயல்பையும் இந்துக்கள் ஏற்றுக்கொள்கின்றனர். கனவுகள் எப்போதுமே பின்னோக்குத் தன்மையுடையனவல்ல. (retrospective). அவை முன்னறிவிக்கும் இயல்புடையன என்பது இந்துக்களின் கருத்தாகும். ஆராயப்பட்ட பல கனவுகள் இத்தகைய முடிவுக்குச் சாதகமாக அமைந்துள்ளன. Swami Abehilnanda மேற்கோள் காட்டும் கனவுகளில் சில அடிக்குறிப்பில் தரப்படுகிறது.[16]

பிற்கால நிகழ்வுடன் வாய்ப்புப்பார்க்கப்பட்டு சரியாக அமைந்த எதிர்காலம் பற்றிய பல்வேறு கனவுகளைச் சுட்டிக் காட்ட முடியும். ஆகவே கனவுகள் பின்னோக்குத் தன்மையுடையனவல்ல எதிர்கால நிகழ்வை முன்னறிவிக்கும் இயல்புடையது என்பது இந்துக்களின் கருத்தாகும். காள்யுங் கூட சில கனவுகள் முன்னோக்குத் தன்மை உடையவை எனும் அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளார். எதிர்கால நிகழ்வுகள் பற்றிய அறிவைத் தருகின்ற சில உதாரணங்களைத் தொடர்புபடுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட செயல்களின் சீர்மையை அல்லது வெற்றி தோல்விகளை உணர்த்தும் சாதனமாகவும் இந்துக்கள் கனவுகளைக் கருதினர். ஒருவருடைய விருப்புக்களை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் வேள்விகள் நிகழ்த்தும் காலத்தில் கனவில் பெண்ணைக் காணுதல் வேள்வியில் வெற்றிபெற்றுள்ளார் என்பதைக் காட்டுவதாகும் என சாந்தோக்கிய உபநிடதம் சுட்டுகிறது.[17]

கனவுச் செய்திகளையும் அவற்றின் பலன்களையும் நிஜமாகக் கருதி அச்சமடைந்தமை மட்டுமல்ல, சில சடங்குகளின் மூலம் அத்தீய பலன்களிலிருந்து விடுபடலாம் எனக் கருதியிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது. கறுப்புப் பற்களுடன் கூடிய கரிய மனிதனைக் கனவில் காணுதல், அல்லது அம்மனிதன் ஒருவரைக் கொல்வதாக அல்லது, கறுப்புக் கன்றுடன் கூடிய கறுப்புப் பசுவை தென்திசை நோக்கி ஓட்டுவதாகக் கனவு காணுதல் மரணத்தின் முன்னறிகுறியாகும். இத்தகைய கனவைக் கண்டால், விரதமிருந்து பால் சமைத்து அதனை இரவுச் சுலோகம் (Ratri hymn) கூறி சமர்ப்பணம் செய்ய வேண்டும். பின்னர் வீட்டில் சமைத்த உணவுகளை பிராமணருக்கு தானம்செய்து, பின் தானும் உண்ணல் வேண்டும் எனும் குறிப்பு ஐதரேய உபநிடதத்தில் காணப்படுகிறது.[18] கனவுப் பரிகாரம் எனும் சொல் தமிழில் வழங்கிவருதல் இதனைக் குறித்தோ என எண்ண இடமுண்டு.

சமயம் சார் போதனை வடிவமாகவும் கனவுகள் அமைய முடியும் கனவில் ஆன்மீகப் போதனைகள் பெறப்பட்டமை குறித்து நம்பகரமான உதாரணங்களைக் காட்ட முடியும். சிலர் தமது ஆன்மீகக் குருவிடமிருந்து கடவுள்களின் குறியீட்டுப் பெயர்களையும் ஏனைய ஆன்மீகப் பயிற்சிகள் பற்றிய செய்திகளையும் தமது கனவில் பெற்றுள்ளதாகக் குறிப்பிடுவதுண்டு. மேலும் சிலர் தமக்கு முன்னெப்போதும் தெரியாத மந்திரங்களைக் கனவில் பெற்றிருப்பதாகவும், இம் மந்திரச் சொற்கள் பூரணமான புதிய அறிவைத் தந்துள்ளதெனவும் குறிப்பிடுவதுண்டு. ஆன்மீக நடைமுறைகள், வாழ்க்கை முறைகள், செயற்பட வேண்டிய முறைகள் ஆகிய வடிவங்களிலும் போதனைகள் கனவில் பெறப்பட்டுள்ளதாக வழக்குகள் உண்டு.

இத்தகைய கனவுகளின் உள்ளடக்கங்களை முன்னைய அனுபவங்களின், நிகழ்ச்சிகளின் தடங்களில் காணமுடியாது என இந்துக்கள் கருதுகின்றனர். யுங் கூறுவது போல் ஆள்சார் அல்லது கூட்டுநனவிலியில் இத்தகைய அனுபவங்களைக் கண்டு கொள்ள முடியும் என்பதை இவர்கள் நிராகரிக்கின்றனர். கனவு காண்பவர்கள் அவர்கள் பிறந்த இனத்தில் காணமுடியாத ஒருங்கிணைந்த அனுபவங்களைக் கொண்டிருந்தனர். சிலருக்கு தமது ஆசிரியரால் விளக்கப்படும் வரை மந்திரங்களின் மொழி அல்லது அர்த்தம் கூடத் தெரியவில்லை. கனவு காண்போர் கனவுகளில் பெறும் ஆன்மீகப் போதனைகள் ஆன்மீக அகத்தூண்டலை மட்டுமல்ல அவற்றின் தீர்க்கதரிசன இயல்பையும் குறித்துக் காட்டுகின்றன. இத்தகைய அனுபவங்களின் அடிப்படையில் நனவிலியில் அல்லது உடலியல் ஒழுங்கீனத்தில் தோற்றத்தைக் கொண்டிராத பல கனவுகள் உள எனக் கூறலாம் என்பது இந்துக்களின் அபிப்பிராயம்.

சாதாரண நிகழ்வுகள் பற்றிய எதிர்காலப் புரிந்து கொள்ளலிற்கு அப்பால் ஆன்மீக உணர்தல் (spritual realization) பற்றிய கனவுகளும் உண்டு. அவற்றின் பாதிப்புகள் நிரந்தரமாய் இருப்பதுடன் தனிமனித வாழ்க்கையையும் மாற்றியமைத்துள்ளது. சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகள் ஆன்மீக எண்ணங்களை வெளியிடு தற்கான ஆதாரங்களைத் தருவதாயுள்ளது. மேலும் சில, ஆன்மீக மகிழ்விற்காகவும், ஆன்மீக உணர்தலிற்காகவும் (joy anrealization) அச்சம், ஆற்றல் வியப்புமிகு அழுத்தங்களை உள்ளத்தின் மீது ஏற்படுத்துகின்றவையாயுள. சில கனவுகள் வாழ்க்கையின் பௌதீகவதீதம் சார்ந்ததும், ஆன்மீகம் சார்ந்ததுமான பிரச்சனைகளைத் தீர்ப்பதாகவும், ஒளிமிக்க அறிவைத் தருவதுடன் உணர்ச்சி மனவெழுச்சி சார் திருப்தியைத் தருவதாயுமுள்ளது.

இந்துக்கள் அனைத்துக் கனவுகளும் கடந்தகால அனுபவங்களைச் சார்ந்த காரணத் தொடர்பின் அடிப்படையில் எழுபவை எனும் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அல்லது ஒடுக்கப்பட்ட பாலியல் உந்தலினால் அல்லது சுய வெளிப்பாட்டினால் (Self Conpression) நிர்ணயிக்கப்படுகின்றன என்பதையும் ஏற்க வில்லை. எண்ணங்களின் ஒடுக்குதல், விருப்பு நிறைவேற்றம் மற்றும் இது போன்ற பிற காரணங்களின் வழி கனவுகளை விளக்க முற்படவுமில்லை. அகத்தடை (inhabitant) நனவிலி ஒடுக்குதல், அல்லது கடந்தகால சிந்தனைகள், செயற்பாடுகளின் அழுத்தங் களால் (impressions) இன்றியமையாத வகையில் கனவுகள் உருவாவதென்பதை ஏற்பதில்லை. சில கனவுகள் இத்தகைய காரணங்களால் ஏற்படுகின்றன என்பது உண்மையாயினும் அவர்கள் அக்கருத்தை அங்கீகரிப்பதில்லை.

நன்மை . தீமைகளை, நற்பலன்கள் துர்ப்பலன்களை முன்னறிவிக்கும் சாதனமாக இந்துக்கள் கனவுகளைக் கருதினர். இந்துக்கள் பயன்படுத்தும் பஞ்சாங்கத்தில் கனவுகளின் நற்பலன்கள் துர்ப்பலன்கள் சுட்டப்பட்டுள்ளன. சூரிய சந்திரர். மாலை, கடல், ஆறு, நீர் நிறைந்த குளம், பூஞ்சோலை, தேவாலயம், அரண்மனை, தேவர், அரசர், குரு, பிராமணர், தந்தை, தாய், பிள்ளை, சுற்றத்தார், நண்பர், நல்லோர், வெள்ளாடை, வெண்பூமாலையணிந்த பெண்கள், வேசி, பட்டத்து யானை, குதிரை, தேர், வாள் முதலாய ஆயுதம், ஆபரணம், புத்தகம், நிறைகுடம், சாமரை, வெண்குடை, கொடி, விளக்கு, சங்கு, மிதியடி, வெள்ளை நிறமுடைய எருது, பசு, மான், அன்னம், மயில், கோழி, இறைச்சி, இரத்தம், மலர், கள், சோறு, தயிர், வெண்ணெய், பால், நெய், உப்பு, மஞ்சள், தேங்காய், எலுமிச்சம்பழம், தாம்பூலவர்க்கம், மாம்பழம், இனிய கனிகளையுடைய மரம், தாமரைப்பூ, நீலோற்பவம், இவற்றைக் கனவிலே காணின் எல்லாம் வாழ்வு சுகம் உண்டாம்.[19]

சூரிய சந்திரர், நட்சத்திரங்கள் மாறுபடச் செல்லுதல், நீர் வற்றிய ஆறு, வாவி, குளம், கிணறு, முதலியன, இராட்சதர், பிசாசு, பூதம், கரிய வஸ்திரம் உடுத்திய கரிய ஆண், பெண்கள், சுமங்கலி, கொலைஞர், ஆண்டாள், பதிதர், இழிதொழிலோர், நிருவாணி, காவி வாழ் திரதாபி, மொட்டைத் தலையர், மயிர் விரித்தோர், யானை, புலி, கரடி, குரங்கு, பன்றி, முதலை, ஒட்டகம், எருமை, கழுதை, முயல், பண்ணை, கரிய பசு, எருது, குதிரை, பாம்பு, காகம், கழுகு, பருந்து, தினை, சாமை, குரக்கன், கொள்ளு, வரகு, கடுகு, பூசணி, இவற்றின் காய்கள், கம்பளம், இரும்புத் துண்டம், உடற்குறை, அங்கபங்கம், மயிர்களைதல், பல் விழல், மரம் முறிந்து விழல், கரிய வஸ்திரம், கரும்பூமாலை யணிதல், தேகத்தில் நெய், எண்ணெய், பூசுதல், மிருகங்களாற் கடிக்கப்படுதல், குழியில் விழுதலும், வழியறியாதிருத்தலும், எழுதிய ஒலையை ஏற்றல், சிற்றுண்டி புசித்தல், மழை தூறுதல், தன் ஆபரணங்களைப் பிறர் அபகரித்தல், தூரதேசம் போனவர் படுத்து நனைந்திருத்தல், விவாகம் நடைபெறல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கே கொண்டு செல்லப்படுதல், இவற்றைக் கனவிலே காணின் வறுமை, துன்பம், நோவு, மரண பயம், உண்டாம்.[20]

நன்மை தீமைகளின் தோற்றத்தை நமக்குச் சராசரப் பொருட்களின் காட்சியால் தெரிவிப்பனவே கனவு எனக் கூறும் சொப்பன சாஸ்திரம் இந்துக்களின் கனவு பற்றிய கருத்தை நிலைநிறுத்துகிறது. எனவே சொப்பன சாஸ்திரமும் கனவுப் பலன்களை நன்மை தீமை எனும் வகையிலேயே அணுகுகிறது.

வேதாந்த நூல்களிலே கூறப்பட்டுள்ள ஜாக்கிரம் – சுவப்னம் – சுஷூப்தி எனும் முக்கால அவஸ்தைகளின் தோற்றமே கனவெனக் கூறும் சொப்பன சாஸ்திரம் கனவு நிகழும் காலத்தை முதற் சாமம், இடைச் சாமம், கடைச் சாமம் எனப் பிரித்து இம்மூன்று சாமங்களிலும் நிகழும் கனவுகளின் பலன்களை இவ்வளவு காலத்திலே காணலாம் எனக் குறிப்பிடுகின்றது. முதற் சாமத்தில் கண்ட கனவின் பலனை ஒரு வருடத்தில் அறியலாம்.

இரண்டாம் சாமத்தில் கண்ட கனவின் பலனை எட்டு மாதத்தில் அறியலாம். மூன்றாம் சாமத்தில் கண்ட கனவின் பலனை நான்கு மாதத்தில் அறியலாம். நூல்களை நோக்குமிடத்தும் அனுபவங்களைக் கேட்குமிடத்தும் கடைச் சாமக் கனவே சாலவும் சிறந்தது எனக் குறிப்பிடப்படுகிறது.[21]

கனவுகளின் தோற்றம் இரவில் மூன்று பகுப்புக்களாக அமைவதுண்டு. உறங்கியவுடனே தோன்றக் கூடிய கனவுகள் பெரும்பாலும் கடந்தகால வாழ்க்கை நிகழ்ச்சியோடு தொடர்பு கொண்டவையாக இருக்கும். நள்ளிரவு நேரத்தில் தோன்றக்கூடிய கனவுகள் நிகழ்கால வாழ்க்கை அம்சங்களின் பிரதிபலிப்பாக இருக்கும். விடியற்காலையில் தோன்றும் கனவுகள் எதிர்காலத்தை பற்றி நமக்கு அளிக்கின்ற எச்சரிக்கைகளாக அமையும்.[22]

**இந்துக்களின் நிலைப்பாட்டில் பின்வரும் வகையாகக் கனவுகள் உண்டாகலாம்.**

1. ஒருவனது மனதில் வெகு நாளாகக் குடிகொண்ட எண்ணங்களினால் தோன்றும் கனவு.
2. ஜாக்கிரதாவஸ்தையில் கைக்கொள்ள முடியாத பலவித காரியங்களை ஒருவன் கனவில் நிறைவேற்றிக் கொள்ளுதல். இவ்வகைக் கனவுக்குப் பலன் சொல்ல வியலாது என்பது இவர்களுடைய கருத்து.
3. மனச் சக்தி வேகத்தால் கனவு காணுதலும் இயல்பே. அக்கனவு மின்சாரசக்தியை ஒத்து தூரத்தில் நடைபெற்ற விஷயத்தை, நடந்தவற்றை, நடந்தவையாக விளக்க முறுவது. இத்தகைய கனவிற்கு அவர் கண்டனவே பலன். இக்கனவிற்கு வேறு வகையான பலன் சொல்லல் இயலாது.
4. மாந்தர்கள் சாதாரணமாகக் காணும் கனவுகள் இவற்றிற்குத் தான் நன்மை தீமைகளையுடைய பலன்களைச் சொல்லலாம்.

கடவுளே கனவைத் தோற்றுவித்து சில செய்திகளை அவற்றின் மூலம் தெரிவிக்கிறார் என இந்துக்கள் கருதுகின்றனர். ஆனால் கனவுகள் உளவியல் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை அங்கீகரிக்கும் பகுப்பாய்வு உளவியலாளர்களோ நனவிலியே கனவுகளின் சிற்பி என்கின்றனர். நனவிலியில் ஒடுக்கப்பட்ட எண்ணங்கள் கனவை ஊடகமாகக் கொண்டு வெளிப்படுகின்றன. பிராய்ட் ஒடுக்கப்பட்ட பாலியல் உந்தல்களையும் அட்லர் அதிகாரத்திற்கான உந்தல்களையும் கனவின் கர்த்தாவாகக் கற்பிக்க, யுங்கோ ஆள்சார் நனவிலியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுநனவிலியும் கனவிற்குத் தோற்றுவாய் என்கின்றார். கார்ள் யுங்கின் அபிப்பிராயப்படி கூட்டு நனனவிலியே கனவுகளின் தோற்றத்திற் குக் காரணமாகும். கூட்டுநனவிலியிலுள்ள தொன்மவகைகள் கனவில் வெளிப்படுகின் றன காலம்காலமாக முன்னோர் பெற்ற அனுபவங்களினதும் சிந்தனைகளினதும் திரட்சி தொன்மவகைகளாகும். சந்ததி சந்ததியாகக் கடத்தப்பட்டு வரும் இவை கனவுகளினதும், அறியாமைசார் உளப்புனைவு களினதும், விசித்திரமானதும் நம்பத்தகாததும் அறிவுக்குப் பொருந்தாததுமான எண்ணங் களினதும் வடிவத்தில் தோன்றுகின்றன.[23] உதாரணமாகத் திகில் கனவுகளில் அச்சமூட்டும் உயிரினங்களின், அனர்த்தங்களை விளைவிக் கும் நிகழ்வுகளின் வடிவில் இவ்வெண்ணங்கள் தனிமனிதனை பாதிக்கின்றன. இதனால் மனிதன் அச்சமடைவதும் அவ்வச்சம் மாற்றமுறா மூலமாக கனவில் அமைவதும் தவிர்க்க முடியாதது. எனவே யுங்கினது நோக்கில் கனவு தொன்மவகை சார்ந்தது.

நனவிலியையும் கடவுளையும் சமமாகக் காணும் நிலையில் இந்துக்களின் கோட்பாட்டின் உளவியல் இயல்பை எடுத்துக்காட்ட முடியும். தகவல்களைத் தரும் அல்லது முன்னறிவிக்கும் வகையான கனவுகளை ஏற்கும் இந்துக்கள் அவை நனவிலியிலிருந்து பெறப்படுகின்றன என்பதை ஏற்க மறுப்பர். அவர்கள் அதனை ஒருவகையான மீப்பிரக்ஞை (Superconscius) உருவாக்குகிறது எனக் கருதுவதை விரும்புகின் றனர். இம்மீப்பிரக்ஞையை மேலானது (Supreme) அல்லது சர்வவியாபகமானதென (Universal) இந்து மெய்யியலாளர்கள் அழைக்கின்றனர். இதனையே மேலைத் தேயத்தவர் நனவிலி என அழைக்கின்றனர்.[24]

நன்மை தீமைகளை முன்னறிவித்து மனித வாழ்வைச் செப்பனிடும் கருவியாக இந்துக்கள் கனவைக் கருதினர் என ஏலவே எடுத்துக்காட்டினோம். இக்கருத்து பகுப்பாய்வு உளவியலின் பிறிதொரு கருத்துடன் இணைந்து செல்வதாயுளது. யுங்கைப் பொறுத்தவரை கனவு ஆளுமையைச் செப்பனிடுவதாக அமைய முடியும். அதாவது நனவு மனப்பாங்கின் எதிர்நிலையைக் கனவுகள் வெளிப்படுத்து வதால் கனவு ஈடுசெய் இயல்பு வாய்ந்தது என்கிறார்.[25] ஈடுசெய் இயல்பு என்பது உயிரியின் உளம்சார் சுய ஒழுங்குபடுத்தலாகும். யுங்கின் அபிப்பிராயப்படி கனவுகள் தனிமனித விருப்பையல்ல மாறாக அவனது தேவையையே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எவையெவை ஆளுமையில் ஒடுக்கப்பட்டுள்ளது என்பதையும் அதன் நிறைவேற்றத்திற்கு எது தேவைப்படு கிறது என்பதையும் கனவு வெளிப்படுத்துகிறது. நனவிலியின் எதிர்த்தன்மை நாட்டம் நனவுக்குள் கனவுகள் மூலம் செலுத்தப்படு கிறது. உள ஆரோக்கியத்துக்கு எது தேவையோ அதனைக் கனவு ஏற்படுத்துகிறது. உதாரணமாக சோம்பேறித் தனத்திற்குப் பதிலாக கடும் முயற்சியையும் தற்பெருமைக்குப் பதிலாக தாழ்வுபடுத்தலையும் ஏற்படுத்துகிறது. ஒருவர் சிறுபிள்ளைத் தனமானதும் முட்டாளத்தன மானதுமான கனவொன்றைக் காண்கிறா ரெனின் அவர் தனது நடத்தையில் எச்சரிக்கை யுள்ளவராகவும் மிகவும் மரபுசார்ந்தவராகவும் இருப்பதையும் தனது கௌரவத்தைக் காப்பாற்றுவதில் அதிக கவனமுள்ளவராக இருப்பதையும் சுட்டுகிறது என்பது யுங்கின் அபிப்பிராயமாகும். நன்மை தீமைகளை முன்னறிவிப்பதாகக் கொள்ளும் தனிமனித கனவு பற்றிய இந்துக்களின் கொள்கை இவ்விளக்கத்துடன் பொருந்திவருகிறது.

எத்தகைய பொருட்களை, உருவங் களைக், குறியீடுகளை கனவில் காண்கிறோம் என்பதன் அடிப்படையில் அவற்றின் பலன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை தீமை என இந்துமரபில் வியாக்கியானம் செய்யப்பட்டதெனக் கண்டோம். ஆயினும் இவ்வுருவங்கள் குறியீடுகளை பகுப்பாய்வு உளவியலின் அடிப்படையில் தொன்மவகை வெளிப்பாடாகக் கண்டுகொள்ளலாம்.

கனவில் தோன்றும் உருவங்களாக இந்துக்களால் குறிப்பிடப்படும் குறியீடுகளில் பெரும்பாலானவற்றை தாய்த் தொன்மவகையாக (Mother Archetype) இனங்காணலாம். தாய்த்தொன்மவகை கனவில் கடவுளின் தாய், தாய், சிற்றன்னை, மாமி, பாட்டி, மனைவி போன்ற வடிவங்களில் வெளிப்படுத்தப்படலாம் என யுங் குறிப்பிடுகிறார். இது நேர்நிலையான தாகவோ எதிர்நிலையானதாகவோ நன்மை யானதாகவோ தீமையானதாகவோ அமையலாம். கொடூரமான தாய்த்தொன்மவகை சூனியக்காரி. மனிதனை உண்ணும் அரக்கி, துன்புறுத்தும் சிற்றன்னை, பழிவாங்கும் பெண் தெய்வம் போன்றவற்றால் பிரதிநிதித்துவம் செய்யப்பட லாம். நீண்டகால இலக்குகளைப் பிரதிநிதித்து வப்படுத்தும் சொர்க்கம், கடவுளின் அரசு என்பனவும், தியாகம், பயபக்தி, புனிதம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இடங்களான கோயில், ஆச்சிரமம், நகரம், பூமி, பேரின்ப வீடு போன்றனவும், பாதாளம், சந்திரன், கடல், குளம் போன்றனவும் தாய்த்தொன்மத் தைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. போசனையூட்டலுக்கும் ஆக்கத் திற்கும் செழிப்புக்கும் பொருத்தமாயமைகிற இடங்களான விதைக்கப்பட்ட வயல், தோட்டம் போன்றவையும் இதனைக் குறிக்கும், தாய்த்தொன்மம் பாறை, குகை மரம் ஆழமான கிணறு என்பவற்றுடனும் தொடர்புடையது. பசு, முயல், உதவிசெய்யும் மிருகங்கள் அனைத்தும் தாய்த்தொன்மவகையைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.[26]

தாயைக் கனவில் காணுதல், பூஞ்சோலை, தேவாலயம், கடல், ஆறு, நீர், நிறைந்த குளம் பசு, எருது, மரம், ஆகியவற்றைக் காணுதல் நன்மையானதெனப் பஞ்சாங்கம் குறிப்பிடுகிறது. தாயின் வருகையைக் கனவில் கண்டால் பெண் சந்ததி உண்டாகும் குடும்பம் பெருமையடையும் என சொப்பன சாத்திரம் கூறுகிறது. பெண்ணைக் கனவில் காணுதல் செயற்பாட்டின் வெற்றியைக் குறிக்கிறதெனச் சாந்தோக்கிய உபநிடதம் குறிப்பிடுகிறது. மேலும் (எதிர்நிலைத் தாய்த்தொன்மத்தைப் பிரதிநிதித் துவப்படுத்தும்) நீர் வற்றிய ஆறு, குளம், வாவி, கிணறு, கரியபசு முதலியனவற்றைக் காணுதல் தீமையானது எனப் பஞ்சாங்கம் சுட்டுகிறது. காளி போன்ற பயங்கரமான பெண் உருவங்களைக் காணுதல் மரம் முறிதல் தீமையானது எனக் கருதப்படுகிறது. இந்துக்கள் இத்தகைய கனவின் பலன்களை நன்மை தீமை என வகுத்துக் கொண்டாலும் பகுப்பாய்வு உளவியலின்படி கூட்டுநனவிலி வெளிப்பாடாக அதுவும் தாய்த் தொன்மவகை வெளிப்பாடாகப் புரிந்து கொள்ள வேண்டும். தாய்த்தொன்மவகை வெளிப்படுத்தும் உளவியற் பண்பாக குழந்தைப் பேறு பற்றிய ஆர்வமும் அனுதாபமும். பெண்களின் அதிகாரம், ஞானமும் ஆன்மீக மேல்நிலையும், உதவிசெய் பண்பு, அன்பும் நன்மை செய்தலுமான பண்பு, வளர்ச்சியையும் வளத்தையும் பேணலும் தக்கவைத்தலும், நிலைமாற்றமும் மீளுருவாக் கமும். படைப்பாற்றல் ஆகியன சுட்டப்படு கின்றன. தாய்த் தொன்மத்தின் எதிர்க்கணியப் பண்புகளாக இரகசியம், மறைவு, கட்புலனாகாமை, இருள் பாதாளம், பேரழிவு செய்தல், தீநெறி உய்த்தல், இன்பத்தை அழித்தல், பயனறக் கெடுத்தல் என்பன சுட்டிக் காட்டப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே, நன்மை தீமைகளைக் குறிப்பனவாகவும், வருவதுரைத்தற் பண்புடையனவாகவும் இந்துக்களால் குறிப்பிடப்படும் குறியீடுகள் பலவும் அர்ப்பணிப்பு, நாயகன், அனிமா, அனிமஸ் போன்ற தொன்மவகைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவனவாக எடுத்துக் காட்டப்படலாம். அவை தமக்கேயுரிய உளவியல் இயல்பை வெளிப்படுத்திநிற்கும்.

தொகுத்து நோக்கின் கனவுகளின் தோற்றம் தனிமனிதனைச் சார்ந்ததல்ல, மாறாகத் தெய்வீக மூலத்தைச் சார்ந்தவை என இந்துக்கள் கருதுகின்றமையால் பௌதீகவதீதக் காரணத்தை உட்படுத்துகின்றனர். கனவுகளின் இயல்பும் தொழிற்பாடும் தீர்க்கதரிசனம் கூறுதல், தெய்வீக உதவி, வழிகாட்டுதல், எச்சரிக்கை செய்தல் என்பனவாக எடுத்துக்காட்டப்படுவதால் இந்துக்கள் கனவுகளின் வருவதுரைத்தற் பண்பை வற்புறுத்துகின்றனர். ஆனால் மேலைத்தேயத்தவரோ கனவு பற்றிய இந்துக்களின் நிலைப்பாட்டுடன் உடன்பட்டுச் செல்லாது கனவுகளின் தோற்றம் தனிமனித உளத்தைச் சார்ந்ததெனவும் கனவுகளின் இயல்பும் தொழிற்பாடும் உளவியல் இயல்புடையதெனவும் எடுத்துக்காட்டுகின்றனர். சமயச்சார்பானதாகவும் வருவதுரைத்தற் பண்புடையதாகவும் கனவை அணுகுவதிலும் பார்க்க உளவியல் இயல்புடையது எனக் கருதுவது அறிவுபூர்வமானதாக அமையலாம்.

## அடிக்குறிப்புக்கள்


1. Edwards Paul;(1972), The Encyclopedia of Philosophy Vol, I & II, Macmillan publishing Inc. New York. p.415.
2. Ibid p.415
3. Freuds; (1965), Psychoanalysis, The world of Psychoanalysis, George Braziller Inc. New York. p.20.
4. Oxford Dictionary
5. Cited, Hadfield.J.A; (1973), Dreams and Nightmares., penquin books, England. pp.36-42
6. Jung C.G; (1990), Analytical Psychology Ark paperbacks, London. p. 40
7. Ibid. p.40
8. Ibid. p.41
9. Ibid. p.41
10. Maxmullre Vedanta Sutras with Ramanuja's coment; (1879), The sacred books of the east, Trans Vol. VII Oxford at the clarenden press p. 120.
11. Ibid. p. 601 - 604
12. Freun. S; (1945), The interpritation of Dreams, Trans. A.A.Brill, George Allen and Unwin Ltd. London. p.22
13. Ibid. p. 21
14. Swami abehilananda; (2001), Hindu Psychology, Routledge, London . p. 66
15. Maxmuller Vedanta Sutras with Sankara's coment; (1879) The sacred books of the east Trans. Vol I Oxford at the clarenden press p. 1xi




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. Opcit, (2001), p.66

1. Boston நகரில் குறிக்கப்பட்டவொரு பகுதி எரிவதாக நண்பரொருவர் கனவொன்றைக் கண்டார். அவரது கனவில் ஆச்சரியப்படத் தக்க விடயம் என்னவெனில் அவர் தனது வாழ்வில் முன்னர் எப்போதுமே பார்த்திராத அவ்விடத்தின், எரியப்போகும் அமைவிடத்தையும் அதன் விபரங்களையும் தெரிவித்தமையாகும். மறுநாட் காலை Boston நகரில் பெரும் தீ அனர்த்தம் ஏற்பட்டதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. விசாரித்தபோது கனவின் விபரங்கள் யாவும் உண்மை என்பது கண்டுகொள்ளப்பட்டது.
2. ஒரு சுவாமிக்கு ஏற்படப்போகும் சிக்கலான நோய் பற்றி ஒருவர் கனவு கண்டார். கனவில் கூறப்பட்ட அந் நோய் பற்றிய விபரங்கள் மட்டுமல்ல குணமாகும் செயன்முறை பற்றிய விபரங்களும் பின்னர் நிகழ்ந்த நிகழ்வுகளுடன் வாய்ப்புப் பார்க்கப்பட்ட போது மிகச் சரியாக இருந்தது.
3. வீடொன்றைக் கொள்வனவு செய்யும் முயற்சியில் நாம் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை ஒருவரை அவ்வீட்டிற்கான விலையை மதிப்பீடு செய்யும்படி கூறினோம். அப்போது அவர் "சுவாமி நான் இதன் பெறுமதி குறித்து கனவொன்றைக் கண்டேன் அதனையே கேட்போம்" என்றார். அத் தொகை அச்சொத்தின் மெய்யான விற்பனை விலையை விடவும் அரை மடங்கு குறைவானதாகும். குறித்த இவ்விலையைக் கேட்பின் அச்சொத்து எமக்கு கிடைக்காது. நாம் இதனை இழக்க வேண்டிவரும் என உணர்ந்தோம். எவ்வாறாயினும் நண்பர் வற்புறுத்தியதால் முகவரிடம் சென்று எமது விலையைக் கூறினோம். அம் முகவர் சொத்து உரிமையாளருக்கு அறிவிக்காமலேயே இவ் விடயத்தைக் கைவிடத் தீர்மானித்து விட்டார். இறுதியாக ஒருவாறாக முகவரை இணையவைத்து எமது விலையை (மறுக்கும் உரிமையுள்ள) சொத்து உரிமையாளருக்கு காசோலையை அனுப்பி வைத்தோம். மறுநாட் காலை முகவர் தொலைபேசி மூலமாக சொத்துரிமையாளர் அதனைக் குறித்த அந்த விலைக்குத் தரச் சம்மதித்துவிட்டார் என நண்பருக்கு அறிவித்தார். கனவில் தோன்றியபடி அவ்விலைக்கு அச்சொத்து கொள்வனவு செய்யப்பட்டது.

17. Maxmuller, Upanisads; (1879), The Sacred Books of the East Trans. Vol I, Oxford at the Clarenden Press . 76
18. Ibid p. 262 - 263
19. வெங்கடேச ஐயர். இ; (1995) இரகுநாதையர் பஞ்சாங்கம், கொக்குவில் ப. 28
20. மே.கு. ப. 28
21. பார்த்தசாரதி ஐயங்கார் J.C; சொப்பன சாத்திரம், சரஸ்வதி புத்தகசாலை, கொழும்பு. ப. 5
22. சிவசங்கரன்; சொப்பன சாத்திரம் எனும் கனவுகளின் பலன், நர்மதா பதிப்பகம், சென்னை.ப.7
23. Jung. C.G; (1939), The Intergration of personality Trans, by Stanley Dell, Farrar and Reinhart, New York . 32.
24. Ibid p. 15
25. Jacobi Joland; (1968), The Psychology of C.G Jung (7th Ed.) Routledge & Kegan paul. p. 79
26. Jung C.G; (1956), The Archetypes and the Collective Unconscious, Routledge Kegan paul, London. p.81.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்தில் பழமொழிகள்

கலாநிதி (திருமதி) இ. கயிலைநாதன்

## ஆய்வுச் சுருக்கம்

*'இந்து சமயத்தில் பழமொழிகள்' என்னும் இவ்வாய்வுக் கட்டுரையின் முக்கிய நோக்கமானது எம் முன்னோர் தம் வாழ்வின் அனுபவங்களைக் கொண்டு ஆக்கித் தந்த பழமொழிகளையும் அப் பழமொழிகள் எவ்வாறு இந்து சமயத்துடன் தொடர்புடையனவாகவும், இந்துக்களின் பண்பாட்டினை வெளிப்படுத்திக் காட்டுவனவாகவும் அமைந்துள்ளன என்பதனை விபரித்துக் கூறும் ஒரு விபரண ஆய்வாகும்.*

### சமயமும் வாழ்வும்

இந்து சமயத்தில் மக்களது வாழ்வு வளம்பெறத் துணையாக இருப்பது சாஸ்திர ரீதியான சமய அறிவுரைகளே. சமயமும் வாழ்க்கையும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து பிரிக்க முடியாதிருப்பதை யாவரும் அறிவர். சமயம் வேறு; வாழ்க்கை வேறு என்று இந்துக்கள் என்றுமே எண்ணியதில்லை. எனவே தான் வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்க வேண்டியவற்றை நம் சமயத் தலைவர்கள் சமயம் என்பதன் ஊடாகக் கொடுத்திருக்கின்றனர். நம் முன்னோர்களின் வாழ்க்கை முறைகள் விதிகள், நிபந்தனைகள் எல்லாம் ஒன்றாகத் திரண்டு சமயம் என உருவெடுத்ததாக இருக்க வேண்டும் என்றால் மிகையாகாது.

மனிதனை மனிதனாக வாழ வைப்பது சமயம். மனிதன் பிறக்கும் போது உள்ளத்தாலும், உணர்வாலும் பூரணமடைந்தவனாகப் பிறப்பதில்லை. அவனுக்கு மனோவளர்ச்சியை ஏற்படுத்துவது சமயம் என்றே கூறலாம். நாளாந்த வாழ்க்கையில் மனிதன் பின்பற்றி நடக்க வேண்டிய கடமைகள் அல்லது நித்திய ஒழுக்கங்களை சமயத் தலைவர்கள் தந்துள்ளனர். அகத்தூய்மை அளிக்கும் அறங்களோடு உடல்நலம் பேணும் புறத்தூய்மையைப் பற்றியும் வலியுறுத்தி யிருக்கின்றனர்.

ஆதியில் சமயம் தோன்றிய பொழுது அது ஒரு வாழ்க்கை நெறியாகத் தோன்றியது. சமயம் வேறாக வாழ்க்கை வேறாகப் பிரித்துப் பார்க்கப்படவில்லை. வைகறையிற் துயிலெழுதல், மஞ்சள்நீர் தெளித்தல், சாணி தெளித்தல், அல்லது சாணத்தால் மெழுகுதல் போன்றவை சமயத்துக்கும் வாழ்க்கைக்கும் பொருத்தமான தாக அமைகின்றன. இவ்வாறு மனிதனை வழிநடத்திச் செல்லும் சமயம் அவனை ஆசார ஒழுக்கங்களுடன் வாழ்வதற்காக சமய அறிவுரைகளுடன் கூடிய பழமொழிகளையும் தோற்றுவித்தது. இப்பழமொழிகளானவை மக்களது கலாச்சார பண்பாட்டு முறைகளுக்கு ஏற்ப மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகளையும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன என்றால் மிகையாகாது.

### சமயமும் பழமொழிகளும்

பழமொழிகள் என்பது மனிதனது வாழ்க்கையில் கிடைத்த அனுபவ மேலீட்டினால் தோன்றின. பழமொழிகள் மனித சமுதாயத்தின் ஒழுக்க வளர்ச்சிக்கும் பண்பாட்டுச் சீரமைப்புக்கும் சிந்தனைச் செழுமைக்கும் உறுதுணையாக விளங்கும் விசித்திரப் பொக்கிசங்கள் எனலாம். பண்டு தொட்டு வழங்கிவரும் பழைமை காரணமாகவும் பழுத்த அனுபவமொழிகள் எனும் அர்த்தத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கூற்றுக்கள் பழமொழிகள் என வழங்கப்படுகின்றன எனலாம்.

வாழ்வே சமயம், சமயமே வாழ்வு என்ற நிலையில் வாழ்வின் அனுபவங்களை எம் முன்னோர் மூதுரைகளாக ஆக்கித் தந்துள்ளனர். எனவே பெரும்பாலான மூதுரைகள் இந்துசமயத் தொடர்புடையனவாகவும், இந்துக்களின் பண்பாட்டினை வெளிப்படுத்திக் காட்டுவனவாகவும் அமைந்துள்ளன என்றால் நாம் மறுக்க இயலாது.

இவ்வுலக வாழ்வு இம்மை இன்பத்தையும் மறுமை இன்பத்தையும் தரக்கூடியதாக அமைய வேண்டும் என்பதே இந்து மதத்தின் கொள்கை. இந்த அடிப்படையில் தான் இந்துமதம் அறம், பொருள், இன்பம். வீடு ஆகிய நான்கு புருடார்த்தங்களையும் (உறுதிப் பொருட்கள்) பிரமச்சாரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் ஆகிய நான்கு வாழ்க்கைப் படிகளையும் அமைத்துத் தந்துள்ளது. இதன் செல்வாக்கு இந்துமக்களது பண்பாட்டில் நன்கு ஊறியிருப்பதையும் இந்துக்களாகிய தமிழ் மக்களின் அனுபவ வெளிப்பாடுகளான பழமொழிகளிலும் இதன் செல்வாக்கு நிறைந் திருப்பதையும் அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.

இந்து மக்களது வாழ்க்கையில், இந்துமதம் வாழ்வு முழுவதுமே பின்னிப் பிணைந்து இருப்பதனால் பழமொழிகளில் இந்துசமயத்தின் தாக்கம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். பழமொழிகள் வாழ்விற்குத் தேவையற்ற ஒன்று என நாம் தட்டிக்கழிக்க முடியாதவை.

யாழ்ப்பாண இந்துசமயத்தவர்கள் வாழ்வில் பழமொழிகளின் பயன்பாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். சிறப்பாகச் சொல்லப்போனால் யாழ்ப்பாண சமுதாயத்தின் தமிழ்பேசும் மக்களால் சிறப்பாக இந்துக்களால் இத்தகைய பழமொழிகள் அன்றாடப் பேச்சு வழக்கில் வழங்கப்பட்டு வருகின்றன. தங்களது சமுதாயப் பண்பாட்டு ஒழுங்கமைப்புக்கு ஏற்றவாறு இவர்கள் பழமொழிகளைக் கையாண்டு வருகின்றனர். அதாவது மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் போதும், தங்களுக்கிடையே ஒருவர்க்கு ஒருவர் கருத்துப் பரிமாற்றம் செய்யும் போதும் பொருத்தமான சந்தர்ப்ப சூழ்நிலையில் பொருளுணர்ந்து இப்பழமொழிகளைப் பயன் படுத்தி வருகின்றனர் என்பது நாம் யாவரும் அனுபவ வாயிலாக அறிந்ததே. தம்மையறியாமலே இத்தகைய பழமொழிகளை ஆசிரியர்கள் மாணவர்க ளிடத்திலோ, தாய் தந்தையர் பிள்ளைகளிடத் திலோ, பெரியோர் சிறியோரிடத் திலோ அன்றாட வாழ்வில் கையாண்டு வருவதை நாம் காணக்கூடியதாய் உள்ளது. அத்துடன் விரித்துக் கூறவேண்டிய சில விடயங்களைப் பழமொழிகள் மூலம் எளிதாகவும், சுவையாகவும் கூறி விடுவார்கள். இன்னும் தாம் கொண்டுள்ள கருத்தை அழுத்தமாகவும் சுருக்கமாகவும் கூறுவதற்கு இத்தகைய பழமொழிகளைப் பெரிதும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்துசமயச் செல்வாக்கிற்கு உட்படுத்தப் பட்ட எல்லாப் பழமொழிகளையும் எடுத்துப் பரந்துபட்டளவில் ஆய்வு செய்வதற்கு இக்கட்டுரை இடம்தரா என்கின்ற காரணத்தால் இந்துக்கள் பரந்துபட்டு வாழும் பகுதிகளில் ஒன்றான யாழ்ப்பாணத்தில் இந்துசமய மக்கள் மத்தியில்அவர்களது வாழ்க்கையில் ஊறிப் போன பின்னிப் பிணைந்து இருக்கின்ற சமய சம்பந்தமான அறிவுரைகள் அடங்கிய சில பழமொழிகளை மாத்திரம் எடுத்து அப் பழமொழிகள் எவ்வாறு இந்து சமயத்தவர் களுக்கு இந்து சமயத்தத்துவக் கருத்துக்களை விளக்கிக் காட்டுகின்றன என்பதனை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பழமொழிகளில் இந்துசமயச் செல்வாக்கு**

**இந்துப்** பண்பாட்டில் பயன்படுத்தப்பட்டு வரும் பழமொழிகளைக் கடவுள், ஆலயம், தானதர்மம், விதி, மனச்சாட்சி, செய்நன்றி மறவாமை, பேராசை, ஒழுக்கம், சுகாதாரம், வாய்மை, பொறுமை, சோதிடம் போன்ற அம்சங்களின் அடிப்படையில் நோக்கலாம்.

இறைவழிபாடு இம்மை – மறுமை என்னும் மனித வாழ்வின் இருமைக்கும் அஸ்திவாரமாக அமைவதை அனுபவித்து உணர்ந்தவர்கள் இந்துக்கள். எனவே தான் போலும் கடல் கடந்து சென்ற இடங்களிலும் கூட நம் இந்துக்கள் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற தங்கள் மூதாதையர்களது உபதேசத்தை மறவாமல் இந்துக் கோயில்கள் பல கட்டி வழிபட்டு வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் யாவரும் அறிவோம்.

"எல்லாம் வல்லவன் இறைவன்" என்ற நம்பிக்கை கொண்ட மக்களுடைய சமுதாயம் எமது இந்து சமுதாயம். பழம்பெருமை வாய்ந்தது எமது இந்துசமயம். என்று மக்கள் சேர்ந்து வாழத் தொடங்கினார்களோ அன்றே கடவுள் வழிபாடும், கூட்டு வழிபாடும் தோன்றியிருக்க வேண்டும். மனிதனை மனிதனாக வாழ வைப்பது கடவுள் நம்பிக்கை. தமிழ் மொழியில் காணப்படும் பழமொழிகளும் கடவுள் நம்பிக்கையும் கோயில் வழிபாட்டையும் மக்கள் மத்தியில் வலியுறுத்துவனவாகவும் வளர்த்தெடுப்பனவாகவும் அமைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

**"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"**
**"திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை"**

போன்ற பழமொழிகள் கடவுள் நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்துபவை. கடவுள் இருக்கும் இடம் கோயில், ஆன்மா இலயிக்கும் இடம் ஆலயம். எனவே தான்நம் மூதாதையர் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றனர். இப் பழமொழி ஊர்கள் தோறும் ஆலயங்கள் இருக்க வேண்டும் என்பதனை மக்களுக்கு வலியுறுத்துகின்றது. கோயிலின் அவசியம் என்ன என்பதனை நாவுக்கரசரின் பின்வரும் தேவாரம் அறிய வைக்கின்றது.

**"திருக்கோயிலில்லாத திருவிலூருந்**
**திருவெண்ணீறணியாத திருவிலூரும்**
**பருக்கோடிப் பக்திமையாற் பாடா ஊரும்**
**பாங்கினொடு பலதளிகளில்லா வூரும்**
**விருப்போடு வெண்சங்கமூதா வூரும்**
**விதானமும் வெண் நொடியுமில்லா வூரும்**
**அருப்போடு மலர் பறித்திட்டுண்ணா வூரும்**
**அவையெல்லா மூரல்ல வடவி காடே"**

கோயில் கட்டி வழிபாடு செய்யாத ஊரெல்லாம் ஊர்கள் அல்ல. அடர்ந்த காடே ஆகும். ஏனெனில் அங்கு வாழும் மக்கள் கடவுள் நம்பிக்கையும் கோயில் வழிபாடும் இல்லாமையால் கொடிய காட்டில் வாழும் விலங்குகளின் குணங்களை உடையவர்களாக விளங்குவார்கள். எனவே அவ்வூர் மனிதப் பண்புள்ள மக்கள் வாழும் ஊர்கள் அல்ல. அவை கொடிய விலங்குகள் வாழும் அடர்ந்த காடுகள் ஆகும் எனக் கூறும் அப்பர் சுவாமிகள்.

**"ஆக்கையாற் பயனென் அரன்**
**கோயில் வலம் வந்து**
**பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்**
**ஆக்கையால் பயன் என்"**

என நமக்கு உடல் கிடைத்ததே கோயில் வழிபடவேயாம் என எடுத்துக் காட்டுகின்றார்.

இயற்கையை இறைவனாகக் கண்டவர்கள் இந்துக்கள். சிந்துவெளி நாகரிக காலத்தில் இருந்தே இப்பண்பைக் காணலாம். இவ் வியற்கையானது ஐம்பூதங்களாய் அமைந்துள்ளன. கடவுளாகப் பார்ப்பதற்கு அது இறைவனாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை வேறுபடுத்திப் பார்ப்பதற்கு பஞ்ச பூதங்களாகவும் தெரியும். இத் தத்துவக் கருத்தைத் தோத்திரமாகவும், சாத்திரமாகவும் போற்றப்படும் திருமந்திரம் பின்வருமாறு கூறுகிறது.

**"மரத்தை மறைத்தது மாமதயானை**
**மரத்துள் மறைந்தது மாமதயானை**
**பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்**
**பரத்தில் மறைந்தது பார்முதற் பூதமே"**

இயற்கையும், இறையும் பற்றிய இச் சமய தத்துவத்தை வெளிப்படுத்தும் "நாயைக் கண்டால் கல்லைக் காணேன், கல்லைக் கண்டால் நாயைக் காணேன்" எனும் பழமொழி நாமெல்லாம் அறிந்ததே.

இல் வாழ்க்கை என்பது இந்துப் பண்பாட்டில் மிக முக்கியமானதும் மிகவும் பொறுப்பு வாய்ந்ததுமான ஒன்றாகும். சமூகத்தின் மூன்று நிலைகளில் உள்ள பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகியோருக்கு தேவையானவற்றைக் கொடுக்க வேண்டியது இல்வாழ்வான் கடன். அவன் தேடும் பொருள் எறும்பு முதல் பிதிர் வரை பயன்பட வேண்டியது. எனவே தான் மனுதர்ம சாஸ்திரம் இல்வாழ்வான் மூச்சுக் காற்றுப் போன்றவன் என்கின்றது. உபநிடதம் "அதிதி தேவோ பவ" என்கின்றது வள்ளுவரும்

**"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்றதுணை"**

**(இல் வாழ்க்கை : 41)**

என்கிறார், ஔவைப் பிராட்டியார் " அறம் செய்ய விரும்பு" என்றார். "செய்" என்று ஆணையிடவில்லை. "விரும்பு" என்றே கூறுகின்றார். காரணம் செய்ய முடியாதவரும் இருக்கலாம். அவர் விரும்பினால் போதும் அதுவே கருணையாகும்.

"இல்லாமை கொடுமையல்ல இயலாமை குற்றமல்ல விரும்பாமையே பாவமாகும்" என்றார் கவிஞர் கண்ணதாசன். எனவே பொருள் தேடும் கடமைஒன்று இல்வாழ்வானுக்கு உண்டு. பழமொழிகளும் ஈகை பற்றிப் பல்வேறு கருத்துக்களை எமக்குத் தருகின்றன. தானம் கொடுப்பவர்க்கும் இரப்பவர்க்கும் அறிவுரைகளை மூதுரைகள் மூலம் நம் மூதாதையர் விளக்குகின்றனர். முதலில் "தர்மம் தலை காக்கும்" என்கின்றது ஒரு பழமொழி. இது ஒருவரைத் தான தர்மம் செய்யத்தூண்டுகின்றது. அதே நேரம் தேவையற்றவர்களுக்குக் கொடுத்து அவர்களை சோம்பேறிகள் ஆக்குவதையும் இந்துமதம் விரும்பவில்லை.

**"உதவி வரைத்தன்று உதவி உதவி**
**செயப்பட்டார் சால்பின் வரைத்து"** என்றார் வள்ளுவர்

**(செய்ந்நன்றியறிதல் : 105)**

ஏதோ உதவி செய்ய வேண்டும் என்று நீ எல்லோர்க்கும் செய்துவிடாதே. யாருக்குச் செய்கிறோம் என்பது முக்கியம் என்றார் அவர். அதாவது நன்றி உள்ளவனுக்கு, உண்மையாகவே தேவைப்படுகின்றவனுக்குச் செய்யப்பட வேண்டும் என்பது அவர் கருத்து. இதனை வெளிப்படுத்துவதாக "பாத்திரமறிந்து பிச்சை போடு" என்னும் பழமொழி வழக்கில் உள்ளது. இன்னும் தானம் கொடுப்பவன் ஆரவாரமற்றுக் கொடுக்க வேணும் என்பதற்காகத் தோன்றியதே

**"அரைக் கொத்தரிசி அன்னதானம்**
**விடியவிடிய மேளதாளம்"** என்னும் பழமொழி

மகாபாரதத்தில் கர்ணன் தன் வலது கை கொடுப்பதை இடதுகையறியாது தானம் கொடுத்தான் என வர்ணிக்கப்படுகிறது. அதே நேரம் இருப்பதை மற்றவர்களுக்குக் கொடுத்து விட்டு கொடுத்தவன் தனக்கு ஒன்றும் இல்லாமல் இருக்கக்கூடாது என்பதிலும் நம் மூதாதையர் கவனமாக இருந்தனர் என்பதனைக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தனக்கு மிஞ்சித்தான் தானம்"**
**"ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு"**

என்கின்ற பழமொழிகள். தானம். பெறுபவரும் மற்றவர் மதிக்கும்படி செல்ல வேண்டும் என்பதனைக் காட்ட "இரக்கப் போனாலும் சிறக்கப் போ" என இரப்பவர்க்கு அறிவுறுத்துவதாக இப்பழமொழியையும், அது மாத்திரமல்லாமல் இரப்பவர் இது தான் எனக்குத்தா எனக் கேட்கக்கூடாது கொடுப்பதை வாங்குவதே நல்லது என்பதனை காட்ட "தானம் கொடுத்த மாட்டை பல்லைப் பிடுங்கிப் பார்க்காதே" என்ற பழமொழியும் அமைந்துள்ளது. தானம் செய்பவர் தான் தகுதியான வர்க்குத்தானம் செய்வது மட்டுமல்லாமல் தானம் பெறுபவர்களும் தகுதியானவர்களிடம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை "பிச்சை வேண்டாம் நாயைப்பிடி" எனும் பழமொழியையும் கொண்டு நம் மூதாதையர்கள் அறிவுறுத்தல்களைச் செய்துள்ளார். இந்துதர்ம சாஸ்திரங்கள், இலக்கியங்கள் எவ்வாறு தானம் பற்றிய கருத்துக்களைக் கூறுகின்றனவோ அதே போன்று பழமொழிகளும் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கின்றன.

கன்மம், மறுபிறப்புக் கோட்பாடு போன்ற வற்றில் உறுதியான நம்பிக்கை கொண்டவர்கள் இந்துக்கள். ஓர் ஆன்மா தான் செய்த செயல்களுக்கு ஏற்ப பிறவி எடுத்து அவற்றை அனுபவிக்கும் என்பது உபநிடத காலத்தில் இருந்து பேசப்படுவது. செய்தவினை அதே வடிவத்தில் திரும்ப வரும் என்று போதிக்கிறது இந்துமதம். ஓர் ஆன்மா தான் செய்து அனுபவியாது எஞ்சி இருக்கும் வினைத் தொகுதியை சஞ்சிதம் எனவும், அதில் இருந்து இந்த உடலுடன் அனுபவிக்க எடுத்துத் தரப்பட்டது பிராரப்தம் எனவும் புதிதாக நாம் செய்வது ஆகாமியம் எனவும், சைவசிந்தாந்தம் கூறுகிறது.

இந்தப் பிறவியில் நாம் அனுபவிக்கும் கன்மங்களை எமக்கு தருபவர் இறைவன். அவ்வாறு எமக்கு வரும் இன்ப துன்பங் களுக்குக் காரணமான கன்மத்தை விதியென்கிறோம்.

இதனை வள்ளுவரும் ஊழ் என்னும் அதிகாரத்தில் விளக்கிக் கூறுகின்றார்.

**"அளந்தது அவ்வளவு தான்"**
**"தன்வினை தன்னைச் சுடும்"**
**"வினை விதைத்தவன் வினையறுப்பான்"**
**"எல்லாம்அவன் செயல்"**
**"கெடுவான் கேடு நினைப்பான்"**
**"நாய்க்கு நடுக்கடலிலே போனாலும் நக்குத் தண்ணீர்தான்"**

எனும் பழமொழிகள் விதி பற்றிய இந்துக்களின் நம்பிக்கையை வெளிக்காட்டு கின்றன. "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்கிறது புறநானூறு. நாம் செய்த கன்ம பலன் சில உடனே கிடைத்துவிடும் என்பதனை "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" எனும் பழமொழியும், சில கன்ம பலன்கள் காலம் சென்று கிடைக்கும் என்பதனை "அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்" எனும் பழமொழியும் எடுத்துக் காட்டுகின்றன.

எமது துன்பங்களுக்கு நமது செயல்களே காரணம் என்பதனை "கேடு வரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" எனவும் அதே போன்று நாம் செய்த நல்வினைப் பயனாக இன்பமும் வந்து சேரும் என்பதனை "கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்" எனவும் பழமொழிகள் விளங்க வைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எதையும் திட்டமிட்டபடி முயற்சி செய்தாலும் எம் விதிப்படியே அதன் பலன் நல்லதாகவோ தீயதாகவோ அமையும். இதனை விளக்குவதாக "நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்" எனும் பழமொழி அமைகின்றது. ஊழ்வினையின் பலத்தைக் காட்ட வள்ளுவரும்

**"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினுந் தான் முந்துறும்"**

**(ஊழ் : 380)**

என்றார். இப்படிப்பட்ட வலிமை வாய்ந்த ஊழ்வினையை இடையறாது முயற்சி செய்தால் வெல்ல முடியும் என்ற இவ்வுயர்ந்த தத்துவத்தையே "விதியை மதியால் வெல்லலாம்" எனும் பழமொழி விளக்குகிறது.

ஒருவன் இம்மை மறுமை இன்பம் பெறும்படி நல்வழி நடப்பதற்கான வழியைக் காட்டுபவர் குரு. அவர் காட்டிய வழியில் கணவன் நடக்கத் தோள் கொடுப்பவள் மனைவி. இவ்விருவரும் சரியானவர்களாக அமையாவிடில் இவ்வுலக சந்தோசமோ மறுமை இன்பமோ அடைதல் அரிது. இவ்வாறான இருவரும் ஒருவர்க்கு ஒருவர் கிடைப்பதே விதிப்படி தான் என்பதனை "தாரமும் குருவும் தலைவிதிப்பயன்" எனும் பழமொழி வெளிப்படுத்துகின்றது. இந்துமத வாழ்வியல் ஒழுக்கங்களை நெறிப்படுத்துவதில் பழமொழிகளின் பங்கை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

இந்துக்கள் இறைநம்பிக்கை மிக்கவர்கள் அதன் வழிநின்று வாழ்க்கை நடத்துபவர்கள் இம்மக்கள் ஆசார சீலர்களாக வாழ்வதற்காக இந்துமதம் ஒவ்வொரு மனிதனும் தங்களது மனதைக் கோயிலாக எண்ண வேண்டும் எனவும், அம் மனதை தூய்மையாக அதாவது கொலை, களவு, காமம் போன்ற துர்க்குணங்கள் இன்றி வைத்திருக்க வேண்டும் எனவும் கூறுகின்றது. ஒருவர் தன் சமூகத்திற்குத் தெரியாத வழியில் ஒரு குற்றத்தைச் செய்யலாம். ஆனால் அவரது மனம் அவரை ஒவ்வொரு நிமிடமும் சொல்லிக் காட்டிக் கொண்டிருக்கும். ஒருவர் தன் மனம் அறியாது எந்தக் குற்றத்தையும் செய்ய முடியாது. எனவே தான்

**"குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்"**
**"தன் குற்றம் தனக்கே தெரியும்"**

என்னும் பழமொழிகள் ஒருவரது மனமே அவருக்கு எதிராக சாட்சி சொல்லும் என்பதனை வெளிக்காட்டுகின்றன. எப்போதும் தீங்கு புரியாத தூய மனம் கொண்ட ஒருவரது முகம் அழகு இல்லாவிடினும் தெளிவாகவும் தெய்வீகத்தன்மை பொருந்தியதாகவும் இருக்கும் என்பதனை யாவரும் அறிவர். இதனை வெளிப்படுத்துவதாகவே "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்னும் பழமொழி அமைகின்றது. நாம் எண்ணுகின்ற எண்ணங்கள் உயர்வாக இருக்க வேண்டும் என வள்ளுவர்

**"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து" என்றார்.**

செய்நன்றி மறக்கக் கூடாது. அது ஒரு பெரிய துரோகமான செயல் என்றெல்லாம் இந்துமதம் போதிக்கின்றது. ஒருவர் செய்கின்ற நன்மையை ஏழேழு பிறவி எடுத்தாலும் மறக்கக் கூடாது என நம்புபவர்கள் நம் மூதாதையர். வள்ளுவரும்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்**
**உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"**

**(செய்ந்நன்றியறிதல் : 110)**

என்றார். ஒருவர் எந்த வகையான அறத்தை அழித்தவர்க்கும் மன்னிப்பு உண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்கு உய்வே இல்லை என விளக்குகின்றது இக்குறள். இதனையே நம் மூதாதையர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடாதே"
"உப்பிட்டவரை உள்ளளவும் நினை"

எனும் பழமொழிகள் மூலம் வெளிப்படுத்து கின்றனர்.

நிலையாமையை எண்ணி விரும்பாமையைக் கைவிடு என இந்துமதம் நிலையாமையைப் போதிக்கின்றது. பரம்பொருள் மீது பற்றுவை, நிலையற்ற பொருள்களின் மீது ஆசை வராது என்கின்றது இந்துமதம். வள்ளுவரும்

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்றிவிடற்கு" என்றார்

(துறவு : 350)

உலகியல் வாழ்க்கையில் அதிகம் பற்றுவைக்கக் கூடாது எனவும், அதனால் வாழ்க்கையில் துன்பமே அதிகம், இன்பம் இல்லை எனவும் விளக்க வைக்கின்றார். எனவே தான் நம் மூதாதையரும்

"பேராசை பெரும் தரித்திரம்"
"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு"

போன்ற பழமொழிகள் மூலம் ஒருவர் பேராசை கொள்ளக் கூடாது எனவும் எதிலும் திருப்தியாக இருக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்துகின்றனர்.

இந்துக்களின் வாழ்வில் ஒழுக்கம் மிகவும் பேணிப் பாதுகாக்கப்படும் ஒன்று. ஒருவன் வாழ்வைக் கொண்டு செல்லவே கல்வி. சமய நூல்களையும் நீதி இலக்கியங்களையும் கற்றவன் அதன்படி வாழ்க்கையில் ஒழுக வேண்டும். ஒன்று கற்று அதன்படி ஒழுகாது ஒருவன் அதர்ம வழியில் செல்லக்கூடாது என்பதை "படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில்" என்னும் பழமொழி எடுத்துக் காட்டுகின்றது.

ஒருவனது வாழ்வில் ஒழுக்கமானது உயிரினதும் மேலானதாக உலகத்தாரால் கருதப்படுகின்றது. நல்லொழுக்கம் உள்ளவர்களின் சேர்க்கையை உயர்வாகக் கருதும் நம் மூதாதையர்களும் "பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்" என்னும் பழமொழி மூலம் எடுத்துக் காட்டுகின்றனர். மகாபாரதத்தில் கர்ணன் சிறந்த குண இயல்புகள் உள்ள ஒருவனாக இருந்தும் துரியோதனன் ஆகியோரின் சேர்க்கையால் அழிந்து போகின்றான்.

இந்துமதம் பிறந்த காலத்தில் இருந்தே மதுவுக்கு எதிராக வாதாடிப் போதிக்கின்றது. குடியைப் பற்றிச் சொல்லுகின்ற புராண இதிகாசங்கள் ஏராளம். வள்ளுவரும் சுருக்கமாக "நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்பார். நம் மூதாதையர் "குடி குடியைக் கெடுக்கும்" என்று வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

உபநிடத காலத்தில் இருந்தே வாய்மையைப் போற்றிப் புகழ்ந்து வரும் பெருமை இந்து மக்களுக்கு உண்டு. "சத்யம் வத" என உபநிடதம் கூறுகின்றது. வள்ளுவரும் "பொய்யாமை அன்ன புகழில்லை" என்றார். "உண்மையின் பேர் தெய்வம் என்போம்" என்றார் பாரதியார்.

நம் முன்னோரும் வாய்மைக்கு முக்கியத்தவம் கொடுத்துப் பொய்யாமையை நீக்கி வாழ வேண்டும் என்பதனை விளக்குமுகமாக

"பொய் சொன்ன வாய்க்குப்
பொரியும் கிடையா"
"பொய்யும் புரட்டும் சிரட்டையும் கையும்"

என்ற பழமொழிகள் மூலம் விளக்கினர். அனுபவத்தின் குழந்தைகளான பழமொழிகள் நடைமுறைச் சாத்தியமானவற்றையே சொல்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. எனவே நாம் உண்மை பேசுபவரிடத்து அது நல்லவர்கட்கு தீமை பயக்குமாயின் அந்த இடத்துப் பொய்யையும் சொல்லலாம் எனச் சிந்திக்க வைக்கிறது ''பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லு'' என்னும் பழமொழி. வள்ளுவரும்

**''பொய்மையும் வாய்மையினிடத்து**
**புரை தீர்க்க நன்மை பயக்குமெனின்''**
**(வாய்மை :292)**

எனும் குறள் மூலம் உண்மை பற்றிய இக்கருத்தை எடுத்துக் காட்டுவது சிறப்பாக உள்ளது.

சுத்தம், சுகாதாரம் என்பன இந்துக்களால் நாள் தோறும் பேணிப் பாதுகாக்கப்படுகின்ற ஒன்று. சுகாதாரம் ஆதாரம் போன்றது. ஒருவன் துயிலெழுதலிலிருந்து இரவு படுக்கைக்குப் போகும்வரை செய்ய வேண்டிய நித்திய கரும விதிகளை ஆறுமுகநாவலர் நுணுக்கமாகவும், அழகாகவும் விளக்கிக் கூறியுள்ளார். இந்துக்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக இருக்க வேண்டும் என்பதே இந்துமதத்தின்அடிப்படை நோக்கமாகும். இந்த அடிப்படையிலேயே மக்களும் தங்களையும் தங்கள் குழந்தை களையும் ஆசார சீலர்களாகப் பேணிப் பாது காக்கின்றனர். சுத்தமாகவும், சுகாதாரமாகவும் மக்கள் வாழ வேண்டும் என்பதற்காக நம் முன்னோர் கூறிவைத்த விதிமுறைகள் எவ்வளவு சுகாதாரத்திற்கு உகந்தவை என விஞ்ஞானங்களும் எடுத்துக் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக வீட்டைப் பெருக்குதல், மஞ்சள் நீர் தெளித்தல், சாணம் தெளித்தல் அல்லது சாணத்தால் மெழுகுதல் என்பன நம் முன்னோரின் நித்திய கருமங்களில் உள்ளன. இம் முறைகள் சுகாதாரத்திற்கு எவ்வளவு உகந்தவை என ஒருவர் எண்ணிப் பார்க்கும் போது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கின்றது. மஞ்சள், சாணம் போன்றவை கிருமிநாசினி போன்றவை. இவற்றினால் வீடு, வீட்டுச் சுற்றாடல்கள் ஆகியவற்றினைச் சுத்தம் செய்வதால் ஒருவர் வாழும் இடம் சுகாதாரமயமாக்கப்படுகின்றது. சுத்தம், சுகாதாரம் பாதுகாக்கப்படுவதால் ஒருவர் நோயின்றி நீண்ட ஆயுளுடன் வாழலாம். ஔவையாரும் ''நோய்க்கு இடம் கொடேல்'' எனக் கூறுகின்றார். நோய்க்கு இடம் கொடுக்கக் கூடாது என அவர் வலியுறுத்துவதற்குக் காரணம் மக்கள் சுத்தமாக வாழப்பழக வேண்டும் என்பதேயாகும். இவற்றை வெளிக்காட்டும் பழமொழிகளாக

**''சுத்தம் சுகம் தரும்''**
**''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''**

போன்றவை காட்டப்படுகின்றன. இன்னும் இந்துமதமானது ஒருவர் தினமும் நீராடித் தோய்த்து உலர்ந்தஆடை அணிந்து திருக்கோயில்களுக்குச் செல்ல வேண்டும் என்பதனையே வலியுறுத்துகின்றது. ஒருவர் ஏழையானாலும் சரி செல்வந்தனாக இருந்தா லும் சரி சுத்தமாகவும் சுகாதாரமாகவும் உடை அணிந்து உணவு உண்டு வாழப் பழக வேண்டும் என்பதைக் காட்டுமுகமாக நம் முன்னோர்கள் பின்வரும் பழமொழியை எடுத்துக் கூறுகின் றனர்.

**''கந்தையானாலும் கசக்கிக் கட்டு**
**கூழானாலும் குளித்துக் குடி''**

நோய் வந்தபின் காப்பதை விட நோய் வராமல் பாதுகாப்பதே மேல் என்பதை ''வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்'' எனும் பழமொழி எடுத்துக் காட்டுகிறது. ''எச்சில் இரக்கவைக்கும் தூய்மை துடைக்க வைக்கும்'' என்னும் பழமொழியையும் நாம் கருத்தில் கொண்டு நடந்தால் நோய்க்கு நாம் பயப்படத் தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித விழுமியங்களில் சிறந்ததொன்றாக பொறுமையை இந்துமதம் வலியுறுத்துகின்றது. மகாபாரதம் பொறுமையிற் சிறந்தவனான தர்மன் ஆகியோர் வெற்றி பெற்றமைக்குத் தர்மனின் பொறுமையே காரணமாகும் எனக்காட்டுகிறது.

"பொறுத்தார் பூமியாள்வார்
பொங்கினார் காடாள்வார்"

என்னும் பழமொழியும்

"துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்"
"ஆத்திரக் காரனுக்கு புத்திமட்டு"

என்னும் பழமொழிகளும் இதனை எடுத்துக் காட்டுகின்றன. கோபம் மனிதனை அழிக்கும் ஆறு குணங்களில் ஒன்றாகச் சொல்லப் படுகின்றது.

மக்களது வாழ்வு வளம்பெறத் துணை புரிவனவற்றை சாஸ்திர ரீதியாக நோக்கும் மரபு இந்து மக்களிடையே இருந்து வருகிறது. சாஸ்திரம் மக்களது கண்போன்றது. சாஸ்திரங் களைத் தெய்வீக மரபின் அடிப்படையில் நோக்கும் நிலையும் இந்துப் பண்பாட்டில் உள்ளது. ஒருவர் பிறந்தது முதல் இறப்பு வரை உள்ள காலப்பகுதியில் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்விலும் சாஸ்திரம் முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது. இச் சாஸ்திரங்கள் இந்துக்களைப் பொறுத்தமட்டில் வாழ்வியலோடு தொடர்புபட்டதாகவே இருக் கின்றன. மக்கள் சாஸ்திரங்களில் கொண்ட திடமான நம்பிக்கையால் பல சாஸ்திரம் சம்பந்தமான பழமொழிகளையும் தம் அனுபவவாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர் நம் முன்னோர். ஒரு குழந்தை பிறந்த உடனேயே அது பிறந்த நாள் நேரம் ஆகியவற்றைக் கொண்டு அதனது நட்சத்திரம் குறிக்கப்பட்டு சாதகம் எழுதிவைக்கின்றனர். குழந்தைகள் எந்தெந்த நட்சத்திரத்தில் பிறந்தால் நல்லது, கூடாது என்றெல்லாம் நம் முன்னோர் கூறி வைத்துள்ளனர். பழமொழிகள் மூலம் நட்சத் திரங்களின் பலன்களைக் கூறுவதைப் பார்க்கலாம்.

"பரணி பாழ் போகாது"
"பரணி தரணி ஆளும்"
"ஆண் மூலம் அரசாளும் பெண் மூலம் நிர்மூலமாக்கும்"
"பூராடம் ஊசாடத் தீரும்"
"அவிட்டத்தில் பெண் பிறந்தால் தவிட்டுப் பானையும் பொன் ஆகும்"

## முடிவுரை

பழமொழிகள் மாத்திரம் அல்ல உவமைத் தொடர்கள், மரபுத்தொடர்கள், இணை மொழிகள் கூட இந்துமத செல்வாக்கை வெளிப்படுத்திக் காட்டுகின்றன. "கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போல" எனும் உவமைத் தொடர் சந்தியா வந்தனம் செய்யும் இந்துக் களின் வழக்கத்தினையும், நாலூறு, கண்படுதல் போன்ற மரபுத் தொடர்கள் அவர்களது சமய பழக்க வழக்கங்களையும் மந்திர தந்திரம் போன்ற இணைமொழிகள் இந்துக்களின் மாய மந்திரங்களின் நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுவதற்கு உதாரணங்களாகும். கற்றவர் மாத்திரமல்லாது மற்றவரையும் இந்துமத வாழ்வியலில் நெறிப்படுத்திக் கொண்டு செல்வதால் கற்றோர் மட்டும் விளங்கும் இந்துசமய அற இலக்கியங்களை விடப் பழமொழிகளின் பங்கும் முக்கியமான தென்பதை ஒருவர் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

பழமொழிகள் இந்துக்களின் வாழ்வை நேற்று நெறிப்படுத்தின இன்று நெறிப்படுத்து கின்றன நாளையும் நெறிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இன்று எமக்கு வாழ்வாங்கு வாழ வழி காட்டுவதில் உலகப் பொதுமறையாம் திருக்குறள் முன்னணியில் நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமேலழகர் உரைதொட்டு இன்று வரை எத்தனையோ உரைகள் அதற்கு எழுந்துள்ளமை, திருக்குறள் கற்றவர்களை மட்டும் மனதில் கொண்டு எழுதப்பட்டது என்பதனைக் காட்டுகின்றது. ஆனால் பாமர மக்களும் வாழ்வில் விளங்கிப் பயன்படுத்தும் பழமொழிகள் கற்றவர்களை மட்டுமன்றி கல்லாதவர்களையும் இந்துமத நெறியில் வழிப்படுத்துவதால் சமூகத்தைக் கட்டி எழுப்புவதில் பழமொழிகள் மேலான நிலையில் உள்ளன எனக் கூறுதல் மிகையாகாது.

## அடிக்குறிப்புக்கள்

1. தனபாலசிங்கன், செ; உபநிடதச் சிந்தனைகள், பராபர வருஷம், உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில், பக்.109.
2. ராமஸ்வாமி, ப; உலகப் பழமொழிகள்
3. சைவத்திருமுறைத் திரட்டு, (1990) சிவதொண்டன் சபை, 434 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
4. தமிழ் நாட்டுப் பழமொழிகள் 2000, தொகுப்பு: செங்கனி, நர்மதா பதிப்பகம்.
5. தற்காலத் தமிழ் மரபுத் தொடர் அகராதி, மொழி கலாச்சார வள மேம்பாட்டு அறக்கட்டளை.
6. திருக்குறள். பரிமேலழகர் உரை, நான்காம் பதிப்பு, 1986, பதிப்பாசிரியர் புலியூர் கேசிகன்.
7. பதினெண் கீழ்க்கணக்கு (இரண்டாம் தொகுதி) பதிப்பாசிரியக் குழுவினரால் பல பிரதிகளை ஒப்புநோக்கிப் பரிசோதித்து வெளியிடப்பெற்றது, வெளியிடுவோர் எஸ். ராஜம்
8. பழமொழி நானூறு, தெளிவுரை ஆசிரியர் பண்டித சிர. சங்கத்து நாராயணசாமி அவர்களின் மாணாக்கர் வித்துவான் மி. பொன். ராமநாதச் செட்டியார், தமிழ் விரிவுரையாளர், சர். தியாகராயக் கல்லூரி, சென்னை.
9. Balasubramanian,K, Ratnamalar,K. and Subathini, R; (1998) ``Studies in Sri Lanka Tamil Linguistics and Culture (Selected Papers of Professor. S.Suseendirarajah) Students Offset Service, Chennai.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் புகலிட நாவல்கள்

கலாநிதி செ.யோகராசா

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழ் நாவல்களில், சமூக நாவல்கள், குடும்ப நாவல்கள், துப்பறியும் நாவல்கள், வரலாற்று நாவல்கள் என்றவாறு பல நாவல் வகைகள் உள்ளமை யாமறிந்ததே. இவ்விதத்தில் சென்ற நூற்றாண்டின் எண்பதுகள் தொடக்கம் இலங்கைத் தமிழ் நாவல் வளர்ச்சிப் போக்கிலே முகிழ்த்த புகலிட நாவல்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டியது தவிர்க்க இயலாததாகின்றது. ஏனெனில் சிறப்பாக இலங்கை நாவல் வளர்ச்சிப்போக்கிலும், பொதுவாக தமிழ் நாவல் வளர்ச்சிப்போக்கிலும் இவை முக்கியம் பெறக்கூடியனவாகவுள்ளது. இத்தகைய புகலிட நாவல்களின் பண்புகளை விரிவாக எடுத்துக் கூறுவதாகவும் இவ்வழி இவை தமிழ் நாவல் வளர்ச்சிப்போக்கிலே பெறுகின்ற முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவதாகவும், இவ்வாய்வு முயற்சி அமைகின்றது.*

### 1 பின்புலம்

இலங்கைத் தமிழரின் புலப்பெயர்வு சென்ற நூற்றாண்டிலே எண்பதுகளுக்கு முன்னர் இரு தடவைகள் (1920–1930, 1950–1960) இடம்பெற்றிருப்பினும் எண்பதுகளளவில் இடம்பெற்ற புலப்பெயர்வு வித்தியாசமானது. இவ்வாறு புலம்பெயர்ந்து சென்றோரில் கணிசமானோர் இலங்கையிலே இடம்பெற்ற அரச இராணுவ பேரினவாத ஒடுக்குமுறை காரணமாக அரசியல் தஞ்சம்கோரி ஐரோப்பிய நாடுகள் (எ.டு: ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே, சுவிஸ், பிரித்தானியா) அமெரிக்கா, கனடா, அவுஸ்திரெலியா நாடுகளுக்குச் சென்றனர். இவ்வாறு சென்றோர் ஆங்கில மொழியையோ, ஐரோப்பிய மொழியையோ அறியாதிருந்தனர்; உயர் கல்வி கற்காதவர்களாகவிருந்தனர். புகலிட நாடுகளில் அகதிநிலை வாழ்க்கையை எதிர்கொள்பவர்களாகவும் பண்பாடு, மொழி, நிறம், தொழில், மதம், காலநிலை அனைத்திற்கும் முற்றிலும் புதியவர்களாகவும் காணப்பட்டனர். இவ்வாறான புதிய சூழ்நிலையோடும் குடும்பப் பிரிவும், ஊர் நினைவும் இலங்கையில் நிகழ்ந்து வந்த ஒடுக்குமுறைக் கொடுமைகள் பற்றிய செய்திகளும், தனிமையும், அன்னியமும் இளமை உணர்வுகளும், குடும்பப்பொறுப்பும் எதிர்கால வாழ்க்கை பற்றிய அச்சமும் இவர்களை வாட்டி வதைத்தன. இவ்வாறு புலம் பெயர்ந்தோர்களில் முன்னாள் எழுத்தாளர்களும் எழுத்தார்வம் மிக்கவர்களும் காணப்பட்டனர். இவர்கள் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்தனர். விளைவாக புகலிட இலக்கியங்கள் பிறப்பெடுத்தன. இவற்றின் ஊடாக இவர்கள் தமது அனுபவங்களையும் வெளிப்படுத்தினர்.

நவீன இலக்கியத்தின் வடிவங்களுக்குரிய தனித்துவ இயல்புகள் காரணமாக தவிர்க்க இயலாதவாறு புகலிட இலக்கியங்களுள் கவிதைகளே முதன்மை இடம் பெற்றன. சிறுகதைகள் அதற்கு அடுத்த நிலையில் காணப்பட்டன. நாவல்கள் மிகக் குறைவாகவே எழுந்தன. குறுகிய கால அடைவில், பரந்த அனுபவ வட்டத்தை அவாவி நிற்கும் நாவல்கள் அதிகமெழ முடியாமை இயல்பானதே. ஆயினும், இவ்வாறு எழுந்துள்ள நாவல்களை ஆய்விற்குட்படுத்துவது தவிர்க்க இயலாததே ஆகும்.

### 2. அணுகுமுறை

இத்தகைய புகலிட நாவல்களை ஆய்வு வசதிகருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இலங்கையில் வாழ்கின்ற தமிழர் பற்றியவை.
2. புகலிட நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்கள் பற்றியவை.

என்று வகைப்படுத்தி அணுகுவது பொருத்தமானது. (இவ்வாறு வகைப்படுத்தி னாலும் இவ்வாறான நாவல்கள் பல, ஈரிடங்களையும் களமாகக் கொண்டிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## 3. இலங்கையில் வாழ்கின்ற தமிழர் பற்றியவை.

### *3.1 சீதனப் பிரச்சினை "ஆண்கள் விற்பனைக்கு"*

இலங்கைத் தமிழர் மத்தியிலே நீண்ட காலமாக நிலவி வருகின்ற பிரச்சினைகளுள் இப் பிரச்சினை முக்கியமானதொன்று. கவிஞர் பாரதியார்கூட இலங்கையில் நிலவி வரும் இப் பிரச்சினை பற்றி 'இந்தியா' பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் இப்பொருள் பற்றிய நாவல்கள் மிக அரிதாகவே இங்கு வெளிவந்துள்ளன. இவ் விதத்தில் புகலிட நாவலாகிய 'ஆண்கள் விற்பனைக்கு' கவனத்திற்குரிய படைப்பாகின்றது.

இந் நாவல் பற்றி நோக்கும் முன், புகலிட நாட்டில் இருந்து கொண்டு, தாய் நாட்டின் சீதனப் பிரச்சினை பற்றி எழுதுவது தொடர்பாக பார்த்தீபன் குறிப்பிடும் காரணம் இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் கூறுவதாவது :

"சீதனம் என்பது இப்போது பெரிய பிரச்சினை அல்ல என்பது போல பலர் பேசிக்கொள்கின்றார்கள். அது தவறானது என்பதை என்னால் நேரடியாகவே கண்டு கொள்ள முடிந்தது. சகோதரிகளுக்காக 12 மணித்தியாலங்களுக்கும் மேலாக காச் சம்பளத்தில் அடுப்பு வெக்கைக்கு முன்னால் வெந்து கொண்டிருக்கும் சகோதரர்களைச் சந்தித்தபோதும் அட்டகாசமான திருமணக் கொண்டாட்டங்களில் பங்குபற்றும் பலர் தங்களுக்குள் மணமக்களைப் பற்றிக் கதைத்துக் கொள்கின்ற போதும், அரசியல் தஞ்சம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள், வேலை செய்பவர்கள், குடியேற்ற அந்தஸ்து கிடைத்தவர்கள் தங்களது 'விலை' கூடிவிட்டதாக அறிவிக்கும் போதும், ஊரில் உள்ள ஆதனங்களை விற்று கூடவே குடும்பத்தையும் கடனாளியாக்கிவிட்டு, சீதனப் பொதியுடன் பிராங்போட் விமான நிலையத்தில் வந்து குவியும் தமிழ் பெண்களைப் பார்த்தபோதும் சீதனம் என்பதன் பாதிப்பு தெளிவாகவே புரிந்தது...."

ஆக, புகலிட நாட்டுச் சூழல் நாவலாசிரியரை இப்பொருள் பற்றி எழுதத் தூண்டியுள்ளதென்பது எமது கவனத்திற் குரியது.

'ஆண்கள் விற்பனைக்கு' நாவல், பத்மா, உமா என்ற இரு பெண்களின் கதை. பத்மா அறிவும், அனுபவமும் எதிர்நீச்சல் போடும் இயல்பும் கொண்டவள்; தன்னைப் போன்று கதை இலக்கிய ஈடுபாடுள்ள இளைஞன் ஒருவனை விரும்புபவள். எனினும் அவன் போலியானவன் என்றறிந்த பின் அவனிட மிருந்து ஒதுங்கிவிடுகின்றாள். உமா, முதிரா இளம் பருவத்தினள் 'ரியூட்டரி'யில் கற்கும் ஒருவனைக் காதலித்து, ஊர் சுற்றித் திரிந்தவள். எனினும், இறுதியில் அவனால் கைவிடப் பட்டவள். தற்கொலை செய்ய முயல்கின்ற போது பத்மாவின் உபதேசங்களுக்காட்பட்டு தற் துணிவு பெற்றவள். முடிவில், இருவரும் இம் முடிவிற்கு வருகின்றனர் :

"எப்பவாவது உண்மையான ஆம்பிளை ஆராவது எங்களை சந்திக்கும் மட்டும் இப்படியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பம்; சந்திச்சால் கல்யாணத்தைப்பற்றி யோசிப்பம்''. இலங்கையிலிருந்து இப் பொருள்பற்றி அரிதாகவே நாவல்கள் வெளிவந்துள்ளன என்ற விதத்திலும் நாவலின் முற்போக்கான முடிவுகாரணமாகவும் இந்நாவல் இலங்கை நாவல் வளர்ச்சியில் முக்கியம் பெறுகின்றது.

### *3.2 சாதிப்பிரச்சினை: 'வித்தியாசப்படும் வித்தியாசங்கள்'*

இலங்கைத் தமிழர் மத்தியில் புரையோடிப் போயுள்ள பிரச்சினைகளுள் அண்மைக் காலம் வரையும் சாதிப்பிரச்சினை முக்கியம் பெற்று வந்துள்ளது. தற்போது, இலங்கையில் இப் பிரச்சினை கணிசமான அளவு குறைந்துள்ளதாயினும் நாட்டுத்தமிழர் மத்தியில் குறைந்து போகவில்லை. இதன் விளைவாக இப் பிரச்சினையை பொருளாகக் கொண்டும் ஒரு நாவல் வெளிவந்துள்ளது. 'வித்தியாசப்படும் வித்தியாசங்கள்' என்ற அந்நாவலின் ஆசிரியரும் பார்த்தீபன்.

இப் பொருள் பற்றி ஏலவே பல நாவல்கள் இலங்கையிலிருந்து வந்துள்ளன. இவ்வித நாவல்கள் எழுதிய டானியல், செ.கணேச லிங்கன் ஆகியோர் நன்கறியப்பட்டவர்களே. இவர்களது நாவல்கள் போன்றே இந் நாவலும் மார்க்சிய நோக்கில் – போராட்ட வடிவில் அமைந்துள்ளது. ஆயினும், ஆசிரியரது மார்க்சியப் பார்வை தெளிவற்றமை கவனத்திற்குரியது. எனினும் இளந்தலை முறை எழுத்தாளரொருவர் சாதிப் பிரச்சினை பற்றி எழுதியுள்ளமையும் 'சமகால'ப் பிரச்சினையுடன் (விடுதலை இயக்கப்பின்னணி) அது தொடர்புபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதே.

### *3.3 குழந்தை வளர்ப்பு: 'பாதி உறவு'*

இலங்கைத் தமிழ் நாவலாசிரியரெவரும் இன்று வரைத் தொட்டிராத பிரச்சினை யொன்றினை – குழந்தை வளர்ப்பு முறையினை – தொட்டு வெளியான புகலிட நாவலாக உள்ளது, பார்த்திபன் எழுதிய பாதி உறவு.

''குழந்தைகளுடன் அவர்களின் மனங்களும் படிப்படியாக அனுபவங்களினாலும் படிப்பினாலும் தான் வளர்ச்சியடைகின்றன. திடீரென அவர்கள் பெரியவர்களாகி விடுவதில்லை. குழந்தைப் பருவத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள் தான் அதன் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றன. குழந்தைகளை பெற்றோர் களுடன் சூழ்நிலைகளும் சேர்த்தே வளர்க் கின்றன. தமது பிள்ளைகள் தீயவர்களாகவே வளரவேண்டும் என எந்தப் பெற்றோரும் திட்டம் போட்டு வளர்க்காவிடினும் தங்களது கவனக்குறைவால் பிள்ளைகளை அழிவுப் பாதையில் செல்ல அனுமதித்து விடுகின் றார்கள். இதைத் தடுக்க முடியாதா? முடியும் என்பதனை, ரவீந்திரன் நந்தினி குடும்ப வாழ்க்கையூடாக வெளிப்படுத்துகின்றார் நாவலாசிரியர்.

நாவலின் உள்ளடக்கப்புதுமையும், உளவியல் பாங்கும் இலங்கை நாவல் வளர்ச்சியில் இப்படைப்பிற்கு ஓர் இடத்தை வழங்குகின்றன என்பதில் தவறில்லை.

எவ்வாறாயினும் பார்த்தீபன் எழுதிய மேற்குறிப்பிட்ட மூன்று நாவல்களிலும் கருத்திற்கு – சமூக சீர்திருத்த நோக்கிற்கு முதன்மை அளித்திருப்பது காரணமாக இந் நாவல்களில் இயல்பான உணர்வுநிலை வெளிப்பாடும் அழகியல் அம்சங்களும் குறைந்தளவே வெளிப்பட்டுள்ளமை மனம் கொள்ளத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.4 *கிராமத்துவாழ்க்கை:தில்லையாற்றங்கரை*

புகலிட வாழ்க்கைச் சூழல் இலங்கைத் தமிழ்க் கிராமத்து வாழ்க்கையை ஒட்டிய நாவலின் வரவிற்கும் வழிகோலியுள்ளமை வியப்பிற்குரியது தான். ஆயினும் 'தில்லை யாற்றங்கரை' என்ற நாவலின் ஆசிரியை இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் இதுபற்றி இவ்வாறு கூறும்போது வியப்பின் வலிமை குன்றிவிடுகின்றது எனலாம்.[3]

"லண்டன் கனன்பரி வீதிக்கும் இலங்கையில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த சிறு கிராமமான கோளாவிலுக்கும் எத்தனையோ வித்தியாசம். ஒவ்வொரு நாளும் நான் கடந்து போகும் தேம்ஸ் நதிக்கும் ஒரு காலத்தில் சேறு புரள சிரித்து நீச்சலடித்த தில்லையாற்றுக்கும் ஒரு தொடர்பும் இல்லை. ஆனால் நீண்டோடும் தேம்ஸ் நதியைப் பார்க்கும் போது நினை வலைகள் தில்லையாற்று மணற்பரப்பில் தவழ்கின்றது. நிலவுக்குத் தாலாட்டி நெஞ்சுக்குள் குளிர் தரும் தென்னோலை சரசரப்பை இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்னும் மறக்க முடியாது........ எதை மறந்தாலும் பிறந்த மண்ணை மறக்க முடியாது........"

மேலே நாவலாசிரியை கூறும் பிறந்த மண்ணை மறக்க முடியாநிலை இருபத்தைந்து வருடங்களுக்கு முற்பட்ட காலமோ, இருபத் தைந்து மாதங்களுக்கு முற்பட்ட காலமோ எவ்வாறாயினும் அது புகலிட படைப்புக்கள் பலவற்றின் ஆதார சுருதியாகின்றமையே இங்கு கவனத்திற்குரியது. (அது சொந்த மண்ணிலே உலாவும் எம்மால் உணர்ந்து கொள்ள முடியாதது என்றே கூறவேண்டியுள்ளது). அது மட்டுமன்றி புகலிட எழுத்தாளரான விமல், குழந்தைவேல் கூறுவது போன்று, "கடந்த கால நிகழ்வுகள் பற்றி இலங்கையிலுள்ள எழுத்தாளர் கள் எழுதுவதைவிட, புலம்பெயர் எழுத்தாளர்கள் எழுதுவதே சிறப்பானதாக அமையும் என்று எண்ணுகின்றேன். புலம்பெயர் எழுத்தாளர்கள் எழுதும் போது அந்த இலக்கியத்திற்கான வலு கூடவாக அமையும்" என்றும் கருதுகின்றேன்.

நிற்க, மேற்குறிப்பிட்ட தில்லையாற்றங் கரை கோளாவில் கிராமத்தின் 1957 – 1962 காலப்பகுதியைப் பின்னணியாகக் கொண்டது. குழந்தைப்பருவத்தைத் தாண்டி, 'குமரியாகிக்' கொண்டிருக்கும் கௌரி, மரகதம், சாரதா ஆகிய மூன்று பெண்களைப் பற்றிய கதையாகவுள்ளது. அவர்கள் மூன்று தலைமுறைகளின் சட்ட திட்டத்தை எதிர்த்துப் போராடியதைப் பற்றி அல்லது போராடியதாக நினைத்ததைப் பற்றிய கதையாகவுமுள்ளது.

இந் நாவலில் முற்பகுதியில் மண் வாசனை மிகுந்திருப்பினும் பிற்பகுதியில் அது அருகிவிடுகின்றது. பிற்பகுதியில் 'சமகால' அரசியல் வாடை வெளிப்பட்டிருப்பினும் முற்பகுதியில் அது காணப்படவில்லை. இவ் விதத்தில் பலவீனங்களை இந் நாவல் கொண்டிருப்பினும் குறிப்பிட்ட காலகட்ட கிராமம் ஒன்றின் கதையை பலத்தோடும், பலவீனத்தோடும் சித்திரிப்பதாகவும் இவ் விதத்தில் மட்டக்களப்பு பிரதேச கிராமிய நாவல்களுள் முதன்மை பெறுவதாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

### 3.5 *பேரினவாத ஒடுக்குமுறையும் அதன் விளைவுகளும்*

புகலிட எழுத்தாளர்கள், தமது சமகால இலங்கைப் பிரச்சினைகள் பற்றி, அதாவது அரச, சிங்கள இராணுவ பேரினவாத ஒடுக்கு முறைகள் அவற்றிற்கு எதிரான விடுதலை இயக்கங்களின் போராட்டங்கள், போராட்ட இயக்கங்களின் பரஸ்பர முரண்பாடுகள் என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி குறிப்பிடத்தக்க சில படைப்புக்களைத் தந்துள்ளனர். இவை பற்றித் தனித்து நோக்குவதற்கு முன்னர், இவற்றுள் பெரும்பாலானவை இலங்கையின் அரசியல் சூழ்நிலை காரணமாக இலங்கையிலிருந்து எழுதப்பட்டிருக்கவோ வெளிவந்திருக்கவோ முடியாதென்பதனை முதலில் மனங்கொள்வது அவசியமாகின்றது.

### 3.5.1 *மண்ணும் மல்லிகையும்*

ஈழவிடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்தில் அக்கரைப்பற்றுக் கிராமத்திலே வாழ்ந்த 'பெரிய' குடும்பமொன்று, சிங்கள இராணுவ ஒடுக்குமுறை காரணமாக சிதைந்து போன வரலாற்றை, புகலிடநாட்டிலிருந்து தமது ஊருக்கு வருகின்ற ஒருவரது நினைவுகளூடாகப் பதிவு செய்துள்ளது. இத்தகைய நாவல்கள் மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்து மிக அரிதாகவே வெளிவந்துள்ளன என்ற விதத்தில் இந்நாவலின் வரவு அவசியமாகின்றது.

### 3.5.2 *வெகுண்ட உள்ளங்கள், வேலிகள்*

'கடற்புத்திரன்' எழுதிய மேற்கூறிய இரு படைப்புக்களும், ஈழ விடுதலைப் போராட்ட நோக்குடன் இயக்கங்கள் உருவான காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பிரதேசக் கிராமமொன்றிலே வாழ்கின்ற மக்களது வாழ்க்கையிலேற்பட்ட சிறுசிறு மாற்றங்களையும், மக்களுக்கும் இயக்கங்களுக்கு மிடையிலான உறவுகளையும் (மேலோட்டமாகப்) பதிவு செய்துள்ளன.

### 3.5.3 *ஒரு கோடை விடுமுறை*

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதிய இந்நாவலில் இலங்கையிலே இடம்பெறும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட (ஒரு) பகுதி, தன் குடும்பம் தன்சுற்றம் என்று வாழ்ந்தவர்கள் தமது இனத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு எப்படி முகங்கொடுக்கின்றார்கள் என்பதைச் சித்திரிக்கின்றது. சம்பவங்களை விட, பாத்திரங்களும் (எ–டு: சபேசன்) உரையாடல்களும் இவ்விதத்தில் இந்நாவலில் முக்கியம் பெறுகின்றமை இந்நாவலின் சிறப்பம்சங்களாகின்றன.

### 3.5.4 *ஒரு பூ*

கே.எஸ்.துரை எழுதிய இந்நாவல் யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள பொலிகண்டி என்ற கிராமத்தில் தன் மகனையும் கணவனையும் உலகமாகக் கொண்டு வாழ்ந்த பூமணி என்ற அப்பாவிப் பெண்ணின் குருவிக்கூட்டு வாழ்க்கை சிங்கள இராணுவ வேட்டை என்ற பெரும்புயலிலே சிக்குண்டு சிதைந்து போவதை உருக்கமான சித்திரமாக்கித் தந்துள்ளது. இராணுவம் அநியாயமாகக் கொன்றொழித்த தனது ஒரே ஒரு மகனையும் அக்கவலை காரணமாக மரணித்த கணவனையும் இழந்து சித்தப்பிரமையோடு நடைப்பிணமாகி அலைந்து திரிந்து தனது வாழ்வை முடித்துக் கொண்ட ஒரு பெண்ணின் – தாயின்– கதையாக மட்டும் இந்நாவல் உருவாகவில்லை. அவ்வாறான அனைத்துத் தாய்மாரின் கதையாகவும் இப்படைப்பு மலர்ந்துள்ளதே இதன் வெற்றியாகின்றது. பூமணி ஒரு ஞானிபோல் உறவினர்களுக்கு தென்படுகின்றாள். அவளது ஆன்மீக ஒளியில் விடுதலைப் போராட்டமும் போராளிகளான மாவீரரது தியாகங்களும் மகத்தானவையாகத் திகழ்கின்றன. இவ்விதத்தில் இங்கு பின்வரும் பகுதியை எடுத்தாள்வது பொருத்தமானது.

"..............................................................

மாதக்கரசு, பிரச்சினையள் முடியிறதும் முடியாததும் அவரவர் கையிலதான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்களெல்லாம் பிறக்க முந்தியே எத்தினையோ பிரச்சினையள் முடிஞ்சுது. ஆனால் ஒப்பாரியள் மட்டும் முடியாமலே இருக்கெண்டு ஒரு சுடலைக்குருவி பாடிக்கொண்டு போச்சு அதொரு கிழட்டுக் குருவி..........!

.........

'அக்கா சொல்லுறனேயெண்டு குறை விளங்க வேண்டாம்' உங்களுக்குச் சித்தப் பிரமையெண்டு ஊர்முழுக்கக் கதைக்குது. என்ரை பிள்ளையளெண்டால் பைத்தியமெண்டு துகள். உங்கடை கதை காரியங்களைப் பார்த்தால் நீங்க பைத்தியமோ நாங்கள் பைத்தியங்களோ எண்டு மனசிலை ஒரே கயிறிழுப்பாய்க்கிடக்கு. நான் தான் பைத்தியம்.

இல்லையக்கா இந்தப் பிரச்சினைகள் தான் உங்களை இந்த நிலைமைக்கு ஆளாக்கிப் போட்டுது. இல்லாட்டி இப்படியே இருந்திருக்கப் போறியள்? என்ன செல்வாக்கா இருந்த குடும்பம்.

மாதக்கரசு, இந்த விடுதலைப்போரைப் பிரச்சினையெண்டு பேசுறதே ஓர் அறியாமை தான். இதைப் பிரச்சினையாகப் பார்க்கிறதை நிப்பாட்டிப் போட்டு எண்டைக்கு உன்ரை கடமையாகப் பாக்கிறியோ அந்தக் கணமே உன்னளவிலை தமிழீழப் போரும் வாழ்க்கையா மாறிடும். இதைக் கொஞ்சம் ஆழமாய் யோசிச்சால் பிறகு உனக்கு கவலையே வராது.

"எனக்கு வயதேறிப் போச்சு... பிறந்தண்டு பிடிச்ச கஸ்டம்..... இண்டுவரை துலைஞ்ச பாடில்லை.... பிரச்சினையளாலை கலைபட்டு மான்கூட்டங்கள் போலை ஓடிக்கொண்டிருக்கிறம்... என்னாலை உங்களைப் போலை யோசிக்க முடியேல்லை..... பூமணி அவளுடைய மருண்டுபோன கண்களையே பார்த்துக் கொண்டிருந்தாள், பிறகு பேசத் தொடங்கினாள்.

'மான்கள் ஓடுறபடியால் தான் மற்ற மிருகங்களெல்லாம் மான்களை வேட்டைப் பொருளாகவும் தங்களை வேட்டைக்காரராகவும் நினைச்சிட்டுதுகள் நீயும் ஓடுறதும் ஒப்பாரி வைக்கிறதுமாய்த் திரிஞ்சா பிறகு அதுதான் உன்ரை வாழ்க்கையாவும் போயிடும். ஓடாமல் நில். பிரச்சினையளை நேருக்கு நேர் சந்தி என்றாள்.

அதைக் கேட்டபின் மாதக்கரசு கடுமையாக யோசித்தாள். இந்தக் கிராமத்துக் கிழவி இதையெல்லாம் எப்படித் தெரிந்து கொண்டாள்...

"இப்ப நீயும் பைத்தியக்காரிதான். இந்தக் காட்டைவிட்டு வேறைகாட்டுக்கு ஓடினால் போல பிரச்சினையள் முடிஞ்சு போயிடுமே?

ஓடுற மான்களைத் துரத்துறதுக்கு எல்லாக் காடுகளிலையும் மிருகங்களிருக்கு ஓடுற சனந்தான் பிரச்சினை எப்ப முடியுமெண்டு பேப்பருகளிலை தேடும். இப்பவே நில். இப்பவே பிரச்சினையள் முடியும் என்று பூமணி கூறிவிட்டு வெளியேறினாள்......"

மேற்கூறப்பட்டுள்ள பகுதி பூமணியை ஒரு ஞானியாக இனங்காட்டுகின்றதென்றால், பின்வரும் பகுதி, பூமணியை ஊருக்குரிய தாயாக வெளிப்படுத்துகிறது.[6]

"வெளியே போனவள் மறுபடியும் திரும்பி வந்தாள். மூலஸ்தானத்திற்குள் பிரவேசித்து, விநாயகர் கையிலிருந்த அந்த ஒற்றைச் செவ்வரத்தம் பூவைக் கையில் எடுத்துக் கொண்டு வடக்கு வீதியைத் தாண்டி நடந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வழமையாக வந்தமர்ந்திருக்கும் மாவீரர் சமாதிக்குக் கீழே யாரோ விளக்கேற்றி வைத்திருப்பது தெரிந்தது.

நேற்று நடந்த போரினால் அந்தச் சமாதியின் படிக்கட்டுக்கள் யாவும் உடைந்து ஒழுங்கின்றிக் கிடந்தன. அழகிய செவ்விளநீர் வடிவமான அந்தச் சமாதி மட்டும் அப்படியே ஒளிகுன்றாது நின்றது.

தன்னுடைய மகனே வாழ்க்கையாக, உலகமாக பிரபஞ்சமாக நினைத்து வாழ்ந்த பூமணி, அந்தச் செவ்வரத்தம் பூவுடன் அங்கேயே மௌனித்து நின்றாள்.

குங்குமம் இழந்து காடுடைய சுடலைப் பொடிகளேந்திய இந்திரா போன்ற அபலப் பெண்கள் துணையில்லாத பூங்கொடிகளாக பிரபஞ்சப் பெருங்காற்றில் அங்குமிங்குமாக ஆறலைபடுவது தெரிந்தது.

ஈஸ்வரன் போன்று வாழத்துடித்து, அவச் சாவில் போன ஜீவன்களின் "ஐயோ....!" என்ற ஆதங்கம் பேரலையாக எழுந்து பாறைச் சுவரில் மோதிப் பிளப்பது போல ஒரு பெரும் பிரளயச் சத்தம் செவிப் பறைகளை வெடிபடச்செய்தது.

....................

அனுபவப் பார்வை மனதில் மண்டிக் கிடக்க இருட் பாலைவனத்தை கிழித்துக் கொண்டே வேகமாக ஓடிவந்து ஓரிடத்தில் நின்றது. அறிவுக் கண்களால் தாண்ட முடியாத அந்த இறுதிக் கதவைத் திறக்க முடியாது மனத்தின் ஒளி தடைப்பட்டு நின்றது. மறுபடியும் மறுபடியும் மனதைச் சுடர்ந்த வைரமாக்கி, அந்த இருட் கதவின் மீது ஓங்கி உதைத்தாள். தடாலென்ற பேரொலி எழுந்தது. அந்த ஒரு நொடியில் மரண பயத்தை மனம் வெற்றிவாகை சூடியது. இம்மைக்கும் மறுமைக்கும் உண்மைக்கும் பொய்மைக்கும் பேதமில்லாத நிலையில் அவள் நின்றாள். அப்பொழுதுதான் அந்த மாவீரர் சமாதியின் முன் அவள் கையிலிருந்த செவ்வரத்தம் பூ தானாக விழுந்தது. அந்தச் சமாதியின் ஒவ்வொரு கற்களிலும் தியாகிகள் ஸ்படிகமாகத் தெரிந்தனர். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அஞ்சியோடிய இனம் தமது ஓட்டத்தை நிறுத்தி, வேட்டைக்காரரைத் துணிந்து வழிமறித்த வீரச்சுடர்ப்பு அந்தக் கட்டிடமெங்கும் பொன்மயமாகப் பேரொளியெறிந்தது. எடுத்து விபரிக்க முடியாத பெருமை கொண்ட அந்தத் தியாகத் துறவிகளின் முன் பூமணி தலைசாய்த்து நின்றாள். சொற்ப நேரம்தான் வந்த பாதை வழியே மறுபடியும் வேகமாகத் திரும்பினாள்....."

தவிர, வடமராட்சி பிரதேச மண்வாசனையை வெளிப்படுத்தும் நாவலாகவும் கவித்துவ நடையோடு எழுதப்பட்ட நாவலாகவும் இது விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

### *3.4.5. சுயம்வரம்*

கே.எஸ்.துரை எழுதியுள்ள இந்நாவலின் ஒரு பகுதி யாழ்ப்பாணத்திலுள்ள கடலோரக் கிராமமொன்றிலே நிகழ்கின்றது. சிங்கள நேவிக் கப்பலின் செல்வீச்சினால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுள் ஒரு வயோதிபரும் கடற்புலிகளும் இணைந்து தங்களுக்கு கொடுமைகள் விளைவித்த நேவிக்கப்பலை வெடி வைத்துத் தகர்ப்பதே இங்கு நிகழ்கின்றது.

இந்நாவலின் தனித்துவம் பற்றி நூலிற்கு முன்னுரை எழுதிய முல்லையூரான் பின்வருமாறு குறிப்பிடுவது கவனத்திற்குரியது:

" ........ ஈழத்தில் வெளிவந்த தேசிய இனப்பிரச்சினையை கையாண்ட நாவல்களிலிருந்து கே.எஸ்.துரையின் இந்த சுயம்வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்ற நாவல் சற்று வித்தியாசப்பட்டிருப் பதனை குறிப்பிட்டே ஆகவேண்டும். அதாவது அரசியற் சித்தாந்தங்களுக்குள் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு யதார்த்த நிலையில் நின்றும் விலகி வெறும் சித்தாந்தக் கலவையாக பல நாவல்கள் மக்களைச் சென்றடைய முடியாமற் போன ஒரு துர்ப்பாக்கிய நிலையினின்றும் விலகி நின்று, இந்த நாவல் வடமராட்சியின் மண்வாசனையுடன் வெளிவரு கின்றது. எழுத்தாளரின் அனுபவங்கள் இங்கே விரவிக் கிடப்பதை வாசகர்கள் காணலாம். புத்தகமெங்கும் மீன் மணக்கின்றது. கடலும் கடல் சார்ந்தும் வாழ்பவர்களின் வாழ்வையும் அவர்களின் போராட்ட உணர்வினையும் ஆசிரியர் சித்திரிக்கின்றார். இங்கே இரண்டு அதிமுக்கிய விடயங்களுக்கு ஆசிரியர் முனைப்புக் கொடுக்க முன்வருகின்றார். ஒன்று, தாயகத்தின் மக்கள் போராட்ட உணர்வுகளை முனைப்புப் படுத்தல். இரண்டு, தாயகத்தினை விட்டு இடம்பெயர்ந்த ஈழத்தவர்களின்பால் தமிழ்த் தேசிய உணர்வினை வளர்த்தல் என்பனவாகும். மண்வாசனை, அத்துடன் தமிழ்தேசிய எழுச்சி ஆகிய இரண்டு வேறுபட்ட உணர்வு, அழகு ஆகிய இரண்டு புள்ளிகளை இணைக்க முயன்று வெற்றிபெறுவது ஓர் அசாதாரண விடயமாகும்.

"சுயம்வரம் நாவலில் மேற்கூறியவற் றோடு இரத்தமும் சதையும் கொண்ட மாந்தர்களும் வந்துபோகின்றார்கள். வீச்சுக்கார சிவலிங்கம், மயிலர் ஆச்சிமுத்துக்கிழவி, வள்ளிக்கொடி, செங்கமலம், ஜீவா முதலான பாத்திரங்கள் அத்தகைய பண்புகள் கொண்டவை.

சுயம்வரம் நாவலின் சிறப்புக்களுக்கு எடுத்துக்காட்டாக இவ்விடத்தில் ஒரு சம்பவத்தை மட்டும் குறிப்பிடுகின்றேன்: நேவிக் கப்பலைத் தாக்குவதற்குரிய வியூகத்திற்கான திட்டம் கிழவர் மயிலரிடம் கருக்கொண்டது கடற்கரைச் சூழலிலே நிகழ்கின்ற இயற்கைச் சம்பவமொன்றின் ஊடாகவே. அது இதுதான்:[8]

"தூரத்தே பருந்தொன்றை மூன்று காகங்கள் விரட்டி விரட்டி கொத்திக் கொண்டிருந்தன. அவைகளின் தாக்குதலுக்குப் பயந்து, பணிந்து, வெலவெலத்த தோரணையில் அந்தப்பருந்து உயரக் கடல்நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

பருந்தின் அச்சத்தாலும் தோல்வியாலும் உற்சாகம் பெற்ற காகங்கள் அதை மேலும் மேலும் உற்சாகமாகத் துரத்திக்கொண்டே சென்றன. இடையில் ஒரு காகம் களைப்படைந்து ஆளைவிட்டால் போதுமென்ற நிலையில் கரைப்பக்கமாகப் பறந்து வாபஸ் வாங்கிக் கொண்டது. ஆனால் மற்றைய இரண்டு காகங்களும் பருந்தை இடைவிடாது துரத்திக் கொண்டே அதனுடன் பறந்து நெடுந்தூரம் சென்று மறைந்தன.

மயிலர் சிறுபிள்ளையாக இருந்த காலத்திலிருந்தே காகங்களின் இந்த அறியாமையைப் பார்த்துக்கொண்டே வருகிறார். நடுக்கடல் வரை பயந்த பாவனையுடன் பறந்து செல்லும் பருந்து காகங்கள் களைப்படைந்ததும் திடீரெனத் தனது மூர்க்கத்தனமான தாக்குதலை மிக வேகமாக ஆரம்பிக்கும். களைப்படைந்திருக்கும் காகங்கள் அதன் பிறகுதான் கரையைத் திரும்பிப் பார்க்கும். அவற்றிற்கு நான்கு புறமும் கடலே தெரியும். களைப்பினால் பதகளித்துப் போகும் காகங்கள் கொடிய பருந்தினால் கொத்தப்பட்டு, கடலில்வீழ்ந்து, பரிதாபமாகத் தமது வாழ்வை முடித்துக்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாரோ தெரியாது காகங்களுடன் பறந்து, தூரத்தே மறைந்த பருந்து மறுபடியும் வெற்றிகரமாகத் திரும்பி வந்துகொண்டிருந்தது. அத்துடன் சென்ற காகங்கள் இரண்டும் வழமை போலவே இன்று திரும்பவேயில்லை.

ஆண்டாண்டு காலமாகக் கடற்கரைப் பக்கங்களில் நடந்து வரும் இந்தச் சம்பவம் இத்தனையாண்டு காலமாக மயிலரின் மனதில் சாதாரணமான நிகழ்ச்சியாகவே இருந்து வந்தது. ஆனால் இன்று மட்டும் அவருக்கு அதில் ஓர் புது அர்த்தம் தெரிந்தது.

அமைதியாக எழுந்து வேம்படிப் பக்கமாக நடக்கத் தொடங்கினார். அவர் மூளையில் ஏதோ ஒரு பொறி தட்டியிருந்தது........ இயற்கையின் அழகைக் கெடுக்கும் அந்த நேவிக்கப்பலை மயிலரின் ஆசைப்படி வெடி குண்டு நிரப்பப்பட்ட படகொன்று மோதி அழிக்க வேண்டுமானால் கருடன் அழைத்துச் செல்லும் காகங்களைப் போல அந்தக் கப்பலையும் தந்திரமாகக் கரைக்கு அழைத்து வரவேண்டும்......".

### 3.4.6 ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து

விடுதலைப் போராட்டம் நடைபெறும் நாடுகளிலே ஒன்றிற்கு மேற்பட்ட இயக்கங்கள் உருவாவதும் கால ஓட்டத்தில் ஒன்று மேலாதிக்கம் பெற, ஏனைய இயக்கங்கள் செல்வாக்கிழப்பதும் கண்கூடு. இலங்கைத் தமிழ் ஈழப்போராட்டச் சூழலிலும் இஃது நிகழ்ந்துள்ளது. இங்கு மேலாதிக்கம் பெற்ற இயக்கத்திற்கும் மாற்று இயக்கத்திற்கும் இடையே முரண்பாடுகள், தேடுதல்கள், எதிர்வினைகள் நிகழ்ந்து வந்துள்ளன. இந்நிலையில் மாற்று இயக்கம் சார்ந்தோர் தமது அனுபவங்களை எழுத்தில் வடித்து வந்துள்ளனர். இவ்விதத்தில் இரு படைப்புக்கள் எமது கவனத்திற்குரியன. இவற்றிலொன்று, செழியன் எழுதிய "ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து".

மேற்குறிப்பிட்ட நாவல் எழுந்த சூழல் பற்றி நாவலாசிரியர் கூறுவன எமது சிந்தனைக்குரியனவாம். அவர் கூறுகிறார் : [9]

"இவன் எந்த நேரமும் கைது செய்யப்படலாம். உயிருக்கு ஆபத்தான நிலைமை. இவனைத் தேடி தெருத்தெருவாக 'அவர்கள்' அலைகின்றனர். தலைமறைவான ஒரு வாழ்க்கை. இந்நிலையிலும் இவன் தினமும் எங்கள் மண்ணில் தனக்கு நிகழ்ந்தவற்றை அன்றாடம் குறிப்புகளாய் எழுதி வெளிநாடு ஒன்றிற்கு இரகசியமாகக் கடத்துகின்றான். இவ்வாறு எழுதிக் கடத்தப்பட்ட குறிப்புகளி லிருந்தே இத்தொடர் எழுதப்படுகின்றது".

இயக்கமொன்றின் தேடுதல் வேட்டைச் சூழலில் தமது ஊரிலிருந்து தப்பி, கொழும்பை அடைந்து, விமானத்தில் ஏறுவது வரையான (13 மார்கழி 1986 தொடக்கம் 29 தை 1987 வரை) அனுபவங்கள் இப்படைப்பில் பதியப்பட்டுள்ளன;

துயரமும் ஏக்கமும் நம்பிக்கையும் விரவ, நாட்குறிப்பு இவ்வாறு முடிவுறுகின்றது :

"இனியதேசமே, மறுபடியும் நான் வருவேன். மனிதன் எனும் இனம் எழுந்துவரும் நாளில் மறுபடி நான் வருவேன். ஒருவேளை என் முற்றாத கனவுகளோடு முதிர்ந்த வயதில் ஏதோ ஒரு நாட்டில் ஒரு அகதியாய் அநாதைப் பிணமாய் பனிக் கட்டிகளுக்கு நடுவிலோ இயந்திரங்களுக்கு அடியிலோ மரணித்துப் போகலாம். காற்றே, மரம், செடி கொடிகளே, என் தலைமுறை மறுபடி இங்குதான் வேர்விட்டு, இரு தளிர்க்கரம் நீட்டி வளரும் என் புதல்வர்கள் அல்லாது போனால் என் பேரர்களில் ஒருவர் வருவார்கள். இத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்த்திருநாட்டை முத்தமிட வருவார்கள். இனிய தேசமே, தெரிந்தோ தெரியாமலோ நான் ஏதும் தவறு செய்திருந்தால் என் தலைமுறையாவது இங்கு வாழவிடு. விமானம் மேகக் கூட்டத்தினுள் புகுந்து மறைந்து போனது.

### *3.4.7 கொரில்லா*

ஷோபா சக்தி எழுதிய கொரில்லா, இலங்கையிலிருந்து தப்பி பிரான்ஸ் சென்ற கெக்கிராஜ் என்பவர் அரசியல் தஞ்சம் கோரி, விண்ணப்பம் செய்யும் வழி தனக்கு இலங்கையில் இலங்கை- இந்திய இராணுவத்தினராலும் தமிழ்ப்போராளிக் குழுக்களாலும் ஏற்பட்ட கொடுமைகளை விபரிக்கும் பாணியில் எழுதப்பட்டுள்ளது. எழுதப்பட்ட முறைமையும் உண்மைச் சம்பவங்கள் அடிக்குறிப்புகளாக இடம்பெறுவதும் இப்படைப்பினை உண்மைத் தன்மை மிக்கதாகப் பரிணமிக்கச் செய்துள்ளன. இத்தியாதி தன்மைகளால் இப்படைப்பு தன்மைய ஒட்டத்துடன் வாசகரை உணர்வு பூர்வமாக நெருங்க வைக்கிறது.

"பூமிப் பரப்பின் எந்த ஒரு புள்ளியிலும் நிலைகொள்ள முடியாமல் பரிதவித்து அலைய நேர்கின்ற மனங்கள் பற்றிய நேர்மையான பதிவு" என்றும் "ஒரு குடும்பத்தின் கதையைக் கலைத்துப் போடுவதன் மூலம் தீர்வு முழுவதும் நடத்தும் கதையாகி விடுகிறது" என்றும் "சீரியஸான படைப்பு என்றாலே மிடுக்கான வாக்கியங்களும் கரடுமுரடான சொற்பிர யோகங்களும் கொண்டது என்ற மறைமுகக் கருதுகோள் உருவாகியிருக்கும் இக் கால கட்டத்தில் சரளமான, இயல்பான நடையில் எழுதப்பட்டுள்ளது". என்றும், "தமிழ் சுவை என்ற அம்சம் இந்த நாவல் முழுவதும் காணக்கிடைகின்றது". என்றும் "பல்வேறு கோணங்களில் தமிழ்நாட்டு விமர்சகர்கள், வாசகர்கள் மத்தியிலே கொரில்லா பாராட்டுக்குள்ளாகியுள்ளமை இவ்விடத்தில் விதந்துரைக்கப்பட வேண்டியதாகின்றது".

## 4. புகலிட நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்கள் பற்றியவை

### *4.1 அகதி நிலை வாழ்வு*

#### 4.1.1 வானம் வசப்படும்

புகலிட நாடுகளிலே குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்களுள் கணிசமானோர் நிரந்தரமான அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்து அது கிடைக்கின்ற வரையிலே அகதி நிலை அந்தஸ்தில் அகதி முகாம்களிலே வாழ்க்கை நடத்தி வருகின்றனர். அத்தகைய வாழ்க்கையின் சொல்லொண்ணா அவலங்களை விபரிக்கின்ற புகலிட நாவல்களுள் பொ.கருணாகரமூர்த்தி எழுதிய 'வானம் வசப்படும்' குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

மேற்கு ஜேர்மனியில் அகதிமுகாமாக வுள்ள புராதனமான டியூலிப்ஸ் ஹோட்டலி லுள்ள மூன்றாம் தளத்தில் வதிகின்ற இலங்கை அகதிகளான முத்துராசா, அத்வைகன், திலகன், நகுலன், கருவில் ஆகியோரது அன்றாட வாழ்க்கையை சித்திரிப்பதனூடாக, தமிழ் அகதிகள் அனைவரதும் புகலிட வாழ்க்கையின் குறுகிய வெட்டுமுகமாக இந்நாவல் அமைகின்றது என்பதில் தவறில்லை.

இவர்களோடு வாழ்கின்ற ஏனைய நாட்டு அகதிகளுக்கும் இவர்களுக்குமிடையான தொடர்புகளும் ஆங்காங்கே எடுத்துக்காட்டப் படுகின்றது. இவ்விதத்தில் இந்நாவல் மூன்றாம் உலக நாட்டு அகதிகளின் அவலமான வாழ்வை ஓரளவு வெளிப்படுத்த முயல்கிறது என்றுகூடக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களோடு எவ்வாறோ தொடர்புபட்டு விடுகின்ற மேலைத்தேயப் பெண்களது வாழ்க்கை முறையில் ஏற்பட்டுவரும் அதிர்ச்சியூட்டும் மாற்றங்களையும் (எ–டு : சிறுசிறு கைச்செலவுகளுக்காக, அவ்வப் போது சோரம் போதல், இந்தியர்களிடம் பிள்ளைகளைப் பெற்று விலைபேசி விற்று வருமானம் தேடுதல்) இந்நாவல் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### *4.1.2 ஒரு அகதி உருவாகும் நேரம்*

பொ.கருணாகரமூர்த்தியின் இந்நாவல், அகதிநிலை வாழ்க்கை பற்றியதன்று; மாறாக இலங்கைத் தமிழரொருவர் அகதியாக ஒரு நாட்டில் நுழைவது தொடக்கம் தஞ்சம்தரத் தயாராகவுள்ள நாடுகளிலே சேர்வது வரையில் எதிர்கொள்ள நேர்கின்ற சிக்கல்கள் – ஆபத்துக்கள் – பிரச்சினைகள் பற்றி அகன்ற தளத்தில் நின்று ஆழமாக – அங்கத உணர்வுடன் அலசுகின்றது.

### *4.2.பெண்கள் வாழ்வு*

### *4.2.1 மாற்றம்*

மேற்குறிப்பிட்ட எழுத்தாளரே எழுதியுள்ள இப்படைப்பு, பெண்நிலைவாதச் சிந்தனைக்குட் பட்டிருந்த பெண்ணொருத்தி தனக்கென ஒரு துணையைத் தேடவேண்டிய கட்டாயம் வரும்போது தடுமாறிப் போவதையும் புகலிட நாட்டில் குடும்ப வாழ்வில் ஈடுபட்ட பின் முற்றாக பாரம்பரியப் பெண்ணாக மாறிவருவதையும் தத்ரூபமான முறையில் வெளிப்படுத்துகின்றது.

மேற்குறிப்பிட்ட மூன்று படைப்புக்கள் பற்றியும் தமிழ்நாட்டு எழுத்தாளரும் விமர்சகருமான ஜெயமோகன் கூறும் விடயங்களுள் மூன்று கவனத்திற்குரியவை. அவர் கூறுவதாவது [12]

"......... இந்தத் தொகுப்பிலுள்ள கதைகள் இலங்கைப் படைப்புகளுக்கு மிக அபூர்வமான கூரிய அவதானிப்பின் மூலம் உருவாகும் சிக்கல் தன்மையும். சமநிலையும் உணர்ச்சி நிலையுடன் இணைந்து வெளிப்படுகின்றன. சமீப காலத்திய ஆகச் சிறந்த சில தமிழ் நூல்களில் ஒன்றாக இதை நான் கருதுகிறேன்.

"கருணாகர மூர்த்தியின் கதைகளில் இச்சிரிப்புத்தான் (நாட்டார் கதை யொன்றிலே, யானை தலையை இடறவருகையில் அதற்குரியவன், சூழவுள்ள ஏனைய விடயங்களைவிட, கூட்டத்தில் நிற்கும் ஒரு பெண்ணைப் பார்க்கும் போது தனக்கு ஏற்பட்ட ஆண்மை எழுச்சியை எண்ணிச் சிரித்தமை; க –ர்) உள்ளது. அநேகமாக எல்லா பக்கங்களிலும், மிகச் சுவாரஸியமான வாசிப்பனுபவத்தை தருவதாக இருப்பது அதுவே, இலங்கையின் குக்கிராமத்திலிருந்து மொழிதெரியாத அன்னிய தேசத்திற்கு வந்து, விமான நிலையம் என்ற ஏமாற்றுச் சுழல் பாதையைத் தாண்ட முடியாமல் சுற்றிச் சுற்றி வரும் சட்டநாதனின் கதை (ஒரு அகதி உருவாகும் நேரம்) முதல் வாசிப்பில் புன்னகையை உருவாக்கத் தக்கதுதான். ஆனால் அதில் பெரிய சோகம் உள்ளுறைந் துள்ளது. அந்த ஏமாற்றுச் சுழல் பாதை உண்மையில் விமான நிலையமே அல்ல. புலம் பெயர்ந்த தமிழனின் வாழ்வேதான் என்று எண்ணத்தோன்றியது. ஒருவர்மீது ஒருவராக எட்டடிக்கு எட்டடி அறையில் வாழும் நண்பர்களின் வேலைத் தேடல், காமம் எல்லாமே முதல் வாசிப்பில் புன்னகையைத் தான் எழுப்புகின்றன. மானுட இயல்புகளையும் அவை சூழலில் பிரதிபலிக்கும் விதத்தையும் கூர்மையாக அவதானித்து பதிவு செய்திருப்பதன் மூலம் எழுப்பப்படும் புன்னகை இது மிக அடக்கிய தொனியில் அசோக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மித்திரனிலும் சற்றுத்தூக்கலான அங்கத்துடன் சுந்தரராமசாமியிலும் கதை சொல்லும் வக்கணையுடன் கி.ராஜநாராயணனிலும் இந்த அம்சம் வெளிப்படுவதனாலேயே அவர்கள் சமகாலத் தமிழின் ஆகப் பெரிய படைப்பாளிகளாக கருதப்படுகிறார்கள்........

"இப்படைப்புக்களில் தெரிவது நானே தான் முகமறியா ஊரின் விமான நிலையத்தில் வழிதவறிய எலி மாதிரி தவிக்கிறேன். இடுக்கின அறையில் காமத்தில் குமைகிறேன், அகதியாகிறேன். என்னை எனக்குக் காட்டும் இக்கதைகள் புதுப்புது வாசல்கள் திறக்க மீண்டும் மீண்டும் படிக்க முடியும். இது ஒரு 'புலம் பெயர்ந்தோர் இலக்கியம்'' என்று அடையாளம் போடுவது எனக்கு கசப்பு தருகிறது. மேலான படைப்புக்கள் அத்தகைய கூண்டுகளிலிருந்து சிறகடித்து எழுந்து வருகின்றன என்பதற்கு இந்நூலும் ஓர் உதாரணமாகும்.

### 4.3. *தனிமை வாழ்வு*

அழிவின் அழைப்பிதழ் தியாகலிங்கம் எழுதியுள்ள அழிவின் அழைப்பிதழ் என்ற கவனத்திற்குரிய நாவல் பின்வருமாறு ஆரம்பிக்கப்படுகின்றது.[13]

" ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன, இந்த நாட்டிற்கு வந்து என்னதான் நண்பர்களுடன் சேர்ந்து இருந்தாலும் தனிமையில் இருப்பது போன்ற உணர்ச்சி தான் எப்பொழுதும் மனதில்!. நாட்டிலே அப்பா அம்மாவுடன் இருக்கும்போது இப்படி தனிமை உணர்ச்சி தோன்றியது இல்லை. ஆண்களுடன் ஆண்கள் அன்னியோன்னிய மாக இருப்பது நடிப்பது போல....... உடம்பைத் தொட்டுக் கொள்ளாத உறவு இது, இதில் எப்படிப் பட்ட அன்னியோன்னியம் இருக்க முடியும்........

எத்தனை ஆண்களுடன் சேர்ந்திருந் தாலும், தனிமையில் இருப்பது போன்றதோர் உணர்ச்சியே எப்போதும். சிலருக்கு இப்படி வாழ்வதில் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் என்னால் இதைத் தாங்க முடியவில்லை. எனக்கு இப்படி வாழ்வது நரக வேதனையாக இருந்தது. இப்படி வாழ்வதை விட தற்கொலை செய்துவிடலாம் போலத் தோன்றும்...... மனதில் அந்த ஆசை வந்தபின்பு எந்தச் சமாதானத்தையும் மனம் கேட்பதில்லை. ஊரில் இருந்தால் இப்படி பூதாகரமான பிரச்சினையாக இது இருந்திருக்காது. இங்கு தனிமை ஒரு பக்கம். வெள்ளையர் அனுபவிப்பதைப் பார்த்தால் ஏற்படும் ஏக்கம் இன்னொரு புறம் இரண்டும் சேரும்போது மனசின் வேதனை ஆயிரம் மடங்குகளாகி விடுகிறது. அப்பா, அம்மா அந்த வேதனையைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை..... நான் சாதாரண மனிதன் என்னைப் பருவம் பந்தாடுவதை உணருகிறேன். பலருக்கு உண்மையைச் சொல்லத் துணியவில்லை..... நான் உண்மையைச் சொல்கிறேன். நான் வெக்கப்படவில்லை. வெக்கப்படவேண்டிய விஷயமல்ல. இந்தப் பெண்களைப் பார்த்தால் மனசு பேதலிக்கிறது. காதல் வருகின்றதோ இல்லையோ அவளோடு கலவி செய்ய வேண்டும் போல ஓர் உணர்ச்சி.....

பந்தி நீண்டதாயினும் புகலிடநாட்டுத் தமிழ் இளைஞர்கள் எதிர் நோக்கும் ஒரு முக்கிய பிரச்சினை பற்றியும் அதற்கான காரணம் பற்றியும் அதனால் தமிழ் இளைஞர் வாழ்வில் – ரமணராகவன் – ஏற்படும் பாரதூரமான பதிப்புப் பற்றியும் (எயிட்ஸ் நோய்க்குள்ளாதல்) இந்நாவல் மனத்தை உருக்கும் வண்ணம்சித்திரிக்கின்றது; முக்கிய பாத்திரங்களின் மன உணர்வுகள் நுணுக்கமாகவும் தத்ரூபமாகவும் வெளிப்படுத்தப் படுகின்றன. பலரும் எழுதத் தயங்கும் பிரச்சினையொன்றை அலச முற்படுவது மட்டுமன்றி, இலங்கைத் தமிழ்ச் சமூகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக யாழ்ப்பாணச் சமூகத்தையும் அதன் இறுக்கமான பண்பாட்டுப் பேணுகையையும் கேள்விக்குட்படுத்துவதனாலும் இந்நாவலின் வரவு முக்கியம் பெறுகின்றது.

### 4.4. இனவெறி நாளை

மேற்குறிப்பிட்ட நாவலாசிரியர் எழுதிய பிறிதொரு நாவல் இதுவாகும் பதிப்பாசிரியர் கூறுவது போல[14]. "இந்த நாவல் கையாளும் கதை தமிழுக்குப் புதிது......புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து தமிழ்நாட்டிற்கும் இலங்கைக் கும் விடுமுறைகளிலே வரும் நம்மவர்கள் உண்மைகளைப் பேசத் தயங்குகின்றார்கள். மேற்குலகின் வளமான வாழ்க்கையைப் பெற்று விட்டதான கனவு களைக் கலைக்க விரும்பாத நாகரிகத்தைப் பயிலுகின்றார்கள். புகலிட நாடுகளில் உருவாகி வரும் புதிய நெருக்கடிகள் பற்றி மனம் திறந்து பேசுவதைத் தவிர்க்கின் றார்கள். அவர்கள் அனுபவிக்கும் இன்னல் களும், இழப்புகளும் ஆழமானவை." இத்தகைய சிக்கலான புதிய பிரச்சினைகளுள் ஒன்றுதான் ஐரோப்பிய நாடுகளிலே உருவாகியுள்ள நவநாஜிகள் இயக்கம். இந் "நவநாஜிகள் வெள்ளைத்தோல் பெருமிதர்கள் தமிழர்களை வெறுக்கின்றார்கள். கறுப்புப் பன்றிகள் என்று தூற்றுகின்றார்கள்."[15]

மேற்குறித்த நவநாஜிகள் இயக்கத்திற்கு நோர்வேயில் வாழ்கின்ற தேவ குருவின் குடும்பம் இலக்காகின்றது காந்தியவாதியான தேவகுரு அகிம்சையில் உறுதிகொண்டு, அந்த நவநாஜிகளை அன்பினால் திருத்த முயல்கிறார். அவருடைய மனைவியின் மீதான துன்புறுத்தல் களில் தொடங்கி அவருடைய மகள் உயிரோடு எரித்துக் கொல்லப்படும் வரை வன்முறை வளர்கின்றது இறுதி மட்டும் அகிம்சை நெறியில் நிற்கும் தேவகுரு, அந்த நொஸ்க் (நார்வே மொழி) இனவெறியர்களுக்கு, தன் அகிம்சை நெறியின் உறுதியை விளக்கி, தன்பக்கத்து நியாயத்தை உணர்த்துவதோடு நாவல் நிறைவு பெறுகின்றது.

"இது புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களின் கதை. இன்றளவும் தகவல் ஊடகங்களால் இருட்டடிப்புச் செய்யப்படும், தமிழ் மக்களின் அறியப்படாத துயரம்"16 என்று இன்குலாப் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பினும் நாவல் எடுத்தாண்ட பிரச்சினை புகலிட நாடுகளிலே வாழ்கின்ற மூன்றாம் உலக நாட்டினர் அனைவருக்கும் உரியதே. இவ்விதத்தில் இவ் இலங்கைப் புகலிட நாவலூடாக, தமிழ்நாவல் தனது எல்லைகளை அகட்டி, மூன்றாம் உலக நாடுகளின் நாவல் போக்குகளுடன் சங்கமித்துக் கொண்டிருக்கின்ற தென்பதில் தவறில்லை.

### 4.5. இலண்டன் வாழ் தமிழர்

புகலிட நாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் பற்றிய நாவல்களுள் இலண்டன் வாழ் தமிழர்கள் பற்றிய நாவல்களே அதிகம் வெளிவந்துள்ளன. அனைத்தும் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத் தினால் எழுதப்பட்டுள்ளன.

இவரது நாவல்களுக்கென பொதுவான சில இயல்புகளுள்ளன. இவற்றுள், (i) இலங்கையிலும் புகலிடத்திலும் வாழ்கின்ற தமிழ்ச் சமூகம், அதன் பண்பாடு, அதன் அரசியல் என்பன விமர்சனத்திற் குட்படுகின்றமை. (ii) இவற்றிற்கேற்றவாறு பாத்திரங்கள் சிருஷ்டிக்கப்படுகின்றமை என்பன குறிப்பிடத்தக்கன. இலங்கையிலோ புகலிட நாடுகளிலோ எழுந்த வேறெந்தத் தமிழ் நாவல்களிலும் இப்பண்புகள் இடம்பெறுவது அரிதாகும்.

இவரெழுதிய "ஒரு கோடை விடு முறை" இலண்டனில் வாழ்கின்ற தமிழ் இளைஞர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் ஈடுபாட்டை ஓரளவு வெளிப்படுத்த முற்படுகின்றது. தமிழர் சிங்களவர் ஒற்றுமையைப் பேசும் முற்போக்கு வாதிகளும் (எ.–டு சத்தியன்), தமிழீழ விடுதலையில் நாட்டம் கொண்டு செயற்படுவோரும் (எ –டு சபேசன்) இதில் இடம் பெறுகின்றார்கள்.

" உலகெல்லாம் வியாபாரிகள் 1970 – 1980 காலப்பகுதியில் இலண்டனில் வாழ்ந்த தமிழரது அரசியலுணர்வுகளை வெளிப்படுத்து கின்றது. பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்ட தமிழ்த்தலைவர்களை ஆதரிப்பவராக பேரின்ப நாயகமும் ஆயுதப் போராட்டத்தை ஆதரிப்பவனாக கார்த்திகேசனும் இடம்பெறு கின்றார்கள். இலண்டன் வாசியான அன்ரனியைக் காதலிப்பவளாக பேரின்பநாயகத்தின் ஒரு மகளான மீனாவும் தந்தைக்கடங்கி தனது காதலைத் துறந்து பணக்காரனாகிய சிவநேசுவை மணந்து அவனது கொடுமைகள் தாங்காமல் அவனைக் கைவிட்டு தனது காதலனான கார்த்திகேயனை அடையும் தீர்மானமுடையவளாக பேரின்பத்தாரின் மற்றொரு மகளான சகுந்தலாவும் இடம் பெறுகின்றார்கள்.

இந்நாவலாசிரியரின் சமூகப் பார்வை யின் அடிப்படை எத்தகையதென்பதனை வெளிப்படுத்துவதாக நாவலுக்கான தலைப்பு (உலகெல்லாம் வியாபாரிகள்) அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆங்காங்கு இடம்பெறும் உரையாடல்கள் அதனை தெளிவாக்குகின்றன. எ – டு:

''கல்யாணம் என்பது என்னைப் பொறுத்தவரையில் இரண்டு மனிதப்பிறப்பு களுக்கிடையில் நடக்கும் ஒரு நிகழ்ச்சி. அது சமயச் சார்பிலோ அல்லது வேறு எந்தப் பொருளாதார முறையிலோ அமைவது வெறும் வியாபாரம். உன் தந்தை போன்றவர்களுக்கு வாழ்க்கையில் எல்லாமே வியாபாரம் தனிப்பட்ட வாழ்க்கையிலோ அரசியலைப் பொறுத்த வரையிலோ எதிலும் லாப, நட்டத்தின் அடிப்படையிலே தான் அவர்களால் யோசிக்கமுடியும்'' [17].

– கார்த்திகேயன்

''காசுக்காக எதையும் வாங்க எத்தனையோ தமிழர்கள் காத்திருக்கினம் எங்கட தமிழர்களைப் பொறுத்தவரையில் பெண்கள் வெறும் கத்தரிக்காய்கள் தானே. வாங்கலாம் விற்கலாம்'' [18]

– சகுந்தலா

''சில பெண்களுக்கு தங்களை தாங்களே வருத்திக் கொள்வதில் ஒரு திருப்தி. தன் ஆத்மீக உணர்ச்சிகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு மற்றவர்கள் கண்களுக்கு நல்ல பிள்ளைப் பட்டத்துக்கு நடிப்பும் ஒரு வியாபாரம் தான் முதலாளியும் ஏகாதிபத்தியவாதியும் தங்கள் சுய தேவைக்கு மற்றவர்களின் உழைப்பையும் உரிமையையும் விலைக்கு வாங்குகிறார்கள். உன்போன்ற பெண்கள் ஊருக்கு வேடம்போட தியாகம், பெண்மை, கற்பு குடும்பம் என்ற கௌரவமான சொற்களுக்காகத் தங்களையே விற்றுக் கொள்கிறார்கள். தங்கள் தன்மானத்தை சுய உணர்வை விற்றுக் கொள்கிறார்கள்.'' [19]

– கார்த்திகேயன்

தேம்ஸ் நதிக்கரையில் , 1972 – 74 கற்கும் நோக்குடன் இலண்டனுக்கு வந்து வாழ்ந்த தமிழ் இளைஞர்களின் மன ஓட்டங்கள் வாழ்க்கையைப் பார்க்கும் விதம் என்பவற்றை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக அக்காலப் பகுதியில் வந்த பெரும்பாலான இளைஞர்களின் 'காதல்கள்' வெளிநாட்டுப் பெண்களின் உறவில் தங்கியிருந்தமை (எ–டு : செந்தில், மொரா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும், பின்னர் அவ்விளைஞர்கள் கல்வி முடிந்ததும் இலங்கைக்குத் திரும்பி திருமணச் சந்தையில் தம்மை விற்பது பற்றியும் (எ –டு : செந்தில், யாழ்ப்பாணப் பெண்ஒருத்தி) இந்நாவலில் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

'பனிபெய்யும் இரவுகள்'. அடிப் படையில் காதற்கதை எனினும் வித்தியாசமான காதற்கதை, பருவகால அடிப்படையில் தோன்றும் காதல் (ராதிகா – தியாகு), காதலுக்காகத் தன்னை அர்ப்பணிப்பது (தியாகு சாராதா) பரஸ்பரம் உணர்ந்து கொண்டவரின் இன்டெலெக்சுவல் காதல் (இராமநாதன் சாரதா) என மூன்றாகக் காதலை பிரித்துப் பார்க்கும் கோட்பாட்டை நாவலாசிரியர் கதை மாந்தர் மூவரின் தனிப்பட்ட காதலுணர்வுகள் மூலம் நாவலில் காட்ட முனைந்துள்ளார்.

மேலும், குழந்தைக்காக ஏங்கும் சாரதாவிற்கு ' ரெஸ்ற் ரியூப் பேபி'க்கு வழிகாட்டுவதும் அதற்காக கணவன் இராமநாதன் கையாளும் தந்திரோபாயமும் பாரம்பரியத் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் அதிர்ச்சி தரக்கூடியன.

பெண்கள் மட்டும் தியாகம் செய்ய வேண்டும் என்ற ஆணாதிக்கக் கருத்தியலுக்கு மாறாக ஆண்களாலும் முற்போக்காக வாழ்ந்து தியாகம் செய்ய முடியுமென்று (இராமநாதன் ஊடாக) காட்ட முனைவதும் அத்தகையதே.

'வசந்தம் வந்துபோய்விட்டது' என்ற பிறிதொரு நாவல் மாறிவரும் பண்பாட்டுச் சூழலுக்கு புகலிடத் தமிழ்ப் பெண்கள் எவ்வாறு முகங்கொடுக்க முற்படுகிறார்கள் என்பதனை அதிர்ச்சிகளுடன் வெளிப்படுத்துகின்றது.

'அவனும் சில வருடங்களும்' என்ற இன்னொரு நாவல் மேற்கூறிய நாவல்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டு, திரைப்படக் கல்லூரியில் பயில்கின்ற சிலரது அனுபவங்களைப் பற்றி பேசுகின்றது.

### *4.6 மேற்கு ஐரோப்பியரது வாழ்க்கை*

புகலிட நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்கள் பற்றிய நாவல்களிலே மேற்கு ஐரோப்பியரது வாழ்க்கை பற்றியும் பேசப்படுவது இயல்பானதே. இஃது , குறிப்பிட்ட சில நாவல்களின் முக்கிய கூறாகவிருக்கின்றது. சில நாவல்களில் பலவிடயங்களுள் ஒன்றாக விருக்கின்றது. இவ்விதத்தில் முதல் வகை நாவல்கள் பற்றிக் கவனிப்போம்.

முன்னர் குறிப்பிட்டதுபோல, சுயம்வரம் நாவலின் ஒரு பகுதி, டென்மார்க்கில் டேனிஷ் குடும்பமொன்றின் வீட்டிலே தங்கியிருக்கின்றான். வீட்டின் சொந்தக்காரர் இயரிக் ஜென்சன்; மகள் சோபியா இவர்கள் வாழ்க்கை அமைதியை விரும்பும் டேனிஷ் குடும்பத்தினர் பலரது வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றது. ஜீவாவை விரும்புகின்ற சோபியா ஊடாக, டேனிஷ் பெண்களது நற்பண்புகள் தத்ரூபமாக வெளிப்படுத்தப்படுகின்றன.

'அழிவின் அழைப்பிதழில்' இடம்பெறும் நோர்வேஜியர்களுள் கெய்தி என்ற பெண் முக்கியமானவள். அவள் உடல் விற்பவளாயினும், அவளிடமும் நற்பண்புகளிருப்பது எடுத்துக் காட்டப்படுகின்றது.

இலண்டன் வாழ்தமிழர்களது வாழ்வைப் பற்றிச் சித்திரிக்கின்ற ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் நாவல்கள் அனைத்திலும் இலண்டன் வாழ் ஆங்கிலேயர்கள் முக்கிய இடம்பெறுகின்றார்கள். இவற்றுள் 'தேம்ஸ் நதிக்கரையில்' முக்கியமானது. இதில் வருகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபலைப்பெண் மைரா செந்திலை விரும்புகின்றாள். நம்புகின்றாள். வயிற்றில் கருவைச் சுமக்கின்றாள். இறுதியாக செந்திலால் ஏமாற்றப்படுகின்றாள். இத்தகைய மைரா சிறந்த குணசித்திர பாத்திரமாக சிருஷ்டிக்கப்பட்டுள்ளாள்.

## 5. முடிவுரை

இலங்கைப் புகலிட நாவல்களாக 1983 தொடக்கம் இன்றுவரை வெளியானவற்றுள் 22 நாவல்கள் இங்கு கவனத்திற்குட்படுத்தப் பட்டுள்ளன. தவிர, வெளிவந்த வேறுசில நாவல்கள் பற்றிய தகவல்கள் இருப்பினும்.[20] இவ் ஆய்வின்போது அவற்றைப் பெற முடியவில்லை. தொடர்ந்து கதையாக வந்து முற்றுப்பெறா சில நாவல்களுமுள்ளன.[21] எவ்வாறாயினும், புகலிட நாவல்களாக இன்றுவரை ஏறத்தாழ 30 நூல்களே வெளிவந்திருக்கலாமென்று ஊகிக்கலாம்.

ஆய்விற்குக் கிடைத்த 22 நாவல்களுள் இலங்கைவாழ் தமிழர்கள் பற்றியவையாக 09 நாவல்களுள்ளன. புகலிட நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களைப் பற்றியனவாக 04 நாவல்களுள்ளன. ஏனையவை, புகலிட நாடுகளையும் இலங்கையையும் களமாகக் கொண்டுள்ளன.

மேற்கூறிய நாவல்கள் இலங்கை நாவல் வளர்ச்சியில் பெறுகின்ற முக்கியத்துவம் தொடர்பாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. இலங்கையின் அரசியற் சூழலில் இலங்கையில் வெளிவந்திருக்க முடியாத பேரினவாத ஒடுக்குமுறையும் அதன் வெவ்வேறு மட்டத்திலான விளைவுகளும்' பற்றிய நாவல்களின் வரவு இலங்கை நாவல் வளர்ச்சிக்கு வலுவும் வளமும் அளிக்கின்றது.
2. புகலிட நாட்டு வாழ்க்கை காரணமாக புதிய அனுபவங்கள், புதிய களங்கள், புதிய பிரச்சினைகள் என்பவற்றால் இலங்கை நாவல்களின் பரப்பு அகன்றுள்ளது. (அழகாகக் கூறுவதாயின் 'தில்லையாற்றங் கரை தொடக்கம் தேம்ஸ் நதிக்கரை வரை அது வியாபித்துள்ளது'.)
3. இலங்கைத் தமிழ்ச் சமூகம், அரசியல் பாரம்பரியப் பண்பாடு என்பன இவற்றின் வரவால் ஆழமான விமர்சனத்திற்குட் பட்டுள்ளது.
4. இலங்கையின் நீண்டகால நாவல் வரலாற்றிலேகூட ஒருங்கே அத்தன்மைகள் கொண்ட நாவல்களாக உள்ளடக்கமும் கலைத்துவமும் இலங்கை நாவல்கள் அருகிய சூழலில், 'அழிவின் அழைப்பிதழ்', 'கொரில்லா', 'ஒரு பூ', 'வானம் வசப்படும்', 'ஒரு அகதி உருவாகும் நேரம்', 'சுயம்வரம்' ஆகிய நாவல்கள் குறுகிய காலப்பகுதியில் வெளிவந்துள்ளமை இலங்கை நாவல் வளர்ச்சியை ஓர் ஆரோக்கியமான நம்பிக்கையுடனான – திசை நோக்கித் திருப்பியுள்ளன.
5. அழிவின் அழைப்பிதழ்', 'வானம் வசப்படும்' புகலிட நாவல்கள் கையாளும் விடயங்கள் தமிழருக்கு மட்டுமன்றி புலம்பெயர்ந்து வாழ்கின்ற மூன்றாம் உலக நாட்டினர் அனைவருக்கும் பொருந்துகின்றன. .. இவ்வழி, இந்நாவல்களுடாக, ஒட்டுமொத்தமான தமிழ் நாவல் வளர்ச்சி மூன்றாம் உலக நாட்டு நாவல் வளர்ச்சியோடு ஒன்றித்துப் போகின்றமை தமிழ்நாவல் வளர்ச்சிப் போக்கிலேற்பட்ட பாய்ச்சல் என்னும் படியாகவுள்ளன.
6. இறுதியாக இலங்கையில் தமிழ் நாவல் வளர்ச்சி எய்தவில்லை என்று கருதுகின்ற தமிழ் நாட்டு விமர்சகர் சிலரது அபிப்பிராயத்தை உடைக்கின்ற சில நாவல்கள் (பொ.கருணாகரமூர்த்தியின் படைப்புகள்) வெளிவந்துள்ளமையும் அழுத்தியுணரப்பட வேண்டியதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புக்கள்

1. பார்த்திபன்; ஆண்கள் விற்பனைக்கு, வெளியீடு : தென்னாசிய நிறுவனம், மார்கழி 1988, ப.5.
2. பார்த்திபன்; பாதிஉறவு, வெளியீடு : தென்னாசிய நிறுவனம்
3. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்; 'தில்லையாற்றங்கரை', மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1998, ப.4.
4. விமல் குழந்தைவேல்; பேட்டி, வீரகேசரி, 10.08.2003.
5. துரை.கே.எஸ்; ஒரு பூ; டென்மார்க், பக் 159–162.
6. மே.கு.நூ, பக் 165–167
7. துரை.கே.எஸ்; சுயம்வரம், டென்மார்க், 1993.
8. மே.கு.நூ. பக். 54–55
9. செழியன்; ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து, கனேடியன் நியூ புக் பப்ளிக்கேசன், ரொறொன்ரோ, கனடா, 1998.
10. மே.கு.நூ. பக். 174
11. யுவன் சந்திரசேகர்; எனக்குப் பிடித்த புத்தகம், கொரில்லா, காலச்சுவடு, மார் – ஏப் 2003, பக் 58–59.
12. ஜெயமோகன்; 'இவை என் முகங்கள்', ஒரு அகதி உருவாகும் நேரம், பொ.கருணாகரமூர்த்தி, ஸ்நேகா, 1998.
13. தியாகலிங்கம்.இ; அழிவின் அழைப்பிதழ், மித்ர வெளியீடு, சென்னை, ப.1
14. தியாகலிங்கம்.இ; நாளை, மித்ர வெளியீடு, சென்னை, 1999, ப.5
15. மே.கு.நூ. பக் 5
16. மே.கு.நூ. பக் 7
17. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்; உலகெல்லாம் வியாபாரிகள், நீலமலர், 1992, பக். 66.
18. மே.கு.நூ. பக். 98
19. மே.கு.நூ. பக். 197
20. நிஜங்கள், ஜனனம் ஆகிய இருபடைப்புகள் பார்த்தீபனால் எழுதப்பட்டுள்ளன. ஆதாரம் 'பாதி உறவு' நாவலின் அட்டைக்குறிப்பு.
21. 'தூண்டில்' (1988) சஞ்சிகையில் 'கனவை மிதித்தவன்' என்ற நாவல் பிரசுரமாகி யுள்ளது. பார்த்திபன் எழுதிய இந்நாவல் அகதிமுகாம் வாழ்வு பற்றியது. சுவடுகள் (1994) சஞ்சிகையில் ஆதவன் எழுதிய 'மண்மனம்' போராட்ட சூழலில் அப்பாவி இளைஞனொருவன் பற்றியது.


**மூல நூல்கள் – (புகலிட நாவல்கள்)**

1. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், ஒரு கோடை விடுமுறை, அலை வெளியீடு, 1981.
2. பார்த்தீபன், வித்தியாசப்படும் வித்தி யாசங்கள், தென்னாசிய நிறுவனம், 1986
3. ..............., பாதி உறவு, தென்னாசிய நிறுவனம், ஜுலை, 1987.
4. .............., ஆண்கள் விற்பனைக்கு, தென்னாசிய நிறுவனம், மார்கழி, 1988.
5. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்; உலகெல்லாம் வியாபாரிகள், நீலமலர், ஏப்பிரல், 1991.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ............., தேம்ஸ் நதிக்கரையில், பாரி நிலையம், ஆகஸ்ட், 1992.
7. துரை.கே.எஸ்; சுயம்வரம், டென்மார்க், பெப்.1993
8. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்; பனிபெய்யும் இரவுகள், பாரிநிலையம், சென்னை, செப். 1993
9. துரை.கே.எஸ் ஒரு பூ, டென்மார்க் ஆகஸ்ட் 1995
10. கருணாகரமூர்த்தி.பொ; அகதி உருவாகும் நேரம் (வானம் வசப்படும், மாற்றம். என்பனவும் உள்ளடங்கியுள்ளன.), ஸ்நேகா, ஏப்ரல் 1996
11. தியாகலிங்கம் இ; அழிவின் அழைப்பிதழ், மித்ர வெளியீடு, சென்னை, 1997.
13. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்; வசந்தம் வந்து போய்விட்டது. குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 1997.
14. .........., தில்லையாற்றங்கரையில் மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1998.
15. செழியன்; ஒரு மனிதனின் நாட் குறிப்பிலிருந்து, கனேடியன் நியூ புக் பப்ளிகேசன், ரொறன்ரோ, கனடா ஜூன் 1998
16. கடற்புத்திரன், வேலிகள் ('வெகுண்ட உள்ளங்கள்' படைப்பும் இணைந்துள்ளது.), குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை 1998.
17. தியாகலிங்கம். இ, நாளை மித்ர வெளியீடு, சென்னை, ஏப்ரல் 1999, மண்ணும் மல்லிகையும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை 1999.
18. விமல் குழந்தைவேல், மண்ணும் மல்லிகையும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை 1999.
19. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், அவனும் சில வருடங்களும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 2000.
20. ஷோபாசக்தி, கொரில்லா, அடையாளம், திருச்சி, நவம். 2001.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத் தமிழரிடையே வழங்கும் 'சத்தியம் செய்தல்' குறித்த நம்பிக்கை வழக்கம்

கலாநிதி. கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்


## ஆய்வுச் சுருக்கம்

*நாட்டார் வழக்காற்றியல் கல்விப் புலத்தின் 'அடிப்படைப் பொதுக்கூறு' (Common Denominator) நம்பிக்கையாகும். ஒரு சமூகத்தின் பண்பாட்டு வேர்களை இனங்கண்டு சுட்டத்தக்க தகைமையினைப் பெற்றுள்ள இந்நம்பிக்கைகள் பல்வேறுவகையினவாக வழக்கிலிருந்து வருகின்றன. அவற்றுள் மிகுந்த செல்வாக்குடனிருந்து வரும் 'சத்தியம் செய்தல்' குறித்த நம்பிக்கை வழக்கத்தினைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*


### 1. முன்னுரை

ஒருவர் தனது உறுதிப்பாட்டை அல்லது உண்மைத் தன்மையினை நிலைநாட்ட மேற்கொள்ளுகின்ற பல்வேறு வழிமுறைகளில் 'சத்தியம் செய்தல்' என்பது பிரதானமான ஒன்றாக உள்ளது. சத்தியம் செய்து உண்மைத் தன்மையினை நிலை நாட்டும் வழக்கம் உலகின் பல்வேறு இன மக்களிடையேயும் பெருவழக்காகக் காணப்படுகின்றது. [1] ஆங்கில அகராதி மரபில் சத்தியத்தினைக் குறிக்க, 'Oath', Promise, Swearing முதலான பல்வேறு சொல்லாட்சிகள் பயின்று வருகின்றன. இச் சொற்களின் பொருண்மைகளை முறைப்படுத்திப் பார்க்கின்றபோது அவை 'உண்மை', 'பிரமாணம்' முதலான பொருண்மைகளை முனைப்புறுத்தி நிற்பதனைக் காணமுடிகின்றது.

தமிழ் மரபில் சத்தியம் செய்யும் வழக்கம் மற்றும் அது குறித்த நம்பிக்கை என்பது மிக நீண்ட காலமாகவே பயின்று வருவதனை அவதானிக்க முடிகிறது. தமிழின் தொன்மையான இலக்கியங்களில் சத்தியத்தைக் குறிப்பதாகச் 'சூள்' என்ற சொல் பல இடங்களிலும் பயின்று வந்துள்ளது.[2] இவ்விலக்கியங்களின் வாயிலாகச் சத்தியத்தின் தொன்மையினையும் அதன் தன்மைகளையும் விளங்கிக் கொள்ள முடிகிறது. பண்டைத் தமிழரிடையே தெய்வத்தைக் காட்டியோ , ஒருவரது மெய்யைத் தீண்டியோ, தீமீதோ, 'சூள்' அல்லது 'வஞ்சினம்' கூறும் வழக்கம் தொன்று தொட்டே இருந்து வந்துள்ளது. அதன் தொடர்ச்சியினையும் வளர்ச்சியினையும் இன்றுவரை தமிழ்ச் சமுதாயத்தில் கண்டுகொள்ள முடிகிறது.

இக்கட்டுரையானது வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பெரும்பாகப் பிரிவுகளில் உள்ள பதினான்கு பிரதேச செயலர் மற்றும் உதவிப் பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுத் தரவுகளின் வழியே யாழ்ப்பாணத்து இந்து சமயம் சார்ந்த மக்களிடையே வழக்கில் இருந்து வரும் சத்தியம் செய்தல் குறித்த நம்பிக்கை வழக்கத்தினைச் சமூகவியல் நோக்கில் விளக்கி உரைப்பதாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சத்தியம் குறித்த நம்பிக்கை வழக்கத்தின் செல்வாக்கு

ஆய்வுப் பிரதேச மக்களுடைய அன்றாட வாழ்வியல் நடைமுறைகளிலே சத்தியம் செய்யும் வழக்கம் மிகுந்த செல்வாக்கினைச் செலுத்துகின்ற ஒரு வழக்கமாகப் பயில் நிலையில் இருப்பதனைக் காணமுடிகின்றது. படித்தவர், ஓரளவு படித்தவர், பாமரர் என்ற கல்விநிலை வேறுபாட்டு எல்லைகளைத் தாண்டி, சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் சத்தியத்தின் ஊடுருவலைக் காணமுடிகின்றது. Promise' `God Promise' முதலான சொல்லாட்சிகளைப் படித்தவர்கள் பல்வேறு சூழ்நிலைகளிலும்பரவலாகப் பயன்படுத்துவதனைக் காண முடிகின்றது. சமூக ஒழுங்கு, சமூகக் கட்டுக் கோப்பு, தனிநபர்ஒழுகலாறுகள் முதலானவற்றைநெறிப்படுத்துவதில் சத்தியத்தின் பங்கு கணிசமானதாகும். நாட்டுப்புற மக்களின் மனச்சாட்சியின் வெளிப்பாடாகச் சத்தியத்தினைக் குறிப்பிடலாம்.

## 3. சத்தியத்தின் வகைப்பாடு

கள ஆய்வுத் தரவுகளை முறைப்படுத்திப் பார்க்கின்றபோது ஆய்வுப் பிரதேச மக்களிடையே வழங்கும் சத்தியம் குறித்த நம்பிக்கை வழக்கத்தினைப் பின்வருமாறு வகைப்படுத்த முடிகிறது. அவையாவன,

1. கடவுளர் மேல் சத்தியம் செய்தல்
2. தன்மேலேயே சத்தியம் செய்தல்
3. தலையிலடித்துச் சத்தியம் செய்தல்
4. கையிலடித்துச் சத்தியம் செய்தல்
5. தொழில் உபகரணங்களின் மேல் சத்தியம் செய்தல்
6. விருப்புக்குரியவர் மேல் சத்தியம் செய்தல்
7. துண்டைப்போட்டுச் சத்தியம் செய்தல்
8. அன்னத்தின்மேல் சத்தியம் செய்தல்
9. பிள்ளையைக் கடந்து சத்தியம் செய்தல்
10. கற்பூரத்தை அணைத்துச் சத்தியம் செய்தல்
11. தண்ணீர்மேல் சத்தியம் செய்தல்
12. வெற்றிலையின்மேல் சத்தியம் செய்தல்
13. கல்விமேல் சத்தியம் செய்தல்

### *3.1. கடவுளர் மேல் சத்தியம் செய்தல்*

நாட்டுப்புற வழக்கில் கடவுளர் மேல் சத்தியம் செய்தல் என்பது மிகுந்த வினைத்திறன்கூடிய ஒன்றாகவே இன்றும் இருந்து வருகின்றது. கடவுளை முன்னிறுத்திச் சத்தியம் செய்வோர், தாம் செய்த சத்தியத்திற்கு மாறாக நடந்தாலோ, பொய்ச்சத்தியம் செய்தாலோ குறித்த தெய்வம் அவர்களை வருத்தும் என்பது ஆட்சி பெற்ற நம்பிக்கையாக உள்ளது[3]. இதனால் கடவுளரை முன்னிறுத்திச் சத்தியம் செய்வோர் மிகுந்த பயபக்தியோடு எச்சரிக்கையாக நடப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. கடவுளரை முன்னிறுத்திச் செய்யப்படும் சத்தியங்களில் பெரும்பாலும் உண்மைத் தன்மைகள் பாதுகாக்கப்படுகின்றன எனக் கூறலாம்.

கடவுளர் குறித்த சத்தியங்களில் ஆகம மரபுகளுக்கூடாக வரும் கடவுளரைக் காட்டிலும், சிறு தெய்வ மரபுகளுக்கூடாக வரும் தெய்வங்களை முன்னிறுத்திச் சத்தியம் செய்வதே 'சத்தியம்' தொடர்பான அதி உச்சப் பாதுகாப்பை வழங்கக் கூடியதாகக் கருதப் படுகின்றது.[4] கடவுளர்களுக்கும் அடியவர் களுக்குமான ' இடைவெளி', 'பக்தி அனுபவம்', தெய்வங்களுக்குக் கற்பிக்கப்படுகின்ற மிதவாத, தீவிரவாதத் தன்மைகள் முதலான விடயங்கள் மேற்படி விடயத்தில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. வைரவர், பிடாரி, முனி, காளி, வீரபத்திரர், துர்க்கா முதலான சிறுதெய்வக் கடவுளர் இவ்விடத்தில் முதன்மை பெறுகின்றனர். இவ்வாறு சத்தியம் செய்யும் போது குறித்த கடவுளரின் பெயரை உச்சரித்தே சத்தியம் செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்மாளாச்சி பாம்பா வருவா'
'வைரவர் கழுத்தைத் திருகிப்போடுவார்'
'முனியப்பர் குடலை உருவி எடுப்பார்'
'காளியாச்சி சும்மா விடா'

முதலான சொற்றொடர்களைச் சத்தியம் வாங்கும் முன்பாக உச்சரித்துச் சத்தியத்தின் வலிமைப்பாட்டைச் சத்தியம் செய்வோருக்கு உணர்த்தும் மரபும் காணப்படுகின்றது.

சிறு தெய்வங்களைத் தவிர ஆய்வுப் பிரதேசங்களிலே செல்வாக்குடன் விளங் குகின்ற தத்தமது குலதெய்வங்களை முன்னி றுத்தியும் பரவலாகச் சத்தியம் செய்யப்படு கின்றன. தீவுப்பிரதேச மக்களிற் பலர் நயினாதீவு நாகபூசணி, எழுவைதீவு ஐயனார், புங்குடுதீவு கண்ணகை முதலான கடவுளர் மீதும், வலிகாமத்து மக்கள், தெல்லிப்பழைத் துர்க்கை, நல்லூர் முருகன் முதலான தெய்வங்கள் மீதும், வடமராட்சி மக்கள் செல்வச்சந்நிதி முருகன், வல்லிபுர ஆழ்வார், வல்லை முனியப்பர் மீதும் சத்தியம் செய்வ தனைப் பெருவழக்காகக் கொண்டுள்ளனர். குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்களால் நன்கு அறியப்பட்ட இக்கடவுளரின் மேல் இப்பிரதேச மக்கள் மிகுந்த நம்பிக்கையினை வைத்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். ஆய்வுப் பிரதேசங்களுக்கு அப்பாலுள்ள கடவுளர் சிலர் மீதும் சத்தியங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மடுமாதா, கதிர்காம முருகன், கோணேசர், திருக்கேதீஸ்வரநாதர், முனீஸ்வரநாதர் முதலான கடவுளர்கள் இது விடயத்தில் முக்கியத்துவம் பெறுகின்றனர். [5]

### *3.2. தன்மேல் சத்தியம் செய்தல்*

தனது உறுதியை நிலை நாட்ட முனைகின்ற ஒருவர், தன்னை முன்னிறுத்திச் செய்வதான சத்தியம் இதுவாகும். குறித்த சத்தியம் பிழைத்தால் அது தன்னை நிச்சயம் வருத்தும் என்ற 'தெளிவு' இவ்வாறு சத்தியம் செய்பவருக்கு இருக்கும்.[6] இவ்வாறு சத்தியம் செய்வதற்கு குறித்த நபரின்மேல் பிற தரப்பினர் நம்பிக்கை கொண்டவர்களாக இருத்தல் அவசிய மாகும்.

'என்னாண'
'என்னாணை'
'என்னைக் கொண்டு சத்தியம் செய்யிறன்'
'என்மீது சத்தியம்' [7]

முதலான சொற்றொடர்களைத் தன்மேல் சத்தியம் செய்வதான நடைமுறையில் பயன்படுத்துவதனைக் காணக் கூடியதாக உள்ளது.

### *3.3. தலையிலடித்துச் சத்தியம் செய்தல்*

ஒருவர் தனது தலையின்மீதோ, பிறருடைய தலையின் மீதோ தனது கைகளால் தொட்டுச் சத்தியம் செய்வது இம்முறையாகும்.[8] பிறருடைய தலையைத் தொட்டுச் சத்தியம் செய்யும்போது குறித்த நபர் மீது தனக்குள்ள நெருக்கத்தினையும் ஈடுபாட்டினையும் சத்தியம் செய்யும் நபர் காட்டிக் கொள்வார். தவறான எந்த ஒரு சத்தியமும் தனக்கோ அல்லது தனது அன்புக்குப் பாத்திரமானவருக்கோ தீங்கினை விளைவிக்கும் என்பததைச் சத்தியம் செய்யும் நபர் நன்குஅறிந்து வைத்திருப்பார்.

### *3.4. கையிலடித்துச் சத்தியம் செய்தல்*

சத்தியம் செய்யும்போது, சத்தியம் செய்து கொடுக்க வேண்டிய நபருடைய உள்ளங்கையில் தனது கையை அடித்து அல்லது பொருத்திச் சத்தியம் செய்யும் நடைமுறை இதுவாகும். இவ்வாறு சத்தியம் செய்யும் வேளைகளில் சத்தியத்தினைப் பெறுபவர் தனது கையினை நீட்டுதலும் சத்தியம் செய்து கொடுப்பவர் தனது கையைச் சத்தியம் வாங்கும் நபருடைய கைமீது கவித்தலும் பெரும்பான்மை மரபாக உள்ளது.[9]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலடித்துச் சத்தியம் செய்யும் போது சத்திய மொழிகள் (வஞ்சின மொழிகள்) சிலவற்றை உச்சரித்துக் கையிலடிப்பர். ஆயினும் 'சத்தியமா' என்ற சொல்லைக் கூறிக் கையிலடிப்பதே பெரும்பான்மை வழக்காக உள்ளது.

### 3.5. தொழில் உபகரணங்களின் மேல் சத்தியம் செய்தல்

தனது உறுதியை நிலைநாட்டிக் கொள்ள விரும்பும் ஒருவர், தனது வாழ்வுக்கு ஆதாரமாக மேற்கொண்டு வரும் தொழிலோடு தொடர்புடைய உபகரணங்கள் மீது ஆணையிட்டுச் சத்தியம் செய்யும் நடைமுறை இதுவாகும். தொழில் உபகரணங்களின் மேல் சத்தியம் செய்வது என்பது பாரதூரமான ஒரு விடயமாகவே கருதப்படுகிறது.[10] தொழில் என்பது ஒருவருடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியத்துவமான ஒன்றாகும். அவ்வாறான தொழிலோடு தொடர்புடைய உபகரணம் மீதே சத்தியம் செய்வது என்பது சத்தியத்தை வேண்டி நிற்கும் தரப்பாரின் நம்பகத்தன் மையை எளிதில் பெறக்கூடிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

மீனவர்கள் தாம் கடல்மேற் செல்லும் படகின் மீதும், கள்ளு இறக்குவோர் தாம் மரம் ஏறப்பயன்படுத்தும் 'தளைநார்' மீதும், விவசாயிகள் தாம் உழுவதற்குப் பயன்படுத்தும் 'ஏர்' மீதும், வாகனம் வைத்துத் தொழில் செய்வோர் தமது வாகனங்கள் மீதும், (மோட்டார் வாகனங்கள், மாட்டு வண்டிகள்) கற்பித்தற் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் தமது நூல்கள் மீதும் சத்தியம் செய்து கொடுப்பதனை வகைமாதிரியான எடுத்துக்காட்டுக்களாக இவ்விடத்தில் குறிப்பிடலாம்.[11] இவ்வாறான சத்தியத்தில் 'பணயம்' வைக்கும் கருவிகளின் முக்கியத்துவம் ஒன்றே இச்சக்தியின் வலிமையினை உணர்த்தப் போதுமானதாகும்.

### 3.6. விருப்புக்குரியவரின்மேல் சத்தியம் செய்தல்

சத்தியம் செய்யும்போது சத்தியம் செய்து கொடுப்பவர், தாம் அதிகமாக நேசிக்கும் உறவுக்குரியோரை முன்னிறுத்திச் சத்தியம் செய்வது இதுவாகும். தந்தை, தாய், சகோதரர்கள், பிள்ளைகள் என இவ்வாறான உறவுக்குரியோர் பலவகைப்படுவர். ஆயினும் தாயின்மீது சத்தியம் செய்வதே பெரும்பான்மை வழக்கமாக உள்ளது.[12] தாய்க்கும் பிள்ளைக்குமிடையேயான உறவு என்பது மிகவும் புனிதமான ஒன்றாகவே இருந்து வருகிறது. பிள்ளைகளைப் பொறுத்த வரை குடும்பத்தில் உள்ள எவருடன் முரண்பட்டுக்கொண்டாலும் தாயுடன் முரண்படுவதென்பது அரிதாகவே காணப்படுகின்றது. குடும்ப இணைப்பின் சின்னமாகத் தாய் விளங்குகின்றாள். தாய் இல்லாத குடும்பங்கள் பலவும் சின்னாபின்ன மாகிப் போயுள்ளதனைப் பார்க்க முடிகிறது. 'தகப்பன் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, தாய் இருக்க வேணும்' என்ற மரபுத் தொடர் பரவலாகப் புழக்கத்தில் உள்ளது. இவ்வாறான முக்கியத்துவம் கொண்ட தாய் மீது சத்தியம் செய்வது என்பது மிகுந்த நம்பிக்கைக்குரிய ஒன்றாகக் காணப்படு கின்றது.

**'அம்மாவாண'**

**'பெத்த தாயாணை'**

**'என்னப்பெத்த தாயாணை'**

**'என்ர அம்மாவாணை'**

**'என்ர ஆத்தையாணை'**

**'தாயைக் கொண்டு சத்தியம் செய்யிறன்.'**

**'கோத்தையாணை'**

**கொம்மாவாணை'** [13]

முதலான சொற்றொடர்கள் பலவும் தாயோடு தொடர்புடைய சத்தியத்தில் பயன்பாட்டில் இருந்து வருகின்றமை குடிறிப்பிடத்தக்கதாகும். சிறுபான்மையாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் தமது பிள்ளைகள் மீதும் சத்தியம் செய்து கொள்கின்றனர். ஆயினும் பிள்ளைகளைப் பணயமாக வைத்துச் சத்தியம் செய்வதனை ஏற்காத மனநிலையிலேயே பெரும்பாலான மக்கள் உள்ளதனைப் பார்க்க முடிகின்றது.

### 3.7. துண்டைப் போட்டுச் சத்தியம் செய்தல்

சத்தியம் வேண்டி நிற்போரின் நம்பிக்கையினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டுத் தமது உடலிலுள்ள துண்டு ஒன்றினை நிலத்தில் போட்டுத் தாண்டிச் சத்தியம் செய்வது இம்முறையாகும். ஆண்கள் தமது தோளில் உள்ள துண்டையோ அல்லது வேட்டியையோ நிலத்தில் போட்டுச் சத்தியம் செய்வதனை வழக்கமாகக் கொண்டுள்ளனர். பெண்கள் தமது சேலைத் தலைப்பை (முந்தானை) நிலத்தில் போட்டுத் தாண்டிச் சத்தியம் செய்தல் வழக்கமாக உள்ளது.[14]

சத்தியத்துக்கு மாறாக நடப்பின் குறித்த துண்டுக்குரியவரின் உயிருக்கு ஆபத்து நேரும் என்பது நம்பிக்கையாக உள்ளது. இவ்வாறான சத்திய நடைமுறைகளில் தோளில் உள்ள துண்டைப் போட்டுத் தாண்டிச் சத்தியம் செய்தலே பெருவழக்காக உள்ளது. இக்கட்டான சூழ்நிலைகளில் தோளில் உள்ள துண்டைப் போட்டுத் தாண்டுதல் செய்வது பிற ஆடைகளைக் களைவதை விட வசதியானதாகவும் இருந்திருக்கலாம்.

ஒருவருடைய உடலோடு உறவு கொண்டுள்ள பொருட்களைப் பிரித்தாலும் உடலுக்கும் அப்பொருட்களுக்குமுள்ள உறவைப்பிரிக்க முடியாது என்ற நம்பிக்கையே இப்பணயப் பொருளின் அடிப்படையாக உள்ளது. செய்வினை சூனியங்களிலும் ஒருவரது ஆடைகளைப் பயன்படுத்துவது இவ்விடத்தில் கருதத்தக்கதாகும். இந்த நம்பிக்கையின் காரணமாகக் குறித்த சில ஆடைகளைப் பிறர் கண்ணில் படாமல் பாதுகாக்கும் வழக்கம் இன்றும் தொடர்கின்றது.[15] இவ்வாறான ஒரு நம்பிக்கை மேலை நாட்டு மக்களிடையேயும் வழக்கில் உள்ளமை குறித்துப் பிரேசர் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். [16]

### 3.8. அன்னத்தின்மேல் சத்தியம் செய்தல்

சத்தியம் செய்யும் நபர் தாம் உட்கொள்ளும் உணவைக் கொண்டு சத்தியம் செய்தல் இதுவாகும். கையில் எந்தவகையான உணவுப் பொருட்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் 'அன்னம்' என்றே குறிப்பிட்டுச் சத்தியம் செய்வர். அன்னத்தின் மேல் சத்தியம் செய்வதும் பாரதூரமான ஒன்றாகவே ஆய்வுப்பிரதேச மக்களால் கருதப்படுகின்றது. சத்தியம் பொய்ப்பின் 'அன்னம் தண்ணிக்கு' வழியிராது என்பது நம்பிக்கையாக உள்ளது.

**'அன்னத்தின் அறிய'**
**'சோத்துமீது சத்தியம்'**
**'அன்னத்தினாண'**
**'அன்னம் மீது சத்தியமா'**
**'சோத்தவிள் மீது சத்தியமா'**
**'அன்னம் தண்ணியில்லாமல் சாவன்'**[17]

முதலான சொற்றொடர்களை இவ்வகையான சத்தியத்தின் போது பரவலாகப் பயன்படுத்துவதனைப் பார்க்க முடிகிறது.

### 3.9 பிள்ளையைக் கடந்து சத்தியம் செய்தல்

சத்தியம் செய்வதான நடைமுறைகளில் அதி உச்சமான ஒரு நடைமுறையாகப் பிள்ளையைக் கடந்து சத்தியம் செய்வதனைக் குறிப்பிடலாம். சத்தியத்தின் வலிமையினையும் இது உணர்த்தி நிற்கிறது. சத்தியத்திற்கெனத் தேர்ந்தெடுத்த பிள்ளையினை நிலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடத்திய பின், சத்தியம் செய்பவர் குறித்த குழந்தையினைத் தாண்டுதல் செய்வதன் மூலம் இச்சத்தியத்தினை நிறைவேற்றுவார்.

பிள்ளையைக் கடந்து சத்தியம் செய்கின்ற நம்பிக்கை வழக்கத்தினைப் பிற சத்திய நடைமுறைகள் எவையும் பயன்தர மாட்டாது எனக் கருதுகின்ற மிகவும் அரிதான சந்தர்ப்பங்களிலேயே ஆய்வுப் பிரதேச மக்கள் தேர்ந்தெடுப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது.[18]

சத்தியத்திற்கு மாறாக நடப்பின் குறித்த குழந்தையின் உயிருக்கு ஆபத்து நேரும் என்பது இச்சத்தியத்தின் அடிப்படையாக உள்ளது. இதனால் இவ்வாறான சத்தியத்தினை ஏற்க முடியாதமனநிலையிலேயே ஆய்வுப் பிரதேச மக்களிற் பலரும் காணப்படுகின்றனர்.

ஆய்வுப் பிரதேசங்களில், பிறரைப் பெரிதும் நம்பவைக்கக் கூடியதான இச்சத்திய நடைமுறையினைச் சிலர் துஷ்பிரயோகம் செய்துள்ளமையினையும் காணமுடிகிறது. குறித்தஒரு பிரச்சினையில் (காதல், மனைவிக்குப் புறம்பான தாம்பத்திய உறவு.....) எழக்கூடிய உடனடியான எதிர்ப்பலைகளை அதிரடியாகத் தணிக்கும் வல்லமை இச்சத்தியத்திற்குண்டு எனப் பலரும் நம்புகின்றனர். இதுவே சிலரைப் பொய்ச்சத்தியம் செய்வதுவரை கொண்டு சென்றுள்ளதனையும் பார்க்க முடிகிறது.

இவ்வாறு பொய்ச்சத்தியம் செய்வோருக்குக் குறித்த சத்திய நடைமுறையில் நம்பிக்கை இன்மை இருப்பதனாலேயே அதனைத் துணிந்து செய்ய முற்பட்டுள்ளமையினையும் பார்க்க முடிகின்றது. இல்லாவிடின் தமது நேசிப்புக்குரிய குழந்தைகளைத் தாண்டி அவர்களின் உயிரோடு விளையாட இவர்கள் துணியமாட்டார்கள் என்றே கருத வேண்டும். சூழ்நிலையின் இறுக்கத்தைத் தணிக்க கடவுளை வேண்டிக்கொண்டு பிள்ளையினைக் கடந்து விடுகிறார்கள்.[19]

பிற சத்தியங்களில் பொய்த்தவர் களை விடவும், பிள்ளையைத் தாண்டிப் பொய்ச்சத்தியம் செய்தவரைக் குறித்த சமூகத்தில் உள்ளோர் பெரிதும் மதிக்காத நிலையே காணப்படுகிறது. வாழ்நாள் முழுமையும் இது தொடர்பான வசை மொழிகளை இவர்கள் கேட்க வேண்டி ஏற்படுகிறது.[20]

**'பிள்ளையைத் தாண்டிய தேவடியாளெல்லே'**
**'பிள்ளையைக் கடந்த வேசை'**
**'பிள்ளையையே தாண்டிப்பேய்க் காட்டியவன்'**
**'பிள்ளையைப் பணயம் வைச்சபாவி'**

முதலான சொற்றொடர்களை இவ்விடத்தில் வகைமாதிரிகளாகச் சுட்டலாம்.

### *3.10 கற்பூரத்தை அணைத்துச் சத்தியம் செய்தல்*

தெய்வ சந்நிதிகளிலோ அல்லது பிற இடங்களிலோ சிலர் முன்நிலையில் கற்பூரத்தை ஏற்றி அதனைக் கையால் அணைத்துச் சத்தியம் செய்தல் இதுவாகும்.

கற்பூரத்தின் மேல் சத்தியம் செய்வதான நடைமுறை மிகப் பரவலான ஒன்றாகக் காணப்படுகின்றது. சத்தியத்தினை வேண்டி நிற்போர் கற்பூரத்தை ஏற்றுவதும், சத்தியம் செய்பவர் அக்கற்பூர தீபத்தைத் தமது கையால் அணைத்துச் சத்தியம் செய்வதும் மரபாக உள்ளது. சிலர் முன்னிலையில் இச்சத்தியத்தினை நிகழ்த்த வேண்டுவது பெரும்பான்மை வழக்கமாக உள்ளது. பிள்ளைகளிடமோ அல்லது குடும்பத்தின் பிற உறுப்பினர்களிடமோ சத்தியம் வாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைவோர் தமது வீட்டில் உள்ள சுவாமி அறையில் உள்ள சுவாமிப்படங்களின் முன்பாகக் கற்பூரத்தை அணைக்க வேண்டுகின்றார். இவ்வுறவுமுறைகளில் வராத பிறரிடம் இச்சத்தியத்தை வேண்டும் சூழ்நிலைகளில் தெய்வ சந்நிதிகளிலேயே அதனைப் பெற்றுக் கொள்வதனைப் பார்க்கமுடிகின்றது.[21]

இச் சத்திய நடைமுறை கடவுளருடன் தொடர்புடையதாக இருந்தாலும் கூட, கடவுளரைத் தொடர்புபடுத்தாது வெறுமனே கற்பூரத்தை அணைத்துச் சத்தியம் செய்வதனையும் பார்க்க முடிகின்றது.

### 3.11 தண்ணீர் மேல் சத்தியம் செய்தல்

தண்ணீரைப் புனிதமானதாக, தெய்வத்தன்மையுடையதாகக் கருதும் வழக்கம் தமிழரிடையே தொன்றுதொட்டே நிலவி வருகிறது. 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்கக் கூடாது' என்பது தமிழரிடையே மிகப்பரவலாக வழங்குகின்ற பழமொழியாக உள்ளது.[22] இவ்வாறான பண்புகள் கொண்ட தண்ணீர் மீது ஆணையிட்டுச் சத்தியம் செய்து கொள்வதே இந்நடைமுறையாகும்.

நீர் நிலைகளின் அருகில் சென்றோ, கொள்கலன்களில் நீரை ஏந்தியோ இச்சத்தியத்தினை நிறைவேற்றுவது மரபாக உள்ளது. நீர்நிலைகளில் கடவுளர் உறைவதான நம்பிக்கை இன்றுவரை தமிழரிடையே வழக்கில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### 3.12 தாலியின் மேல் சத்தியம் செய்தல்

தாலியைப் பணயமாக வைத்துச் சத்தியம் செய்யும் நடைமுறை இதுவாகும். இச்சத்தியமும் மிகவும் வலுவுள்ள ஒரு சத்தியமாகவே வழக்கில் இருந்து வருகிறது. இச்சத்தியத்தினைப் பெண்கள் மேற்கொள்வதே வழக்கமாக உள்ளது. 'தாலி' என்பதனுள் கணவனது உயிர் அடங்கியுள்ளது என்பதனைச் சத்தியம் செய்வோரும் அதனை வாங்குவோரும் நன்கு உணர்ந்தே இருக்கின்றனர். தாலியுடன் குங்குமத்தையும் இணைத்துச் சத்தியம் செய்யும் நடைமுறையும் வழக்கில் உள்ளது.[23] தாலி, குங்குமம், மஞ்சள் முதலான மங்கலப் பொருட்கள் கணவனது உயிரின் குறியீடுகளாகப் பணயம் வைக்கப்படுகின்றன. பிற சத்தியங்களால் பிறரை நம்பவைக்க முடியாத சூழ்நிலைகளிலேயே தாலி மீதான சத்தியம் செய்யப்படுவதனைப் பார்க்கமுடிகிறது.

### 3.13 வெற்றிலையின் மேல் சத்தியம் செய்தல்

மாசுமறுவற்ற முழுமையான வெற்றிலை ஒன்றின் மீது சத்தியம் செய்பவர் தனது வலது கையைக் கவித்துச் சத்தியம் செய்தல் இதுவாகும். வெற்றிலைக் கொடியை மிகவும் புனிதமான ஒன்றாகக் கருதும் வழக்கம் தமிழரிடையே இன்றும் நிலவி வருகின்றது. 'வெற்றிலைக் கொடி குற்றம் பொறுக்காது' என்ற நம்பிக்கை இன்றும் வலுவுடன் உள்ளது. இத்தன்மை காரணமாக மாதவிலக்குத்தீட்டு மற்றும் பிற தீட்டுக்களால் பாதிக்கப்பட்டுள்ளோர் வெற்றிலைக் கொடிக்கு அருகில் செல்வதையோ, அதனைத் தீண்டுவதையோ சமூகம் அனுமதிப்பதில்லை. சுத்தமான நீரையே வெற்றிலைக் கொடிக்குப் பாய்ச்சும் வழக்கமும் காணப்படுகிறது. இவ்வாறான புனிதத்தன்மை மற்றும் குற்றம் பொறுக்காத தன்மை கொண்ட வெற்றிலையின் மீது ஒருவர் பொய்ச்சத்தியம் செய்வது என்பது அசாதாரணமான ஒரு விடயமாகவே ஆய்வுப்பிரதேசத்தில் கருதப்படுகிறது.[24]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *3.14 கல்வி மேல் சத்தியம் செய்தல்*

சத்தியம் செய்து கொடுக்கவேண்டிய சூழ்நிலையில் உள்ள ஒருவர், தாம் கற்ற அல்லது கற்றுக்கொண்டிருக்கின்ற கல்வி மீது ஆணையிட்டுச் சத்தியம் செய்வது இதுவாகும். பெரும்பாலும் பாடசாலைகளில் கல்விகற்றுக் கொண்டிருக்கிற பிள்ளை களிடையே இவ்வாறான சத்தியம் செய்தல் நடைமுறை அதிகமாக வழக்கில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 'பென்சில்', 'பேனா', 'அழிறப்பர்', 'கட்டர்', 'கொப்பி' முதலான தமது எழுது பொருட்களைப் பறிகொடுத்த பள்ளிச் சிறார்கள், தாம் சந்தேகப்படும் சகாக்களிடம் 'கல்வி'யைக் கொண்டு சத்தியம் செய்யக் கேட்பதனை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவ்வாறான வேளைகளில் சத்தியம் செய்து கொடுப்போர்.

**'நான் படிக்கிற கல்வியாண'**
**'கல்வியாண'**
**'என்ர கல்வியைக் கொண்டு சத்தியஞ் செய்யிறன்'**
**'கல்வியாண'**
**'எட்டுக் கல்வியாண'**
**'இந்தப் படிப்பாண'**[25]

முதலான சொற்றொடர்களை உச்சரித்துக் கொண்டும் குறித்த பாடப் புத்தகங்களைத் தொட்டுக் கொண்டும், சத்தியம் செய்வதனைப் பார்க்க முடிகின்றது. பாடசாலைச் சிறாரிடையே வழக்கில் உள்ள இச்சத்திய நடைமுறை, அவர்களிடையேயான சிறுசிறு பிணக்குகளைத் தீர்ப்பதில் கணிசமான பங்கை ஆற்றி வருகிறது.

கல்விப் பொதுத் தராதரப் பாடத் திட்டத்தில் எட்டுப் பாடங்கள் உள்ளடக்கப் பட்டிருந்த காலப்பகுதியில் எட்டுப் பாடக் கல்வியைக் கொண்டு சத்தியம் செய்யும் நடைமுறை வழக்கில் வந்திருக்க வேண்டும். 'எட்டுப்பாடக் கல்வியா, எட்டுப்பாடக் கல்வியா' என்பதில் பாடவேறுபாட்டுக் (Text veriation) குழப்பமும் காணப்படுகிறது.[26]

கல்வியைக் கொண்டு சத்தியம் செய்யும் போது சத்தியம் செய்யும் நபருக்கு 'ஓடாத' (கைவராத) பாடத்தின் மீது நெத்தியடியாகச் சத்தியம் கேட்கும் விசித்திரமான ஒரு வழக்கமும் காணப்படுகிறது.

**'விஞ்ஞானத்தைக் கொண்டு சத்தியம் பண்ணு'**
**'கணக்கைக் கொண்டு சத்தியம் செய்'**
**'ஆங்கிலக் கல்வியைக் கொண்டு சத்தியம் செய்'**

முதலான சொற்றொடர்களை இவ்வாறான சத்திய நடைமுறையில் கேட்க முடிகிறது. விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் முதலான பாடங்கள் இன்றும் பல்வேறு மாணவர்களுக்கும் ஒரு 'சிம்ம சொப்பனமாகவே' இருந்து வருகின்றன. ஏலவே பாடங்களில் குறைவான புள்ளிகளைப் பெறும் மாணவர்களிடம் அதே பாடங்களிலேயே சத்தியத்தினைக் கேட்பது அவர்களை உளவியல் ரீதியாகப் பெரிதும் பாதிக்கிறது. எங்கே பொய்ச்சத்தியம் செய்தால் மேலும் இடர்ப்படுவோமோ என்ற நினைப்பில் இவர்கள் உண்மையான சத்தியத்தையே செய்ய முன்வருகின்றமையினைக் காணமுடிகிறது.

கல்வியை மூலதனமாகக் கொண்டு தொழிலாற்றி வருவோரும் தமது கல்வியைக் கொண்டு சத்தியம் செய்வதனை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

### 4. சத்தியத்தினை விலக்கிக் கொள்ளுதல்

தமது உறுதியை நிலைநாட்டும் பொருட்டு ஏதாவது ஒருவழி முறையில் சத்தியம் செய்யும் ஒருவர், அச்சத்தியத்தின் பாரதூரமான தன்மையினை உணர்கின்ற நிலையிலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது குறித்த சத்தியத்தின் விளைவை உணர்ந்த பிறரது வற்புறுத்தல் நிலையிலோ சத்தியத்தினை உடனடியாகவே மீளப்பெற்றுக் கொள்வதுமுண்டு. இவ்வாறான மீளப்பெறல் நடவடிக்கையினை 'ஆணை விடுதல்' என்ற சொற்றொடரால் ஆய்வுப் பிரதேச மக்கள் குறிப்பதனைக் காணமுடிகின்றது.

குறித்த சத்தியத்தினை மீளப்பெற விரும்பும் நபர் ஒருவர் உடனடியாகவே,

'ஆணை விட்டன்'
'ஆணை விட்டன்'
'ஆணை விட்டன்' [27]

என மூன்றுமுறை உச்சரிப்பதன் மூலம் குறித்த சத்தியத்திலிருந்து விலக்குப் பெறலாம். இது ஒருவகையான மீளப் பெறுதலாகும். பிறிதொரு வகையாகத் 'துப்பிக் கழித்தல்' காணப்படுகிறது. 'தூ', 'தூ', 'தூ' என மூன்று முறை எச்சிலைத் துப்பிக் கழித்தல் செய்வதன் மூலமும் சத்தியத்தினைச் சிலர் விலக்கிக் கொள்கின்றனர்.

தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் பிறர் முன்னிலையில் பொய்ச்சத்தியத்தினைச் செய்ய முற்படுவோர் 'சத்தியம்' என்ற சொல்லை உச்சரிக்கும் முன்பாக 'அ' என்ற உயிர் எழுத்தை மனதில் உச்சரித்து சத்தியத்தினை 'அசத்தியம்' ஆக்கித் தப்பிக் கொள்கின்றனர். இங்கே 'அசத்தியம்' என்பது பொய்ச்சத்தியத்தினைக் குறிப்பதாக அமைகிறது. சத்தியத்தினைச் செய்யும் போதே 'பொய்ச்சத்தியம்' எனப் பிரமாணம் எடுப்பதால் தங்களுக்குப் பாதிப்பில்லை என இவர்கள் கருதுகின்றனர். அதனால் 'பொய்ச்சத்தியம் செய்து விட்டோமே' என்ற மனஉறுத்தல் இவர்களுக்கு இருப்பதில்லை. எனினும் இவ்வாறு சூழ்நிலைகருதிப் பொய்ச்சத்தியம் செய்வோர், தமது குலதெய்வங்களிடம் தமது நிலைப்பாட்டை விளக்கி 'மனஆறுதல்' பெறுவதனையும் பார்க்க முடிகிறது.

## 5. முடிவுரை

யாழ்ப்பாணத் தமிழரிடையே சத்தியம் செய்தல் குறித்த நம்பிக்கை வழக்கம் மிகப்பரவலாக உள்ளதனைக் கள ஆய்வுத்தரவுகள் நிரூபிக்கின்றன.

ஒருவரது உறுதியை அல்லது உண்மைத் தன்மையை நிலைநாட்டச் சத்தியம் செய்வதே இன்று பெருவழக்கான 'அளவுகோலாக' உள்ளமை தெரியவருகிறது.

படித்தவர், ஓரளவு படித்தவர், பாமரர் என்ற வேறுபாட்டு எல்லைகளை எல்லாம் தாண்டி, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரிடையேயும் சத்தியம் செய்தல் குறித்த நம்பிக்கை வழக்கத்தினைப் பரவலாகப் பார்க்க முடிகிறது.

கடவுளின் மேல் சத்தியம் செய்தல். தாயின் மேல் சத்தியம் செய்தல், பிள்ளையைத் தாண்டிச் சத்தியம் செய்தல் முதலானவை சத்தியத்தின் வலிமையினை வெளிக்காட்டுவனவாக உள்ளன. பிள்ளையைத் தாண்டிச் சத்தியம் செய்யும் நம்பிக்கை வழக்கம் பெரிதும் நாட்டுப்புறப் பக்கங்களிலேயே வழக்கிலிருந்து வருகின்றது.

தொழில்மேல் உள்ள ஆபத்துக்களை வரவழைத்து குறித்த தொழில் உபகரணங்களின் மேல் சத்தியம் செய்வதான நடைமுறை சத்தியத்தின் உண்மைத் தன்மையின் 'உரைகல்லாக' அமைந்துள்ளது.

சமுதாயத்தின் சட்டம் ஒழுங்கு மற்றும் தனிநபர் ஒழுகலாறுகள் முதலான பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களில் மனிதனை நெறிப்படுத்துவதில் சத்தியத்தின் பங்களிப்பு அபரிதமாக உள்ளது. சமூகஉறுப்பினரில் பெரும்பாலானோர் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவர்களாகவே இன்றும் காணப்படுகின்றனர். ஆயினும் கல்வி முன்னேற்றம், பிறநாட்டுத் தொடர்பு, நாகரிக வளர்ச்சி, இடையறாத போர் தந்த அழிவுகளின் காரணமாக வாழ்வில் ஏற்பட்ட வெறுமை அல்லது பிடிப்பின்மை, எப்படியும் வாழலாம் என்கின்ற கருத்து நிலையின் செல்வாக்கு முதலானவை காரணமாகச் சத்தியம் செய்தலில் காணப்படுகின்ற நம்பிக்கையில் ஒருவித தளர்ச்சிப் போக்கையும் ஆய்வுப்பிரதேச மக்களிடையே இனங்காண முடிகிறது என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடல் வேண்டும்.

## அடிக்குறிப்புக்கள்

1. முத்தையா. ஆத ;பாகனேரி நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், ஆனந்தாயி பதிப்பகம், தஞ்சாவூர், 1998, ப.193
2. பரிபாடல், 6 : 94 – 95 அகநானூறு, 110:4–5, 266: 20–21, 296:7–8, கலித்தொகை, 98: 32–33
3. தகவல், ஆறுமுகம் பொன்னையா, ஆண், வயது 70, நயினாதீவு வடக்கு, நயினாதீவு. சந்தித்த திகதி, 6.2.2004
4. ஆய்வுப் பிரதேசங்களில் இவ்வித மனோபாவம் பரவலாகக் காணப்படு கின்றது. சிறு தெய்வங்கள் 'காங்கை' கூடிய தெய்வங்களாகக் கருதப்படுகின்றன.
5. தகவல், கனகசபை ஐயம்பிள்ளை, ஆண், வயது 63, ஊரிக்காடு. தொண்டமனாறு, சந்தித்த திகதி, 1.2.2004.
   செல்வராசா தவமணி, பெண், வயது 70, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம். சந்தித்த திகதி, 2.2.2004.
   சண்முகம் குகனேசன், ஆண், வயது 36, வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம். சந்தித்த திகதி, 3.2.2004.
6. சுகந்தி தனபாலசிங்கம், பெண், வயது 27, தெணியம்பை, வல்வெட்டித்துறை. சந்தித்த திகதி, 17.3.2004.
7. இச்சொற்றொடர்கள் ஆய்வுப் பிரதேசங்களின் பேச்சுமொழி வேறுபாடுகளுக் கேற்ப சிற் சில மாற்றங்களுடன் பயின்று வருகின்றன.
8. உமாசெல்லத்துரை, பெண், வயது 75. கனகம்புளியடிச் சந்தி, சரசாலை. சந்தித்த திகதி, 22.4.2004.
9. ஆய்வுப் பிரதேசங்களில் இம்மரபே பரவலாக வழக்கில் உள்ளது.
10. இளையதம்பி மகேஸ்வரன், ஆண், வயது 37. நயினாதீவு வடக்கு, நயினாதீவு. சந்தித்த திகதி, 11.3.2004.
11. கந்தசாமி ஐயன், ஆண், வயது 60, ஐயனார் கோவிலடி, எழுவைதீவு, சந்தித்த திகதி, 11.4.2004
13. வைதேகி கணநாதன், பெண், வயது 32. மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம். சந்தித்த திகதி, 26.3.2004
14. அமிர்தலிங்கம் பௌநந்தி, ஆண், வயது 30, துன்னாலை மத்தி, கரவெட்டி. சந்தித்த திகதி, 24.2.2004.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. மாதவிலக்குத்தீட்டுத்துணி, மற்றும் பெண்களின் உள்ளாடைகள் இவ்விடத்தில் சிறப்பாகக் குறிப்பிடக் கூடியன வாகும்.

16. Frazer T.D. The Golden Bough (The Magic art) Macmillan & Company London, 1955 Vol.I Part I. 54.

17. பரராசசிங்கம் உதயகுமார், ஆண், வயது 40, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு. சந்தித்த திகதி, 20.4.2004.

18. அரியபுத்திரன் சிவஞானசீலன், ஆண், வயது 33, இடைக்காடு, சந்தித்த திகதி, 15.3.2004

19. பூலோகராஜா நகுலன், ஆண் வயது 32, மகாத்மா வீதி, நெல்லியடி, சந்தித்த திகதி, 12.4.2004. தளையசிங்கம் ரவீந்திரன், ஆண், வயது 37, 'சொர்ணபுரி', கொக்குவில் கிழக்கு, கொக்குவில். சந்தித்த திகதி, 9.1.2004,

    தம்பர் செல்லையா, ஆண், வயது 53, நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை, சந்தித்த திகதி,6.4.2004

20. இவ்வாறு பொய்ச் சத்தியம் செய்தவர்கள் குற்ற உணர்வுடன் இருப்பதனைக் காணமுடிகிறது.

21. கந்தசாமி பூமிநாதன், ஆண், வயது 38, செல்வச்சந்நிதி, தொண்டமனாறு, சந்தித்த திகதி, 7.5.2004.

22. செல்வரெத்தினம் செல்வமோகன், ஆண், வயது 30, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். சந்தித்த திகதி, 3.3.2004.

23. வைரவநாதன் வயவநாதன், ஆண், வயது 60, வசாவிளான், சந்தித்த திகதி, 19.12.2003.

24. தம்பு கணநாதன், ஆண், வயது 65, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், சந்தித்த திகதி, 17.02.2004.

25. ஜானகி தேவதாசன், பெண், வயது 32, 19/37 பிறவுண் வீதி, கந்தர்மடம். சந்தித்த திகதி, 11.4.2004.

26. ரஜனி நரேந்திரா, பெண் வயது 30, 'ராஜஸ்தான்', கொக்குவில் கிழக்கு, கொக்குவில். சந்தித்த திகதி, 9.4.2004.

27. வேலாயுதம் சிவகுமாரன், ஆண், வயது 40, அரியாலை கிழக்கு, அரியாலை. சந்தித்த திகதி, 5.4.2004.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்யியலில் கெடுதி பற்றிய பிரச்சினை –ஓர் ஆய்வு

பேராசிரியர் நா.ஞானகுமாரன்


## ஆய்வுச் சுருக்கம்

*கெடுதியானது குறிப்பாக மெய்யியலில் இடர்ப்பாட்டினை அளிக்கின்ற எண்ணக் கருத்தாக இருந்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். கடவுள் இருப்பிற்கும் கெடுதியின் இருப்பிற்குமிடையில் எழும் முரண்பாடானது மெய்யியலில் பிரச்சினைக்குரியதாக அமைவதனால் அப் பிரச்சினையினை இனங்காட்டுவதுடன் அது தொடர்பான முக்கிய அம்சங்களை இக் கட்டுரை ஆராய முற்படுகின்றது.*


கெடுதி பற்றிய பிரச்சினையானது மெய்யியலில் குறிப்பாகச் சமய மெய்யியலில், ஒழுக்க மெய்யியலில் குறிப்பிடத்தக்கதொன்றாக விளங்குகின்றது. இந்திய மெய்யியலிலும் கெடுதி பற்றிய கருத்தானது முதன்மைக் குரியதொன்றாக விளக்கப்பட்டிருத்தல் காணலாம். ஒரு செயலின் விழுமியம் பற்றியதாகக் கெடுதி என்பது எடுத்தாளப்படலாம். இதனை வரைவிலக் கணப்படுத்த முற்படுகையில் சில இடர்ப்பாடு எழுவது நோக்குதற்குரியதாகும். பொதுவில் நன்மை, கெடுதி பற்றிய வரைவிலக்கணமானது அறிஞர்களிடையே பெரிதும் விரிவுபட்ட விளக்கத்தினை அளிப்பதாக அமைந்துள்ளது. உதாரணமாக நல்ல பையன், நல்ல மாடு, நல்ல கத்தி, நல்ல வீடு, நல்ல உணவு, நல்ல வீரன், நல்ல எண்ணம் எனும் போது ஒவ்வொன்றிலும் "நல்ல" எனும் பதம் வெவ்வேறுபட்ட பொருளைச் சுட்டுவதாகவுள்ளது. நாம் தீர்மானிக்கும் தன்மையில் அதன் பெறுமதி அமைவதாகின்றது. பரந்த அளவான வரைவிலக்கணமானது இதன் வேறுபாடுகளை இணைத்து விளங்கிக் கொள்ள வழிவகுக்கும். அவ்விதமான ஒரு வரைவிலக்கணம் நவல்லி (Naville) என்பவரால் எடுத்தாளப்பட்டது. நன்மை என்பதெனில் என்ன கட்டாயம் இருக்கப்படவேண்டியது என்பதாகும் எனவும் கெடுதி என்பதெனில் என்ன கட்டாயம் இருக்கப்படக் கூடாதது என்பதாகும் எனவும் விளக்கினார்.[1] இந்த வரைவிலக்கணத்திற்கும் இருவித எதிர்ப்புக்கள் எழலாம். ஒன்று கட்டாயமாக என்பது ஒழுக்கப் பார்வைக்குப் புறம்பாகச் சிந்திக்க முடியாத வகையில் வலிதான அமைப்பில்லை. மேலும் மொழியின் இறுக்க நிலையில் ஒரு பேனா போன்ற கருவி ஒரு வகைக் குணமுடையதாகக் கட்டாயம் இருக்கப்பட வேண்டியது என எண்ணுவது அபத்தமானது. இரண்டாவதாக கட்டாயமாக இருக்க வேண்டுமென்பது எது சரியானது என்பதனை விபரிக்கும் சொல் போல இருக்கின்றது. சரியும் (right) நல்லதும் (good) இங்கு பெரிதும் ஒத்த சொல் போல விளங்கினும் அதன் உள்ளடக்கமானது வேறுபாடானதாகும்.[2] சரி என்பது விதிகளுக்கு அமைவது. நல்லது என்பது ஏதோ ஒரு குறிக்கோளுக்கு ஏற்ப பெறுமதியானதாகும். எனவே அது விரும்பத்தக்கதாகும் எனலாம்.

ஒரு செயலை நல்ல செயல், நன்மை தரும் செயல் என ஏற்று அதை அடைவதற்கு எடுக்கும் முயற்சிகள் எப்போதும் ஒரேவகையி னதாக அமைவதில்லை. ஒரு செயலை நல்ல செயல், நன்மை தரும் செயல் என ஏற்றுக் கொள்வதிலும் தனியாளிடையே வேறுபாடெழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது சாத்தியமாகும். இவ் வேறுபாடு கொண்ட கருத்தமைவுகளில் எது பயன்தரவல்லது, எது சரியான முறைமைக் குரியது, எது பொது நிலையில் ஏற்புடையது எனும் வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் ஒழுக்கவியல் சிந்தனையாளர்கள் பலர் ஆராய்ந்துள்ளனர். இவ்வாறாக எழுந்த கோட்பாடுகளில் குறிப்பிடத்தக்கனவாகப் பயன் பாட்டுவதாக் கோட்பாடு (Utilitarianism), இயற்கைவாதக் கோட்பாடு (Naturalism), இன்பவாதக் கோட்பாடு (Hedonism), நோக்கமிலாக் கொள்கை (Dentological Theory), உள்ளுணர்வு வாதக் கோட்பாடு (Intuitionism), கட்டுறுதி வாதக்கோட் பாடு (Prescriptivism), விவரணவாதக் கோட்பாடு (Descriptivism), நோக்கு நிலைக்கோட்பாடு (Purposivism), உணர்ச்சிவாதக் கோட்பாடு (Emotivism) எனப் பல அமைந்தன[3] இக் கோட்பாடுகள் நுட்பமான கருத்தாக்கங்களினால் ஒரு செயலின் தராதர நிலையினை எடுத்தாளுவதாக அமைந்தன வெனலாம்.

பொதுவில் நன்மை என்பது ஓர் எல்லை வரை பெறுமதியானது. அதனால் அது விரும்பத்தக்கது. அந்த எண்ணத்தின் ஆற்றலினை விபரிக்கிறது. நன்மையானது கவரத்தக்க சக்தியை வற்புறுத்துகின்றது. இந்த வகையில் சொல்லப்போனால் நன்மையானது விரும்பத்தக்கது எனவும் கெடுதியானது விரும்பத்தக்கதன்று எனவும் சிட்ஜ்விக் கொள்வது காணலாம்.[4] எனினும் இந்த வகையில் கூறும்போதும் இன்பவாதிகளின் கருத்தோட்ட நிலையில் செல்லவில்லை என்பது கவனத்திற்குரியது. விரும்பத்தக்கது இன்பம் மட்டுமே எனும் கருத்தினைக் கொள்வதுதான் பிழையான அல்லது தவறான உளவியலாகும். நன்மை விரும்பத்தக்கது கெடுதி விரும்பத்த காதது என்பது பொதுவுலக நோக்கில் வரைவிலக்கண ரீதியாக ஏற்கத்தக்கதாகும்.

கெடுதியை இருவகையில் பிரித்து நோக்கலாம். ஒன்று மனிதர்களுக்கு வந்தமைவது அதாவது துன்பம், இடர், வேதனையை அளிப்பது. மறுபுறம் மனிதர்கள் ஆற்றும் கெடுதியாகும். இந்த இரு வகையும் பல வகையில் உளரீதியான தொடர்புடையது. இருந்தபோதிலும் இதுவொரு போதுமான வேறுபாடாகும். இவற்றிற்கெனத் தனித்தனிப் பெயரளிப்பது இலகுவானதன்று. எனினும் பெய பெயரின் (Fairbairn) இதனைப் பௌதீகக் கெடுதி (Physical evil), ஒழுக்கக் கெடுதி ஒழுக்கக்கெடுதி (Moral evil) எனச் சுட்டுகிறார்.[5] றிக் றொட் (Rick Rood) கெடுதியை ஒழுக்கக்கெடுதி (Moral evil), இயற்கைக் கெடுதி (Natural evil) எனப் பகுப்பது காணலாம்.[6] பௌதீகம் என்பதன் வழி எது ஒன்று வழமையாகவுள்ளது அல்லது இயற்கையாக உள்ளது எனக் கொள்ளலாம். பௌதீகக் கெடுதி எனும் வேளை வழமைக்கு மாறாக எல்லா வேதனைகளையும் எதிர் கொள்ளல் எனும் வகையில் பொருள்படும். இயற்கையின் அழிப்புச் சக்திகள், நோய்கள், புயற்காற்று, பூமி அதிர்ச்சி, மண்சரிவு போன்றன இந்நிலைக்குரியன. ஒழுக்கக் கெடுதியானது மனித செயற்பாட்டிற்கு உரியதாகின்றது. இது வேறுபட்ட காலங்களில் வேறுபட்ட கருத்துக்கள் வழி அமைவுற்றமை காணலாம். எது நன்மை? எது கெடுதி? என்பது பற்றிப் பிரபஞ்ச ரீதியாக மக்களிடையே பொதுமையான கருத்து ஏற்பட டதில்லை. இதுவே பல்வேறுபட்ட கருத்துக்கள் வேறுபட்ட முறைகளில் வழங்கப்பட்டமைக்குக் காரணமாயிற்று. இங்கு ஒழுக்கச் சிந்தனை களை ஆராய்வதன் வழியே எச் செயல் நன்மையானது, கெடுதியானது என எண்ண முயற்சிக்கலாம் எனலாம்.

எல்லாச் சமயங்களும் உலகிலுள்ள மெய்யியல் சிந்தனையாளர்களும் நன்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுதி பற்றிய பிரச்சினைகளுக்கு தகுந்த விடைதேடும் பணியில் முயன்றனர். துன்பங்கள், வேதனைகள், குற்றங்கள், போன்ற இன்னோரன்ன கெடுதிகள் இருப்பதற்கான காரணத்தையும் அதனை விலக்குவதற்கான வழிமுறைகளையும் தேடமுனைந்தனர். இவ்வாறான முயற்சிகளும் விளக்கங்களும் மூன்று வகைகளில் எடுத்தாளப்படலாம். முதலாவதாக எல்லாம் நன்மைக்கே எனும் போக்குடைய நம்பிக்கையாளர் (Opimistic thinkers), இரண்டாவதாக கெடுதியே நடக்குமென எதிர்பார்க்கும் நம்பிக்கையீனர் (Pessimistic thinkers) மூன்றாவதாக ஒன்றே என்ற கொள்கையுடைய ஒருமையாளர் (Monistic thinkers) எனலாம்[7]. பழங்கால நம்பிக்கையாளர் வரிசையில் ஆதிகால பார்சிய, ஈரானிய மூலநூல்களில் அதாவது சென்டாவஸ்த (Zendavesta) வில் இருமைசார்ந்த நன்மை, கெடுதியினை இயற்கையில் உள்ள முரண்பட்ட இரண்டு பொருட்களாக விளக்கப்பட்டது. பழைய சிரோஸ்ட்ரிகன் (பார்சியமதம்) மதத்தில் பெரிதும் நாடகப்பாங்கான உதாரண முகத்தால் விளக்கிய வகையில் இவ் இருமைவாதம் காணப்படுகின்றது. இப்பிரபஞ்சத்தில் எல்லா நன்மைக்குரிய படைப்பாளராக, நற்தெய்வமாக அஹுறாமஹ்டா (AhurnMazda)[8] எடுத்தாளப்படுகிறார். இப்பிரபஞ்சத்தில் எல்லா கெடுதிக்குரிய படைப்பாளராக, கெட்ட தெய்வமாக அகிறிமன் (Ahriman) சுட்டப்படுகின்றார்[9] இவர்களுக்கிடையிலான போராட்டம் தொடர்கதையாக அமைந்தது. பார்சியர்களின் நன்மை, தீமையை உருவாக்குவர்களாக இரு படைப்பாளர் பற்றிய கருத்தானது யூதர்களின் முன்னோராலும் ஏற்கப்பட்டது. பார்சியரால் குறிப்பிடப்பட்ட அர்யனா வாயோ பழைய ஏற்பாட்டில் ஏடன் தோட்டமாக மாறிற்று. சாத்தான் (Satan) அகிறிமனின் கெடுதியான குணநிலைக்குரியவனாக ஏற்கப்பட்டான். இவ்வாறான கருத்தேற்பானது கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், யூதர்கள் ஆகியோரிடம் அமைந்தமை காணலாம். நல்லவரான கடவுளால் ஏன் கெடுதியை அழிக்கமுடியவில்லை என்பதற்கு திருப்தியான பதிலைக் கொடுக்க முடியவில்லை. கிபூறு தீர்க்கதரிசிகள் சிலர் கடவுள் நன்மையின் படைப்பாளர் போல கெடுதியின் படைப்பாளராகவும் விளங்குவதாக நம்பினர். 'நான் ஒளியையும் இருளையும் உருவாக்கினேன் என்றும் நான் அமைதியும் கெடுதியையும் படைத்தேன்' எனச் சுட்டும் வாக்குகளை உதாரணமாகக் காணலாம்[10]. இக் கருத்தானது 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த கல்வினிஸ்டாலும் (Calvinists) ஏற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மனித துன்பங்களின் காரணமாக இறைவன் நீதியற்ற, இரக்கமற்றவரோ என்ற முனைப்பானது நம்பிக்கையீனக் கருத்தாளர்களிடம் எழுந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மத்தியகாலத்தில் வாழ்ந்த ஜினேஸ்டிக் (Gnostics) உலகானது நல்ல கடவுளாலன்றி பிசாசினால் படைக்கப்பட்டது எனக் கருதினர். எனினும் இரக்கக் கடவுளால் படிப்படியாக இந் நிலை மாற்றமடைந்ததெனக் கொள்ளப்பட்டது. இக்கருத்துக்களும் கெடுதி பற்றிய பிரச்சினைக்கு விடையளித்ததாகக் கொள்ள முடியாது. சில நம்பிக்கையாளர் கெடுதியின் இருப்பினை நிராகரிப்பதோடு எல்லாமே நன்மையானதே தவிர கெடுதியில்லை எனக் கருதுவர். மேலும் நன்மையென்பது சாத்தியமான உண்மையென்றும் கெடுதி என்பது நன்மையின் மறுப்பு மாத்திரமே என்பர். இது ஒரு தீவிர நிலைக்குரியதெனலாம். நம்பிக்கையீனர் இதற்கு மாறான பிறிதொரு தீவிரப் போக்கினை எடுத்தாள்வர். அவர்கள் கெடுதியானது சாத்தியமான உண்மையென்றும் நன்மை என்பது கெடுதியின் மறுப்பு மாத்திரமே என்பர். எனினும் இரண்டு விளக்கங்களும் திருப்தியளிப்பதாயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவையியலையும் தர்க்க முறைகளை யும் இணைத்து கெடுதி பற்றி பிற்காலத்தில் சிந்திக்கத் தலைப்பட்டனர். விஞ்ஞான ஆராய்ச்சிகளும் ஆய்வுகளும் இயற்கையின் ஒன்றாம் தன்மையை புலப்படுத்த முனைந்தன. இந்தியாவில் இயற்கையின் ஒற்றுமைத் தன்மை ஒருமையாளர்களால், குறிப்பாக வேதாந்தி களால், பெரிதும் விளங்கப்படுத்தப்பட்டன. குறிப்பிட்ட ஒருவரால் அல்லது குறிப்பிட்ட நேரத்தில் இவ்வுலகு உருவாக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டனர். அவர்கள் உலகுக்கு 'தோன்றுகிறது' எனும் பதத்தையே பயன் படுத்தினர். ஒருமை வாதத்தைப் போதிக்கும் வேதாந்தத்தின்படி தோற்றப்பாடானது உலகம். அதனுடைய கெடுதிகள் அனைத்தும் மாயை அல்லது பொய்த்தோற்றம் எனவாகின்றது. இந்தக் கொள்கையின் ஒரு வகைச் சாயலை சமகாலத்து மேலைத்தேய கிறிஸ்தவ விஞ்ஞா னத்திலும் நிழலாடக் காண்கிறோம். இது கெடுதி இருப்பதாகவும் ஆனால் ஒரு பொய்த்தோற்றம் எனவும் அது உண்மையான அடிப்படையினைக் கொண்டிருக்கவில்லை எனவும் நிறுவுகிறது. கெடுதி ஒரு பொய்யான நம்பிக்கை என்று மேரி பேக்கர்எடி சுட்டுதல் காணலாம்[11]. வேதாந்த மெய்யியலாளர்களைப் பொறுத்தவரை நன்மை, கெடுதி என்பன ஒரு சார்புப் பதங்களேயாகும். ஒன்றின்றி மற்றது இருக்கமாட்டாது. நன்மையானது கெடுதியின் இருப்பில் தங்கியுள்ளது எனவும் கெடுதியானது நன்மையின் இருப்பில் தங்கியுள்ளது எனவும் விளக்கினர். ஒன்றில் ஒன்று தங்கியுள்ள வகையில் அவை பிரிக்கப்படமுடியாதவை என்பர். அன்றிப் பிரிக்க முனைவது அவற்றிடையேயுள்ள சார்பு, ஒன்றிலொன்று தங்கியுள்ள இயல்பை அழிப்பது மாத்திரமன்றி அப் பதங்களையே அழிப்பதாகிவிடும் வாய்ப்புள்ளது என்பர்[12]. வேதாந்த மெய்யி யலாளர்கள் நன்மை, கெடுதிக்கு இடையிலான வேறுபாடானது ஓரளவிலேயே, அதாவது ஒளிக்கும் இருளுக்கும் இடையிலான வேறுபாடு போலவே தங்கியுள்ளது என்பர். மேலும் ஒரேவிடயம் ஒரு சந்தர்ப்பத்தில் நன்மையாகவும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் கெடுதியாகவும் அமையவல்லது. தீ ஆனது வாழ்க்கைக்கு நன்மையானதாகவும் அதே வேளை பிறிதொரு சந்தர்ப்பத்தில் கெடுதியானதாகவும் அமையவல்லது. எனவே செயலின் விளைவைக் கொண்டே நன்மை, கெடுதி என்பது அழைக்கப்படலாம். மறுவார்த்தையில் கூறின் நன்மை, கெடுதி என்பன எமது மனதிலேயே தங்கியுள்ளதெனக் கூறலாம். இந்த உலகத்தின் இருமைத்தன்மையான நன்மையும் கெடுதியும் உண்மையானவையல்ல என்றும் இவை சொற்களில் பேசப்படுபவை எனவும் அவை மனதில் மாத்திரம் இருப்பவை எனவும் பாகவதம் சுட்டுவது இங்கு காணலாம்.[13] எமது விருப்பை நிறைவேற்றும் வேளை நன்மையானதாகவும் துன்பம், வேதனையை அளிக்கும் போது கெடுதியாகவும் அழைக்கப்படலாம். ஒரே செயல் வேறுபட்ட நிலைகளில் நன்மையாகவும் கெடுதியாகவும் அமையலாம் என்பதனை ஆழ்ந்து நோக்கின் புலப்படவல்லதாகும். நிலையான சக்தியை அல்லது தெய்வீக வாழ்வை உணர்ந்தால் நன்மை, கெடுதி என்பன எமது மனதை, வாழ்வைச் சார்ந்தனவே என்பதனை அறியலாம். இந்திய ஞானி களின்படி கடவுள் நன்மை, கெடுதியை உருவாக் கவோ அல்லது ஒருவரிடமிருந்து பாவத்தையோ, நல்லொழுக்கத்தையோ எடுப்பதில்லை. அவர் குற்றவாளிகளைத் தண்டிப்பதோ அல்லது நல்லவர்களுக்கு வெகுமதியோ அளிப்பதில்லை. அறியாமையின் காரணமாகவும் தெளிவற்ற புரிந்துணர் வினாலும் தான் கடவுள் நன்மை, கெடுதியைப் புடைப்பதாகக் கற்பனை செய்து விடுவதாகக் கருதுகிறோம் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுதி பற்றிய பிரச்சனையைப் பேசுவது சகஜமானது என்பதுடன் அப்பெயரின் கீழ் வெவ்வேறாகக் கூடிய பல பிரச்சினைகளின் கூட்டமொன்று தொகுக்கப்பட்டுள்ளதென்பதை அறிந்திருப்பின் அப்படிப் பேசுவதில் தவறொன் றுமில்லை. ஏனெனில் கெடுதி பல தரப்பட்டவை என்பதுடன் பல விதமான வினாக்களையும் எழுப்புகின்றன. கெடுதி பற்றிய பிரச்சினை யானது கெடுதி பற்றிய உண்மைத்துவம் ஒரு புறமாகவும் கடவுளின் சக்தி அல்லது அவரின் நன்மையின் பேறுள்ள இறையியல் நம்பிக்கைகள் அல்லது முடிநிலை மறுபுறமாகவும் அவற்றிற்கிடையிலான முரண்பாடுகள் அல்லது பிரத்தியட்சமான முரண்பாடுகள் பற்றி அக்கறையுடையதாகவும் உள்ளது. இறையியல் கருத்துக் கொண்டிருப்போருக்கே கெடுதி எனும் பிரச்சினை மிகுந்த கூர்மையானதாகவும் கடின மானதாகவும் இருக்கின்றதென்பது குறிப்பிடத் தக்கது. கிறிஸ்தவம், யூதம், இந்துமதம், இஸ்லாம் போன்றன கடவுள் பற்றிய கொள்கையில் ஒருமைவாத இறையியலைக் கொண்டுள்ளது. கடவுள் எல்லாம் வல்லவர். எல்லாம் அறிந்தவர், எங்கும் அன்புமயமானவர். முழுமையும் ஆற்றலும் பிரபஞ்ச உற்பத்தியாள னாகவும் விளங்குகிறார். இக்கருத்துக்களின் அடிப்படையில் கெடுதி பற்றிய கருத்தானது இந்நம்பிக்கைக்கு ஒரு வகையில் இருதலைக் கோளாக நிறுவப்படலாம். கடவுளானவர் எல்லா ஆற்றலுமுடையவராக இருக்க வேண்டும். அவர் எல்லாம் நல்லவராயின் அவர் கெடுதியினைத் தடுக்க வேண்டும். ஆனால் கெடுதியானது நிலைத்து இருக்கின்றது. எனவே கடவுள் ஆற்றல் நிறைந்தவர் அல்லாது இருக்க வேண்டும் அல்லது மிகவும் நல்லவராக அல்லாது இருக்க வேண்டும் எனக் கொள்ளப்பட வேண்டியதாகும் எனும் நிலைக்கு இட்டுச் செல்கின்றது.

கெடுதியானது நன்மைக்கு முழுமை யான எதிரானதாகும். கடவுளும் நல்லவராவார். அவரே தலைமையானதும் நன்மைக்குத் தூய மூலமுமாவார். அதேவேளை கெடுதியின் ஆக்கியவராகவோ அல்லது அதிகாரியாகவோ அவர் இருப்பது சாத்தியமல்ல அவர்மேல் கெடுதியின் நிழல்கூட வராது ஆனால் இந்தவிடத்து கடவுளுக்கும் கடவுட் தன்மைக்கும் எதிராக எவ்வாறு மற்றவை நிகழும் எனும் வினா எழுகின்றது. நன்மை யானது நன்மையின் ஆற்றலுக்குக் கீழ்ப்பட்டது. அவ்விதம் அல்லாது போனால் அது முழுமையான நன்மையுமாகாது. எனவே கடவுள் தான் முழுமையான நன்மையான வராவார். அவரது கடவுட் தன்மையானது முழுமையான ஆற்றல் வாய்ந்ததாயின் அவர் சர்வ வல்லமையுள்ள நன்மையானவர் ஆவர். மறு புறத்தில் கடவுள் உண்மையான கடவு ளாயின் கெடுதியின் உண்மைத்துவமானது கடவுளுடன் காரணமாகாது. கெடுதிக்கு எது ஆதாரமாக இருக்கின்றதோ அதற்கு அவர் ஆதாரமாக இருக்க வேண்டும். கடவுளின் கருத்தில் கெடுதி கெடுதியானது. ஆனால் கெடுதியின் கருத்தில் கடவுள் எவ்விதம் கடவுளாவார் என்பது எழுப்பப்படுகின்றது கடவுள் பற்றிய நியாயப்படுத்தலானது கெடுதி பற்றிய கேள்வியினை உண்மையில் தொடுவதா கவுமில்லை எனலாம்.

தீமைக்கோட்பாடானது உண்மைத் துவத்துக்கு உள்ள எல்லாக் கருத்துக்களையும் மறுக்குமுகமாக தீங்கினையும் (Badness) மறைத்துள்ளது. ஆனால் அது மூடத்தனமும் பொருளற்றதுமானால் அது கேள்விக்குரியது மன்று. உலகானது குருட்டுச் சுபாவவிருப்பின் விளைவாகும் எனத் தீர்மானித்த சோப்பன்ஹர் (Schopenhauer) தீமைக் கோட்பாட்டினை பிரதிநிதிப்படுத்தியவர்களில் முக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராவர். பகுத்தறிவுக் கோட்பாடு (Rationalism) அனைத்துமிறையெனும் வாதம் ஆகியன பிரபஞ்ச நன்மையில் நம்பிக்கையுள்ள வகையில் இந்தப் பிரச்சினைத் தீர்வு காண்கின்றன. உதாரணத்திற்கு ஸ்பினோசா (Spinoza) எல்லா எல்லையுள்ள பொருட்களும் ஓர் உயர்வான பொருளின் தர்க்க ரீதியான இன்றியமையாத மாறுதல்கள் எனும் போது எதுவும் கெட்டதில்லை என இனங்கண்டார். ஸ்பினோசாவின் கருத்துக்கு சக்தி வாய்ந்த விளக்கத்தினைக் ஹெகல்(Hegal) அளித்தார்.

கடவுளின் சிறப்பு நிலையும் அதே விகிதாசாரத்தில் கெடுதியின் நிலைபேறும் மேலும் மேலும் கிரகிக்க முடியாத நிலையுடையதாகிறது. கடவுளென்று ஒன்று இருந்தால் மட்டும் அத்துடன் கடவுள் ஓர் அர்த்தத்தில் பிரபஞ்சத்துக்கு வெளியேயும் அதைவிட உயர்வாகவும் அதற்குப் பொறுப்பாகவும் இருந்தால் மட்டும் அதற்கு எதிரான முறைப்பாடேதும் ஏற்றுக்கொள்ளப் படலாம். நாங்கள் காண்பதான விடயப் பொருட்களின் முறைக்கு எதிராக அதற்குப் பொறுப்பான அதை மற்றப்படிக்கு இருக்க வேண்டியவாறல்லாது ஆக்கியவராக அல்லது ஆக்கியிருக்க வேண்டியவராக நாங்கள் சரியாகவோ அல்லது பிழையாகவோ கருதுகின்ற ஆளொருவரும் இல்லாதவிடத்து இழிந்து விமர்சிப்பது கருத்தற்றதாகும் எனக் கருதினர். இதில் எவருக்குக் கெடுதி பற்றிய பிரச்சினை தெளிவாக இருக்கின்றதோ அவருக்குத் துல்லியமான உய்த்துணர்வுண்டு. அந்தோ அவரை எங்கு காணலாம் எனது முயற்சியை அவர் முன் வைப்பேன். அத்துடன் அவர் எனக்குத்தரும் மறுமொழியை அறிவேன். அத்துடன் அவர் எனக்குச் சொல்பவற்றை நன்கு விளங்கிக்கொள்வேன். இந்த வகையில் கெடுதி பற்றிய எல்லாப் பிரச்சினைகளும் ஒன்றாகச் சேர்கின்றதெனலாம். தியோடிசி கொள்கைக்கு இணங்க எல்லா ஆற்றல் நிறைந்த கடவுளின் மட்டற்ற நன்மைத் தன்மையை கெடுதியின் உண்மைத்துவத்துடன் இணைக்க முயற்சி அமைந்தது. தியோடிசி (கடவுள் நீதி) இலக்கியத்தில் கெடுதியின் வகைகள் பின்வருமாறு வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது.

1. மனித உயிரிகளால் தீங்கானது தோற்றுவிக்கப்பட்டது. அது ஒழுக்கத் தீங்கு அல்லது பாவமாகும்.
2. வருத்தம் பற்றிய உடலியல் உணர்வும் துன்பத்தின் மனவேதனையும் பாவத்தின் காரணமாக அமையலாம்.
3. இயற்கைத்தீங்கு நோய்கள் புயற்காற்று பூமி அதிர்ச்சி, நிலச்சரிவு அது போன்றன.
4. தற்செயலாக ஏற்படும் சம்பவங்கள் மேலும் உருவாக்கப்பட்ட பொருட்களின் பூரணத்துவமின்மை இவற்றிற் சில பௌதிக அதீத கெடுதி என அழைக்கப்படுகின்றது.

எல்லையற்றதான ஆற்றலுள்ளதும் நல்ல கடவுளும் தனது பிரபஞ்சத்தில் ஏன் ஒழுக்கக் கெடுதிகளை அனுமதிக்கின்றார்? எல்லையற்றதான ஆற்றல் உள்ளதும் நல்ல கடவுளும் தனது பிரபஞ்சத்தில் ஏன் நோ, வேதனை ஆகியவற்றினை அனுமதிக்கின்றார் என்ற கேள்விகள் முதலிரு வகையில் அமையும் கெடுதி பற்றி ஆய்வுக்கு அமையும் தூண்டுதலாக எடுத்தாளலாம்.

கெடுதி பற்றிய பிரச்சினையானது ஒகஸ்டினது வாழ்க்கை முழுவதுமே முயன்ற ஒன்றாகும். அவரால் நிறுவப்பட்ட முக்கியமான கருத்தானது பின் பெரும்பாலான கிறிஸ்தவ சிந்தனையாளர்களால் தொடரப்பட்டது. கிறிஸ்தவத்திற்கு மாற்றமடைவதற்காக ஒகஸ்டீன் மக்னிசிசும்ஆல் கவரப்பட்டிருந்தார். சமகால நிறுவனங்களில் ஓர் ஆற்றல் வாய்ந்ததும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழைத்தேயத்தும் அடிநிலையையும் இது கொண்டிருந்தது. இது முடிவான நன்மை கெடுதி எனும் இருமைவாதத்தினை ஒளி அல்லது ஆன்மா இருள்நிலை எனும் வடிவத்தில் ஏற்று ஒப்புக்கொண்டது. இந்தக் கொள்கையினின்றும் கிறிஸ்தவத்தினை நோக்குகையில் ஒகஸ்டீன் ஒரு நல்ல கடவுளே முழு இறுதியான உண்மைப் பொருள் எனும் நம்பிக்கைக்குச் சாதகமான இறுதியான இருமை வாதத்தினை நிராகரித்தார். மேலும் சடஉலகு படைப்பாளனின் நன்மைத்துவத்தினைப் பிரதிபலிக்கின்றதெனும் வகையில் சடஉலக ஏற்புக்குச் சாதகமாக மக்னீசிசுத்தின் சடத்தினை இழிவாகப் பேசுவதனை நிராகரித்தார் ஆனால் முழுதான முடிவான ஆற்றலானது சந்தேகத்திற்கு இடமின்றி நல்லதெனின் கெடுதி என்றால் என்ன? மேலும் அது எங்கிருந்து வருகின்றது? இந்த வினாவிற்கு விடை அளிக்கையில் ஒகஸ்டைன் ஒன்றை ஒன்று தழுவிநிற்கும் ஒரு வகையினதான கருத்துக்களை முன்னேற்றி கெடுதி பற்றிய தனிப்பட்டதும் அழகியற் கருத்துக்களினை முன்வைத்தார்.

கெடுதியானது துன்பம் வேதனை வறுமை என்பனவாகும். கெடுதியானது ஒகஸ்ரின் கருத்தில் சுதந்திரமாகத் தனித்து நிற்பதில்லை. அது எப்போதும் நன்மையிலேயே ஒட்டி நிற்கின்றது. ஆனால் உண்மையாக நிலைத்து நிற்பதில் கெடுதியான தன்மையாக இருக்கும். இவ்வாறு கடவுள் தோற்றுவித்த எல்லாம் நன்மையானது. கேடின் தோற்றப்பாடு உள்ளார்ந்த நன்மையான உயிரி ஊழலானதும் கெட்டதுமாக வரும்போதே கெடுதி ஏற்படுகிறது. ஒகஸ்ரின் உயிரியை அவர் நன்மையுடன் சமாதானப்படுத்தி நோக்குகையில் அதே சிந்தனையை வெளியிடுகிறார். கடவுள் உள்ளார்ந்த சிறந்த நன்றான உண்மையான உயிரியாகும். ஆகவே அதி உயர் நன்மையாகும். அதாவது அவர் கொண்டு வந்திருக்கிறார் எனும் காரணத்தினால் அவர் கெடுதி எனக் கூறும் தன்மையானது முழுமையாக இருத்தல் முடியாது ஆகும். ஏனெனில் இயற்கையிலேயே ஒரு பொருள் இவ்வாறு கெடுதியுறும் எனில் அது ஒழிந்து போகிறது. அதில் ஒட்டுண்ணியான கெடுதியுறும். அத்துடன் இல்லாது ஒழிதல் வேண்டும். ஆகவே முழுமையான கேட்டினைக் கொண்ட உயிரி இருக்க முடியாது எனவாகிறது.

கெடுதியானது பாவம், பாவத்தின் தண்டனை என இரு வகையினதாகக் கூறலாம். மேலும் இதனை நாம் செய்யும் கெடுதி எம்மைப் பிணிக்கும் நோ, வருத்தம் எனவும் இரண்டாகக் கணிக்கலாம். ஒகஸ்ரீனின் அழகியற் கருத்துக்கள் பிளோரினஸ் என்பார் கருத்தினின்று செயற்பட்டன எனலாம். இந்த கருத்துக்கு இணங்க கெடுதியாக தோன்றுவது எல்லாம் நல்லது எனப்பட்டது. கடவுள் என்ற கருத்திலிருந்து பார்க்கும் போது பிரபஞ்சமானது நல்லதாகும். எல்லாப்படைப்பிலும் கூட கெடுதி என அங்கொன்றில்லை எனக் கொண்டார். பழைய அழகியற் கருத்தினின்றும் (அது நிறைவுக் கொள்கை என அழைக்கப்பட்டது) பெறப்பட்டது. ஒகஸ்ரின் சிலவேளைகளில் கெடுதி பற்றிய எண்ணத்தினை நன்மையை அதிகம் பிரகாசிக்கும் எனும் வகையில் உபயோகிக்கின்றார்.

அன்சலம்(Ansalam) பாவமானது தண்டனையால் சமப்படுத்தப்படுகையில் ஒழுக்க ஒழுங்குக்குக் கெடுதியில்லை எனக் கருதுகின்றார். பாவம் செய்யாதவர்கள் மகிழ்ச்சியுடையவர்களாயின் பிரபஞ்சமானது பூரணத்துவமானது. ஆன்மா எதனைத் தேர்ந்தெடுத்தாலும் பிரபஞ்சம் அழகானதும் ஒழுங்கானதும் ஆகும். அதனை உருவாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதும் ஆள்பவரும் கடவுள் ஆவார். 13ம் நூற்றாண்டில் தோமஸ் அக்குவானஸ் (Thomas Aquinas) ஆல் ஒகஸ்ரின் உடைய பிரதான கருத்துக்களானது மீண்டும் தோற்றுவிக்கப் படுதல் காணலாம். 16ம் நூற்றாண்டில் லூதர் (Luther) கல்வின் (Calvin) ஆகிய சீர்திருத்த வாதிகள் பொதுவாக கடவுள் நீதிக் கொள் கையினை வளர்த்திச் செல்ல விரும்பாவிடினும் ஒகஸ்ரின் எல்லாக் கெடுதியும் மனிதனின் குற்றத்தினால் அமைவதென்பதனைப் பின்பற்றினார். லைபினிட்ஸ் (Leibnize - 1710) தனது தியோடிசியில் (Theodices) இந்த உலகே சாத்தியமான எல்லா உலகிலும் பார்க்கச் சிறந்தது என்றும் உண்மையில் இந்த உலகு சிறந்தது என்பது இதில் கெடுதியில்லை என்பதற்காக அல்ல. வேறு சாத்தியமான பிரபஞ்சத்தில் அதிகமான கெடுதி இருக்கும் என்பதனாலேயே என்றார்.

ஒழுக்கக் கெடுதியைப் பொறுத்தவரை ஒகஸ்ரின் கடவுள் மனிதனைப் பாவங்கள் இன்றி படைத்தார் என்றும் ஆனால் மனிதன் விருப்பத்துடன் கடவுளால் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தைத் தவறாகப் பாவித்துப் பாவத்தினுள் விழுந்தான் என்றும் குறிப்பிடுவர். இதில் சிலர் கடவுளின் கருணையால் மீட்கப்பெறுவதாகவும் சிலர் நிலையான தண்டனையைப் பெறுவார்கள் எனவும் சுட்டப்பெறுகின்றது. இந்த மரபு வழியான தியோடிசியானது பலரின் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டது. ஒழுக்கக் கெடுதியின் மூலத்தில் மனிதர்கள் தூயவர்கள் என்றும் விருப்பத்துடன் அவர்கள் பாவத்தில் விழுந்தார்கள் என்பது சுயமுரண்பாடு என்றும் புத்திசாலித்தனமற்றதெனவும் (Friedrich Schleiermacher) பிரட்றிக் செயமக்கர் போன்றோர் குறிப்பிடுவர். மரபுவழியாக தியோடசியின் ஊடாக கடவுள் மனிதனை எப்போதும் ஒழுக்கங்களை தெரிய விட்டமை என்பது தர்க்க ரீதியாக சாத்தியமற்றதொன்றெனச் சமீபகால சுயாதீன மறுப்புக்கள் சுட்ட முயல்கின்றன. மேலும் கடவுள் தன்மையும் கெடுதியின் உண்மைத்துவமும் இருதலைக்கோளாக ஒன்றுக்கொன்று முரண்படுதலும் கவனத்திற் குரியதாகின்றமை என்றும் விமர்சனத்திற்குரிய விடயங்களாகின்றன.

கிரேக்க சிந்தனைகளும் குறிப்பாக பிளேட்டோனிக் சிந்தனைகளும் கெடுதி பற்றிய கருத்துப் பொருள் வளர்ச்சிக்குதவின. ஒரிஜன (Origen) ஒகஸ்டையின் (Ougustine) போன்றோர்களால் மேலும் முன்னேற்றப்பட்ட தெனலாம். பரந்துபட்டதான எந்த மதத்திலும் பாவம் பற்றிய பிரச்சினை கருத்து ஏற்கப்பட்டுள்ளமை காணலாம். எந்த மதமும் பாவம் (கெடுதி) பற்றிய பிரச்சினையை உதாசீனம் செய்யவில்லை. கெடுதியானது பாவம், வருத்தம் எனும் இருவித வடிவத்தில் தோன்றுகின்றது. எந்த ஒரு மதமும் கெடுதியை மறுத்தால் அல்லது அலட்சியம் செய்தால் அது மனிதனுக்கு விடுதலைக்குரிய வழியைக் காட்ட முடியாது போய்விடும். வாழ்க்கையில் பாவம் பற்றிய பிரச்சினையும் இதனின்று எவ்விதம் விடுபடுதல் என்பது அடிக்கடி எழுவதொன்றா கும். எவன் உயர்ந்த அறிவினை அர்ப்பணிப்பு டன் அடைகின்றானோ அவன் நன்மை, கெடுதி என்பவற்றிற்கு அப்பாற்பட்டவனாகின்றான் எனப் பகவத் கீதை சுட்டுதல் காணலாம்.[14] இந்தப் பிரச்சினையே தெளிவாகவும் திறமையாகவும் எது தீர்க்க முனைகின்றதோ அதுவே மனிதனது ஆதரவைப் பெறும் சமயமாகின்றது. இவ்வகையில் இந்திய சமயமானது குறிப்பாகக் கெடுதி பற்றிய பிரச்சினையுடன் தெளிவான கருத்தினைக் கொண்டு விளக்குகின்றது.

மனித இனத்தின் நடைமுறையில் அதன் ஆரம்பத்திலேயே பாவம் பற்றிய பிரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினையானது காணப்படுகின்றது. இருந்த போதிலும் பாவம் என்பது வேறுபட்ட பொழுதுகளில் வேறுபட்ட பகுதிளில் உள்ள வேறுபட்ட மக்களால் வேறுபட்ட பொருள்களில் சுட்டப்பெற்றன. புராணக் கதைகள் சமயங்கள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல்கின்றன. பௌத்தர்கள், இந்துக்கள் பாவமானது அறியாமையின் விளைவென நம்புகின்றனர். இஸ்லாமும் இருவகையில் அறிவினைப் பெறுதலே பாவத்தின் நீக்கத்திற்குரிய வழியெனக் கொள்ளுதல் காணலாம். சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளை விளக்கியமைவதுடன் பாசத்தின் கூறுகளான ஆணவம் இக் கெடுதிக்கு நிலைகளனாக அமைகின்றதென எடுத்துரைப்பது காணலாம். எனினும் தூய்மைக்குரிய ஆன்மா இயல்பில் தூயதாக இருப்பினும் கெடுதியினைத் தன்னியல்பில் கொண்டுள்ளதென எண்ணுவது தவறுக்குரிய தென்பதனை எடுத்தாளும்.[15] ஆனால் கிறிஸ்தவர்கள் மறுபுறத்தில் பாவத்தின் நீக்கத்தினை எந்த அளவு அறிவோ அல்லது மனித முயற்சியோ உருவாக்க முடியாதென நம்புகின்றனர். இது ஆழமானதொன்று என்றும் கடவுளின் கருணை ஊடாக மாத்திரம் மீட்சி அளிக்கவல்லதெனக் கருதுகின்றனர். மானிட வியலாளர்கள் எல்லா சமூகவிரோதச் செயல்கள் அனைத்தும் பாவம் எனக் கருதுவர்.

பௌத்த மதம் துக்கம், துன்பம், பிணி, பாவம், நோ, வருத்தம், கெடுதி போன்றவற்றினை விலக்குவதனையே அடிநிலையாகக் கொண்டு அமைந்துள்ளது. வாழ்வென்பதே கெடுதியாகப் புத்தருக்கு தென்பட்டது. துன்பத்திலிருந்து மீள்வது என்பது வாழ்விலிருந்து மீள்வதை யொக்கும். கடவுள் என்பது பௌத்தத்தில் இல்லையானாலும் கர்ம விதியே தீமைக்கும் தீமைச் செயலிழப்பிற்கும் காரணமாகின்றது.

பௌத்தம் துக்கம், துக்ககாரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் எனும் நான்கு மார்க்கங்களை தலையாய தன்மையாகக் கொண்டமைகின்றது. இந்தப் பாவ பந்தத்தினின்று விடுதலை அடைதலே வாழ்வின் நோக்காகவும் அதுவே நிர்வாண நிலையது எனவும் குறிப்பிடுகின்றது. பாவமானது நாம் ஆற்றுகின்றமைக்கேற்ப அதனை அனுபவிக்க வேண்டிய அத்தியாவசிய நிலையாகும் எனப் போதிக்கின்றது. இதன் வழி எம் கன்மங்கள் பாவச் சக்கரமாய் தொடர்ந்து பல பிறவிகளுக்கு வித்திடுகின்றதெனவும் பாவம் நீங்க பற்றறுக்க வேண்டியதும் பிறவி நீக்க வேண்டியதும் அவசியமாகின்றது.

**"நல்லறம் செய்வோர் நல்லுலகனாவதும்**
**அல்லறம் செய்வோர் அருநரகடைதலும்"**[16]

என செயலுக்கேற்ற பயனை தெளிவுறுத்து கின்றது. இந்த வகையில் பிறவி என்பதே துன்பமென்றும் அதனை நீக்கலே பாவ நீக்க வழி எனக் காட்டுகின்றது.

**"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்**
**பிறவார் உறுவது பெரும்பேரின்பம்"**

என எடுத்துக் காட்டப்படுகின்றது.[17] பிறந்தவர்கள் தமது முன் வினைகளுக்கு அமைய பிறப்பார்கள் என்பது,

**" தீப்பிறப்புழந்தோர் செய்வினைப் பயத்தான்**
**யாப்புடை நற்பிறப்பெய்தினர் போலப்.."**
(20-3-4)

எனவரும் அடிகளூடாக அறியக்கிடக்கின்றது.

பௌத்தர்கள் கெடுதி என்பது பற்றிக் குறிப்பிடுகையில் மணிமேகலை ஆசிரியர்,

'தீவினை என்பது ....
கொலையே களவே காமத்தீ விழைவு
உலையே உடம்பில் தோன்றுவ மூன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில் சொல்லெனச் சொல்லில் தோன்றுவநான்கும் வெங்கல் வெகுளல் பொல்லாக்காட்சி என்ற உள்ளந்த தன்னில் வருபன மூன்றும் எனப் பத்துவகையாய்.... எனப் பத்தினையும் கெடுதியான செயல்கள் என்பதனுள் அடக்கி விடுகிறார். எல்லாப் பாவத்தினின்றும் விடுபடுதல், நன்மை செய்தல், இதயத்தைத் தூயதாக்கலே பௌத்தம் என தம்மபதம் குறிப்பிடுதலின்று பௌத்தத்தின் முதன்மை யான பிரச்சினை பாவம் பற்றிய பிரச்சினையே ஆகும் என்பது தெளிவு.[18] பாவம் பற்றிய கருத்தில் பௌத்தமானது செய்வினையானது செய்தவரை விட்டு அணுகாதென்பதனைக் கொள்கின்றமை,

'அவ்வினை நின்னையும் அகலாது ஆங்குதலும் என்றிவை தெய்வம் கூறலும்'[19]

என கூறுமுகத்தாலும் தெளிவாக்கலாம். அதேவேளை கிறிஸ்தவமானது செய்த பாவமானது கடவுட் கருணையினால் முற்றாகப் பாவ மன்னிப்புக்குரியதாக்கப்படலாம் எனவுரைப்பது இங்கு கவனிக்கத்தக்க தொன்றாகும்.

வேதப் பாடல்களில் பாவம் பற்றிய கருத்தமைப்பானது காணப்படுகின்றன. ரிக் வேதத்தில் அதிதி (aditi) வருணம் மற்றும் தடவுளருக்கு முறைப்பாடு கூறுவதாகவும் உள்ளது. ரிக் வேதத்தில் பாவம் பற்றிக் குறிப்பாக வசிஸ்த (Vasishtha) மண்டலம் 7ல் கூறப்படுதல் காணலாம். அக்கினி பாவத்தினை எரிப்பவர் எனச் சுட்டப் பெறுகின்றது. பாவம் பற்றிய விளக்கம் அதர்வ வேதப் பிரமாணங்களிலும் காணலாம்.[20] உபநிடதத்தில் பாவம் பற்றிய சொல்லானது அருமையாகப் பன்னிரு தடவைகள் காணப்படுகின்றன. சிலவேளை களில் கெடுதியோ அல்லது அதிஸ்டமின்மையோ குறிக்கவில்லை என ஐயுற வைக்கின்றது. ஆனால் சில வேளைகளில் பாவம் பற்றிய கருத்தானது ஐயத்திற்கிடமற்றது. இந்து தத்துவங்களில் மறுபிறப்புக் கொள்கையானது காணப்படுகின்றன. இது பாவ நிலையினைத் தெளிவாக விளக்கும் தரத்ததாகின்றது. மறுபிறப்புக் கருத்தானது பல்வேறுபட்ட வேளைகளில் பல்வேறுபட்டோரிடம் காணப் பட்டது. பௌத்தத்தில் உள்ள கதையில் மகனோடு பயணம் செய்ததாய் இறந்ததும் பெண் நரியான நிலையும் இதனையே உணர்த்துவதாக உள்ளது. ஆனால் கீழைத்தேயம் தான் இக் கருத்துக்கு மூலம் எனக் கூறமுடியாவிடினும் இது மற்றைய கருத்துக் களினின்று வேறுபட்டதாயும் வேறு விதமான தாயும் விளங்குதல் காணலாம். முற்கால பௌத்தத்தில் (1000 – 700 BC) இதன் மூலத் தைக் காணலாம். இந்துமதத்தில் கடோ உபநிடதத்திலும்[21] தெளிவாக இதன் சாயலைக் காணலாம் பிருகதாரணிய சாந்தோக்கிய உபநிடதங்களிலும் காணலாம்.

ஆன்மாக்கள் அறியாமையினால் வினை களினை ஆற்றி அதன்வழி பல்பிறப்புக்களை அடைந்து உழலுகின்றனர். இறைவனது அருளினால் உண்மையை உணர்ந்து அறியாமை நீங்கியவிடத்து பாவம் அவித்தை, அறியாமை யானது விலகுகின்றது. அவ்வேளை ஆன்மாக் கள் இறைவனுடன் இரண்டறக் கலக்கின்றன. அதுவே விடுதலை எனக் குறிப்பிடுவர்.

'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்'

எனும் நிலையில் ஆன்மாக்கள் அறியாமை மயமாய் நிற்கின்றது. அந்நிலையில் அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவினைப் பெற்றால் அவர்கள் பிறந்த பிறப்புக்கும் எங்கள் பெருமானினைக் கண்டு விடும் நிலையினை அடைவார்கள். இதனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே'[22] என மணிவாசகர் சுட்டி நிற்பது நோக்கலாம். இறைவன் மக்களின் இடரான கெடுதி களைந்து உயர்வடையச் செய்வதனை அருளாளர்களின் அனுபவங்களின் வாயிலாகக் காணலாம்.

**"போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்.**
**மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே**
**கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே"**

எனவும்

"**அல்லற் பிறவி அறுப்பானே**" எனவும் சுட்டும் நிலை தெளிவிற்குரியதாகும்.[23]

சாங்கிய மதத்தினை நோக்கின் ஒழுக்கக் கெடுதியானது ரஜஸ் தமஸ் எனும் குணங்களினின்று எழுவதாக அமைகின்றது. இதனை பிற்பட்ட உபநிடதங்களிலும் காணலாம். பிரகிருதியானது மூன்று குணத்தினை உடையது. இவற்றின் கலப்பு வேறுபாட்டால் அவற்றின் நன்மை கெடுதி ஆகியன தீர்க்கப்படுகின்றன. சாங்கிய தத்துவச் சார்புடைய மகாபாரதம் பகவத்கீதையிலும் கெடுதி பற்றிய கருத்தானது காணப்படுகின்றது பகவத் கீதையில் ஏன் மனிதன் தன் விருப்பின்றியே பாவம் செய்யத் தூண்டப்படு கின்றான்? என எழும் வினாவுக்கு கண்ணன் விருப்பு கோபம் எனும் வடிவில் தாங்க முடியாவலுவில் கெடுதியானது மனிதனை ஆளுகின்றதெனப் பதிலிறுக்கின்றார். மேலும் இது ஞானம் அறிவினை அழிக்கின்றது. மற்றும் பொருள் பண்ட ஆசையும் அதன் விளைவினால் நல்லொழுக்க அழிவு அமைகிறது. கெடுதியின் வழி திறப்பதாகிறது. ஒழுக்க ஊழலாகிறது. ஆனால் மகாபாரதத்தில் பாவத்தின் முழுப் பொறுப்பும் மனிதனிடமிருந்து கடவுளுக்கே அளிக்கப்படுகின்றது.

வேதாந்தத்தில் நோக்கின் படைப்பாளனே பௌதீகக் கெடுதி, ஒழுக்கக்கெடுதி காரணனாவானா? என்பது போன்ற வினாக் களுக்குரிய விடை ஆராய்விற்குரியதாகின்றது. இறைவனே இறுதிக் காரணன் ஆவான். உலகிற்கு முதற்காரணன் இறைவனே. ஆரம்பகாலத்து இந்தியக் கருத்துக்களில் பாவம், குற்றம் பற்றித் தெளிவான வரைவிலக்கண விளக்கம் இருக்கவில்லை. ஆனால் வேதாந்தத்தில் தெளிவும் வரைவும் சிறப்பாக இருக்கிறது. வேதாந்தத்தில் உலக அறியாமையின் விளைவு பொய்த் தோற்றம் எனவும் விளக்குவர். கெடுதியானது அறியாமையின் விளைவாகும். அறியாமை யானது உண்மை எனவோ அல்லது உண்மை இருப்புடையனவுமல்ல. அதன் இருப்பானது அவித்தைக் காரணமாகும். பௌதீக ஒழுக்கக் கெடுதிகளானது அறியாமையின் பொய்த்தோற்ற விளைவாகும்.

எல்லாத் துன்பம் கெடுதிகளைக் குறிக்கும். இந்துமத மறுபிறப்பானது பாவம் பற்றிய உள்ளுணர்வினை அளிக்கின்றது. மேலும் பாவ எண்ணங்களைத் தோற்றப்பாடான கெடுதி துன்பங்களாக மாற்றுகிறது. கிறிஸ்தவத்தில் இக்கொள்கை முற்றிலும் வேறுபட்டது. கிறிஸ்தவ நம்பிக்கையானது கெடுதி பற்றிய கருத்திலும் பார்க்க பாவம் பற்றிய கருத்துக் களுக்கு முக்கியத்துவம் கொடுக் கின்றது. அதாவது கிறிஸ்தவத்தில் ஒரு மனிதனானவன் உண்மைக் கிறிஸ்தவனாவான் எப்போதெனில் அவன் பாவம் பற்றிய கருத்து உதயமாகின்ற போதிலேயாகும். பாவம் காரணமானதாகவும் கெடுதி விளைவாகவும் பாவம் முதலாவது இடமாகவும் இரண்டாவது இடமாக கெடுதியும் விளங்குகின்றது. பாவமானதும் கெடுதியானதும் இலகுவான வடிவில் கிறிஸ்தவத்தில் பைபிளில் காணப்படுகின்றன. பாவமானது பொதுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் விருப்பிற்கு பணிவின்மை என அமையும். கடவுளின் விருப்பிற்குரிய சரியான பாதையினின்று வேறுபடுதலே பாவம் என்பதற்குரிய அடிப்படைக் கருத்தாகும்.

பாவத்தின் விளைவாகவே தண்டனையாக கெடுதி அமைகின்றதெனும் நம்பிக்கை கிறிஸ்தவத்தில் அமைந்துள்ளது பாவம் எப்படி வந்ததெனில் அது கடவுளது படைப்பில் இருக்கவில்லை என்றும் ஆனால் மனிதனது செயலினால் தான் ஏற்பட்டதெனும் நிலை சுட்டப்படுகின்றது. ஆதாம் ஏவாள் கதை மூலம் இறைவன் முதல் உயிரிகளைப் படைத்தா ரென்றும் அவர்களுக்குச் சுதந்திரமளிக்கப் பட்டது என்றும் ஏடன் தோட்டத்தில் விலக்கப்பட்ட கனியை வேண்டி உண்டு பாவத்தின் மூலமாகினார்கள் என அறியக் கிடக்கின்றது. இதன் தொடர்ச்சியே பாவத்தின் தொடர்ச்சியாயிற்றென்பர். சாத்தான் கூட கடவுளின் படைப்பே, ஆனால் அவர்களும் சுதந்திரத் தெரிவுரிமையினால் கடவுளுக்கு தெரியாது அவர்கள் பிற்பட அமைந்தனரென விளக்கப்படுகின்றது. இறைமகன் யேசு கிறிஸ்து மக்களின் பாவம் கருதி பாவத்தினை மன்னித்தார் எனவும் விளக்கப்படுகின்றது பாவத்தின் தண்டனையும் விளைவுமே கெடுதி எனும் கிறிஸ்தவ நம்பிக்கையானது மனித நியாயத்தின் முன் விமர்சிக்கப்படுகின்றன. அது நீதியில்லை. ஒழுங்கற்றதெனக் குறிப்பிடப் படுகின்றது. கடவுள் புனிதமானது சரியானது உலகை ஆளுகின்றது எனக் கொண்டு பாவம் சுயநலமானது அவரது விருப்புக்கெதிரானது. புனித நிலைக்கு எதிரானது எனில் புனிதம் பாவத்திற்கு எதிராக சக்திமிக்கதாக எதிர்த்து நீதியை நிலைநாட்டுவது வேண்டியதாகின்றது. இவ்விதமல்ல எனின் அவர் தம்முடன் ஒழுங்கற்றவராவார்.

இஸ்லாமிய மதக் கருத்துப்படி பாவ பந்தத்தினின்று விடுதலை பெறுதற்கு தூய கடவுள் பற்றிய அறிவே வழியாகும். கடவுள் பற்றிய நம்பிக்கைக்கும் கடவுள் பற்றிய அறிவுக்கும் இடையில் ஒரு பெரும் வேறுபாடுள்ளது. சாதாரணமாக கடவுளில் நம்பிக்கையுள்ள ஒருவர் பாவத்தினின்று மீள்வதற்குரிய சக்தியுடையவரென்பதல்ல. கடவுளை நம்புகின்றவர் இறை இருப்பினை ஏற்கின்றார். ஆனால் கடவுள் பற்றிய அறிவுடையவர் உண்மையாகக் காண்கின்றார். உண்மையில் தூய அறிவு அல்லது தூய கடவுட் காதல் மாத்திரமே மனிதனைப் பாவ பந்தத்தினின்று விடுவிக்கும் என நம்புகின்றனர். இதுவே பொதுவில் ஆன்மாக்களின் தூய்மையின்மை யினை நீக்குகின்றது. அதுவே கெடுதியின் நீக்கத்திற்கும் வழியாகின்றது.

## அடிக்குறிப்புக்கள்

1. Niven, W.D; Good and evil, Encylopedia of Religion and Ethics, Ed. James Hastings, Edinburgh T & T. Clark, New York, p. 318
2. Loc. cit.
3. Hancock, R.N; (1974) Twentieth Century Ethics, Colimbia, University Press, U.S.A., pp. 11 - 13
4. Sidgwick; (1901) Methods of Ethics, London, p.110



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. Niven, W.D; Good and evil, Encylopedia of Relogion and Ethics, Ed. James, Hastings, Edinburgh T & T. Clark, New York, p.318
6. Rick Rood, Problems of Evil, Probe ministries - Problems of Evil on Internet p. 1
7. Abhedananda; (1951) Philospy and Religion, Ramakrishna Vedanta math, calcutta. p.100
8. Ibid, p. 101
9. Good and evil deities are Ahura Mazdah and Angra Mainyu According to The problem of Evil, (1972) Ed. Paul Edwards, Encylopedia of philosphy, Macmillan Publishing Co. New York, Vol - 3 - 4, p. 136
10. Abhedananda; p. 104
11. The problem of Evil; (1972) Ed. Paul Edwards, Encylopedia of Philosophy, Mac millan Publishing Co New York, Vol 3 - 4, p. 136
12. Abhedananda; pp. 108 - 109
13. Ibid, p. 99
14. பகவத்கீதை, அத். II. v. 50
15. Sabarathna muthaliyar; 1988, Essentials of Hinduism, Dept. of Hindu Religions & Cultural Afairs, Srilanka, p. 80
16. மணிமேகலை 16 – 86 – 89
17. மணிமேகலை, 1 – 64 – 69
18. தம்மபதம் 188
19. மணிமேகலை, 20 – 125 – 127
20. 24ம் தைத்திரிய பிராமணம்
21. கடோ உபநிடதம், (1, 2, 5, 6, 11, 4, 10)
22. மணிவாசகர் திருவாசகம்.
23. மணிவாசகர் திருவாசகம், சிவபுராணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிக் குழந்தைகளிடையே காணப்படும் பிரச்சினைகளும், அவற்றைக் கையாளும் முறைகளும்

(திருமதி). ஜெ. இராசநாயகம்


## ஆய்வுச் சுருக்கம்

*சமூகத்தில் மேல்நோக்கிய அசைவை ஏற்படுத்தும் கல்வி நிலைகளில் முன்பள்ளிப் பருவக் கல்வியின் நோக்கமும், அதன் முக்கியத்துவமும் எடுத்துக் கூறப்படுவதோடு, இன்றைய சூழலில் அக்குழந்தைகள் மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளை இனம் கண்டு அதற்கான தீர்வுகளையும் முன்வைக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.*


### முன்னுரை

முன்பள்ளிக் கல்வி தொடர்பான சிந்தனைகள் பல குழந்தைக்கல்விச் சிந்தனையாளர்களினால் வெளியிடப்பட்டுள்ளன. கல்வி முறைமையின் வெளிப்பாடுகளை இச் சிந்தனையாளர்களின் கருத்துக்களிலே காண முடிகின்றது. இன்று தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் முன்பள்ளி தொடர்பான கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பல நிறுவனங்கள் செயற்படுகின்றன.[1] குழந்தைக் கல்விச் சிந்தனையாளர்களினால் இது தொடர்பாகப் பல கருத்துக்கள் முன்வைக்கப் பட்ட போதிலும் அக்கல்விக் கொள்கைகள் சமீப காலத்தில் தான் செயல்வடிவம் பெற்றுள்ளன. கல்விச் செயற்பாடுகளை எதிர்காலத்தில் சிறந்த முறையில் வளர்த்துச் செல்ல வேண்டுமானால் ஆரம்பக்கல்வி சிறந்த முறையில் திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும். ஆகவே இவ்விடயத்தில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் மிகுந்த கவனம் செலுத்தல் வேண்டும். ஏறத்தாழ மூன்று வயது தொடக்கம் ஐந்து வயது வரையுள்ள பருவம் முன்பள்ளிப் பருவமாகும். இப்பருவத்திலே குழந்தைகளின் உடல், உள, மனவெழுச்சி, மொழி, சமூகத்தொடர்பாடல் வளர்ச்சிகளோடு அவர்களின் ஒழுக்க விழுமியங்கள் பற்றிய நடவடிக்கைகளையும் கூர்ந்து அவதானித்தல் வேண்டும்.[2]

### முன்பள்ளியின் முக்கியத்துவம்

குழந்தையின் முதல் ஆசிரியர் தாய். குழந்தை பிறந்ததிலிருந்து அதனை மடியிலிட்டுத் தாலாட்டி, சீராட்டி, பாலூட்டி வளர்க்கும் வேளைகளில் எல்லாம் குழந்தை தாய் மூலமாகப் பல்வேறு விதமான அறிவைப் பெற்றுக்கொள்கின்றது. தாயின் ஒவ்வொரு செயற்பாடும் குழந்தைக்கு அறிவைக் கொடுக்கின்றது. சிறுபிள்ளை தனது கைகளையும், கால்களையும், உடம்பையும் அசைத்து ஒடி ஆடி நடக்கும் போது அதனுடைய உடல் உறுதி பெறுகின்றது. ஆனால் நாளாந்தம் மாறும் சூழலுக்கேற்ப தன்னைப் பொருத்தி வாழ முற்படும் போது அறிவு தேவைப்படுகின்றது. தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொன்றையும் ஏன்? எங்கே? எப்படி? எப்போது? என்றெல்லாம் ஆராய முற்படும் வேளையில் அதற்கு வீட்டில் பெற்றோரிடமிருந்தோ, அயலவரிடமிருந்தோ பெறும் அறிவு போதாமையினால் பள்ளி என்ற நிறுவனத்தை நாடிச் செல்லும் நிலை ஏற்படுகின்றது.[3]

இப்பருவத்திலே தான் வாழும் சூழலைப் பற்றி அறிய முற்படுகின்றது. அத்துடன் புதிய விடயங்களைக் கற்பதற்கான ஆர்வம் அதனிடத்தில் ஏற்படுகின்றது. சமூக பழக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கங்கள் பற்றிய அடிப்படை அறிவையும் பெற்றுக் கொள்கின்றது. [4]

ஜோன் கென்றி பெஸ்டலோசி, ஜோன் பிரட்ரிக் கோர்பார்ட், பிரெட்ரிக் புரோபல், மரிய மொன்ரிசோரி அம்மையார், ஜீன் பியாயே, புறூனர் போன்ற மேலைத்தேய சிந்தனையாளர்களும், பாரதியார், தேசிய விநாயகம் பிள்ளை, அழ.வள்ளியப்பா, சோமசுந்தரப் புலவர் போன்ற கீழைத்தேய சிந்தனையாளர்களும் குழந்தைக் கல்வி தொடர்பாகப் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டதோடு அதன் முக்கியத்துவத்தினையும் உணர்த்தியுள்ளார்கள்.[5] கல்வியினால் மேல்நோக்கிய அசைவை விரும்பும் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் முன்பள்ளிக் கல்வித்திட்ட முறையில் வழங்கப்பட வேண்டும். குழந்தைப் பருவத்தில் உடல், உள வளர்ச்சி மிகவும் துரிதமாக ஏற்படுவதால் குழந்தைகளுக்கு எதுவும் இலகுவாகப் புரிந்துவிடுகின்றது. குழந்தைகளுக்கு ஆக்க பூர்வமான அனுபவங்களைத் தேர்ந்தெடுத்து வழங்கும்போது அவர்கள் சிறந்த அறிவைப் பெற்றுக் கொள்கிறார்கள். இக்கல்வியில் குழந்தைகளுக்கு வரைதல், வர்ணம் பூசுதல், கிழித்தல், வெட்டுதல், ஒட்டுதல், மணிகளைக் கோர்த்தல் போன்ற பல செய்கைகள் கற்பிக்கப்படும் போது குழந்தைகளின் நுண்ணிய தசைகள்இணைந்து வேலை செய்ய உதவுகின்றன. தம்முடைய அன்றாட வாழ்க்கையிலே கடைப்பிடிக்க வேண்டிய சுகாதாரப் பழக்கவழக்கங்கள், உணவு தானே உண்ணுதல் போன்ற விடயங்களைக் குழந்தை கடைப்பிடிப்பதற்கு இப்பள்ளிகள் உதவி புரிகின்றன. பொதுச் சொத்துக்களைப் பேணும் மனப்பான்மை, தன் பொருட்களைத் தானே கவனமாகப் பாவித்தல், பிறருக்கு உதவும் தன்மை, நாட்டின் அருஞ்செல்வங்கள் பற்றிய அறிவு, நாளாந்தக் கொடுக்கல் வாங்கல் செய்வதற்குத் தேவையான கணித எண்ணக்கரு விருத்தி போன்ற பல விடயங்களையும் குழந்தை அறிந்து கொள்கின்றது. [6]

குழந்தைகள் தம் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்தவும், மற்றைய வர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும் பழகிவிடுகின்றார்கள். குழுவில் ஒரு உறுப்பினனாக இருந்து தனது உரிமைகளையும் கடமைகளையும் எளிதில் கிரகித்து விடுகின்றது. எதிர்காலத்திற்குத் தேவையான விரும்பத்தகுந்த சமூக மனப்பான்மையை வளர்க்கும் திறனைப் பெற்றுக்கொள்கின்றது. பரிசோதனை செய்தல், ஆராய்தல் போன்ற வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் சுற்றுப்புறத்தைப் பற்றிய விழிப்புணர்வு குழந்தைகள் மத்தியில் ஏற்படுகின்றது. இன்றைய அறிவியல் யுகத்தில் குழந்தையைச் சுற்றியுள்ள பொருட்கள், அதற்குக் கிடைக்கக் கூடிய அனுபவங்கள் அது ஈடுபடக்கூடிய செயல்கள் அனைத்திலும் அறிவியல் அம்சமே அடிப்படையாக உள்ளது. "நிலா நிலா ஓடிவா" என்று நிலாவை நோக்கிப் பாடிய குழந்தை இன்று மனிதன் நிலாவை நோக்கி சென்று வருவதை அறிகின்றது. இவ்வகையான அறிவியல் அம்சங்களை எல்லாம் அது அறிந்து கொள்ள நிறுவன ரீதியாக முன்பள்ளிக் கல்வி நிலையங்கள் அமைந்து விடுகின்றன.

இத்தகைய பல எதிர்பார்ப்புக்களோடு வரும் குழந்தை அப் பள்ளியில் குதூகலமாக, சுதந்திரமாக ஓடியாடி விளையாடுவதன் மூலம் கல்வி கற்க வேண்டும். வீட்டிற்கும், பள்ளிக்கூடத்திற்கும் இடையில் உள்ள உறவு மிகவும் பலமுள்ளதாக, நெருங்கியதாக இருத்தல் முக்கிய அம்சமாகும். பள்ளிக்கூடங்கள் சமுதாயத்தின் சுருங்கிய வடிவமாக விளங்குதல் அவசியமாகும். ஆகவே ஆசிரியர் குழந்தையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பச் சூழலை நன்கு விளங்கி அதற்கு பொருந்துவது போன்ற சூழ்நிலைகள் அந்நிறுவனத்தில் ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமாகும். பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு பூரண ஒத்துழைப்பை பெற்றோர்கள் வழங்குவதன் மூலமே இத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறும். ஆசிரியர்கள் குழந்தைகளுடனும் பெற்றோர்களுடனும் சிநேக பாவத்துடன் அக்கறையுடன் பழகுதல் திருப்தியைத் தருகின்றது. அந்நிறுவனத்தில் இடம்பெறும் எந்த ஒரு நிகழ்வும் பெற்றோர்களின் வசதியைப் பொறுத்தே ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இதனால் முன்பருவக் கல்வி ஆசிரியர்கள் சிறந்த பயிற்சி பெற்றவர்களாக இருப்பது விரும்பத்தக்கதாகும். ஆசிரியர்கள் முன்பருவக் கல்வியின் முக்கியத்துவம் குறிக்கோள்களை அறிவதோடு வரலாறு, பாடத்திட்டம் வகுக்கும் முறை, பள்ளிக் கட்டிடமும் விளையாட்டுக் கருவிகளும், பல்வேறு செயல்களான கதை, பாட்டு, நாடகம் ஆகியவை கற்பிக்கும் முறைகள், பள்ளிக்கூடத்தை நிர்வாகிக்கும் முறை, வைக்க வேண்டிய குறிப்பீடுகள் ஆகியவை தொடர்பான விரிவான அம்சங்களை பெற்றிருத்தல் அவசியமாகும்.

**குழந்தைகளிடையே காணப்படும் பிரச்சினைகள்**

குழந்தைகள் மத்தியிலே இன்று காணப்படும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று பெற்றோர்களின் வறுமை ஆகும். பொருளாதார நெருக்கடி மிகுந்த குடும்பங்களிலே பெற்றோர் மத்தியில் ஏற்படும் சண்டை, சச்சரவுகள் பிள்ளையின் ஆளுமையை பெரிதும் பாதிக்கின்றது. பிளவுபட்ட அல்லது பூசல் நிறைந்த குடும்பங்களில் இருந்து வரும் பிள்ளைகள் படிப்பில், விளையாட்டில் அக்கறையற்றவர்களாக இருப்பதனையும் சில இடங்களில் காணமுடிகின்றது. ஒற்றுமையுள்ள பெற்றோர்கள் மத்தியில் இருந்து வரும் பிள்ளைகள் கூடுதலாக ஆளுமையுள்ளவர்களாக விளங்கு வதையும் காணமுடி கின்றது. இதனால் இவர்களின் கல்விச் செயற்பாடுகள் எதுவித பிரச்சினைகளும் இன்றி நடைபெறுவதனை அவதானிக்க முடிகின்றது.[7]

ஆகவே ஆசிரியர்கள் குழந்தையின் குடும்பச் சூழலை நன்குணர்ந்து அதற்கேற்ற வகையில் கதைகளின் மூலமாகவும் பாட்டுக்களின் மூலமாகவும் பல விடயங்களை எடுத்துக் கூறி பாதிப்பிற்குள்ளான குழந்தைகளை மகிழ்ச்சியான ஒரு சூழலில் கற்பதற்கோ, விளையாடுவதற்கோ வாய்ப்பளிக்க வேண்டும்.

பல்வேறு விதமான பல சூழல்களில் இருந்தும் வருகின்ற குழந்தைகளின் மன உணர்வுகள் எப்போதும் ஒன்றாக இருப்பதில்லை. சில குழந்தைகள் இவ்வாறான நிறுவனங்களுக்கு செல்லும் போது அழுது கொண்டு செல்வதையும் அவதானிக்கலாம். எனவே ஆசிரியையானவள் தாயின் அன்பை வழங்குபவளாக இருக்க வேண்டும். குழந்தைகளை தம்மிடம் வரும்படி வசீகரிக்கும் தன்மையை ஆசிரியை பெற்றிருக்க வேண்டும். தனது நன்நடத்தையால் அவர்களுக்கு நற்பண்புகளையும், பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொடுத்தல் அவசியமாகும். வீட்டுச் சூழலுக்கு முரண்பாடு இல்லாத வகையில் ஆசிரியர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

முதலில் குழந்தையிடம் ஏற்படுவது பிரிவுத் துயராகும். முதன் முதலாக குழந்தை தாயை விட்டுப் பிரிந்து பள்ளிக்கூடத்திற்கு வருவதால் இத்தகைய துயர்களை குழந்தை அனுபவிக் கின்றது. இத்தகைய துயர் சில வேளைகளில் குழந்தைகளின் நலனையும் பாதிக்கக்கூடும் ஆகையால் இவ்விடயத்தில் கவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துதல் மிக அவசியமாகும். தாயின் அன்புப் பிணைப்பினால் கட்டுண்ட குழந்தை தாயை விட்டுப் பிரிந்து ஒரு கணம் கூட இருக்க முடியாமல் தவிக்கும் இச் செயற்பாடு குழந்தைக்கு குழந்தை வேறுபடும் சில குழந்தைகள் இத்தகைய நிறுவனங்களுக்கு மிக விருப்புடன் செல்லும் நிலையுமுண்டு. இன்றைய சூழலில் பெரும்பாலான தாய்மார்கள் உத்தியோகத்தின் பொருட்டு குழந்தையைத் தாதிமார்களுடனோ அல்லது தன் பெற்றோர் களிடமோ விட்டுச் செல்வதனால் குழந்தை களுக்குச் சரியான விதத்தில் தாயன்பு கிடைப்பதில்லை. குழந்தை எதனைச் செய்ய முற்பட்டாலும் அதற்கு அவர்களினால் தடை ஏற்படுகின்றது. இதனால் இத்தகைய நிறுவனங்களை நாடிச்செல்லும் குழந்தைகள் அன்பான ஆசிரியர்களையும் தன் விளையாட்டுத் தோழர்களையும் கண்டு ஆனந்தமடைகின்றனர். ஆகவே இவ்வாறான பல பிரச்சினைகளைச் சுமந்துவரும் குழந்தைகளோடு ஆசிரியர்கள் மிக அன்போடு பழகி அதற்குத் தேவையான வைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்.

இத்தகைய பிரிவுத் துயரினால் கவலை அடையும் பிள்ளைகள் மத்தியில் பலவித உளத்தாக்கங்கள் ஏற்படுகின்றன. இரவில் தூக்கத்தில் கத்துதல், நாடித்துடிப்பு அதிகமாதல், அதிகமான வியர்வை போன்ற தன்மைகள் ஏற்படுகின்றன. இந்நிலையில் குழந்தைகள் பெற்றோர்களிடமிருந்தும், உறவினர்களிட மிருந்தும் பாதுகாப்பை எதிர்பார்க்கின்றது. இத்தகைய தன்மைகளினால் சில குழந்தைகள் ஆளுமை குறைந்தவர்களாக வளருகின்றார்கள்.[8] இந்த நிலை பிள்ளைகளிடத்தில் ஒருவிதமான பய உணர்வை வளர்த்து விடுகின்றது. இந்தப் பய உணர்வினால் குழந்தைகள் மத்தியில் அதிகமான கோபம், தூக்கக்குறைவு, உணவை வெறுத்தல் போன்றவைகள் ஏற்படுகின்றன. சில பெற்றோர்கள் பிள்ளைகள் எதனைச் செய்ய முற்படும்போதும் பயத்தை ஏற்படுத்துகின்றார்கள். பிரம்பைக் காட்டிப் பயமுறுத்துதல், மிருகங் களைக் காட்டிப் பயமுறுத்துதல், மாறுபாடான சத்தங்களை உண்டாக்குதல் இருளைக் காட்டிப் பயமுறுத்துதல், பழக்கப்படாதவர்கள் மூலம் பயமறுத்துதல் ஆகிய செயற்பாடுகள் குழந்தைகள் மத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவற்றை நீக்க வேண்டுமானால் குழந்தைகளிடம் அன்பாக இருத்தல் அவசியமாகும். தனக்கு ஏற்படும் பிரச்சினைகளை எல்லாம் தன் பெற்றோர்கள் தீர்த்துவைப்பார்கள் என்ற நம்பிக்கையும் குழந்தையின் பயத்தைக் குறைத்துவிடுகின்றது. வீட்டில் குழந்தைகள் விரும்பத்தகுந்த சூழலை ஏற்படுத்த வேண்டும். இருட்டான அறையையோ, பழக்கப்படாத புதிய மனிதர்களையோ, மிருகங்களையோ கண்டு பயப்படக்கூடிய குழந்தைகளுக்கு அவைகள் பற்றிய தவறான அபிப்பிராயத்தைப் போக்கி அவைகளை அறிமுகப்படுத்துவது அவசியமாகும்.

இத்தகைய பருவக் குழந்தைகள் மத்தியில் பொறாமை உணர்வு அதிகமாகக் காணப்படு கின்றது. முன்பள்ளி நிறுவனங்களுக்கு வரும்போது தாயின் அன்பை இழந்து விடுவோமா என்ற பொறாமையும் ஏற்பட்டு விடுகின்றது. அத்துடன் வீட்டில் தன் அன்புக் குரியவர்களிடமிருந்து பிரிந்து பள்ளிக்கூடத் திற்கு வரும்போது குழந்தை கட்டுப்பாட்டை இழந்து விடுகின்றது. வீட்டில் இன்னொரு குழந்தை பிறந்திருக்குமானால் நிச்சயம் அத்தகைய பொறாமை உணர்வு அதிகரிப்பத னால் தன்னுடைய அன்பு குறைந்துவிடுமோ என்ற எண்ணத்தினால் பள்ளிக்கூடத்திற்கு வர குழந்தை விரும்பமாட்டாது. பொறாமையின் காரணமாக தன்னைவிடச் சிறிய குழந்தையின் மீது அடித்தல், தள்ளுதல், அமுக்குதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிள்ளுதல் போன்ற சிறு தாக்குதல்களையும் குழந்தைகள் செய்யக்கூடும். இதனால் பள்ளிக்கூடத்திலும் மற்றைய குழந்தைகளோடு, சண்டையிடுதல், அனுசரித்துப் போகாமை, திருடுதல் போன்ற நிலைகள் ஏற்படுகின்றன. ஆகவே அத்தகைய வேண்டத்தகாத செயல்களைத் தன் அன்பினால் அரவணைத்துப் புத்திமதிகள் கூறுவதன் மூலம் திருத்த முடிகின்றது. இயலுமானவரை குழந்தைகள் எல்லோரும் சேர்ந்து செயற்படுகின்ற இடமாக அப்பள்ளிக்கூடத்தை வைத்திருத்தல் வேண்டும்.

குழந்தைகள் மத்தியில் ஏற்படுகின்ற ஏமாற்றமும் குழந்தையைப் பெரிதும் பாதிக்கின்றது. மற்றவர்கள் தன்னிடத்தே தனியான கவனம் செலுத்த வேண்டும் என்று எண்ணத் தலைப்படுகின்றது. வீட்டில் எதிர்பார்த்த பொருட்கள் கிடைக்காமை போன்ற சில காரணங்கள் குழந்தைகள் மத்தியில் பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றது. இதனால் அடம்பிடித்து அழும்நிலை குழந்தைகளிடத்தே ஏற்படுகின்றது. இதற்கான தண்டனைகளைப் பெற்றோரோ அல்லது ஆசிரியரோ வழங்கும்போது குழந்தை மனம் புண்பட்டுவிடுகின்றது. இதனால் இத்தகைய தொடர்ந்த செயல்களினால் பிற்காலத்தில் பலவிதமான உளக்கோளாறுகளுக்குக் குழந்தைகள் உள்ளாகின்றார்கள். எனவே குழந்தைகளுக்குப் பொருட்களைக் காட்டி ஏமாற்றுவதையோ, வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதாக ஏமாற்றுவதையோ தவிர்த்து விடுதல் வேண்டும். பள்ளிக்கூடங்களில் மதிப்பீடுகளின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும் முறையானது பரிசினைப் பெறாத மாணவர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தந்து விடுகின்றது. அதனைத் தாங்கக்கூடிய மனநிலையில் அந்தப் பிஞ்சு உள்ளங்கள் இருப்பதில்லை. எனவே இவ்வாறான செயல்களைத் தவிர்த்தல் வேண்டும். இல்லையேல் சகல மாணவர்களுக்கும் பரிசில்களை வழங்குதல் வேண்டும்.

இப்பருவ குழந்தைகளிடத்தில் அனேகமாக எதிர்ப்பு மனப்பான்மை தோன்றுவதை அவதானிக்க முடிகின்றது. மற்றையவர்களினுடைய கவனத்தைத் தன்பக்கம் ஈர்த்துக் கொள்ள முற்படும் போதும் எதிர்ப்பு மனப்பான்மை தோன்றும். எதனைச் செய்யக் கூடாது என்று பெற்றோர்களினால், ஆசிரியர்களினால் கூறப்படுகின்றதோ அதையே செய்ய வேண்டுமென்று அடம்பிடிக்கும் குழந்தைகள் அனேகம். குழந்தைகள் தீயவழியில் செல்வதைத் திசைதிருப்பி விடலாமேயொழிய இதுதான் நல்லவிடயம் என்று குழந்தைகளிடம் எதையும் திணித்தல் கூடாது என்பது ஜீன் ஜாக்ஸ் ரூசோ என்பவரது கருத்தாகும். ஏனெனில் நல்ல விடயங்களை உணர்ந்து குழந்தை செய்ய முற்படும் போது அது ஒருபோதும் குழந்தையால் மறக்கப்படமுடியாததாகும். தானாகவே செய்ய முற்படும் போது ஏற்படும் விருப்பம் பிறரது திணிப்பின்போது இருப்பதில்லை. ஆகவே எதனையும் எதிர்த்து அடம்பிடிக்கும் குழந்தையிடத்தில் எதனையும் கட்டாயப்படுத்திச் செய்வித்தல் தவறானதாகும்.

கல்விச் செயற்பாடுகள் மிகவும் நுணுக்கமான முறையில் திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும். பிள்ளை வகுப்பறை என்ற ஒரு வரையறைக்குள் தான் கட்டுப்பட்டு இருக்கின்றேன் என்ற உணர்வு இல்லாமல் சுதந்திரமான முறையில் ஓடியாடி விளையாடுவதன் மூலம் கல்வி கற்பதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தளபாடங்களும் கவர்ச்சிகரமாக இருத்தல் வேண்டும். சில பிள்ளைகள் மற்றைய பிள்ளைகளுடன் சேராமல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவித விளையாட்டிலும் ஆர்வம் காட்டாமல் இருப்பார்கள். ஆனால் கற்பதில் நாட்டம் இருக்கும். சில பிள்ளைகளுக்கு கற்பதிலும் நாட்டம் இருக்காது. ஆசிரியர்கள் அவ்வாறான பிள்ளைகளை இனம் கண்டு அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் ஆர்வம் உள்ளவராக இருத்தல் வேண்டும். இதனால் ஆசிரியர்கள் பிள்ளையின் குடும்பச் சூழலை அறிவதோடல்லாமல் குழந்தை உளவியல் பற்றிய அறிவுள்ளவராக இருத்தல் வேண்டும். குழந்தை உளவியல் இன்று உன்னத வளர்ச்சியை பெற்றுள்ளது. எதிர்காலச் சமூகத்தின் வாழ்விலும், வளத்திலும் குழந்தை உளவியலின் முக்கியத்துவம் பரவலாக உணரப்படுகின்றது. [9] குழந்தை வளர்ப்பை வளமாக்கும் அம்சங்களில் குழந்தை உளவியல் முதலிடம் பிடிக்கின்றது. குழந்தையின் சமூகத் தளத்தை விளங்கிக் கொள்ளல், தனியாள் இயல்புகளை விளங்கிக் கொள்ளல், பலங்களையும் பலவீனங்களையும் தெரிந்து கொள்ளல், இசைவாக்கப் பிரச்சினை களைத் தெரிவு செய்தல் முதலியவற்றுக்குக் குழந்தை உளவியல் வழியமைக்கின்றது.

குழந்தைகளில் சிலருக்கு விரல் சூப்பும் பழக்கமும் உண்டு. இப்பழக்கம் குழந்தை பிறந்த சில நாட்களுக்குள் ஏற்பட்டுத் தொடர்ந்துவரும் பழக்கமாகும். பசி, வெட்கம், களைப்பு, வெறுப்பு, தூக்கம், போன்ற காரணிகளால் விரலை வாயில் வைத்துச் சூப்புகின்றார்கள். பள்ளி முன்பள்ளிப் பருவக் குழந்தைகளும் இத்தகைய பழக்கத்தை மறந்து விடுவதில்லை. பள்ளிக்கூடத்தில் விரல் சூப்புவதன் மூலம் குழந்தை கற்றலில் அதிக ஆர்வம் காட்டாது. சேர்ந்து விளையாடுவதும் குறைவாக இருக்கும். இதனை ஆரம்பத்தில் திசைதிருப்பி விடுதல் பெற்றோரின் கடமை யாகும். பிற்காலத்தில் புகைபிடித்தல், மது அருந்துதல், அதிகமாகப் பேசுதல் போன்ற பழக்கங்களுக்கு அடிகோலுகின்றது.[10] இதனால் இவ்விடயத்தில் ஆசிரியர்களும் மிக அக்கறை யுடன் செயற்பட வேண்டும். இத்தகைய செயலைத் திசைதிருப்பும் நோக்குடன் குழந்தைகளே வேறு பல விளையாட்டுக்களிலும், செயல்களிலும் ஈடுபடச் செய்யலாம். தூங்கும் போது வாயில் இருந்து விரலை வெளியே எடுத்துவிட வேண்டும்.

குழந்தைகளிடத்தில் நகம் கடிக்கும் பழக்கமும் காணப்படுகின்றது. இது சில பெரியோர்களிடமும் காணப்படுகின்றது மிகுந்த கவலையும் அச்சமும் உடைய குழந்தைகள் இதனைச் செய்வதை அவதானிக்க முடிகின்றது. இது குழந்தைகளிடம் காணப்படும் மனப் பிரச்சனையாகும். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் தன்மீது அதிக அக்கறை செலுத்த வேண்டு மென்று நினைக்கும்போதும் அச்சத்துடனும், கவலையுடனும் காத்துக் கொண்டிருக்கும்போதும், திரைப்படக் காட்சிகளில் திடுக்கிடும் நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போதும் குழந்தை நகம் கடிப்பதை அவதானிக்க முடிகின்றது. நகம் கடித்தல் குடும்பப் பழக்கத்தைப் பொறுத்தும் அமைகின்றது. இதனைத் தண்டனை வழங்கு வதன் மூலம் தடுத்து நிறுத்திவிட முடியாது. எத்தகைய சூழ்நிலைகளில் குழந்தை நகத்தைக் கடிக்கின்றது என்பதையறிந்து அத்தகைய செயற்பாடுகளைக் குழந்தையிடமிருந்து தவிர்த்துவிடல் வேண்டும்.

குழந்தைகள் பல விடயங்களில் பொய் பேசுகின்ற சந்தர்ப்பங்களையும் காணமுடிகின்றது. மிகவும் சிறிய வயதில் குழந்தைகள் மொழி வளர்ச்சியின்மை காரணமாகக் கூறும் சில வார்த்தைகள் பொய் பேசுவது போலத் தோன்றும். பெரியவர்கள் குழந்தைகள் முன்னிலையில் எக்காரணம் கொண்டு பொய் பேசுதல் கூடாது. பெற்றோர்கள், ஆசிரியர்கள் வழங்கும் தண்டனைகளில் இருந்து தம்மை காப்பதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் பொய்பேச ஆரம்பிக்கின்றார்கள். ஆகவே இத்தகைய தண்டனைகள் குழந்தையை மேன்மேலும் தவறுகள் செய்யத் தூண்டுகின்றது.

குழந்தைப் பருவத்தில் அவர்களுக்கும் பலவிதமான நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றில் தொற்றுநோய்களும் பலவாகும். ஆகவே பள்ளிக்கூடத்தில் ஒரு பிள்ளைக்குத் தொற்று நோய் ஏற்பட்டால் அது பூரண குணமாகும்வரை குழந்தையை பள்ளிக்கூடத்திற்கு அனுமதித்தல் கூடாது. நோய்க் காலங்களில் லீவு எடுப்பதனால் குழந்தைக்குக் கற்கும் ஆர்வம் குறைவடைகின்றது. உடல் களைப்படைகின்றது. இதனால் இந்நோய்களில் இருந்து விடுபட வேண்டுமானால் தடுப்பு மருந்துகளை உட்கொள்ள வேண்டும். அத்துடன் அடிப்படையான சுகாதாரப் பழக்க வழக்கங்களை அனுசரிப்பதற்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். நோய்கள் எப்படி ஏன்? ஏற்படுகின்றன என்பது பற்றிய அடிப்படையான அறிவைக் குழந்தைகள் பெறும்போது ஓரளவு அத்தகைய நோய்களில் இருந்து விலகிக் கொள்கின்றார்கள்.

முன்பருவப் பள்ளிக்கூடத்தில் குழந்தைகள் கற்றுக்கொள்ளும் விடயத்தை சில வேளைகளில் மறந்துவிடுவார்கள். இதனால் அங்கு கற்றுக் கொடுக்கும் விடயத்தை வீட்டிலும் குழந்தைகள் கடைப்பிடிக்கக்கூடிய வசதிகளை ஓரளவேனும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதனால் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்குமிடையில் நெருக்கமான தொடர்புகள் இருத்தல் அவசியமாகும். இத்தகைய நெருக்கமான உறவுகள் குழந்தைகளிடத்தே தோன்றுகின்ற தேவையற்ற பயம், கவலை போன்றவற்றையும் நீக்கிவிடும்.

குழந்தைகளிடையே எதுவிதமான ஏற்றத் தாழ்வுகளையும் ஆசிரியர் உணரமுற்படக் கூடாது. அது குழந்தையின் மனத்தைப் பெரிதும் பாதிக்கின்றது. வகுப்பில் திறமையாகச் செயற்படும் பிள்ளைகளையே எந்த ஒரு செயற்பாட்டின்போதும் நிகழ்வின் போதும் முன்னிறுத்துதல் அனேகமாக முன்பள்ளி நிறுவனங்களிலோ, பள்ளிக்கூடங்களிலோ காணப்படுகின்றது. இத்தகைய நிலைகளினால் மற்றைய குழந்தைகளின் மனம் புண்படுகின்றது. ஆசிரியர்களுக்கும் அப்பிள்ளைமேலே அதிகம் பிரியமாக இருக்கும். அதனை எந்தவொரு கட்டத்திலும் ஆசிரியர் வெளிக்காட்டாது செயற்படுதல் வேண்டும். வகுப்பில் எல்லாக் குழந்தைகளும் சமமாக நடத்தப்பட வேண்டும். வகுப்பில் எல்லாக் குழந்தைகளும் சமமாக நடத்தப்பட வேண்டும். குழந்தைகள் தம் ஏழ்மை நிலையைக் கண்டு மற்றைய குழந்தைகளோடு தம்மையும் ஒப்பிட்டு கவலை அடையும் நிலை நீக்கப்படல் வேண்டும். இது வரவேற்கத்தக்க வொரு விடயமாகும். ஆகவே சீருடை அணியும் பழக்கத்தை ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும். இது பிற்காலத்தில் ஒழுங்கு, கட்டுப்பாடு போன்ற செயல்களைக் கடைப்பிடிப்ப தற்கும் உதவுகின்றது.

முன்பள்ளி ஆசிரியர்களும் இத்துறை தொடர்பாகப் போதியளவு பயிற்சி உடையவராக இருத்தல் அவசியம். அன்பு,சகிப்புத்தன்மை, சாந்தம், கருணை, இரக்கம் நிரம்பியவர்களாக இருத்தல் முக்கியமாகும்.[11] செயற்பாடுகளைத் திட்டமிட்டு விளையாட்டு, கதைகள், நடனங்கள், பாட்டுக்கள் மூலம் கற்பிப்பதில் வல்லவராக இருத்தல் இன்னுமொரு அம்சமாகும். ஏனைய காரணிகள் எவ்வளவுதான் சிறப்புடையதாக இருந்தாலும் ஒரு கல்வி முறையின் ஆற்றல் ஆசிரியரின் முன்மாதிரியிலேயே தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளோடு குழந்தையாக மாறி ஆசிரியர் செயற்பட வேண்டும். தகுந்த பொருத்தமான கற்பித்தல் உபகரணங்களைப் பாவித்தல் வேண்டும். குழந்தைக் கல்வியிலே எண்ணக் கருக்களை அறிமுகம் செய்கையில் பொருட் களைக் காட்டுதல் வேண்டும். ஆனால் இன்றைய சூழலில் கிராமப்புறங்களில் இத்தகைய உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதில் பல பிரச்சினைகள் எதிர்கொள்ளப் படுகின்றன. சில நிறுவனங்களுக்குப் பெற்றோரின் ஒத்துழைப்புக் கிடைப்பதில்லை. இதனால் நிதிப் பற்றாக்குறை ஒரு பெரும் குறைபாடாக விளங்குகின்றது. கட்டிடமும் குழந்தைகள் ஓடி ஆடி விளையாடு வதற்குப் போதியளவு இடவசதி இருத்தல் முக்கிய அம்சமாகும். இதன் மூலம் குழந்தைகள் மத்தியில் சுதந்திர உணர்வு வளர்கின்றது.

## முடிவுரை

கல்வி உலகில் இன்று மிகப்பெரிய மாற்றங்களும், அபிவிருத்திகளும் நிகழ்ந்து வருகின்ற இன்றைய காலகட்டத்தில் குழந்தைக் கல்வியில் அதிகளவு கவனம் காட்டுதல் வேண்டும். உலக நாடுகள் இதனை நன்குணர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. எனவே எதிர்காலக் குடிமக்களாகிய குழந்தைகளைச் செம்மையாக வளர்த்தல் ஒரு நாட்டினுடைய சிறந்த பாதுகாப்பாகும். ஆகவே சிறந்த மனஉறுதி, உடல் உறுதியுள்ளவர்களாகக் குழந்தைகள் வளர வேண்டுமானால் சத்துள்ள உணவு, நல்ல உணவுப்பழக்கம், உறக்கம், ஓய்வு போன்ற விடயங்களைப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் அவதானித்து அதில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். இதனால் ஆளுமையுள்ள குழந்தைகள் உருவாக்கப்பட்டு சமூகத்திற்குக் கொண்டுசெல்லப்படுகின்றார்கள். இதன் மூலம் சமூகமும் வளர்ச்சி பெறுகின்றது. எதிர்காலத்திற்குத் தேவையான விருப்பத்தகுந்த சமூக மனப்பான்மையை வளர்க்கும் இடமாகப் இப்பள்ளிக்கூடங்கள் விளங்கும்போது குழந்தைக் கல்வி முழுமையான வெற்றியைப் பெறும்.

இத்தகைய முன்பள்ளிக் கல்விக் கூடங்கள் இன்று மிகவும் வளர்ச்சி பெற்று வருகின்றன. முன்பள்ளிக் கல்வி தொடர்பான பல கருத்துக்களையும், எண்ணங்களையும் பிளேட்டோ, கொமேனியஸ், ரூஸோ, பெஸ்ரலோசி, புரொபல், மொன்ரிசோரி, மகாத்மாகாந்தி போன்றவர்கள் வெளியிட் டுள்ளார்கள். கலைத்திட்டம், கற்பித்தல் முறைகள், பள்ளிக்கூட ஒழுங்கமைப்பு மதிப்பீட்டு முறைகள் பற்றிய இவர்களின் கருத்துக்கள் இன்றும் முன்பள்ளி நிலைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன.[12] இவர்களால் வெளியிடப் பட்டுள்ள பல கருத்துக்கள் குழந்தைகளின் கற்றல் பிரச்சினைகளை இனம்காண்பதோடு அவற்றைத் தீர்க்கும் முறைபற்றியும் பல கருத்துக்களைக் கொண்டு விளங்குகின்றன. இத்தகைய கல்வியியலாளர்களின் கருத்துக்களின் அடிப்படையில் குழந்தைக் கல்வி நன்கு திட்டமிடப்பட்டு அமையுமேயானால் எதிர் காலத்தில் முன்பள்ளிக் கல்வி கூடங்கள் சிறந்த கல்வியை வழங்கும் என்பதில் சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புக்கள்

1. S. Khurashid - ut, Islam, Rao.K; 2002, Early child hood care and Education, common wealth Publication, New Delhi, p. 14.
2. Educational Research, 2002, Pre School Education and curricular Reforms, Jeyarasah.S, The council for Educational Research,p.17.
3. அவையன், அ; 1980, பாலர் பள்ளிக் கையேடு, சர்வோதய இல்கியப்பண்ணை மதுரை, ப.13.
4 Jegananath Mohanty; 2000, Early child hood care and Education, Deep and Deep Publications PVT. Ltd, New Delhi, p.2
5. ஜெயராசா, ச; 2001, குழந்தைக்கல்விச் சிந்தனைகள், போஸ்கோ வெளியீடு, ப.1-55
6. அவையன், அ; பாலர்கல்விக் கையேடு, மு.சு.நூல், ப.19.
7. Devendra thakur, Thakur. N; Primary Education and Adult Literacy, Deep& Deep Publications, 1997, p.141
8. ஜெயராசா, ச; 2001, குழந்தை உளவியவல், நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டம், மாநகரசபை, யாழ்ப்பாணம், ப.50.
9. மேலது, ப.10.
10. பங்கஜம். பு.இ; 1992, பள்ளி முன்பருவக் கல்வி, சென்னை, 1997, ப.185.
11.ஜெயராசா, ச; 1997, பாலர் கல்வி, யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியம், ப.115
12. Jagannath mohanty. P; Earcly child hood care and Education, OP. cit, p.8.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிற் கிடைத்த பார்வதி வெண்கலச் சிலைகள்

பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா

## ஆய்வுச் சுருக்கம்

*இலங்கையின் வெண்கலப்படிமக்கலை வரலாற்றில் மத்திய காலமான பொலன்னறுவைக்காலம் மிகவும் தனித்துவமான பங்களிப்பினை வழங்கியிருப்பதனைக் காண்கின்றோம். பௌத்த–இந்து வெண்கலப்படிமங்கள் அதிக எண்ணிக்கையில் உருவாக்கப்பட்ட காலம் இக்காலமாகும். இலங்கையின் சுதேச மரபுகளும், விதேச மரபுகளான தென்னிந்தியக்கலைமரபுகளும் கலந்த வகையில் பஞ்சலோக கலை மரபுகளும், கற்சிற்பக்கலை மரபுகளும் பொலன்னறுவைக்காலக் கலைக்கூடங்களை அணி செய்த கலை வரலாற்றை சிவன், நடராசர், விஷ்ணு மற்றும் பார்வதி வெண்கலப்படிமங்களிலிருந்து கண்டு கொள்ளலாம். இவ்வாய்வுக்கட்டுரையின்கண் பொலன்னறுவையில் இருந்து கிடைத்த பார்வதி வெண்கலப்படிமங்கள் பற்றி ஆராயப்படுகிறது.*

தென்னாசியாவிலும் ஆங்கிலேயர்களது வருகையைத் தொடர்ந்தே அப்பிராந்தியப் பண்பாட்டு ஆய்வுகள் ஆரம்பித்து வைக்கப் பட்டன. இதன் பயனாக காலவெள்ளத்தினால் அள்ளுண்டு சிதையுண்டு, அழிபாடுகளுக் குள்ளும், மண்மேடுகளுக்குள்ளும் மறைக்கப் பட்ட, மறைந்துபோன, கலைவனப்பு மிக்க கருவூலங்கள் வெளிக்கொணரப்பட்டன. தென்னாசியாவைப் பொறுத்தமட்டிலே பௌத்த – இந்து, சமண பண்பாட்டுக் கருவூலங்களின் வெளிப்பாடானது அப்பிரதேசத்தின் பண்பாட்டு வரலாற்றினை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவுவதாக அமைந்தது.

இந்திய உபகண்டத்திலும் சரி, இத்தீவிலும் சரி ஆங்கிலேயர்களால் தொடக்கிவிடப்பட்ட பண்பாட்டு ஆய்வுகள் இன்றைய நிலையில் புத்தூக்கம் எய்தி, பண்பாட்டு வரலாற்றுக் கட்டுமானத்திற்கு மேன்மேலும் பல புதிய தகவல்களை வழங்கும் நிலையை அடைந்துள்ளது. இலங்கையைப் பொறுத்தமட்டிலே பௌத்தமதம் தொடர்பான பண்பாட்டியல் ஆய்வுகள் பெருவளர்ச்சி கண்டபோதும், இந்துப் பண்பாட்டியல் ஆய்வுகள் பெருமளவிற்குப் பின்தங்கிய நிலையிலே இருந்து கொண்டிருப்பதனைக் காணலாம். இருந்த போதிலும் பௌத்த பண்பாட்டியல் ஆய்வுகளின்போது வெளிப்படுத்தப்பட்ட இந்து மதம் தொடர்பான கருவூலங்களையும், தற்செயலாக நாட்டின் சில பாகங்களில் கிடைத்த இந்து மதம் தொடர்பான ஆவணங்கள், கலாசார எச்சங்கள் என்பவற்றையும் அடிப்படையாகக் கொண்டே எமது வரலாற்றாசிரியர்களும், இந்து மதத்தின் மீதான பற்று மிகுந்தவர்களும் அம்மதம் தொடர்பாக தத்தமது ஆய்வுகளை நடாத்தி வருகின்றனர். இந்நிலையில் ஓர் உண்மையை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம்; அஃதாவது இலங்கையில் பௌத்தத்தின் வலயத்திற்குள்ளேயே இந்துமதம் தொடர்பான அனைத்து வரலாற்றுக் கருவூலங்களும் பாதுகாக்கப்பட்ட நிலையில் வெளிப்படுத்தப்பட்டு வருவதாகும்.[1]

இவ்வடிப்படையிலேயே இந்து மதம் தொடர்பாக இதுவரை கிடைத்த மூலாதாரங் களையும். கருவூலங்களையும் அடிப்படையாகக் கொண்டு அம்மதத்தின் முக்கியமான ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவாக உள்ள சைவமதத்துடன் இணைந்த பார்வதி வெண்கலச் சிற்பங்கள் பற்றி மேற்கொள்ளப்படும் இவ்வாய்வானது வரலாற்று மாணவர்களுக்கன்றி, இந்து நாகரிகத்துறை மாணவர்களுக்கும் பெரும்பயன் கொடுப்பதாக அமையும். இச்சிறு ஆய்வின் கண் இதுவரையில் இலங்கையில் பொலநறுவை யிலிருந்து வெளிக் கொணரப்பட்ட பார்வதி வெண்கல விக்கிரஹங்கள் தொடர்பாகச் சில விபரணங்களைக் கொடுப்பதே நோக்கமாக அமைகின்றது.

**வெண்கலச்சிலைகள் கிடைத்த இடங் களும், அவற்றின் வரலாற்று முக்கியத்து வமும்.**

இலங்கையில் கடந்த நூற்றாண்டின் இறுதியில் தொடக்கி வைக்கப்பட்ட அகழ்வாய்வுகளினதும் (Excavations) மேலாய்வு களினதும் (Explorations) விளைவாகவும், தற்செயல் கண்டுபிடிப்புக்கள் காரணமாகவும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இந்து சமயம் தொடர்பாக, குறிப்பாகச் சைவமதத்துடன் தொடர்பான வரலாற்றுக் கருவூலங்கள் கிடைத்த வண்ணமுள்ளன[2]. இவற்றுள் எண்ணிக் கையிலே அதிகமாகக் கிடைத்த வண்ணம் இருப்பவை பார்வதியின் வெண்கலச் சிற்பங்களாகும். ஏறத்தாழ 20 க்கும் மேற்பட்ட இவ்வெண்கலச் சிற்பங்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இதுவரையிற் கிடைத் துள்ளன என்பது இச்சிற்பக்கலை தொடர்பாக ஆய்வு செய்வோருக்கு பெருவிருந்தாக அமையும்.

அவ்வகையில், இச் சிலைகள் கிடைத்த இடங்களாக எடுத்துக்காட்டப்படுவனவற்றுள் அனுராதபுரம், பொலனறுவை, திருகோணமலை, பதவியா என்பன மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. காலத்தால் முந்தியதும், தென்னிந்திய சிற்பமரபின் நேரடியான அலைகளை உள்வாங்கிக் கொண்டு வளர்ச்சியடைந்த கலைமரபுக்குரிய அம்சங்கள் வெளிப்படுத்தப்பட்ட இடமுமாக அனுராதபுரம் விளங்கியதைக் காணலாம்.[3] தனித்துவமாக பார்வதி கோயில்கள் கட்டப் பெற்று வழிபாடு இயற்றப்பட்ட ஒரு தலமுமாக அனுராதபுரம் விளங்கியது என்பதும் இங்கு நோக்கத்தக்கது.[4]

**"......... அனுராதபுரத்தில் கிடைத்துள்ள இந்தத் தொல்பொருளா தாரங்கள் சென்ற நூற்றாண்டின் இறுதி யில் H.C.P. Bell என்ற ஆராய்ச்சியா ளரால் வெளிக்கொணரப் பட்டவையாகும். 1892 இலும் 1893 இலும் அவர் அங்கு அகழ்வாராய்ச்சி நடாத்திய போது பல சைவக் கோயில்களின் அழிபாடுகளும் ஒரு சில தமிழ்க் கல்வெட்டுகளும் அனுராத புரத்தின் வடக்குப் புறத்தில் கண்டுபிடிக்கப் பட்டன. பெண் தெய்வ வழிபாட்டுக்குரிய கோயில்களும் காணப்பட்டன. இக்கோயில் கள் அனைத்தும் ஒரே வடிவினதாய் எளி மையான முறையில் பல்லவர்காலக் கோயில்களைப் போன்று அடித்தளங் களைக் கொண்டிருந்தன. இவற்றுக்கு குமாரகணம் என்ற நிர்வாகக் குழுவினர் பொறுப்பாக இருந்தமையை நோக்குமி டத்து, தமிழ்நாட்டிற் போலவே இலங்கை யிலும் சைவக் கோயில்களின் நிர்வாகம் அமைக்கப்பட்டிருந்தது என ஊகிக்க இட முண்டு"[5]**

அனுராதபுரத்திலிருந்து இதுவரையில் ஐந்துக்கு மேற்பட்ட பார்வதி வெண்கலச் சிற்பங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இவற்றுள் காலத்தால் முந்திய பார்வதி சிற்பம் கி.பி 9ம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக எடுத்துக்காட்டப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக அண்மையிலே நிற்கும் நிலையில் அமைந்த நான்கு பார்வதி வெண்கலச் சிலைகள் அனுராதபுரத்திலுள்ள அபயகிரி விஹாரத்துக் கண்மையிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டன. இவற்றுள் ஒன்றின் பீடத்திலே 'நானாதேசி' எனத் தமிழிலே பொறிப்பு ஒன்று காணப்படு வதிலிருந்து வணிக கணங்களுக்கும் பார்வதி வழிபாட்டுக்குமிடையே இருந்திருக்கக் கூடிய நெருக்கமான உறவினை அறிந்து கொள்ளலாம்.[5]

மிகக் கூடுதலான எண்ணிக்கையைக் கொண்ட பார்வதி வெண்கலச் சிலைகள் பொலனறுவையிலிருந்தே வெளிக்கொணரப் பட்டன. புலத்தி நகரம் அல்லது ஜனநாத மங்களம் என அழைக்கப்பட்ட இப்பொலன றுவையிலிருந்து (இதுவரையில்) 10 பார்வதி வெண்கலச் சிற்பங்கள் வெளிக்கொ ணரப்பட்டுள்ளன. பொலனறுவையின் வரலாறானது சோழப் படையெடுப்பாளர்களது நடவடிக்கைகளுடன் அந்நடவடிக்கையின் மையமாக ஏறத்தாழ அரை நூற்றாண்டுகட்கு மேல் தொடர்புபட்டிருந்தது. அக்காலகட்டத்திலே 13 இந்துக் கோயில்கள் ஒரு காளிகோயில் உட்பட கட்டி முடிக்கப்பட்டன. 'வானவன் மாதேவி ஈசுரமுடையார்' என அழைக்கப்பட்ட 2ம் சிவ தேவாலயம் அவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் இயங்கியது.[7] கடந்த நூற்றாண்டின் இறுதியிலே இங்கு ஆரம்பிக்கப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வு களின் விளைவாக ஐந்து சிவதேவாலயங்களும், ஏழு விஷ்ணு தேவாலயங்களும் இருக்க அடையாளம் காணப்பட்டன. இத்தேவாலயத் திலிருந்து மீட்டு எடுக்கப்பட்ட பார்வதியின் உலோகச் சிலைகளுள் பெரும்பாலானவை, தலைகீழாக பாதுகாப்பு நோக்கத்தின் பொருட்டு நடு மண்டபங்கட்குள்ளும், கோயிற் சுவர்களுக் குள்ளும், தாழிகளுக்குள்ளும் புதைந்திருக்கவும் மறைக்கப்பட்டும் காணப்பட்டன.[8] பொலன றுவையிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட பார்வதியின் உலோகச் சிலைகள் யாவும் கொழும்பிலுள்ள அரும்பொருளகத்திலே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

பார்வதி வெண்கலச் சிற்ப மரபு தொடர்பான பிறிதொரு வளர்ச்சி நிலையினைத் திருகோணமலையிலிருந்து கிடைத்துள்ள மூன்று சிலைகளிலிருந்து அறிய முடிகிறது.[9] அவற்றுள் ஒன்று இன்று வரை தம்பலகாமம் கோணேஸ்வரர் ஆலயத்தில் வழிபாட்டில் இருந்து வருவதனைக் காணலாம். ஏனைய இரண்டு வெண்கலச் சிலைகளும் கொழும்பு அரும் பொருளகத்திலே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். இலங்கையில் கிடைத்த பார்வதி வெண்கலச் சிற்பங்களுள் எல்லாவற்றுக்கும் உரைகல் போன்று அமைந்தது திருகோணமலை தம்பலகாமம் கோணேஸ்வரர் கோயிலிலிருந்து வரும் பார்வதி சிலை எனலாம்.[10]

பதவியாவிலிருந்தும் பார்வதி வெண் கலச் சிலைகள் பல கிடைத்திருந்தும், அவை சரியான முறையில் அடையாளம் காணப்படாத நிலையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இடத்தின் பெயர் பதிவுசெய்யப்படாத ஒரு நிலையிலும் பல அரும்பொருளகங்களின் கைமாற்றங்களி னூடாக கொழும்பு அரும் பொருளகத்தினை அவை சென்றடைந்ததன் காரணமாகவும் லக்ஷ்மி அல்லது கௌரி என்ற பெயரில் கண்டெடுக்கப்பட்ட இடத்தின் பெயரின்றி காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். பதவியா ஸ்ரீபதி எனவும், பார்வதி எனவும் ஸ்ரீபதிக்கிராமம் எனவும் அழைக்கப் பட்டது. பார்வதியின் பெயரில் சத்திரங்கள் பல அங்கு இருந்தமைக்கும் சான்றுகள் உண்டு.[11] இந்நிலையில் பார்வதியின் வழிபாடு அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல்யம் அடைந்திருக்கும் என்பதில் சந்தேகமிருக்காது.

**பார்வதி சிலைகளின் பொது இயல்புகள்**

இலங்கையில் இதுவரையில் கிடைத்துள்ள 20 பார்வதி வெண்கலச் சிலைகளுள்ளே 18 சிலைகள் நிற்கின்ற நிலையில் அமைந்தனவாகவும், இரண்டு சிலைகள் மாத்திரம் இருக்கின்ற நிலையில் அமைந்தனவாகவும் கிடைத்துள்ளன. இவற்றினுள்ளே இரண்டு சிலைகள் மாத்திரம் பீடங்களின்றிக் கிடைத்துள்ளன.

ஏனைய 18 பார்வதி வெண்கலச் சிலைகளும் தாமரையாசனத்துடன் கூடியனவாக மீட்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதுவரைக்கும் இலங்கையிற் கிடைத்த வெண்கல இந்து உலோகச் சிலைகள் பற்றி ஆய்வு செய்த கலை வரலாற்று ஆசிரியர்களும் சரி, இந்து சமயத்தின் மீதான ஈடுபாட்டின் காரணமாக அச்சிலைகளைப் பற்றி விளக்கம் கொடுத்த அறிஞர்களும் சரி, நடராசர் சிலைகளைப் பற்றியே பெருமளவிற்கு ஆய்வு செய்வதும் அவற்றுக்கு வகுப்பெண்கொடுத்து அவற்றைப் பற்றி சமய – தத்துவ ரீதியில் விளக்கம் கொடுப்பதுமாக இருந்துள்ளனரே தவிர பார்வதி வெண்கலச் சிலைகளைப் பற்றி அந்தளவுக்கு சிந்தித்திருந்தனர் எனக் கூறமுடியாதுள்ளது. இக்காரணத்தினாலும் காலத்துக்குக் காலம் கிடைத்துவரும் எண்ணிக்கையில் அவை அதிகரித்துவரும் காரணத்தினாலும் அச்சிலைகளைப்பற்றி விளக்கும் போது, அவை கொழும்பிலுள்ள அரும்பொருளகப் பதிவேட்டில் பதிவு செய்ததன் பிரகாரம் அவற்றுக்கு இலக்கமிட்டு விளக்கமளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இச்சிறு கட்டுரையின் கண் அதே பண்பு பின்பற்றப்பட்டு தனித்தனியான முறையிலே மிகச்சுருக்கமாக அவை ஒவ்வொன்றையும் பற்றி விபரிக்கப்பட்டுள்ளமையினைக் காணலாம்.

**பார்வதி சிலை இல : 1**
(CMR No.13.104.286)

தாமரை மலர் ஆசனத்தின்மேல் நிற்கும் நிலையில் அமைக்கப்பட்ட இச்சிலையானது 51.2 சென்ரிமீற்றர்கள் உயரத்தினைக் கொண்டுள்ளது. தலையில் கரண்ட மகுடத்துடன் கூடிய இச்சிலையின் கழுத்தில் கடிசூத்திரம் உட்பட ஆபரணங்களைக் கொண்டதாகவும் காணப்படுகிறது. வலது கரமானது நீலத்தாமரை மொட்டொன்றினைத் தாங்கி நிற்க இடது கரம் கடஹஸ்த நிலையில் கீழே தொங்கியுள்ள நிலையில் காட்டப்பட்டுள்ளது. மேகலையுடன் கூடிய இடையலங்கார ஆபரணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஆடையமைப்பானது கீழே கணுக்கால் வரைக்கும் காட்டப்பட்டுள்ளது. இச்சிலையின் சிற்ப அமைதியை நன்கு அவதானித்த இந்திய சிற்பக்கலை வல்லுனரான கங்கூலி என்பவர் இரண்டு மிகமுக்கியமான முரண்பாடான அம்சங்களை எடுத்துக் காட்டியுள்ளார்[11]. ஒன்று 'திரிபங்க நிலை' எனப்படும் அசைவு நிலை வலப்பக்கமாக வலது பாதமும், வலது இடையும் வளைத்த நிலையில் எடுத்துக் காட்டப்பட்டிருப்பது. இரண்டு வலது கையில் தாமரை மொட்டினைத் தாங்கியுள்ள நிலையானது வலது மார்பகத்துக்கு மேலே உயர்ந்திருப்பது என்பவையாகும். இது சிற்ப சாஸ்திர மரபுகளில் விதிக்கப்பட்ட முறைகளில் இருந்து முற்றிலும் முரண்பட்ட ஒரு தன்மையை எடுத்துக்காட்டுவதாகும். பொதுவாகக் குறிப்பிடுவதாயின் இச்சிற்பத்தின் வெளிப் பாடானது இலங்கைக்கேயுரிய பௌத்த உலோக சிற்பக் கலையில் கைதேர்ந்த ஒரு சிற்பியின் கைவண்ணத்தில் பார்வதியின் உருவை வெளிப்படுத்த முயற்சி செய்தமையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவேயாகும். இப்பார்வதி சிலையின் தலையில் காணப்படும் முடியின் அமைப்பு பௌத்த பாரம்பரியத்தினைத் தெளிவாகப் படம்பிடித்துத் தருகிறது. கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் இச்சிலையின் காலத்தினை கி.பி 10ம், 13ம் நூற்றாண்டுகட்கு சேர்ந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.[12]

**பார்வதி சிலை இல .2**
**(CMR No.13.108.287)**

மிகவும் அழகிய தாமரையாசனத்திலே நிற்கின்ற நிலையில் வடிக்கப்பட்ட இச்சிற்பமானது 63.6 சென்ரி மீற்றர்கள் உயரத்தினைக் கொண்டுள்ளது. பொலனறு வையில் 3ம் சிவதேவாலயத்திலிருந்து அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட இச்சிலை பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்கு வதனைக் காணலாம். தலையில் கிரீட மகுடம், காதுகளில் மகர குண்டலங்கள், வலது கரத்தில் தாமரை மலர், இடது கரம் கடகஸ்த நிலை கைக்கட்டுகளில் (Arm Lets) மகர வடிவ ஆபரணங்கள் என்பன பிரதான அலங்கார அணிகலன்களாக உள்ளன.

இச்சிலையின் அமைப்பினையும் சிற்பசாஸ்திர முறைகளுக்கேற்ற வகையில் அமைந்த தன்மையினையும் அவதானித்த அருணாசலம் அவர்கள் அதனைச் சிவகாமியாக அடையாளம் கண்டுள்ளார்.[13] 'மங்கள சூத்திர மற்ற நிலையில் இவர் இச்சிலையை பொலனறுவையிலே கண்டெடுக்கப்பட்ட சிவன் இலக்கம் 8 இனது சக்தியாக அடையாளம் கண்டுள்ளார். இருப்பினும் , இவ்விரு உலோக சிற்பங்களது ஸிரஸக்ர'வை அவதானிக்கும் போது இவை இரண்டுக்குமிடையே இருக்கின்ற பாரிய வேறுபாடு தெளிவாகின்றது. கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இச்சிலையின் காலத்தினை கி.பி 10ம், 13ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.[14]

**பார்வதி சிலை 3**
(CMR.13.109.287)

திட்டவட்டமாக சோழ மரபினைச் சேர்ந்தது எனக் கொள்ளப்படும் இப்பார்வதி சிலையானது பொலனறுவையில் உள்ள 5ம் சிவதேவாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ள ப்பட்டதாகும். தாமரையாசனத்தின் மீது நிற்கின்ற நிலையில் அமைந்த இச்சிலை யானது 83.34 சென்ரிமீற்றர்கள் உயரத்தினைக் கொண்டதாகும். அலங்கார அம்சங்கள் பொறுத்து ஒரு புதிய பரிமாணத்தினைக் காட்டும் இச்சிலையானது பார்வதியின் உலோக கலைமரபுகளிலிருந்து வேறுபட்ட ஒரு தன்மையைக் காட்டி நிற்கின்றது. இலங்கைக் கேயுரிய தனித்துவமான சோழர் பாணியிலான உலோக வார்ப்புக் கலைக்கு இது ஒரு வேளையில் சான்றாக அமையலாம்.[15]

நீண்ட சதுரமான முகவெட்டினையுடைய இச்சிலையின் தலையில் அழகிய நீண்ட கரண்ட மகுடமானது ஐந்து சுற்றுக்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அக்கரண்ட மகுடத்தின் மையத்தில் குவிந்த வச்சிர வடிவம் புடைத்த நிலையில் காணப்படுவது பார்வதியின் முகவெட்டினை ஒளியூட்டச் செய்கின்றது. இது மாத்திரமன்றி இச்சிலையின் கழுத்திலே அணியப்பெற்றுள்ள மிகத் தடிப்பான கழுத்தாபர ணங்களும், பதக்கங்களும் திட்டவட்டமான வட்ட வடிவிலே அமைக்கப்பெற்றுள்ளது என்பது பார்வதியின் கன்னிமைத் தன்மையை – இளமைக்கு மெருகூட்டும் தன்மையைக் காட்டுவதாக உள்ளது. துரதிஷ்ட வசமாக வலது கர மானது உடைந்த நிலையில் காணப்பட, இடது கரமானது கடகஸ்த நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமளிக்கின்றது. இடது தோட்பட்டை யூடாகச் செல்லும் முப்புரி நூல் (ஜக்நோபம்) செழிப்பினை வெளிப்படுத்தும் தொப்பூழ் மேலாக வலது பக்கமாகக் காட்டப்பட்டுள்ளது. மேகலையுடன் கூடிய இடையாபரணங்களும் ஆடையின் அமைப்பும் பரதநாட்டிய நிலை யிலுள்ள சாயலை வெளிப்படுத்துவதாக உள்ளது. கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் இச்சிலையினை கி.பி 10ம், 13ம் நூற்றாண்டுக்கிடைப்பட்டதெனக் குறிப்பிட் டுள்ளார்.[16]

**பார்வதி சிலை இல . 4**

(CMR No. 13. 110.287)

இப் பார்வதி சிலையானது முன்னைய சிலையுடன் வேறுபட்டு அமையாத போதிலும், ஒரு சில அம்சங்களையிட்டு தனித்துவமான தன்மையைக் கொண்டுள்ளது எனலாம். தாமரை மலர்ப்பீடத்தின் மீது நிற்கின்ற நிலையில் அமைந்த இச்சிலை 84.2 சென்ரி மீற்றர்கள் உயரத்தினைக் கொண்டிருந்த போதிலும், தலையில் உள்ள கரண்ட மகுடத்தின் அமைப்பு மிகவும் சிறியதாகவும் காணப்படுகின்றது. இதேநேரத்தில் இச்சிலையின் வெளித்தோற்ற இயல்பினைப் பொறுத்த வரையில் ஒருவிதமான bold தன்மை வெளிப்படுத்தப்படுவதனையும் அதன் அடிப்படையில் அச்சிலையின் உயரம் கூட மட்டுப்படுத்தப்படுவதனையும் அவதானிக் கலாம். (இதுவே திரிபங்க நிலையின் இயல்புமாகும்). கலாயோகி ஆனந்த குமாரசாமி அவர்கள் இதனை கி.பி. 10ம், 13ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்டதாகக் குறிப்பிட்ட போதிலும், இச்சிலையின் தடித்த உதடுகளை மையப்படுத்திப் பார்க்கும் போது இது கி.பி. 10ம் நூற்றாண்டுக்கும் முற்பட்டதாகலாம் என ஊகிக்க இடமுண்டு.[17]

**பார்வதி சிலை - 5**

(CMR No. 13. 111 A. 288)

பொலநறுவையிலிருந்து வெளிப் படுத்தப்பட்ட இச்சிலையானது தாமரை யாசனத்தில் நிற்கின்ற நிலையில் 62.6 சென்ரிமீற்றர்கள் உயரத்தினைக் கொண் டுள்ளது. பெருமளவிலான அம்சங்களில் இதற்கு முன்னைய சிலையுடன் ஒத்திருந்த போதிலும், குறிப்பிட்ட சில அம்சங்களைப் பொறுத்த மட்டில் தனித்துவம் வாய்ந்ததாகவுள்ளமை குறிப்பிடத் தக்கது. அருணாசலம் அவர்கள் அவதானித் தமையின் அடிப்படையில், மார்புப் பதக்கம், காற்பெரு விரல்களில் உள்ள வளையங்கள் (மெட்டி) என்பனவும், இடதுபக்க தோள்பட்டையூ டாகப் அணிந்துள்ள ஜக்ஞோபத்துடன் (முப்புரிநூல்) 'மங்கள சூத்திரம்' எனப்படும் பெண்களுக்கான மங்கலத்தாலியும் காணப்படுவதிலிருந்து இச்சிலையை சிவகாமி என அடையாளம் காணலாம்.[18] கலாயோகி ஆனந்த குமாரசாமி அவர்கள் இச்சிலையை கி.பி. 10ம் 13ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.[19]

**பார்வதி சிலை இல.6.**

(CMR No. 13. III B. 288)

தாமரையாசனத்தில் நிற்கின்ற நிலையில் அமைந்த இப்பார்வதி சிலையானது பொலநறுவையிலுள்ள முதலாம் சிவதேவாலயத் தினுள் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதாகும். (முதலாம் சிவதேவாலயத்தின் கட்டிடக் கலைப் பண்புகள் பாண்டியர் பாணிக்குரியவையாகும்). 78.7 சென்ரிமீற்றர்கள் உயரத்தினையுடைய இச்சிலையானது பார்வதி சிலைகள் இலக்கம் 2, 5 ஆகியனவற்றிலிருந்து வேறுபட்ட கலையம் சங்களைக் கொண்டு காணப்படுகின்றது. காதணிகள், தாமரை மலர்ப்பீடம் என்பவற்றைப் பொறுத்து தனித்துவத்தையும் காணமுடிகிறது. கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிலையினை கி.பி. 10ம், 13ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.[20]

### பார்வதி சிலை இலக்கம் - 7
(CMR No. 13. 206. 299)

பொலனறுவையில் கண்டுபிடிக்கப்பட்ட பார்வதி சிலைகளுள் மிகச் சிறியதும், சமபங்க நிலையில் நிற்கின்ற ஒரு வடிவமுமே இச்சிலையாகும். இந்திய இலட்சியப் பெண்மையின் தோற்றத்தினைத் தன்னளவிலே வெளிப்படுத்தி நிற்கும் இப்பார்வதி சிலையின் இடப்பாகத்தின் அமைப்பானது விரிவான அழகியல் நோக்கிலமைந்த ஆய்வுக்குரியதாகும். 31 சென்ரி மீற்றர்கள் உயரத்தினைக் கொண்ட இச்சிலையின் ஆபரண ஒழுங்கு முறைகளும், ஆடையின் அமைப்புக்களும், வேறுபட்ட ஒரு கலைமரபின் வெளிப்பாட்டினை, அதன் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் இச்சிலையினை கி.பி.10ம், 13ம் நூற்றாண்டு கட்கு இடைப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளமை இங்கு மீளாய்வுக்குரியதாகும்.[21]

### பார்வதி சிலை இலக்கம் - 8
(CMR No. 13.296. 285)

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கலை மரபில் உருவாக்கப்பட்டு இருக்கும் நிலையில் வெளிப்படுத்தப்பட்ட இப்பார்வதி சிற்பமானது 41 சென்ரிமீற்றர்கள் உயரத்தினை உடையதாக (தாமரை) ஆசனத்தினை இழந்த நிலையில் பொலநறுவையிலிருந்து மீட்டெடு க்கப்பட்டது. இச்சிலையிலும், பார்வதி சிலை இலக்கம் 1 இனது குணவியல்புகளைப் போன்றே பல தனித்துவமான தன்மைகளைக் காண முடிகின்றது. சுகாசன நிலையில் அமைக்கப்பட்ட இப்பார்வதியின் இடது பாதம் கீழ் நோக்கியவாறு தொங்கிக்கொண்டும் வலது பாதம் மடிந்த நிலையிலும், வலது கரத்தில் தாமரை மொட்டொன்றினைக் கொண்டும், இடதுகரம் வரதஹஸ்த நிலையிலும் சித்தரிக்கப்பட்டுள்ளது. தாமரை மொட்டினைத் தாங்கி நிற்கின்ற வலது கரம் பக்க முலைக்காம்புக்கு மேல் உயர்த்தி விடப்பட்ட நிலையானது சிற்ப – சாஸ்திர மரபுகளுடன் முரண்பட்டுக் கொள்வதாக உள்ளது. இதனை அவதானித்த இந்திய சிற்பவியல் ஆய்வாளர் கங்கூலி என்பவர் குறிப்பிடுவதாவது, "ஓரளவுக்கொத்த இன்னொரு பார்வதி சிலையுடன் இச்சிலையை ஒப்பிட்டு நோக்குவோமேயானால், அவற்றின் உருவ அமைதிக்கும், மெருகூட்டலுக்கும் ஆடையாபரணங்களது வரைவுகளுக்குமிடையே காணப்படும் பாரிய வேறுபாடு என்பன எல்லாவற்றையும் கொண்ட இலங்கையின் உதாரணங்களானவை தென்னிந்திய விதி முறைகளுக்கு அவ்வுலோகச் சிற்பியானவன் வழிப்படுத்தப்பட்டவன் அல்லன் என்பதைத் தெளிவாக்குகின்றன." எனக் குறிப் பிட்டுள்ளார்.[22]

பௌத்த கலை மரபின் பிரதான அம்சங்களைக் கொண்டிருக்கும் இச்சிலையின் சிரசிலே சிங்களப் பாணியில் அமையப்பெற்ற முடி (Cornical) ஒன்றும், காதுகளில் அமைந்துள்ள ஆபரணங்கள் இரண்டும், கழுத்திலே அணியப்பெற்ற மாலைகள் மூன்றுமாக இணைந்து இப்பார்வதி சிலையின் தனித்துவமான பிறப்பினை சுதேசக் கலை மரபுக்குரியதாக்கியுள்ளது. கலாயோகி ஆனந்த குமாரசாமி அவர்கள் இச்சிலையினை கி.பி. 10ம், 13ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார். ஒருவேளை இச்சிலையானது கி.பி.13ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகவும் அமையலாம்.[23]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி சிலை இல. 9
(CMR No. 13.213.299)

அனுராதபுரத்திலுள்ள சங்கிலி கணாதரவாவி என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட நிற்கும் நிலையில் அமைந்த பார்வதி சிலையானது 9.4 சென்ரி மீற்றர்கள் உயரமுடையதாகும். வலது கரம் உடைந்த நிலையில், தாமரையாசனம் எதுவுமின்றிக் கிடைத்த இச்சிலையை சரியான முறையில் கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்களால் அடையாளம் கண்டுகொள்ள முடியாத போதிலும் அது பாவனையிலிருந்து விலக்கப்பட்ட ஒரு சிலை என்ற கருத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார். இது வீசப்பட்ட அல்லது பாவனையிலிருந்து விலக்கி வைக்கப்பட்ட நிலையிலேயே சங்கிலி கணாதரவாவியில் கண்டெடுக்கப்பட்டது என்பது அவரது குறிப்பாகும். இதனை வலியுறுத்துவதற்காக 'மகாநிர்வாணதந்திர' என்ற நூலின் 11ம் அத்தியாயத்தில் 100வது சுலோகத்தை பின்வருமாறு எடுத்துக்காட்டு கின்றார். "கால்கள் இல்லாத ஒரு கடவுளருடைய உருவம் அல்லது அதில் உடைவு காணப்பட்டால் அல்லது அவ்வுருவத்தில் துவாரங்கள் காணப்பட்டால் (அதனை) நீருக்குணவாகச் செய்ய வேண்டும். (நீர் நிலைகளில் இதனை இடவேண்டும் என்பதாகும்) எது எவ்வாறெனினும், வலது கரம் இல்லாத இச்சிலையின் அமைதியினைப் பொறுத்த மட்டில் அதன் காலம் கி.பி. 10ம் நூற்றாண்டு களுக்குரியதாக கலாயோகி ஆனந்தகுமார சுவாமி குறிப்பிட்டிருப்பினும், உண்மையில் அதன் காலம் கி.பி.9ம் நூற்றாண்டுக்கும் முற்பட்ட தாகவே கொள்ள வேண்டும்.[24]

பார்வதி சிலை - இல. 10
(Find No. 1960/ 05)

இலங்கையிலே இதுவரையில் அகழ்ந்து வெளிக்கொணரப்பட்ட பார்வதி சிலைகளுள் இச்சிலையே மிகவும் உயரமானதாகக் கிடைத்துள்ளது. 1960ல் பொலநறுவையில் 5ம் சிவதேவாலயத்தின் சுவர்ப்பகுதி மீண்டும் அகழ்வாய்வுக்கு உட்பட்டபோது 93.5 சென்ரிமீற்றர் உயரமான இச்சிலை கிடைக்கப்பெற்றது. இச்சிலை மிகவும் எடுப்பான ஒரு தோற்றத்தினை அதனைப் பார்த்த மாத்திரத் திலே தருகின்றது எனலாம். மிகவும் திருத்தமான – இந்து சிற்ப சாஸ்திரங்கள் நன்கு கைவந்த – பௌத்த உலோக வார்ப்புக்கலை மரபில் உருவான பார்வதியாகவே இச்சிலை காணப்படுகிறது. கூம்பு வடிவான மகுடத்தி னைத் தலையிற் கொண்டு, தாமரையாசனத்தின் மீது நிற்கும் நிலையில் அமைந்த இச்சிலையின் ஆபரண ஒழுங்குகளும், ஆடை நேர்த்தியான தன்மையை வெளிப்படுத்துவதாக அமைகின் றது. கழுத்திலே மிகவும் தடிப்பான பதக்கம் வட்டவடிவிலே மிகத் துல்லியமாக அமைக்கப் பட்டுள்ளது. இடது தோள்ப்பட்டையூடாகச் செல்லும் ஜக்ஞோபத் துடன் மங்கள சூத்திரமும் இணைக்கப் பட்டிருப்பது என்பது இச்சிலையை சிவகாமியாகக் கொள்ள வைக்கின்றது. அவ்வடிப்படையில் கொடகும்புர என்பவர் பொலநறுவையிற் கிடைத்த நடராசர் இலக்கம் 6 இனது சத்தியாக இதனைக் கொள்கின்றார்.[25]

ஆடையமைப்பின் ஒழுங்கு, அதில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மடிப்புக்கள், வளையங்கள் என்பன கைதேர்ந்த தென்னிந்திய வார்ப்புக் கலையில் உருவான படிமத்தினை நினைவூட்டினாலும்கூட, தொடகும்புரவின் கருத்துப்படி இப்பார்வதி சிலையின் ஆடையலங்கார முறையின் குறிப்பிட்ட சில அம்சங்கள் பொலநறுவையில் உள்ள மகாபராக்கிரமபாகுவினதும், தாரா வெண்கலச் சிலையினதும் ஆடையமைப்பு முறையை ஞாபகப்படுத்துவதாக உள்ளது என்பதாகும். கொடகும்பு, இச்சிலையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி.11ம், 12ம் நூற்றாண்டுக்குரியது எனக் குறிப்பிட்டுள்ளார்.[26]

**பார்வதி சிலைகள் இலக்கம் 11 ~ 12**
(FIND No. 1950)

திருகோணமலையில் வடக்கு கடற்கரை வீதியில் தற்செயலாகக் கிடைத்த பெரும் கலைக்கருவூலங்களுள் இவ்விரு பார்வதி சிலைகளும் உள்ளடங்கியிருந்தன. இலங்கையின் இந்து விக்கிரஹவியல் வரலாற்றிற்கு திருகோணமலையில் கிடைத்த இப்படிமங்கள் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. இலங்கைக் கேயுரிய காலத்தால் முந்திய தனித்துவமான இந்து படிமக்கலை மரபொன்று திருகோணமலை மாவட்டத்தில் வளர்ச்சியடைந் தமைக்கு இவை சான்றாகின்றன. பார்வதி சிலை இலக்கம் 11 இருக்கின்ற நிலையிலும் 12 நிற்கின்ற நிலையிலும் அமைந்துள்ளன. இருக்கின்ற சிலையின் உயரம் 47.6 சென்ரிமீற்றர்கள் ஆகும். நிற்கின்ற சிலையின் உயரம் 50 சென்ரிமீற்றர்களாகும். வரத முத்திரையுடன் கூடிய இருக்கின்ற நிலையில் உள்ள பார்வதியின் வலது கரத்திலே நீலோற்பல மலர்மொட்டு காணப்படுகிறது. சுகாசன நிலையில் அமைந்த இச்சிலையின் வலது பாதத்தின் பெருவிரல், சாய்வாக கீழே தொங்கிக்கொண்டிருக்கும் இடது பாதத்தின் முழங்காலினை மெல்லத் தொட்டபடி காணப்படுவது அதன் பழமைத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றது எனலாம். இச் சிலையைப் பற்றி ஆய்வு செய்த பாலேந்திரா என்பவரினதும், இராகவன், கிருஷ்ணஐயர் என்போர்களது கருத்துப்படியும், இப்பார்வதி மூர்த்தமானது சோமஸ்கந்த மூர்த்தத்தின் இணையே என்பதாகும்.[27] சிற்ப–சாஸ்திர விதி முறைகளுக்கமைய சோமஸ்கந்த மூர்த்தத்தில் பார்வதியின் இடது காதணி "மயிற்சிறகினை"க் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் இப்பார்வதி மூர்த்தமானது இற்றைவரையில் வழிபாட்டுப் பொருளாய் இருந்து வருகின்றமை காரணமாக அவ்விசேட இயல்புகளைக் கண்டறிந்து கொள்ள முடியாதிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நிற்கின்ற நிலையில் அமைந்த பார்வதி சிலையின் சிறப்பியல்புகள் பல இந்திய சிற்பக்கலை ஆய்வாளர்களை மட்டுமன்றி, ஐரோப்பியக்கலை விற்பன்னர்களையுமே ஈர்ந்துள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. இச்சிலையில் விசேட அம்சம் என்னவெனில் திருவாசி அல்லது பிரபாமண்டலத்தினுள் தாமரையாசனத்தின் மீது உருவாக்கப்பட்ட ஒரேயொரு வடிவம் இது என்பதாகும். துரதிஷ்டவசமாக அத்திருவாசியின் மேற்பாகம் எமக்குக் கிடைக்காமற் போயிற்று. மீனாட்சி என்று வர்ணிக்குமளவிற்கு எடுத்த எடுப்பிலே ஒரு மீனைப்போன்ற தோற்றத்திலே உண்மையான திரிபங்க நிலையிலே, இந்தியப் பெண்மையின் இலட்சிய பிம்பம் பிரதிபலிக்கும் படி வடிக்கப்பட்ட இப்படிமம் H.Zimmer என்ற மேலைத்தேய கலைப்புலவரை ஒருங்கே ஈர்த்துள்ளது. அவருடைய வர்ணனையில் இங்கு குறிப்பிடுவதாயின் "It is moment of Romance" என்பதாகும். கிருஷ்ணஐயர் என்பவரது கருத்தின்படி இப்படிமமானது கி.பி. 11ஆம் நூற்றாண்டுக்குரியது என்பதாகும்.[28]

**பார்வதி சிலை இலக்கம் 13**
(CMR. No. 13.214.299)

தாமரைப்பீடத்தின் மீது நிற்கும் நிலையில் அமைந்த இப்படிமமானது 16 சென்ரிமீற்றர்கள் உயரத்தினையுடையதாக வுள்ளது. திருகோணமலையிலிருந்து பெறப்பட்ட இப்படிமம் கலாயோகி ஆனந்தகுமாரசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் "சக்தி" அல்லது "லக்ஷ்மி" என அடையாளம் காணப்பட்டுள்ளது.[29] ஆனால் இப்படிமத்தின் சிறப்பியல்புகள் பல அதனைப் பார்வதியுடன் அடையாளம் காண்பதற்கு உதவுவதாகவுள்ளன. மார்புக்கவசம் அணிந்த நிலையில் இடது கரத்தினால் தாமரை மொட்டினைத் தாங்கி நிற்கும் நிலையும், வலது கரம் வலது பாதத்தின் முழங்கால் வரைக்கும் நீண்டிருப்பதும் சிறப்பியல்புகளாக அமைந்துள்ளன. மேகலாபரணங்களுடன் இணையப் பெற்ற ஆடையமைப்பானது பெருமளவுக்கு பார்வதி சிலை 12ஐ நினைவுபடுத்துவதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் இப்படிமத்தின் காலத்தினை சந்தேகத்தோடு கி.பி. 13ஆம் நூற்றாண்டு எனக் குறிப்பிட்டுள்ளபோதும் அதற்கும் முற்பட்ட காலத்தைச் சேர்ந்தது எனக் கொள்ளமுடிகிறது.[30]

### கலாசார முக்கோணத் திட்டத்தின்கீழ் பார்வதி சிலைகள்

அனுராதபுரம், பொலனறுவை, கண்டி ஆகிய மூன்று முக்கியமான புராதன நகரங்களை இணைக்கும் முக்கோண வலயத்தினுள்ளே கலாசார அமைச்சினால் மேற்கொள்ளப்படும் தொல்லியல் அகழ்வாய்வுகளின் போதும் கிடைத்த கலைக் கருவூலங்களுள் ஏழுக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய பார்வதி வெண்கலச் சிலைகளும் உள்ளடங்கும். இவற்றில் ஒன்றிலே தான் "நானாதேசி" என்ற பெயர் பொறிக்கப்பட்ட படிமமும் காணப்படுகின்றது. கலாசார முக்கோண வலயத்தினுள்ளே கிடைக்கப்பெற்ற இப்பார்வதி வெண்கலச் சிற்பங்கள் யாவும் நிற்கின்ற நிலையிலே அமையப்பெற்றனவாகும். வேறுபட்ட உயரவித்தியாசங்களில் கிடைக்கப் பெற்ற இப்படிமங்கள் யாவும் விஞ்ஞான முறையிலமைந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை (Conservation) காரணமாக அவற்றைப் பற்றிய மேலதிக விபரங்களை தற்போது பெற்றுக்கொள்வதில் சிறிது கஷ்ட நிலமையுள்ளது. எதிர்காலத்தில் இச்சிலைகள் பற்றிய விசேட அம்சங்கள் சைவசமய வரலாற்றிற்கு மேலதிக விபரங்களைத் தருவதாக அமையலாம்.

### முடிவுரை

மேலே கொடுக்கப்பட்டுள்ள இச்சிறு ஆய்வில் – மத்தியகால இலங்கையில் கண்டுபிடிக்கப்பெற்ற பார்வதி வெண்கலச் சிலைகள் தொடர்பான சில அம்சங்களை அறிமுகமாகக் கொடுக்க முடிந்துள்ளது. மேலும் விக்கிரஹவியல் ரீதியாக இச்சிலைகளைத் தமிழ்நாட்டிற் கிடைத்திருக்கக்கூடிய படிமங்களுடன் ஒப்பிட்டு நோக்கி,வேறுபடுத்தி ஆராயும் போதுதான் இலங்கைக்கேயுரிய தனித்துவமான இயல்புகளையும், இலங்கையில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்திருந்த பல்வேறு சிற்பக்கலை மரபுகளையும் இனங்கண்டு அவற்றைப்பற்றி விளக்கமளிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் கிடைத்த பார்வதி வெண்கலப் படிமங்கள் (பொலநறுவையிலிருந்து கிடைத்தவை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புக்கள்

1. கிருஷ்ணராசா. செ; இலங்கை இந்து வெண்கலச் சிற்பக் கலைமரபினூடாக அறியப்படும் ஆபரணக் கலைமரபு கைலாசநாதம், Professor Emeritus Late K.Kailasanatha Kurukkal Commemoration volume, pp. 361 - 371., 2000.
2. மேற்படி; பக். 362.
3. " இசுறுமுனிய விகாரை" எனத் தற்போது அழைக்கப்படும் அனுராதபுரத்திலுள்ள பௌத்த மையம் தென்னிந்தியாவிலுள்ள மாமல்லபுர குகைக் கோயிற் சிற்பங்களையொத்த வகையில் அமைக்கப்பட்டுள்ளது. காஞ்சிப் பல்லவ வம்சச் செல்வாக்கினை வெளிப்படுத்தி நிற்கின்ற 'இசுறுமுனிய' முன்பு 'முன்னேஸ்வரம்' என்றழைக்கப்பட்ட சிவன்கோவில் என்பது M.D. இராகவன் என்பவரது கருத்தாகும். பழம்பெரும் சிவாலயம் ஒன்றினது கோமுகி, ஆவுடையார் போன்றன இன்றும் இசுறுமுனிய விகாரையின் பிற்பக்கச் சுவரில் காணப்படுவதும், யானைச் சிற்பங்களை புடைப்பு முறையில் கொண்டுள்ள தாமரைத் தடாகமொன்றும் காணப்படுவது பல்லவ வம்சப் பண்பாட்டுச் செல்வாக்கினை அனுராதபுரம் நேரடியாக உள்வாங்கியிருந்தமையை உறுதிப்படுத்துகின்றது.
4. இந்திரபாலா, கா. ;'ஆதி இலங்கையில் இந்துமதம்,' வைரவிழா நினைவு நிலை – ஐயரத்தினம் உருவச் சிலை. திறப்புவிழா சிறப்புமலர், தெல்லிப்பளை, p.20; 1978
5. மேற்படி. ; பக். 20
6. கிருஷ்ணராசா. செ. ; பெருமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை; 'இலங்கையில் இந்து வெண்கலச் சிற்பங்கள் – உருவாக்கமும் உருவாக்கியவர்களும் பற்றிய ஓர் உசாவல் (கி.பி.9ம்– 10ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்டவை)' 29 .03.2004 இல் கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்தப்பெற்ற உரையிலிருந்து. (பிரசுரிக்கப்படாதது)
7. மேற்படி.;முன்னர் குறிப்பிடப்பட்டது.
8. Bell H.C. P. ; Archaeological Survey of Ceylon, Annual Reports for 1906 - p.17; 1907 - p.17; 1909 - pp.3.7.
9. Balendra, W. ; Trincomalee Bronzes, Tamil Culture, vol. II. Ap. 1953. p.179.
10. பாலேந்திரா, W. ; திருகோணமலைத் திருவுருவங்கள் பக். 10 – 11 1953., பொழும்பு
11. Gangoly.R; South Indian Bronzes, pp. 65, 67.
12. Coomaraswamy, A.K.; Bronzes from Ceylon, chiefly from colombo Museum, p.14. 1914

    Arunachalam, P; Polonnaruwa Bronzes..., R.A.S.C.B, Vol. 68, p.218. 1915.
14. Coomaraswamy, A.K.; op. cited. p. 14.
15. மேற்குறிப்பிடப்பட்டது. p.14
16. மேற்குறிப்பிடப்பட்டது. p.14
17. மேற்குறிப்பிடப்பட்டது. p.14
18. Krishnarajah, S.; Saiva Bronzes in Srilanka A dissertation submitted to the Uni. of Mysore, India for M.A.Degree. p. 38., 1983



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. Comaraswamy, A.K. ; Bronzes from..., p. 14. 1914
20. மேற்குறிப்பிடப்பட்டது.
21. Krishnarayah, S. ;Saiva Bronzes from.,., p. 39
22. Gangoly , op. cit., p. 67.
23. Krishnarajah, S. ;Saiva Bronzes from..., p. 40
24. மேற்படி. p. 40
25. Godakumbura, C.E.; 'Polonnaruwa Bronzes', Archaeological Commissioner's Administration Report - 1960. Colombo; Polonnaruwa Bronzes, Colombo, 1964. p.12
26. மேற்படி. ; p. 12.
27. Krishna Iyer, E; Newly found Trincomalee Incons', The Madras Hindu, 4th. Nov. 1951. p. 12
28. Zimmer, H. ; The Art of Indian Asia, p. 120.
29. Coomaraswamy, A.K.; Bronzes from Ceylon..., op. cit. pl.
30. கிருஷ்ணராசா, செ. ; பெருமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை, முன்னர் குறிப்பிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமக்களின் பரம்பல் கலாசார குடிப்புள்ளியியல் நோக்கு

பேராசிரியர். கா.குகபாலன்

## ஆய்வுச் சுருக்கம்

*குடித்தொகைக் கல்வியானது மக்களது வாழ்வியல் பண்புகளோடு பின்னிப் பிணைந்துள்ளது. இனம், மதம், மொழி, பண்பாடு போன்றன குடித்தொகைக் கூட்டுப்பகுதிக் குள்ளடக்கப்படுகின்றன. இந்த வகையில் மதம் பற்றிக் கல்வி குடித்தொகைக் கல்வியுடன் நெருங்கிய தொடர்புடையது. இவ்வாய்வானது உலகில் வாழும் மக்களில் ஒரு பகுதியினரால் உள்வாங்கப்பட்டு பின்பற்றிவரும் இந்துமதத்தின் தோற்றம், அம்மதத்தைப் பின்பற்றுபவர்களின் உலகளாவிய பரம்பல் போக்கு மற்றும் இம்மதம் எதிர்நோக்கும் சவால்கள் போன்றன பற்றி விளக்கிச் செல்கிறது.*

இந்துமதம் வேதத்தை ஆதாரமாகக் கொண்ட சமயமாகும். அதற்கு வைதீகம் எனவும் பொருள் கொள்வர். இம்மதம் காலத்தால் முற்பட்டது.. ஆதியானது உலக சமயங்களுக்கெல்லாம் முதற் சமயமாகவும் தாய்ச்சமயமாகவும் விளங்கு கின்றது. ஆதிமனிதன் கடவுள் என்ற ஒரு பரம்பொருள் உண்டு என எப்போது உணர்ந் தானோ அப்போதே சைவம் என்னும் நெறியும் உருவாகியது என்பர் இந்துசமயவாதிகள். இதனால் இம்மதம் 25000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது எனக் கொள்வர்.

இந்து என்ற பதம் சிந்து என்பதிலிருந்து பிறந்தது. இந்தியத் துணைக் கண்டத்தின் வடமேற்குப் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் 'சிந்து' என்ற நதி வடி நிலப்பகுதியை முதலில் சுட்டிக்காட்டியிருந்தபோதிலும் காலப் போக்கில் இந்தியப் பிரதேசத்தையே சுட்டுமளவிற்கு விரிவுபெறலாயிற்று[1] அதாவது இந்து என்ற சொல் காலப்போக்கில் பாரதநாடு முழுவதற் குமுரிய சமய பண்பாட்டு நெறிகளைக் குறிக்கும் பொதுச் சொல்லாக வழங்கப் பெறலாயிற்று. உலகில் உள்ள ஏனைய சமயங்கள் எக்காலத்தில் யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதை வரலாற்று மற்றும் அவ்வச்சமய நூல்கள் வாயிலாக அறியமுடிகின்றது. ஆனால் இந்து சமயம் தோன்றிய காலத்தையோ அல்லது தோற்றுவித்தவரையோகணிப்பிட்டுக் கூற வியலாத நிலையினாலேயே இம்மதம் ஆதியும் அந்தமும் இல்லாத சமயம் என்கின்றனர். வட இந்தியாவுக்கு ஆரியர் உள்வருகை கி.மு.1500 ஆண்டுக் காலமாகவிருக்கலாம் எனவும் சிந்துவெளி நாகரிகம் அதற்கு முன்னரேயே காணப்பட்டிருக்கின்றது என ஆய்வாளர் களிடையே எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை. எனவேதான் கி.மு. 2400 ஆண்டு களுக்கு முற்பட்டிருக்கலாம் என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. கி.மு. 1500 – கி.மு. 500ஆம் ஆண்டுக் காலப்பகுதியை வேதகாலம் என்றும் அதற்கு முற்பட்ட காலத்தை சிந்துவெளி நாகரிககாலம் என்றும் வரலாற்றறிஞர்கள் தெரிவிக்கின்றனர். இந்நாகரிக காலத்துக்கான கிடைக்கப்பெற்ற தடயங்கள் ஹரப்பா மொகஞ்சதாரோ போன்ற இடங்களில் பெறப்பட்டுள்ளதையும் நினைவு கூரல் சிறப்புடைத்து.[2]

உலகில் எல்லாச் சமயங்களில் உள்ள சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ள இந்துசமயம் அதன் உபகூறுகளான அறுவகைச் சமயங்களையும் அவற்றின் உட்பிரிவுகளையும் தன்னகத்தே கொண்டு விரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளது. இந்துநதி வடிநிலத்தில் வாழ்ந்த மக்களின் சமயமான இந்து, பரந்த இந்தியா முழுவதும் பரந்து மக்கள் மயப்படுத்தப்பட்ட துடன் காலப்போக்கில் தென்கிழக்காசிய நாடுகளிலும் மேற்காசியா, மற்றும் மேலை நாடுகளிலும் கிளை பரப்பி உலகச் சமயமாக மிளிர்ந்து வருகின்றது. இந்துசமயத்தின் தாயகம் தென்னாசியப் பிரதேசமேயெனினும் உலகின் பல பாகங்களிலும் கிடைக்கப்பெற்றுள்ள புதை பொருள் ஆய்வின் பிரகாரம் உலகில் பெரும்பாலான பிரதேசங்களில் சிவவழிபாடு காணப்பட்டதாகத் தெரியவருகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் கொலராடோ ஆற்றைச் சார்ந்த குன்று ஒன்றில் 10000 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஈஸ்வரன் கோவில் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இத்தாலியில் 5000 ஆண்டு பழமை வாய்ந்த சிவலிங்கமும் அலெக்சாந்திரியாவில் 120 அடி உயரமான சிவலிங்கமும் காணப்படுவதாகத் தெரியவருகிறது[3] இவை தவிர சீனா, மெக்சிக்கோவிலும் சிவவழிபாடு சிறப்புற்றிருந்ததாக புதை பொருளாய்வுகள் தெரிவிக்கின்றன.

## உலகில் மதப்பரம்பல்

மதம் ஒருவனை நல்வழிப்படுத்தும் சாதனம். இதற்கமைய உலகில் வாழும் மக்களில் பெரும்பாலானோர், தமது பாரம்ரிய, மற்றும் விருப்புக்கேற்ப மதங்களைச் சார்ந்தவர்களாக விருக்கின்றனர். அந்த வகையில் உலகில் வாழும் மக்கள் எவ்வவ் மதங்களைச் சார்ந்தவர்கள் என்பதை அட்டவணை 1 விளக்குகின்றது. உலகில் இந்துமதம் ஆதியும் அந்தமும் இல்லாத மதமான போதிலும் தற்போது மக்கள் நேசிக்கும் நிலையில் நான்காவது பெரிய மதமாகவே இருப்பது குறிப்பிடத்தக்கது.

அட்டவணை 1
உலகில் மத அடிப்படையிலான குடித்தொகை 1990 (மில்லியன்)

| மதங்கள் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| 1. கிறீஸ்தவம் | 1783.8 | 33.1 |
| 2. இஸ்லாம் | 950.7 | 17.7 |
| 3. சமயசார்பற்றவர் | 884.5 | 16.4 |
| 4. இந்து | 719.3 | 13.4 |
| 5. பௌத்தம் | 309.1 | 5.2 |
| 6. நாத்திகர் | 236.8 | 4.4 |
| 7. சீனப்பழங்குடிச் சமூகம் | 183.6 | 3.4 |
| 8. புதிய சமயத்தவர் | 140.8 | 2.6 |
| 9. பழங்குடி சமயத்தவர் | 94.0 | 1.7 |
| 10. சீக்கியர் | 18.5 | 0.3 |
| 11. மானிஸ்ட், கன்பூசிபஸ் பஹாய், ஜைனர், மற்றும் சிறுமதத்தினர் | 44.0 | 1.0 |
| **மொத்தம்** | 5385.3 | 100.0 |

**ஆதாரம்: Manorama Year Book 1995**

## இந்துமதத்தவர்களின் பரம்பல் கோலங்கள்

நீண்ட பல காலமாக மக்களை நல்வழிப்படுத்திய இந்துசமயத்தை சார்ந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் உலகளாவிய பரம்பற் கோலத்தை ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தி நோக்குதல் சிறப்பானதாகும். (பின்னிணைப்பு – 1 இனைப் பார்க்கவும்)

- **வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலிருந்து இந்துசமயம் தழைத்தோங்கிய நாடுகளில் இந்துமக்களின் பரம்பல் (இந்தியத் துணைக்கண்டம்).**
- **தென்கிழக்காசியப் பிரதேசங்களில் இந்துமக்களின் பரம்பல்.**
- **குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல் I**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துமக்களின் பரம்பல் II

➢ சமகால இடப்பெயர்வுடன் கூடிய இந்துக் களின் பரம்பல்.

என்பனவே அவையாகும்.

**வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலிருந்து இந்துசமயம் தழைத்தோங்கிய நாடுகளில் இந்துமக்களின் பரம்பல் (இந்தியத் துணைக்கண்டம்).**

ஆதியும் அந்தமும் இல்லாத இந்துசமயமானது காலத்துக்குக் காலம் செழிப்புடனும் சோர்வுடனும் காணப்பட்டிருந்த தாகத் தெரிவிக்கும் ஆய்வாளர்கள் கஸ்பியன் கடலுக்கும் கருங்கடலுக்குமிடையில் வாழ்ந்து வந்த வெள்ளைத்தோலுடைய ஒரு சமூகத்தினர் அங்கு இயற்கை மாறுபாட்டினால் பொருளாதார நிலையில் நலிவுறவே ஒரு சாரார் ஐரோப்பா நோக்கிச் செல்ல மறுசாரார் பாரசீகத்திற்குச் சென்றும் அதனைத் தொடர்ந்து ஹைபர் கணவாயூடாக இந்தியாவின் வடமேற்குப் பிரதேசங்களைச் சென்றடைந்தனர் என அறியமுடிகின்றது. இவர்களே ஆரியர் என அழைக்கப்பட்டனர்.[4] இவர்களின் வருகைக் காலத்தில் இந்தியாவில் நாகரிகம் படைத்த மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என ஆய்வு செய்வோர் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றனர். இதற்குச் சான்றாக மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களும் ஆரியரின் பழைய பாடங்களான வேதங்களும் சான்றுகளாக வுள்ளன. மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் கி.மு. 3000 – 2000 வரையிலானது. எனவே ஆரியரின் வருகைக்கு முன்பிருந்த காலத்தில் வாழ்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள், தெய்வங்கள், கிரியை முறைகள் என்பன ஆரியரினால் பின்பற்றப்பட்டு வந்துள்ளன என்பதைக் காணமுடிகின்றது. அக்காலத்தில் வாழ்ந்த தமிழர்களால் பின்பற்றப்பட்டு வந்த தத்துவஞானங்களையும் அவர்கள் சிறிது சிறிதாக அறியத்தொடங்கினர்.[5] ஆரியர் சமூகம் யாகம் புரிவதிலிருந்தும் தத்துவஞானக் கொள்கையுடையதாக மாறிக்கொண்டும் சைவசித்தாந்தத்தை நெருங்கியும் வரலாயிற்று. இதனை உறுதிப்படுத்துவதற்கு சங்கரர், இராமானுஜர், மாதவர், நீலகண்ட சிவாச்சாரியார் போன்றோரது உரைகள் சான்றாகவுள்ளது.[6]

ஹரப்பா, மொகஞ்சதாரோ தொல்பொருள் ஆய்வின்போது இந்துசமயத்தின் விக்கிரகங்கள், கட்டிடங்கள், கோவில்கள் போன்றவற்றைக் கண்டுபிடித்தனர். சேர் ஜோன் மார்சலும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் சிந்துவெளியில் கிடைத்த புதுமைகளுள் முதலிடம் பெறத்தக்கது சைவத்தின் பழமையேயாகும் என்கின்றார். சிவபெருமான் தென்முகக் கடவுளாகவிருந்து சனகாதி நால்வருக்கு நான்மறைகளை அருளிச் செய்தார் என்னும் ஐதீகம் இந்துசமயத்த வர்களிடையே தொன்றுதொட்டு நம்பப்பட்டு வருகின்றது. இவ்வைதீகத்திற்கும் சிந்து வெளியில் காணப்பட்ட முத்திரைகளின் வடிவத்திற்கும் மிகநெருங்கிய தொடர்புண்டு. எனவேதான் நான்மறைகளும் ஆகமங்களும் ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரேயே இருந்துள்ளன என அனுமானிக்கின்றனர் சமய ஆய்வாளர்கள், இத்தகைய நீண்ட பாரம் பரியத்தைக் கொண்ட சிவனை அக்கால மக்கள் ஆலமர், செல்வன், முக்கண்ணன், பெருந் தேவன் எனப் பல பெயர்கொண்டு வழிபட்டனர். எனவே சிவனே முதலிடம் பெற்று விளங்கினார் என்பதை சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தெரிவிக்கின்றன. [7]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியத் துணைக்கண்டத்தில் வரலாற்றுக் காலங்களில் வாழ்ந்தவர்கள் மற்றும் வெளிப்பிரதேசங்களில் இருந்து உள்வந் தோர்களின் வணக்கத்துக்குரிய சமயமாக விருந்த இந்துசமயம் சோதனைக் குள்ளானது. இந்து மக்களிடையே பௌத்த சித்தாந்தம் முன்வைக்கப்படவே அதில் விசுவாசம் கொண்டு பலர் பௌத்தத்தைத் தழுவினர். இதற்கு அக்கால அரசுகளும் ஆர்வமூட்டும் வகையில் நடந்துகொண்டன. ஆரியர்கள் கி.மு. 322இல் மௌரியப் பேரரசை உருவாக்கினர்.[8] பிரபல்யம் வாய்ந்த மௌரிய அரசனான அசோகன் (கி.மு. 269 – 232) அரச மதமாக பௌத்தத்தை அங்கீகரித்தார். இம்மதம் கி.பி.3ஆம் நூற்றாண்டுவரை சிறப்பிடம் பெற்றிருந்ததாக அறியமுடிகின்றது. இம்மன்னன் காலத்திலேயே இந்தியாவில் மட்டுமல்லாது இலங்கை உட்பட அயல் நாடுகளிலும் செல்வாக்கினைப் பெற்றிருந்தது. ஆனால் குப்தர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 320 – 550) மன்னர்கள் இந்துக்களாகவும் மக்களில் கணிசமானோர் பௌத்தர்களாகவும் இருந்தனர். காலப்போக்கில் அரசர்கள், வள்ளல்கள், ஆதரவு பௌத்தத்திற்கு குறைந்தபோது பௌத்தம் நிலைகுலையத் தொடங்கவே மீண்டும் இந்துசமயம் தன்னிடத்தைப் பெற்றுக் கொண்டது.[9]

இஃது இவ்வாறிருக்க கி.பி. 711ஆம் ஆண்டு இந்தியாவுக்குள் தற்போது பாகிஸ்தான் நாடாகவுள்ள பிரதேசத்தினை அராபியர் படையெடுத்துக் கைப்பற்றினர். 1325 வரை வட இந்தியாவில் தமது ஆட்சியை ஸ்திரப்படுத்தி மக்களில் ஒரு பகுதியினரைத் தம்மதம் சாரவைத்தனர். ஆனால் முகம்மது பின் துக்ளக் (கி.பி. 1325 – 1351) தற்போதைய கேரள மாநிலம் உட்பட தென் இந்தியப் பகுதிகளைக் கைப்பற்றினான். எனினும் அதன் பின்னர் இஸ்லாமியப் பேரரசு பலமிழக்கத் தொடங்கின. இஸ்லாமியர் இந்தியத் துணைக் கண்டத்தை கைப்பற்றிய காலத்திலிருந்து இந்துக்களை விவாகத்தின் வாயிலாகவும் மதமாற்றம் காரணமாகவும் தம்மதம் சாரச் செய்தனர். எவ்வாறெனினும் இந்துசமயத்தை மக்கள் மனங்களிலிருந்து அப்புறப்படுத்த முடியவில்லை. எனினும் இஸ்லாமியர் ஆட்சியின்போது ஆப்கானிஸ்தான், பேர்சியா, மத்தியஆசியப் பகுதியிலிருந்து கலாசாரம், இலக்கியம், கட்டிடக்கலை, இராணுவ நடவடிக்கைகளை இந்தியத் துணைக் கண்டத்தில் புகுத்தினர். அதன் பின் மேலை நாட்டினர் இந்துசமயம் தோன்றிய பகுதிகளில் தம்மதங்களைத் திணித்தனர். இருப்பினும் இந்தியப் பெருநிலப்பரப்பில் கிறீஸ்தவம் உள்ளிட்ட மதங்கள் பெருமளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட வில்லை என்றே கூறல்வேண்டும்.[10]

## தென்னாசிய நாடுகளில் இந்துசமயம்

தென்னாசிய நாடுகளில் இந்தியா, நேபாளம், வங்களாதேசம், இலங்கை, பூட்டான், பாகிஸ்தான் ஆகியவற்றில் இந்துசமயம் நிலைபெற்றுள்ள போதிலும் பாகிஸ்தான், வங்களாதேசம் ஆகியவற்றில் இஸ்லாம் மதமும் பூட்டானிலும் இலங்கையிலும் பௌத்தமும் பெரும்பாலான மக்களால் போற்றப்படும் மதங்களாகவுள்ளன. இருப்பினும் இந்துமதம் சார்பு ரீதியாக விருத்திபெற்றுள்ளது.[11]

உலகிலேயே இந்துமதத்தை அரசமதமாக ஏற்று போற்றிவரும் ஒரே நாடு நேபாளமாகும். உலகில் இந்துக்கள் அதிகமாக வாழும் நாடுகளில் இரண்டாவது நிலையில் உள்ளது. இந்நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 91.0 சதவீதத்தினர் இந்துக்களாவர். ஏனையோர் பௌத்தர்களும் இஸ்லாமியர்களுமாவர். பௌத்தர் நாட்டின் வட பகுதியிலும் இஸ்லாமியர் தென் பகுதியிலும் தொட்டம் தொட்டமாக வாழ்ந்து வருகின்றனர்.[12]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் இந்துக்கள் அதிகமாக வாழ்ந்துவரும் நாடு இந்தியாவாகும். இங்கு 1991 ஆம் ஆண்டில் 806.4 மில்லியன் இந்துக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். மொத்தக் குடித் தொகையில் 82.4 சதவீதமானவர்கள் இந்துக்களே, இந்நாட்டில் பல்லின, பல மதங்களைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருவதனால் மதச்சார்பற்ற கொள்கையினை அரசு கடைப்பிடித்து வருகின்றது.

**அட்டவணை II**

**இந்தியாவின் மதப்பரம்பல் 1991 (சதவீதத்தில்)**

| மதம் | சதவீதம் |
|---|---|
| இந்துக்கள் | 82.4 |
| இஸ்லாமியர் | 11.7 |
| கிறீஸ்தவர்கள் | 2.3 |
| சீக்கியர் | 2.0 |
| பௌத்தர் | 0.8 |
| ஜயின் | 0.4 |
| ஏனையோர் | 0.4 |
| மொத்தம் | 100.0 |

**Source : Census of India 1991**

இந்தியாவில் நாடு முழுவதும் இந்துக்கள் பரவலாக வாழ்ந்து வருகின்ற போதிலும் வட கிழக்குப் பிரதேசங்களிலும் வடக்கே ஜம்முகாஷ்மீர் மாநிலத்திலும் குறைவான பரம்பலைக் கொண்டிருக்கின்றது. ஒரிசா, மத்திய பிரதேசங்களிலும் இமாலயப் பிரதேசத்திலும் இந்துக்கள் செறிவாகவுள்ளனர். இந்தியாவின் குடித்தொகையில் 10.0 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் தொழில் வாய்ப்புக் கருதி அப்போதைய பிரித்தானிய குடியேற்ற நாடுகளுக்கும் 20ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதிகளில் விருத்திபெற்ற நாடுகளுக்கும் இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். ஆரம்ப காலங்களில் இலங்கை, மலேசியா, பிஜி, மொரிசியஸ், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்கும் பின்னர் அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்கும் சென்றுள்ளனர்.[13]

உலக நாடுகளில் இந்துக்கள் அதிகமாக வாழும் நாடுகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தை வங்காளதேசம் பெற்றுள்ளது. இங்கு 14.44 மில்லியன் இந்துசமயிகள் வாழ்கின்றனர். நாட்டின் மொத்தக் குடித்தொகையில் முஸ்லீம்கள் 86.6 சதவீதத்தினராகவும் இந்துக்கள் 12.1 சதவீதத்தினராகவும் காணப்படுகின்றனர். 1947இல் இந்தியா சுதந்திரத்திற்கு முன்னர் வங்காளதேசம் இந்தியாவின் ஒரு பகுதியாகவிருந்துள்ளது. பாகிஸ்தானின் ஒரு அலகாக உருவாக்கப்பட்ட பின்னரும் கூட பெருமளவில் இந்துக்கள் இந்தியாவுக்குள் இடம்பெயரவில்லை. தற்போது அந்நாட்டில் சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்றனர்.[14]

இந்தியத் துணைக் கண்டத்தில் இந்துக்கள் அதிகமாக வாழ்ந்துவரும் நான்காவது நாடு இலங்கையாகும். 2001ஆம் ஆண்டு குடித்தொகை மதிப்பீட்டின் பிரகாரம் 2.8 மில்லியன் இந்துக்கள் வாழ்ந்துவருகின்றனர். நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 13.2 சதவீதத்தினராகவுள்ளனர். குடிக்கணிப்புக் குட்படாத மாவட்டங்களில் மாவட்ட செயலகங்களில் கணிப்பிடப்பட்டிருந்த இந்துக் களின் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு மதிப்பிடப்பட்டது. இலங்கையில் இந்துக்களின் பரம்பல் இந்தியப் பெருநிலத்தின் இந்துக்களின் பரம்பலோடு மிகவும் தொடர்புடையது. அசோக மன்னன் இலங்கையில் பௌத்தத்தை அறிமுகம் செய்த காலத்தில் இந்துக்களே வாழ்ந்திருக்க வாய்ப்புண்டு. காலப் போக்கில் அவர்களில் ஒருசாரார் பௌத்தத்தைத் தழுவிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டனர். பின்னரும்கூட, இந்தியாவின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் செல்வாக்கு இலங்கையின் இந்துக்களின் பரம்பலைத் தீர்மானித்திருக்கின்றன என்பதில் சந்தேகமேயில்லை.19ஆம் 20ஆம் நூற்றாண்டு களில் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட இந்தியத் தமிழர்களில் பெரும்பாலானோர் இந்துக்களாகவிருந்துள்ளனர்.[15] 2001ஆம் ஆண்டு குடித்தொகைக் கணிப்பீட்டின்படி நுவரெலியா மாவட்டத்தின் மொத்தக் குடித்தொகையில் 52.0 சதவீதமானவர்கள் இந்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.[16] இலங்கையில் இந்துக்கள் அதிகமாக வாழும் மாவட்டம் யாழ்ப்பாணமாகும். இதற்கடுத்து மட்டக்களப்பு, நுவரெலியா, கொழும்பு மாவட்டங்களாகத் தொடர்கின்றன.

அட்டவணை III

இலங்கையில் மதப்பரம்பல் 2001 (சதவீதத்தில்)

| மதம் | சதவீதத்தில் |
|---|---|
| பௌத்தம் | 71.2 |
| இந்து | 13.2 |
| இஸ்லாம் | 7.7 |
| கிறீஸ்தவம் | 7.6 |
| ஏனைய மதங்கள் | 0.3 |
| மொத்தம் | 100.0 |

**ஆதாரம்: 1)இலங்கைக் குடிக்கணிப்பு அறிக்கை 2001**

**2) வடக்கு கிழக்கு மாகாண இந்துக் குடித்தொகை மதிப்பிடப்பட்டவை**

இந்தியத் துணைக் கண்டத்தில் பாகிஸ்தானில் 1.6 மில்லியன் இந்துக்களே வாழ்ந்து வருகின்றனர். இது அந்நாட்டின் குடித்தொகையில் 1.1 சதவீதமாகும். இந்நாடு இஸ்லாமியர் படையெடுப்பின் பின்னர் முழுமையாக இஸ்லாமிய மயப்படுத்தப்பட்ட பிரதேசமாகவிருந்தது ஒருபுறமிருக்க 1947ஆம் ஆண்டு இந்திய – பாகிஸ்தானிய பிரிவினையின் போது கணிசமான இந்துக்கள் இந்தியாவுக்குள் இடப்பெயர்வினை மேற்கொண்டதால் இந் நாட்டில் இந்துக்களின் பங்கு குறைவாக வேயுள்ளது.[17]

பூட்டானில் பௌத்த சமயத்தினரே அதிகமாக வாழ்ந்துவரினும் நாட்டின் குடித்தொகையில் 23.0 சதவீதத்தினர் இந்துக்களாவர். இந்தியத் துணைக் கண்டத்திற்கு அண்மையில் உள்ள ஆப்கானிஸ்தானில் இரண்டரை லட்சம் இந்துக்கள் தற்போதும் வாழ்ந்து வருகின்றனர். வரலாற்றுக் காலங்களில் இப்பிரதேசங்களில் இந்துக்கள் வாழ்ந்துள்ளனர். என ஆய்வாளர் கள் கருதுகின்றனர்.[18] தலிபான் ஆட்சியில் பௌத்த சின்னங்களை அழித்துள்ளனர். இஸ்லாமியர் இப்பிரதேசங்களைச் சென் றடைந்த காலங்களில் பௌத்தம் செழுமையா கவிருந்துள்ளது எனவும் முன்னர் வாழ்ந்த இந்துக்களே பௌத்தர்களாகி இருக்கலாம் எனவும் வரலாற்றாய்வாளர்கள் கருத்தாக வுள்ளது.

**தென்கிழக்காசியப் பிரதேசங்களில் இந்துக்களின் பரம்பல்.**

இந்துசமயத்தின் தோற்றுவாய் இந்தியப் பெருநிலமாகவிருக்கின்ற அதேவேளை இம் மதத்தைத் தம்மதமாக ஏற்று அதன் வழி ஒழுகிய மக்கள் வாழ்ந்த பிரதேசங்கள் சிறப்பாக இந்தோனேசிய தீவுகள் உள்ளிட்ட தென்கிழக் காசியப் பிரதேசம் என்பது வெள்ளிடைமலை. பரந்துபட்ட பூமியில் காலத்துக்குக் காலம் நிலப்பிரதேசங்களை கடல் கொண்டதாக புவியியல் மற்றும் தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர். ஆசியாவோடு இணைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோனேசியாவை உள்ளிட்ட பெருநிலப்பரப்பு நாளடைவில் கடல் கொண்டுவிட்டதால் மிகுதிப்பகுதி இன்றைய நிலப்பரப்பாகக் காணப்படுகின்றது. எனவே இப்பிரதேசங்களில் வரலாற்றுக் காலங்களிலிருந்து இந்துக்கள் வாழ்ந்திருக்கலாம் எனவும் அவர்கள் தம் பரம்பரையினரே இந்தோனேசியா உள்ளிட்ட பிரதேசங்களில் வாழ்ந்த, வாழ்ந்துவருகின்ற இந்துக்கள் எனக்கொள்பவர்களும் உளர்.[19] எனினும் தொல்லியலாளர்கள் உட்பட ஆய்வுத் துறையினர் இந்துமதம் இந்தியாவிலேயே தோற்றுவிக்கப்பட்டது என உறுதிப்படத் தெரிவிக்கின்றனர். இதற்கு ஆதாரமாக கி.மு.1500 ஆண்டுகளுக்கு முன்னர் ஹைபர் கணவாயூடாக இந்தியாவுக்கு வந்த ஆரியர்களுக்கு அக்காலத்தில் காணப்பட்ட திராவிட நாகரிகம், கட்டடக்கலை , சிற்பக்கலை போன்ற பலவற்றைக் கண்டு அதிசயிக்க வைத்தது எனக் கூறப்படுகின்றது. எனவே இந்தியப் பெரு நிலத்தில் இந்து சமயம் வளர்ச்சியும் விருத்தியும் பெற்றதன் பின்னரே ஏனைய பிரதேசங்களுக்கு விரிவு பெற்றது எனக் கொள்வதே பொருத்தமானதாகவிருக்கும்.[20]

கி.பி. 3 – 5 ஆம் நூற்றாண்டுப் பகுதியில் இந்திய வரலாற்றில் மௌரிய குப்த ஆட்சிகள் வட இந்தியாவில் செழிப்புற்ற காலப்பகுதிக ளிலும் தென்னிந்தியாவில் சோழர், பாண்டியர் ஆட்சிகள் செழிப்புற்ற காலப்பகுதிகளிலும் கம்போடியா, வியாட்னாம் மற்றும் யாவா, சுமாத்திரா, போர்னியோ, சரவாக், உட்பட இந்தோனேசியாவுக்கும் இந்துக்கள் சென்று குடியேறியுள்ளனர் எனவும் ஒரு பகுதியினர் தெரிவிக்கின்றனர்.[21]

இந்தோனேசியத் தீவுகளில் இஸ்லாமியர் வருகைக்கு முன்னர் இந்துக்களும் பௌத்தர்களும் வாழ்ந்து வந்ததற்கு போதிய சான்றுகள் உள்ளன. ஏறத்தாழ கி.பி. முதலாம் நூற்றாண்டளவில் பண்பாட்டில் மேலோங்கி யிருந்த இந்தியாவோடும், சீனாவோடும் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்த நாடு இந்தோனேசியாவாகும். இந்நாட்டு மன்னர்கள் இந்தியச் செல்வாக்கைத் தம் அரண் மனைக்குள் இறுகிப் பற்றினர். கி.பி.முதலாம் நூற்றாண்டினைத் தொடர்ந்து தென்னிந்தியப் பகுதிகளிலிருந்து இந்தோனேசியாவுக்கு வந்த இந்து வர்த்தகர்கள் இந்து மதத்தை இந்தோனேசியாவில் பரப்பினார்கள் எனவும் கூறப்படுகின்றது. இந்திய வர்த்தகர்கள் புடவை வகைகளைக் கொண்டு வந்து பண்டமாற்றாக யாவா போன்ற தீவுகளில் விளைந்த நெல்லினை எடுத்துச் சென்றனர் எனவும் யாவா என்ற பெயரைக் கூட இந்தியர்களே இட்டனர் எனவும் அறியக்கடக்கின்றது.[22]

மிக நீண்ட காலமாக இந்துக்கள் வாழ்ந்து வருவதற்கான வரலாற்றுச் சான்றுகள் இந்நாட்டில் அதிகமுள்ளன. சுமாத்திரா தீவில் தமிழ் நாட்டின் செல்வாக்கு அதிகமாக இருந்துள்ளது. சேர, சோழ, பாண்டிய, கலிங்க மற்றும் மலையாள செல்வாக்கு குறிப்பாக இடப்பெயர்கள் கூட இன்றும் வழக்கிலுள்ளன. அத்துடன் DiengPlateau என்ற இடத்தில் கி.பி.675ல் சிவன்கோவில் கட்டப்பட்டது எனவும் இதுவே மிகப் பழமையான கோவில் எனவும் கூறப்படுகின்றது. சரவாக்கில் ஐந்து பஞ்ச பாண்டவர் கோவில்கள் உள்ளன. அவை திராவிட சிற்பக்கலையை ஒத்ததாக இருக்கின்றது. மேற்கு போர்னியாவில் Sungei Tekatik ஆற்றுக்கரையிலுள்ள சுவர்களில் உள்ள கல்வெட்டுக்கள் இந்துசமயத்தின் சிறப்பை எடுத்துக்கூறியுள்ளது. 9ஆம் நூற்றாண்டு இறுதிவரை தென்னிந்தியாவில் கட்டப்பட்ட கோவில்களின் சுவர்களில் சுட்ட மண்ணும் சுண்ணாம்பும் கலந்த கலவைத் தன்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கும் காணமுடிகின்றது. எனினும் 10ம் நூற்றாண்டின் பின்னர் இந்துசமயத்தோடு இணைந்த இந்தியத் தொடர்பு குறைவடைய லாயிற்று. [23]

இஸ்லாமியரின் ஆதிக்கம் நிலைபெறவே பௌத்த, இந்துசமயங்கள் தமது நிலையி லிருந்து தளரத்தொடங்கின. இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாத பௌத்தர்களும், இந்துக் களும் பாலித்தீவிற்குச் சென்று அங்கு வாழ்ந்து வந்த இந்துக்களோடும், பௌத்தர்களோடும் இணைந்து கொண்டனர். இவர்கள் இன்றுவரை இந்துதர்மத்தையும் சித்தாந்தத்தையும் பின்பற்றி வருகின்றனர். இத்தீவிலுள்ள பெரியகோவில் திரிமூர்த்தி கோவிலாகும். இங்கு வாழும் மக்கள் இயற்கைப் பொருட்களைக் கடவுளாக எண்ணி வழிபடும் பண்பையும் காணமுடிகின்றது. இங்குள்ள கோவில்களில் இறைவனின் சிலையோ அன்றில் இறைவியின் சிலையோ இல்லை. உருவ வழிபாட்டினைக் காணமுடியாது. கோபுரங்களோ கற்கூரையால் வேய்ந்த மண்டபங்களையோ காணமுடியாது. மக்கள் ஈஸ்வரன், விஷ்ணு, பிரம்மா ஆகிய தெய்வங்களை வணங்குகின்றனர். மகேஸ்வரன் தான் அவர்கள் போற்றித் துதிக்கும் முழுமுதற் கடவுளாகும். கோவிலின் உட்பிரவாகத்தில் கர்ப்பக்கிரகம் உள்ளது. இதனுள் சிவலிங்கம் மட்டுமே உள்ளது. இக்கற்பக்கிரகம் எப்போதும் பூட்டியிருக்கும். விழாக்காலங்களில் மட்டும் உருவ வழிபாடு நடைபெறுகின்றது. பாலித்தீவில் இந்து மதத்தினை மக்கள் விசுவாசத்துடன் நேசிக்கின்றனர். [24]

உலகில் நான்காவது பெரிய இந்நதுக்கள் வாழும் நாடு இந்தோனேசியாவாகும். பாலித்தீவில் இந்துக்கள் பற்றி எழுதும் ஆர்வலர்கள் அங்கு 10.0–15.0 மில்லியன் இந்துக்கள் வாழ்ந்துவருவதாகத் தெரிவிகின்ற னர். எனினும் ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்படும் அறிக்கையில் 2000ஆம் ஆண்டில் 5.2 மில்லியன் இந்துக்களே இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது நாட்டின் மொத்தக் குடித்தொகையில் இந்துக்கள் 2.2 வீதமாகும். இதன் உண்மைநிலையை அறிதல் அவசிய மாகின்றது.[25] பாலித்தீவில் மட்டும் பெரியதும் சிறியதுமாக 4661 கோவில்கள் இருப்பதாக J.S.Swellengrebel என்னும் அறிஞர் கணிப்பிட்டுள்ளார்.[26]

தென்கிழக்காசிய நாடுகளில் இந்தோனே சியாவுக்கு அடுத்து அதிக இந்துக்களைக் கொண்ட நாடுகள் பர்மாவும், தாய்லாந்துமாகும். சிறிய எண்ணிக்கையினர் வரலாற்றுக் காலங்களிலிருந்து வாழ்ந்துவரினும் கடந்த நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதிகளில் இந்தியாவில் இருந்து தொழில் தேடிச் சென்றவர்களின் பரம்பரையினரே அதிகம் உளர். பர்மாவில் 7,00,000 இந்துக்களும் தாய்லாந்தில் 1,40,000 இந்துக்களும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களைத் தவிர வியட்னாம், கம்பூச்சியா, பிலிப்பைன்ஸ், புரூணை போன்ற நாடுகளில் எண்ணிக்கையில் குறைவாகவே வாழ்ந்துவருகின்றனர்.[27]

**குடியேற்றவாத ஆட்சியும் இந்துமதமும்**

இந்துமதத்தவர்கள் செறிவாக வாழ்ந்து வந்த இந்தியப் பெருநிலப்பரப்பில் காலத்துக்குக் காலம் சோதனைகளும் வேதனைகளும் ஏற்பட்டன. குறிப்பாக முஸ்லீம்களின் உள்வரவினால் இந்துக்கள் மதமாற்றப் பட்டமையைத் தொடர்ந்து மேலைத் தேசத்தவர்களில் உள்வரவினால் கிறிஸ்தவ சமயங்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு பெருமுயற்சியெடுத்தனர். இதன் விளைவாக தென்னாசிய நாடுகளில் குறிப்பாக இந்தியா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை நாடுகளில் இந்து, பௌத்தர்களில் கணிசமானோரை தம்மதத்துடன் இணைத் தனர். உதாரணமாக 1620ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டில் 52,000 மக்களை கத்தோலிக்க மதத்தைத் தழுவச் செய்தனர் என வரலாறு கூறுகின்றது. [28]

**குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல் I**

15ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலப் பகுதிகளிலிருந்து மேலைத் தேசத்தவர்களின் நாடுகாண்படலம் ஆரம்பமாகின்றது. இக் காலத்தில் கிழக்காசியப் பிராந்தியத்தில் முஸ்லீம்களின் ஏகபோக வர்த்தகத்தைத் தம்வசப்படுத்தியது மட்டுமல்லாது புதிய நிலப்பகுதிகளையும் சேர்த்துக்கொண்டனர். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் எனப்பல மேலை நாட்டினர் ஆசியா, ஆபிரிக்கா, வடதென் அமெரிக்கப் பகுதிகளில் புதிய நிலத்தேட்டங்களைத் தேடிக்கொண்டனர். இவர்களின் மூலாதாரக் கொள்கையானது கிடைக்கப் பெறும் பொருளாதார வளங்களைப் பெற்றுக் கொள்வதுடன், தாம் சார்ந்த மதங்களைக் கைப்பற்றிய பிரதேச மக்களிடம் புகுத்துவதுமாகும். இதனால் பெரிதும் பாதிக்கப்பட்ட மதங்களில் பிரதானமானவை இந்துவும் பௌத்தமுமாகும். [29]

இவ்வாறான நிலையில் குடியேற்றவாதம் மேலோங்கிக் காணப்பட்ட காலப்பகுதியில் ஆபிரிக்காவிலிருந்து கறுப்பினத்தவர்களை அடிமைகளாக அமெரிக்கர் தமது குடியேற்றங் களுக்கு கொண்டுசென்றனர். 1834ஆம் ஆண்டு அடிமை வர்த்தகம் சட்டரீதியாகத் தடைசெய்யப்பட்டதன் விளைவாக ஐரோப்பியர் குறிப்பாக பிரித்தானியக் குடியேற்றவாட்சி நாடுகள் பலவற்றில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை, கனிப்பொருள் அகழல், பொது வேலைப்பகுதியை விருத்தி செய்தல் போன்றவற்றில் ஈடுபடுத்தும் நோக்கில் குறைந்த சம்பளத்தில் வேலை செய்யக்கூடிய இந்தியர்களைக் கொண்டு சென்றனர். குயானா, சூரினாம், ரினிடாட், டொபொகோ, பிஜி, மொரிசியஸ், தென்னாபிரிக்கா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளே அவைகளில் சிலவாகும். இவர்களில் கணிசமானோர் காலத்துக்குக் காலம் தாய்நாட்டுக்குத் திரும்பிவிட்ட போதிலும் எஞ்சியோர் அவ்வவ் நாடுகளையே தமது தாய்நாடாகக் கொண்டனர். இவ்வாறு அழைத்துச் சென்றவர்களில் பெரும்பாலானோர் இந்துக்களாவர். சென்ற விடங்களில் தமது பண்பாட்டினைக் கடைப் பிடித்து வந்துள்ளனர். இதன் விளைவாக இந்துமதம் புதிய நாடுகளைச் சென்றடைந்தது எனலாம். குயானா நாட்டுக்கு 1838ம் ஆண்டிலும் டினிராட் டொபோக்கோவுக்கு 1845 இலும் சூரினாம், ஜமேக்காவுக்கு 1873இலும் பிரித்தானியர் இந்துக்களை அழைத்துச் சென்றனர். தற்போது குயானா நாட்டின் குடித்தொகையில் 28 சதவீதத்தினராகவும் டினிராட்டில் 25 சதவீதத்தினராகவும் காணப்படுகின்றனர். இவர்கள் காளி, மாரியம்மன், முதலிய கடவுளர்களை வணங்குகின்றனர். குயானாவில் காளியம்மனை வழிபட்டால் அம்மை, கொலரா நோய்கள் தம்மைத் தீண்டாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றனர். [30]

அவுஸ்திரேலியாவுக்கு மிகச் சமீபமாக வுள்ள பிஜித்தீவில் கரும்புத் தோட்டத்தில் தொழில்புரியச் சென்றவர்கள் அந்நாட்டின் அரசியலில் பெரும் செல்வாக்குச் செலுத்திவருகின்றனர். 1990இல் மகேந்திர சௌத்ரி என்ற இந்தியர் பிரதமர் பதவியேற்றதும் அதனைத் தொடர்ந்து சுதேசிய மக்களால் புரட்சிச்சதி மேற்கொள்ளப்பட்டு பதவியிறக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதும் அரசியல் வரலாற்று நிகழ்வாகும். 1874இல் பிஜித்தீவைக் கைப்பற்றி 1877இல் கரும்புத் தோட்டங்களை அமைக்கத் தொடங்கவே 1879இல் இருந்து இந்தியர்களை அழைத்துச் சென்றனர். இங்கு 380000 இந்துக்கள் வாழ்ந்து வருகின்றனர்.[31] இதே போலவே மொரிசியஸ் நாட்டிற்கு இந்துக்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களைப் போலவே இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிற்கும் இந்துக்கள் அழைத்துச் செல்லப்பட்ட போதிலும் அவ்வவ் நாடுகளின் அரசியல் நடவடிக்கைகளின் காரணமாக ஒரு பகுதியினர் மீண்டும் தாய்நாடு திரும்பிவிட்டனர். இலங்கையில் 1821 ஆம் ஆண்டு 12.0 சதவீதமாகவிருந்த இந்துக்களின் பங்கு 1901ஆம் ஆண்டு 23.2 சதவீதமாக அதிகரித்திருந்தது. இதற்கு இந்தியத் தமிழர்கள் உள்வந்ததே காரணமாகும்.[32]

**குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல் II**

குடியேற்றவாத ஆட்சியில் இரண்டாம் கட்ட இந்துக்களின் இடப்பெயர்வானது பெரும்பாலும் இருபதாம் நூற்றாண்டின் முதலரைப் பகுதிகளில் நிகழ்ந்துள்ளது. இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலிருந்து ஆபிரிக்கா நாடுகளுக்கும் ஏற்கனவே பிரித்தானியரால் அழைத்துச் செல்லப்பட்ட இந்தியர்கள் வாழும் நாடுகளுக்கும் சிறிய வர்த்தகர்களாகவும் கடைச்சிப் பந்திகளாகவும் தொழிநுட்பவியலாளர்களாகவும் மேற்பார்வை யாளர்களாகவும் எழுதுவினைஞர்களாகவும் கட்டுமானப் பணியினை மேற்கொள்பவர் களாகவும் கென்யா, உகண்டா, தன்சானியா, போன்ற கிழக்காசிய நாடுகளுக்கும் சயர், மாலாவி, சம்பியா போன்ற மத்திய ஆபிரிக்க நாடுகளுக்கும் கானா, நைஜீரியா, சியராலியோன் போன்ற மேற்காபிரிக்க நாடு களுக்கும் செல்லும் பண்பினை இக்காலத்தில் காணக்கூடியதாயிருந்தது. இவர்களில் பெரும்பாலானோர் குஜராத் மாநிலத்தின் கரையோரப் பிரதேசம் சார்ந்தவர்களே முன்னணியில் இருந்தனர். இவர்கள் காலப்போக்கில் பொருளாதார வலுவுடையவர் களாகினர். இதனால் அவ்வவ் நாடுகளில் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்ததுடன் தாம் சென்றடைகின்ற பிரதேசங்களில் இந்துக் கோவில்களையும் கட்டினர். உதாரணமாக கென்யாவின் பொருளாதாரத்தில் 20.0 சதவீதத்திற்கு அதிபதிகளாகினர். இவர்கள் நைரேபியில் பிரமாண்டமான சிவாலயா கோவிலையும் 1927ல் இந்துசங்கம் ஒன்றையும் அமைத்து சமயப் பணியினை மேற்கொண்டு வாழுகின்றனர். கென்யாவின் துறைமுக நகரில் 1904ல் சிவாலயா கோவிலையும் அமைத் துள்ளனர்.[33]

இக்காலப் பகுதியில் இடைத்தரத் தொழில்களுக்கு இந்துக்கள் சென்றடைந்த நாடுகளில் சிறப்புற பொருளாதாரத் தேட்டத்தினைப் பெற்றுக்கொண்டதன் விளைவாகப் பல நாடுகளின் அரசுகளும் சுதேச மக்களும் வெறுப்படைந்தனர். பல நாடுகள் அவர்களை வெளியேற்றுவதற்கு சட்டங்களைக் கொண்டு வந்துள்ளமை ஒருபுறமிருக்க வன்முறைகளின் மூலமும் பொருளாதாரத்தை நலிவடையச் செய்யும் முயற்சிகளும் தொடர்கின்றன. உதாரணமாக உகண்டா, இலங்கை போன்ற நாடுகளில் இவர்களை வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைக் குறிப்பிடலாம். இதனால் ஒருபகுதியினர் தாயகம் திரும்ப மற்றொரு கல்வியுடன் கூடிய பொருளாதார வசதி படைத்தோர் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டுவருகின்றனர். உதாரணமாக பிஜித்தீவில் 1988ல் நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தக் குடித்தொகையில் 55.0 சதவீதமாகவிருந்த இந்துக்கள் உட்பட இந்தியர்கள் 1990ல் 45.0 சதவீதமாகக் குறைவடைந்ததற்கு சுதேச மக்களின் கடும் எதிர்ப்பே காரணம் எனலாம்.

**சமகால இந்துக்களின் பரம்பலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்**

ஐரோப்பியர் தமது குடியேற்றவாத நாடுகளைப் படிப்படியாக இழந்து அந்நாடுகளுக்கு அரசியற் சுதந்திரத்தினை வழங்கிய காலப் பகுதி சென்ற நூற்றாண்டின் பின்னரைப் பகுதியாகும். பின்தங்கிய பொருளாதார வளத்தினைக் கொண்ட இந்து மக்கள் வாழும் தென், தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து பொருளாதாரம், வர்த்தகம், கல்வி, தொழிற்தேட்டம் கருதியும் அரசியல் அடக்கு முறைகளுக்கு பயந்தும் விருத்திபெற்ற மேலை நாடுகளுக்கான இடப்பெயர்வினை மேற்கொண்டு வருகின்றனர். இவ்விடப்பெயர்வு தற்காலிக மற்றும் தற்காலிக நிரந்தர, நிரந்தர இடப்பெயர்வாகவும் பலதரப்பட்ட தன்மைகளைக் கொண்டமைந்துள்ளது. குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளுக்கு முறையே 1.8 மில்லியன், 1.2 மில்லியன் இந்துக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.[34] இவர்களில் கணிசமானோர் பொறியியலாளர், மருத்துவர்கள், தொழினுட்ப வியலாளர்கள், விஞ்ஞானிகள், கணனிப் பொறியியலாளர்கள், வர்த்தகர்கள் போன்ற பலதரப்பட்டவர்களாகவுள்ளனர். இதேபோலவே ஏனைய விருத்திபெற்ற நாடுகளுக்கும் சென்றுள்ளனர்.

உயர்கல்வி, உயர்தொழிலாற்றல் பெற்றவர்கள் உட்பட இடைத்தர மற்றும் ஆரம்பக் கல்வியுடன் கூடியவர்களில் தற்காலிக இடப்பெயர்வு மத்திய கிழக்கு நாடுகளுக்கு மேற்கொள்ளப்படுகின்றது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து முறையே 25,00,000, 200,000 இந்துக்கள் இந்நாடுகளில் தொழில் செய்து வருகின்றனர். இவர்களது ஒப்பந்தகாலம் முடிவடைய மீண்டும் தமது நாடுகளுக்குத் திரும்பிவிடுகின்றனர். இவ் இடப்பெயர்வு தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் செயற்பாடாகவுள்ளது.

1960களைத் தொடர்ந்து ஆபிரிக்க நாடுகள் குடியேற்றவாட்சியாளர்களிடமிருந்து சுதந்திரம் பெற்ற வேளை அவ்வவ் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி, பண்பாட்டு விருத்தியைக் கருத்திற் கொண்டு இந்தியா, இலங்கை, மலேசியா, நேபாளம் போன்ற நாடுகளில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் தொழில்வாய்ப்பைப் பெற அங்கு சென்றனர். அவர்களில் பலர் காலப்போக்கில் தமது பொருளாதாரத் தேட்டத்துடன் மேற்கு ஐரோப்பா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு நிரந்தர குடியிருப்பாளர்களாகச் சென்று விட்டனர்.

உள்நாட்டு அரசியல் பிரச்சினைகள் தாம் வாழ்ந்த நாடுகளில் இருந்து சர்வதேச நாடுகளுக்கு இடம்பெயர வைத்துள்ளது. பிஜி, இலங்கை, கிழக்காபிரிக்க நாடுகள் போன்றவற்றிலிருந்து விருத்தி பெற்ற நாடுகளுக்கு அரசியற் தஞ்சம் – அதனைச் சாட்டாகக் கொண்டு தொழில் வாய்ப்புப் பெறவெனச் சென்றுள்ளனர். பிஜியில் பூர்வீகக் குடிகளில் நெருக்குதல் காரணமாக அந்நாட்டில் வாழ்ந்து வந்த இந்துக்களில் வசதி படைத்தோர் பிரித்தானியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு இடப்பெயர்வை மேற்கொண்டுள்ளனர்.

1970களின் பிற்பகுதியிலிருந்து இலங்கையில் இடம்பெற்று வரும் இன விடுதலைக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதம் ஏந்திய போராட்டத்தின் விளைவாக இந்தியாவுக்கு 160,000 மக்களும் விருத்திபெற்ற நாடுகளுக்கு 600,000 மக்களும் இடப் பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் தவிர தொழில்வாய்ப்புக்கருதி ஏறத்தாழ 200,000 பேர் மத்திய கிழக்கு உட்பட பலநாடு களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலா னோர் இந்துக்களே ஆவர் . இவர்கள் கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா, சுவிற்சர்லாந்து, நோர்வே, அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகளைத் தெரிவுசெய்து அந்நாடுகளில் தற்காலிக மற்றும் நிரந்தரப் பிரஜைகளாக வாழ்ந்துவருகின்றனர். இலங்கையில் இருந்து அண்மையில் சென்றவர்கள் தாம் சென்றடைந்த நாடுகளில் தொடர்ச்சியாக இந்துமதத்தினைப் பின்பற்றுவ துடன் கோவில் கட்டி திருவிழாக்களைச் செய்து வருகின்றனர். பிரித்தானியாவில் ரூட்டிங்கில் முத்துமாரி அம்மன், விம்பிள்டனில் பிள்ளையார், ஈஸ்ட்காமில் முருகன், மகாலட்சுமி, ஈலிங்கில் துர்க்கையம்மன், லூசியத்தில் சிவன், வோல்தமஸ்டோவில் கற்பகவிநாயகர், பத்திரகாளியம்மன், ஆர்ச்வேயில் முருகன், அல்பேட்டனில் ஈழபதீஸ்வரர், ஸ்ரோன்லியில் இராஜ இராஜேஸ்வரி அம்மன்கோவில்களையும் கனடாவில் முருகன், பிள்ளையார், சிவன், துர்க்கையம்மன், ஐயப்பன் கோவில்களையும் கட்டி வழிபடுகின்றனர்.[35] அத்துடன் நின்று விடாது ஈழத்தில் எவ்வெவ் பிரதேசங்களி லிருந்து சென்றார்களோ அவ்வப்பிரதேசங் களிலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களின் பெயர்களை வைத்து வணங்குகின்றனர். ஐக்கிய அமெரிக்காவில் இந்தியர்களும் இலங்கையர் களும் தனித்தும் இணைந்தும் கோவில்கள் கட்டி வழிபாடு செய்கின்றனர் இதேபோலவே அவுஸ்திரேலியாவில், சுவிற்சலாந்து, நியூசிலாந்து போன்ற நாடுகளிலும் ஈழத்தவர் களும் இந்தியர்களும் கோவில்கட்டி பெருவிழாக் கொண்டாடுகின்றனர். குறிப்பாக சீசெல்ஸ் என்ற இந்துசமுத்திரத்திலுள்ள சிறியதீவில் வாழ்ந்துவரும் 300 இந்துக்கள் ஒன்றுகூடி அருள்மிகு நவசக்தி விநாயகர் கோவிலமைத்து கும்பாபிஷேகத்தினை அண்மையில் நடாத்தி மலர் ஒன்றினையும் வெளியிட்டுள்ள னர் என்பது குறிப்பிடத்தக்கது.[36]

## முக்கியமான நாடுகளில் இந்துக்களின் பரம்பல் - 2000

| நாடுகள் | இந்துமக்கள் | நாட்டின் மொத்தக்குடித்தொகையில் இந்துக்களின் பரம்பல் (வீதம்) |
|---|---|---|
| **வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலில் இருந்து சமயம் தழைத்தோங்கிய நாடுகளில் மக்களின் பரம்பல்** | | |
| இந்தியா | 806366000 | 76.0 |
| நேபாளம் | 21115600 | 91.0 |
| வங்களாதேசம் | 14435000 | 10.0 |
| இலங்கை | 2817000 | 13.2 |
| பூட்டான் | 493000 | 23.0 |
| பாகிஸ்தான் | 1616000 | 1.1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஆப்கானிஸ்தான் | 243800 | 0.6 |
| **தென்கிழக்காசியப் பிரதேசத்தில் இந்துமக்களின் பரம்பல்** | | |
| இந்தோனேசியா | 5225000 | 2.2 |
| பர்மா | 700000 | 1.0 |
| வியாட்னாம் | 4000 | – |
| கம்போடியா | 3000 | – |
| தாய்லாந்து | 140000 | 0.2 |
| பிலிப்பைன்ஸ் | 2000 | – |
| புறூனை | 2000 | – |
| மலேசியா | 1500000 | 7.0 |
| சிங்கப்பூர் | 200000 | 6.0 |
| **குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல் I** | | |
| மொரிசியஸ் | 900000 | 46.0 |
| பிஜி | 380000 | 42.0 |
| தென் ஆபிரிக்கா | 990000 | 2.0 |
| குயானா | 400000 | 37.0 |
| சூரினாம் | 200000 | 28.0 |
| ரினிபிட் மற்றும் ரபோசா | 350000 | 25.0 |
| ஜமேக்கா | 8000 | 25.0 |
| **குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துமக்களின் பரம்பல் II** | | |
| கென்யா | 70000 | – |
| உகண்டா | 17000 | – |
| தன்சானியா | 20000 | – |
| மடகஸ்கார் | 1000 | – |
| எதியோப்பியா | 2000 | – |
| நைபீரியா | 20000 | – |
| பொடஸ்சுவானா | 5000 | – |
| சிம்பாவே | 4000 | – |
| மாலாவி | 2000 | – |
| சம்பியா | 10000 | – |
| கானா | 5000 | – |
| **சமகால இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல்** | | |
| ஐக்கிய அமெரிக்கா | 1800000 | – |
| கனடா | 600000 | – |
| ஐக்கியஇராச்சியம் | 1200000 | – |
| ஜேர்மனி | 40000 | – |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பிரான்ஸ் | 50000 | – |
| சுவிற்சலாந்து | 60000 | – |
| அவுஸ்திரேலியா | 80000 | – |
| நோர்வே | 12000 | – |
| நியூசிலாந்து | 40000 | – |
| நெதர்லாந்து | 9000 | – |
| பெல்ஜியம் | 5000 | – |
| ஸ்பெயின் | 15000 | – |
| டென்மார்க் | 5000 | – |
| போர்த்துக்கல் | 15000 | – |
| ருஷ்யா | 10000 | – |
| ஹொங்கொங் | 60000 | – |
| யப்பான் | 5000 | – |
| **இஸ்லாமிய நாடுகளில் இந்துக்களின் பரம்பல்** | | |
| சவுதி அரேபியா | 5000 | – |
| குவைத் | 10000 | – |
| பஃரெயின் | 15000 | – |
| கட்டார் | 5000 | – |
| யூ.ஏ.ஈ | 16000 | – |

Source

1. World Comparative National Statistics
2. Vishwa Mangal Hetavl
3. Encyclopedia Britanica, I.nc p.778.

## அடிக்குறிப்புக்கள்

1. கந்தையாபிள்ளை. க.சி; (1960) இந்துசமயவரலாறு, புரொகிரசிவ் அச்சகம், சென்னை. பக். 2–6
2. இராசமாணிக்கனார். மா; (1955) சைவசமயம், செல்வி பதிப்பகம், காரைக்குடி, பக் 1 – 5
3. குலேந்திரன். பொன்; (2001) சிவயோகம், அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் வெளியீடு, பக். 189 – 193
4. வேலுப்பிள்ளை.ஆ; (1985) தமிழர் சமயவரலாறு, பாரி புத்தகப் பண்ணை, சென்னை ப. 7
5. மே.கு.நூ; ப. 18
6. Sreenivasa Iyangar P.T; (1958) History of Tamils, Madras, p. 11
7. செல்வராசன். பு; (1955) சங்கநூற் செய்திகள், லோட்டஸ் பப்பிளிஷர்ஸ், சென்னை. பக். 32 – 34
8. Ashok.K; Dutt & Margaret Geib; (1998) Atlas of South Asia, Oxford and IBH Publishing Co.Pvt. Ltd, Calcutta. pp 30-31.
9. Ibid.p 32.
10. வாழ்வியற் களஞ்சியம், பகுதி III; (1983) தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் பக் 673 – 674



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. Chandna. R.C; (2000) Geography of Population, Kalyani Publishers; New Delhi, p. 81 - 99
12. Ipid p 87
13. Shankar Rao Tatwawadi; (2000) "Hindus Abroud" Vishwa Mangal Hetave; Uttan, Bharat. PP 115 - 119
14. Ashok.K; Dutt & Margaret Geib (1998), p.33.
15. Kodikara. S.U; (1965) Indo - Ceylon Relations Since Independence, The Ceylon Institute of World Affairs; Colombo. p. 68
16. Census of Population (2001) Department of Censun and Statistics, Colombo - p. 7
17. Chandna. R. C; (2000) p. 87
18. Bhabain Sen Gupta; (1999) Towards a grass - root participatory policy, Himalaya Publishing House , p. 76
19. குருபாதம். க; (1973) 'தென்கிழக்காசியாவில் இந்துசமய வளர்ச்சி', கோலாலம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் கோயில் தேவஸ்தான குடமுழுக்கு விழா சிறப்பு மலர், மலேசியா. பக். 71 – 78
20. Ashok.k; Dutt & Margaret Geib (1998), p. 35-36.
21. நித்தியானந்தன் வா; (1973) "இந்தோனேசியாவில் இந்துக் கோவில்கள்" கோலாலம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் கோவில் தேவஸ்தான குடமுழுக்கு விழா சிறப்புமலர், மலேசியா, பக் 161 – 162.
22. விசுவநாதன். ஈ.ச; (1973) " பாலித்தீவும் இந்துசமயமும்" கோலாலம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் கோயில் தேவஸ்தான குடமுழுக்கு விழா சிறப்புமலர், மலேசியா பக் 146 – 151
23. நித்தியானந்தன். வ; (1973) ப. 163
24. விசுவநாதன். ஈ.ச; (1973) பக் 147 – 148
25. World Comparative National Statistics.
26. விசுவநாதன் . ஈ.ச; (1973) ப. 147
27. World comparative National Statistics.
28. Rasanayagam. C; (1933) Ancient Jaffna, Madras, p . 48
29 Shankar Rav Tatwawadi; (2000) p. 117
30. Shri Vasu Vaj; (2000) " Hinduism in America" Vishwa Mangal Hetave, pp. 134 - 137
31. Shri Ravi Iyer; (2000) " Hinduism in Australia Zone" Vishwa Mangal Hetave, pp. 128 - 131
32. Census of Population 1901, Department of Census and Statistics, Colombo.
33. Purushottam Rao. A. E; " Contribution of Hinduism in Kenya", Vishwa Mangal Hetave, pp. 120 - 123.
34. Shankar Raj Tatwawadi; (2000) p. 117
35. குலேந்திரன் பொன்; (2001) ப. 193
36. Sivasubramaniam. V. ; (2002) Decade of Growth, Seychelles Arul Mihu Navasakthi Vinayagar Temple 1992 -2002, P.O.Box. 644, Seychelles, pp 6 - 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் இலக்கணச் சுருக்கம் – ஓர் அறிமுகம்

திரு.பொ. செங்கதிர்ச்செல்வன்

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழிலே பழந்தமிழிலக்கண நூல்கள் பல கிடைக்கின்றன. அவற்றுட் பலவற்றின் மொழிநடை பிற்காலத்தவர்களுக்குக் கடினமாக அமைகின்றது. அந்த வகையிலே தொல்காப்பியம், நன்னூல் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு தமது காலத்துக்கு வேண்டிய புதிய விடயங்களைச் சேர்த்தும் தேவையற்ற விடயங்களை நீக்கியும் எளிமையான மொழிநடையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய இலக்கணச் சுருக்கத்திலுள்ள புதுமையான விடயங்களை அறிமுகப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

ஈழத்திலே பல இலக்கண நூல்கள் எழுந்துள்ளன. இவை பெரும்பாலும் பழந்தமிழிலக்கண நூல்களைச் சார்ந்து புதிதாக இயற்றப்பட்டவையாக உள்ளன. இருப்பினும் இந்த நூல்கள் முற்று முழுதாகப் பழந்தமிழிலக்கண நூல்களைச் சார்ந்து தான் இயற்றப்பட்டன என்றும் கூறிவிட முடியாது. அவற்றிற் கூறப்படாத பல புதிய விடயங்களையும் சேர்த்துக் கூறுகின்றன. இவற்றுட் சில இன்று எமக்குக் கிடைப்பதில்லை. ஆறுமுக நாவலரின் **இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை** சி.வை.தாமோதரம்பிள்ளையின் **கட்டளைக்கலித்துறை** அ.குமாரசாமிப் புலவரின் **இலக்கண சந்திரிகை, வினைப் பகுபத விளக்கம்** மு.சிதம்பரப்பிள்ளையின் **தமிழ்வியாகரணம்** க.பெ.சௌந்தரநாயகத்தின் **நன்னூற் சுருக்கம், நன்னூற் சுருக்கச் சார்பு, நன்னூற் சுருக்க** அனுபந்தம் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையின் **நன்னூல் இலகு போதம், நன்னூல் உதாரண விளக்கம், Civilian's Tamil Grammar** நீர்வேலிச் சிவப்பிரகாச பண்டிதரின் இயற்றமிழ் இலக்கண சாரம் வாக்கிய நிரூபணம், சேர்.பொன் இராமநாதனின் செந்தமிழ் இலக்கணம் உடுவில் ச. ஜகநாதையரின் **பாட்டியல் வினாவிடை** என்பன இவ்வகையுள் அடங்குகின்றன. இவற்றுள் முதலில் எழுந்ததும் ஏனைய வசன இலக்கண நூல்களுக்கு வழிகாட்டியாக அமைந்ததும் அன்றிலிருந்து பலராலும் பயிலப்பட்டு வருகின்றதுமாகிய இலக்கணச் சுருக்கமே தலை சிறந்த நூலாகக் கொள்ளப்பட்டு வருகின்றது.

நாவலர் தமது 51 ஆவது வயதில் **இலக்கணச் சுருக்கத்தை** எழுதினார் என்று கனகரத்தின உபாத்தியாயர் **ஆறுமுகநாவலர் சரித்திரம்,** பக்கம் 109 இல் எழுதியுள்ளார். அவ்வாறாயின் **இலக்கணச் சுருக்கம்** இயற்றப்பட்ட ஆண்டு 1873 ஆக இருக்க வேண்டும். நாம் ,இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட **இலக்கணச் சுருக்கம்** ச. பொன்னுஸ்வாமி என்பவராற் சென்னை வித்தியாநுபாலன அச்சகத்தில் அச்சிடப்பட்டது. 23ஆம் பதிப்பு, வெளிவந்த ஆண்டு மே, 1957. முதற்பதிப்பிலிருந்து இன்றுவரை **இலக்கணச் சுருக்கம்** பல பதிப்புக்களைக் கண்டுவிட்டது. 1993 இல் சென்னை, முல்லை நிலையத்தார் ஆறுமுக நாவலரவர்கள் – **தமிழ் இலக்கணம் (இலக்கணச் சுருக்கம்)** என்ற பெயரில் நாவலரது **இலக்கணச் சுருக்கத்தை** வெளியிட்டுள்ளனர். அதன் பதிப்புரையில் '**இலக்கணச் சுருக்கம்** என்னும் தலைப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 1886 ஆம் ஆண்டில் யாத்து வெளியிட்ட நூல்...." என்று கூறிச் செல்கின்றனர். இந்தத் தகவல் தவறாகவே இருக்க வேண்டும். எனவே கனகரத்தின உபாத்தியாயரின் கருத்துப்படி இதன் காலத்தை 1873 என வரையறை செய்து கொள்வோம்.

" தமிழ் கற்கப்புகுஞ் சைவசமயிகள் முன்னர்ப் பால பாடங்களைப் படித்துக் கொண்டு, இலக்கணச் சுருக்கத்தைக் கற்றறிந்து பிழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுக." என்பது நாவலரின் கூற்று. தமிழ் நாட்டறிஞர்களிடமும் ஓரளவு இந்நோக்கிருந் தமையை விசாகப்பெருமாளையரின் 'பாலபோத இலக்கணம்' 'இலக்கணச் சுருக்க வினாவிடை' என்பவற்றின் முகவுரைகளினால் அறியலாம் என்று திருமதி.க.சின்னையா[1] (1979) குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் எழுந்துள்ள புதிய இலக்கண நூல்களின் வரிசையிற் சிறப்பிடம் பெறுகின்ற நாவலரின் **இலக்கணச் சுருக்கம்,** எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், தொடர் மொழியதிகாரம் என்ற முப்பிரிவில் இலக்கண விதிகளை உதாரணங்களுடன் இலகுவான நடையில் விளக்குவதாக அமைந்துள்ளது. பரீஷை வினாக்களும் ஒவ்வொரு இலக்கணப் பிரிவுகளுக்கும் பின்னர் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு இலகுவான முறையில் எழுதப்பட்ட வசன இலக்கண நூலாக இது விளங்கினும் மிகத் தெளிவான இலக்கண விளக்கங்கள் பல இலக்கணச் சுருக்கத்திற் காணப்படுகின்றன.

**இலக்கணச் சுருக்கம்** எழுதிய நாவலர் அதற்கு முன்னுரை எழுதவில்லை. சூசீபத்திரம் என்ற தலைப்பிற் பின்வரும் விடயங்களைத் தருகின்றார்.

**எழுத்ததிகாரம்**

எழுத்தியல்

பதவியல்

புணரியல்

**சொல்லதிகாரம்**

பெயரியல்

வினையியல்

இடையியல்

உயிரியல்

**தொடர்மொழியதிகாரம்**

தொகைநிலைத் தொடரியல்

தொகா நிலைத் தொடரியல்

ஒழிபியல்

பகுபத முடிவு

சொல்லிலக்கணங் கூறுதல்

சொற்றொடரிலக்கணங் கூறுதல்[2]

நாவலர் கூறுகின்ற தொடர் மொழியதி காரம் என ஒன்றைத் **தொல்காப்பியமோ** அன்றி **நன்னூலோ** வகுத்திருக்கவில்லை. அவை சொல்லிலக்கணத்தினுள்ளேயே தொடரிலக்கணத்தையும் கூறிவிட்டன. தொடர்மொழியதிகாரம் ஆறுமுகநாவலராலேயே புதிதாகச் செய்யப்பட்டுள்ளது. பழந்தமிழ் இலக்கண நூல்களிலே தெளிவாக விளக்கப்படாத சில விடயங்களைத் தெளிவாக விளக்கி **இலக்கணச் சுருக்கத்திற்** கூறிய சிறப்பு நாவலருக்குண்டு.

குற்றியலுகரம் என்பதற்கு நாவலர் கூறுகின்ற விளக்கம் நோக்கத்தக்கது.

"குற்றியலுகரமாவது, தனிக் குற்றெழுத்தல்லாத மற்றையெழுத்துக்களுக்குப் பின்னே மொழிகளினிறுதியில் வல்லின மெய்களில் ஏறிநிற்கும் உகரமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்குற்றியலுகரம், ஈற்றெழுத்தாகிய தன்னைத் தொடர்கின்ற அயலெழுத்தின் வகையினாலே, நெடிற்றொடர் குற்றியலுகரம், ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் உயிர்த் தொடர்க் குற்றியலுகரம், வன்றொடர்க் குற்றியலுகரம் மென்றொடர்க் குற்றியலுகரம், இடைத்தொடர்க் குற்றியலுகரம் என ஆறுவகைப்படும். அவைகளுள் நெடிற்றொடர் மாத்திரம் இரண்டெழுத்து மொழியாகியும் மற்றையைந்து தொடரும் மூன்றெழுத்து முதலிய பலவெழுத்து மொழியாகியும் வரும்.

உ – ம் : நாடு ஆடு – நெடிற்றொடர்க் குற்றியலுகரம்
எஃகு கஃசு – ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்
வரகு பலாசு – உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்
கொக்கு கச்சு – வன்றொடர்க் குற்றியலுகரம்
சங்கு வண்டு – மென்றொடர்க் குற்றியலுகரம்
அல்கு எய்து – இடைத்தொடர்க் குற்றியலுகரம்.[3]

இத்தகைய தெளிவான விளக்கம் **இலக்கணச் சுருக்கத்திற்கு** முன் வந்த பழந்தமிழ் இலக்கண நூல்களில் இல்லை எனலாம்.

புணர்ச்சி பற்றிய புணரியலில் 53 பக்கங்களில் விரிவாக விளக்கிச் செல்கின்றார்.

புணர்ச்சியாவது : நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடப் புணர்வதாம். அப்புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சியும் அல்வழிப் புணர்ச்சியும் என இரண்டு வகைப்படும்.

வேற்றுமைப் புணர்ச்சியாவது: ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறுருபுகளும் இடையில் மறைந்தாயினும் வெளிப்பாட்டாயினும் வரச் சொற்கள் புணர்வதாம்.....

அல்வழிப் புணர்ச்சியாவது: வேற்றுமையல்லாத வழியிற் புணர்வதாம். அது வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத் தொகை, அன்மொழித்தொகை என்னும் ஐந்து தொகைநிலைத் தொடரும் எழுவாய்த்தொடர், விளித்தொடர், தெரிநிலை வினைமுற்றுத் தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குச் சொற்றொடர் என்னும் ஒன்பது தொகாநிலைத் தொடருமாகப் பதினான்கு வகைப்படும்...........

இப்படி மொழிகள், வேற்றுமை வழியாலும் அல்வழியாலும் புணருமிடத்து இயல்பாக வாயினும் விகாரமாகவாயினும் புணரும். இயல்புப் புணர்ச்சியாவது: நிலைமொழியும், வருமொழியும் விகாரமின்றிப் புணர்வதாம். விகாரப் புணர்ச்சியாவது: நிலைமொழியேனும், வருமொழியேனும், இவ்விரு மொழியுமேனும், தோன்றல், திரிதல் கெடுதல் என்னும் மூன்று விகாரங்களுள் ஒன்றேயாயினும் பலவற்றையாயினும் பெற்றுப் புணர்வதாம்.

உ–ம்: வாழை + பழம் =வாழைப்பழம் **தோன்றல்**
மண்+குடம் = மட்குடம் **திரிதல்**
மரம்+வேர்= மரவேர் **கெடுதல்**
நிலம் + பனை = நிலப்பனை **கெடுதல், தோன்றல்**
பனை + காய் = பனங்காய் **கெடுதல், தோன்றல், திரிதல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றல், திரிதல் கெடுதல் என்னும் இவ்விகார மூன்றும், மயக்க விதி இன்மை பற்றியும், அல்வழி வேற்றுமைப் பொருணோக்கம் பற்றியும் வரும்''[4]

என்று புணர்ச்சியின் அடிப்படை விடயங்களை விளக்கிய நாவலர், மயங்கா எழுத்துக்கள், மெய்யீற்றின் முன் உயிர்புணர்தல், உயிரீற்றின் முன் உயிர் புணர்தல், குற்றியலுகரத்தின் முன் உயிரும் யகரமும் புணர்தல், சில முற்றியலுகரவீற்றின் முன் உயிரும் யகரமும் புணர்தல் எல்லாவீற்றின் முன்னும் மெல்லினமும் இடையினமும் புணர்தல், மெய்யீற்றின் முன் யகரம் புணர்தல், மூன்று சுட்டின் முன்னும் எகர வினா முன்னும் நாற்கணமும் புணர்தல், உயர்திணைப்பெயர் பொதுப் பெயர்களின் முன் வல்லினம் புணர்தல், சிலவுயர்திணைப் பெயர்முன் நாற்கணமும் புணர்தல், விளிப் பெயர்முன் வல்லினம் புணர்தல், ஈற்றுவினா முன்னும் யாவினா முன்னும் வல்லினம் புணர்தல், வினைமுற்று வினைத்தொகைகளின் முன் வல்லினம் புணர்தல், பெயரெச்சத்தின் முன் வல்லினம் புணர்தல், வினையெச்சத்தின் முன் வல்லினம் புணர்தல், இஉஐ யொழிந்த உயிரீற்றஃறிணைப் பெயர் முன் வல்லினம் புணர்தல்,

முற்றியலுகர வீற்றுப்பெயர் முன் வல்லினம் புணர்தல், இ,ஐ,ய,ர,ழ வீற்றஃறிணைப் பெயர் முன் வல்லினம் புணர்தல், சில மரப் பெயர் முன் வல்லினம் புணர்தல், சில வேற்றுமையுருபின் முன் வல்லினம் புணர்தல், குற்றியலுகரவீறு, குற்றியலுகரவீற்றுத் திசைப் பெயர்களோடு திசைப் பெயர்களும் பிறபெயர்களும் புணர்தல், உகரவீற்றெண்ணுப் பெயர்ப் புணர்ச்சி மெய்யீற்று முதனிலைத் தொழிற்பெயர் முன்னும் ஏவல்வினை முன்னும் மெய்புணர்தல், ணகர னகர வீற்றுப் புணர்ச்சி, மகர வீற்றுப் புணர்ச்சி, லகர ளகர வீற்றுப் புணர்ச்சி, வகர வீற்றுப் புணர்ச்சி எண்ணுப் பெயர், நிறைப் பெயர் அளவுப் பெயர்கள் சாரியை பெறுதல், இடைச் சொற்களின் முன் வல்லினம் புணர்தல், உரிச்சொற்களின் முன் வல்லினம் புணர்தல், உருபு புணர்ச்சி, விதியில்லா விகாரங்கள் என்ற தலைப்புகளிற் புணர்ச்சியின் ஏனைய சகல விடயங்களையும் சுருக்கமாக ஆனால் தெளிவாக விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பழந்தமிழிலக்கண நூல்களெல்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட இயல்களை அமைத்துப் புணர்ச்சி யிலக்கணம் கூறியுள்ள போதிலும் ஒரே இயலில் நாவலர் அவற்றைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் தொகுத்துக் கூறியுள்ளார்.

வினையை நாவலர் செய்வினை, செயப்பாட்டுவினை என வகைப்படுத்திச் சொல்லியுள்ளார். இத்தன்மை பழந்தமிழிலக்கண நூல்களில் இல்லையென்றே கூறவேண்டும். தொல்காப்பியரும் பவணந்தியாரும் செயப்பாட்டு வினை பற்றிக் கூறவில்லை. **வீரசோழியம், இலக்கணக்கொத்து, பிரயோக விவேகம்** முதலான இலக்கண நூல்களிலும் இவை பற்றிய தெளிவான குறிப்புக்கள் இல்லையென்றே கூற வேண்டியுள்ளது. ஆனால் நாவலர், செய்வினை செயப்பாட்டு வினை என இரண்டாகப் பிரித்து வினையியலில்,

செய்வினையாவது, படுவிகுதி புணராத முதனிலை அடியாகத் தோன்றி எழுவாய்க் கருத்தாவைக் கொண்டுவரும் வினையாம்.

உ – ம் சாத்தனடந்தான் நடப்பித்தான்
சாத்தன் கட்டினான் கட்டுவித்தான்

செயப்பாட்டு வினையாவது படுவிகுதி புணர்ந்த முதனிலை அடியாகத் தோன்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைமுதல் மூன்றாம் வேற்றுமையினும் செயப்படுபொருள் எழுவாயிலும் வரப்பெறும் வினையாம்.

பிறவினை முதனிலைகளும், செயப்படுபொருள் குன்றாத தன்வினை முதனிலைகளும் படுவிகுதியோடும், இடையே அகரச் சாரியையேனும் குச்சாரியையும் அகரச் சாரியையுமேனும், பெற்றுச் செயப்பாட்டுவினை முதனிலைகளாக வரும்

உ-ம் : சாத்தனா லிம்மாடு நடப்பிக்கப்பட்டது.

கொற்றனா லிச்சோறுண்ணப்பட்டது.

செயப்பாட்டுவினை, ஒரோவிடத்துப் படுவிகுதி தொக்கும் வரும்

உ - ம் : " இல்வாழ்வானென்பான்", இங்கே எனப்படுவான் என்னுஞ் செயப்பாட்டு வினை என்பான் எனப்படுவிகுதி தொக்கு நின்றது. உண்ட சோறு இங்கே உண்ணப்பட்ட என்னுஞ் செயப்பாட்டுவினை உண்ட எனப்படுவிகுதி தொக்கு நின்றது.[5]

எனக் கூறியுள்ளார். எனவே, நாவலர் பழந்தமிழ் இலக்கண நூல்களிலே தெளிவாகக் கூறப்படாத சில இலக்கண விடயங்களுக்குத் தெளிவாக விளக்கம் தந்துள்ளார் எனலாம்.

தொடர்மொழியதிகாரம் நாவலராலே புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதி. ஆனால் அங்கு கூறப்படும் செய்திகள் பழந்தமிழிலக்கண நூல்களிற் பயின்று காணப்படுவனவே. தொடர்மொழியதிகாரத்தைத் தொகைநிலைத் தொடரியல் , தொகாநிலைத் தொடரியல் ஒழிபியல் என்று மூன்றாக நாவலர் வகுத்துள்ளார்.

முதலாவதாகிய தொகைநிலைத் தொடரியலில், தொகைநிலைத் தொடர்ப்பாகுபாடு, வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத் தொகை, அன்மொழித்தொகை, தொகைநிலைத் தொடர்மொழிகள் பலபொருள்படுதல், தொகைநிலைத்தொடர் மொழிகளிற் பொருள் சிறக்கும் இடங்கள் ஆகிய தலைப்புகளிலும்,

இரண்டாவதாகிய தொகாநிலைத் தொடரியலில், தொகாநிலைத்தொடர்ப் பாகுபாடு, எழுவாய்த் தொடர்க்கும் வினைமுற்றுத் தொடர்க்கும் வேற்றுமை, இடைப்பிறவரல், முடிக்குஞ் சொன்னிற்குமிடம் ஆகிய தலைப்புக்களிலும்,[6]

மூன்றாவதாகிய ஒழிபியலில்[6], தொடர்மொழிப்பாகுபாடு, வாக்கியப் பொருளுணர்வுக்குக் காரணம், உருபும் வினையும் அடுக்கிமுடிதல், திணைபாலிட முடிபு, திணைபாலிடப் பொதுமை நீங்கு நெறி, உயர்திணை தொடர்ந்த அஃறிணை கலந்த திணைபால்களுக்கு ஒரு முடிவு, திணைபால் வழுவமைதி, ஒருமை பன்மை மயக்கம், இடவழுவமைதி, காலவழுவமைதி, வினை முதலல்லனவற்றை வினைமுதல் போலச் சொல்லல், அடைமொழி, சிறப்புப் பெயர் இயற்பெயர், வினாவிடை, சுட்டு, மரபு, முற்றும்மை, ஒருபொருட்பன்மொழி, அடுக்குச் சொல், சொல்லெச்சம், இசையெச்சம் ஆகிய தலைப்புக்களிலும் தொடரிலக்கணத்தை விளக்கியுள்ளார். இங்கு நாவலராற் கூறப்பட்ட செய்திகள் பழந்தமிழிலக்கண நூல்களில் ஆங்காங்கே காணப்பட்டவை தாம். இருப்பினும் நாவலர் அவற்றை ஒன்றாக்கித் 'தொடர் மொழியதிகாரம்' என்ற பெயரில் ஓரியலை அமைத்துத் தெளிவுடன் கூடிய - எளிமையான - விளக்கத்துடன் விடயங்களைக் கூறியுள்ளார்.

இலக்கணச் சுருக்கத்தின் இறுதியிற் பகுபதமுடிவு, சொல்லிலக்கணங் கூறுதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்றொடரிலக்கணங் கூறுதல் ஆகிய விடயங்களைச் சேர்த்துள்ளார். இவற்றுட் பகுபதமுடிவு நாவலரது **நன்னூற் காண்டிகையுரையிலும்** கூறப்பட்டுள்ள விடயங்களையே கொண்டமைந்தாலும் சில வேறுபாடுகள் உள்ளன. முக்கியமாக **நன்னூலிற்** சூத்திரங்களின் துணைகொண்டு இலக்கணங் கூறிய நாவலர் **இலக்கணச் சுருக்கத்தில்** அவ்வாறு செய்யாமல் சூத்திர விதிகள் காட்டுவதை விடுத்துத் தெளிவான வசன நடையில் விளக்கியுள்ளார். எடுத்துக் காட்டு வருமாறு:

**நன்னூற் காண்டிகையுரை** : "பொன்னன் என்னும் பொருட் பெயர்ப் பகுபதம், பொன் என்னும் பகுதியும் அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, "தனிக்குறின் முன்னொற் றுயிர்" என்னுஞ் சூத்திர விதியாற் பகுதியீற்று னகர மெய் இரட்டித்து "உடன் மேலுயிர் வந்து" என்னுஞ் சூத்திர விதியால் இரட்டித்த னகர மெய்யின் மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது."[7]

இதே விடயம் சூத்திரமேற்கோள்களின்றி ஆனால் தெளிவான நடையில் **இலக்கணச் சுருக்கத்திற்** பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.:-

பொன்னன் என்னும் பொருட் பெயர்ப் பகுபதம், பொன் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, பகுதியீற்று னகரமெய் இரட்டித்து, இரட்டித்த னகர மெய்யின் மேல் விகுதி அகரவுயிரேறி முடிந்தது.[8]

சொல்லிலக்கணங் கூறுதல் என்ற பகுதியும் சொற்றொடரிலக்கணங் கூறுதல் என்ற பகுதியும் **இலக்கணச் சுருக்கத்திலேயே** புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

**நன்னூற்** பதவியலிலே 146 ஆம் சூத்திரத்திலிருந்து 150 ஆம் சூத்திரம் வரை வடமொழியாக்கம் பற்றிக் கூறப்படுகின்றது. அவற்றிற்குத் தெளிவான காண்டிகையுரை வரைந்த நாவலர் தமது **இலக்கணச் சுருக்கத்தில்** வடமொழியாக்கம் பற்றிக் கூறாது விட்டதும் கவனிக்கத் தக்கது.

பழந்தமிழிலக்கணகாரரால் விதந்து கூறப்படும் சார்பெழுத்துப் பற்றித் தமது நூலில் நாவலர் கூறாது விட்டதும் கவனிக்கத்தக்கது.

இவ்வாறாக நாவலர், **இலக்கணச் சுருக்கத்தில், நன்னூற் காண்டிகையுரையிற்** சொல்லப்பட்ட விடயங்களுடன் தனது காலத்துக்கு ஒவ்வாதனவற்றை நீக்கியும் தனது காலத்துக்கு வேண்டியவற்றைச் சேர்த்தும் தொகுத்து 406 அங்கங்களிலே கூறுகின்றார். மாணவர்களுக்கு மொழிப்பயிற்சியும், இலக்கியப் பயிற்சியும் உண்டாக்கத்தக்க வகையிலே வரைவிலக்கணங்களும் உதாரணங் களும் அமைக்கப்பட்டிருப்பதும் இதன் சிறப்பம்சங் களுள் ஒன்றெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புக்கள்

1. சின்னையா கலையரசி; "நாவலரது இலக்கண முயற்சிகள் – தாக்கமும் விளைவுகளும்" நாவலர் நூற்றாண்டு மலர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, கொழும்பு.ப. 274.
2. ஆறுமுகநாவலர்; (1957) இலக்கணச் சுருக்கம் 23ஆம் பதிப்பு, வித்தியாநுபாலன அச்சகம், சென்னை ப. I
3. மே.கு.நூ, பக். 5 –6
4. மே.கு.நூ, பக். 25 – 27
5. மே.கு.நூ, பக். 143 – 144
6. மே.கு.நூ, பக். 177 – 196
7. ஆறுமுகநாவலர்; (1966) நன்னூல் காண்டிகையுரை 24ஆம் பதிப்பு, வித்தியாநுபாலன அச்சகம், சென்னை. ப.504
8. ஆறுமுகநாவலர்; (1957) இலக்கணச் சுருக்கம். ப. 197



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்திரோபாய உருவாக்கற் செய்முறையில் வெளிச்சூழல் ஆய்வின் பங்கு

க.தேவராசா


## ஆய்வுச் சுருக்கம்

*உலக மயமாக்கலினால் மாறிவரும் வணிகத்தில் தோன்றிய போட்டிச்சூழல் நிறுவனங்களுக்கான தந்திரோபாய முகாமைத்துவத்தை விலியுறுத்தி வருகின்றது. போட்டிச் சூழலானது நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட அகச்சூழல் காரணிகளையும், நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட புறச்சூழல் காரணிகளையும் அடக்கியுள்ளது இவற்றில் நிறுவனங்களின் வெற்றிக்கான புறச்சூழல் காரணிகளை இனங்காண எவ்வாறு தந்திரோபாயச் செய்முறைகளை மாற்றியமைக்கலாம் என்பது பற்றிய ஆய்வினை இக் கட்டுரை முன்வைக்கின்றது.*


### 1.0 அறிமுகம்

தனி நபர்களால் எதிர்நோக்கப்படும் சூழலானது எவ்வாறு ஒவ்வொரு தனிநபருக்கும் தனித்துவமானதாகக் காணப்படுகின்றதோ, அதேபோன்று ஒவ்வொரு நிறுவனங்களால் எதிர்நோக்கப்படும் சூழலும் தனித்துவமானவையாக உள்ளன. இதனாலேயே சூழல் ஆய்விற்கென பொதுவான அணுகு முறையொன்றினை உருவாக்குவது சிரமமாகக் காணப்படுகின்றது.[1] நிறுவனங்களின் பரிசோதனை , ஆராய்ச்சி திட்டமிடலாளர்கள் சூழல் ஆய்வினை மேற்கொள்ள மூன்று கட்ட அணுகுமுறை ஒன்றினை முன்வைத்துள்ளனர். இம் மூன்று கட்ட அணுகு முறை மூலம் சூழலால் நிறுவனத்திற்கு ஏற்படக் கூடிய தாக்கங்கள் பற்றிய வினைத்திறனான மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்ள முடியும் என விளக்கியுள்ளனர். சூழல் ஆய்வு என்பது வெளிச் சூழல் ஆய்வு உள்ளக ஆய்வு என்பனவற்றை உள்ளடக்குவதோடு இம் மூன்று கட்ட அணுகு முறையானது இவை இரண்டிலும் பிரயோகிக்கப்படக் கூடியதாகும். எனினும் இக் கட்டுரையில் வெளிச்சூழல் ஆய்வும், அவை நிறுவனத்தின் தந்திரோபாய உருவாக்கற் செய்முறையில் வகிக்கும் பங்கு என்பன பற்றியே ஆராயப் படுகின்றது.

### 2.0 மூன்று கட்ட அணுகுமுறை (Three Stages Approach)

சூழல் ஆய்வில் பிரயோகிக்கப்படும் மூன்றுகட்ட அணுகுமுறை என்பது பின்வரும் மூன்று படிமுறைகளைக் கொண்டதாகக் காணப்படும்.

**கட்டம் 1:- சூழலைக் கூறுகளாக வகைப் படுத்தல்** பொதுவாக நிறுவனங்களுக்கு முக்கியமாக அமைகின்ற அடிப்படையில் சூழலானது தனித்தனி கூறுகளாக வகுக்கப்படும்.

**கட்டம்:-2 சூழல் கூறுகளை ஆய்வு செய்தல்**

ஒவ்வொரு சூழல் கூறும் விரிவாக ஆய்வு செய்யப்படுவதுடன் குறிக்கப்பட்ட சூழல் காரணிகளால் நிறுவனத்திற்கு ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள், ஆபத்துக்கள் என்பனவும் மதிப்பிட்டுக் கொள்ளப்படும்.

**கட்டம் 3 :- ஒவ்வொரு சூழற் கூறுக்கும் நிறையளித்தல்**

மூன்றாவது கட்டத்தில் ஒவ்வொரு சூழற் காரணிக்கும் அவற்றினால் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கத்தினைப் பிரதிபலிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் நிறையளிக்கப்படும். அதாவது வாய்ப்புக்களாயின் நிறுவனம் அவற்றைப் பயன்படுத்தத் தக்கவாறும் ஆபத்துகளாயின் அவற்றை முறியடிக்கத்தக்கவாறும் அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்டையில் நிறையளிக்கப் படும்.[2]

இச் சூழல் ஆய்வின் மூன்று கட்டங்களும் இங்கு விரிவாக ஆராயப்படுகின்றன.

## 3.0 சூழல் கூறுகள் (Environmental Segment)

இங்கு சூழலானது பின்வரும் காரணிகளை உள்ளடக்கியுள்ளது எனக் கொள்வோம்.

1. போட்டிச் சூழல்
2. சந்தைப்படுத்தல் சூழல்
3. பொருளாதாரச் சூழல்
4. அரசாங்கச் சட்டச் சூழல்
5. சமூக கலாசார சூழல்
6. தொழில்நுட்பக் காரணி
7. புவியியற் காரணி
8. ஏனையவை

மேலே காட்டப்பட்டவாறு இவை பிரிக்கப் பட்டாலும் கூட, இக்காரணிகளுக்கிடையில் உள்ள தொடர்புகள் காரணமாக, வேறுபாடுகள் எப்பொழுதும் தெளிவாகக் காணப்பட மாட்டாது. உதாரணமாக பொருளாதாரக் காரணியையும் அரசாங்க சட்டச்சூழலையும் வேறுபடுத்து வதனைக் குறிப்பிடலாம். இது சூழல் ஆய்வு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்திற்கேற்ப மாறுபடும்.

இவ்வாறு சூழற் காரணிகள் வேறுபடுத்தப்பட்ட பின் ஒவ்வொரு சூழற் கூறுகளும் தனித்தனியாக கட்டம்2 இல் மதிப்பிடப்படும்.

### 3.1. போட்டிச் சூழல் (Competitive Environment)

ஒரு கைத்தொழிலில் நிலவுகின்ற போட்டிச் சூழலில் பின்வரும் ஐந்து அடிப்படைப் போட்டிச் சக்திகள் காணப்படுகின்றன என பேராசிரியர் மைக்கேல் போட்டர் கூறுகின்றார். அவையாவன,

1. புதிய உள்நுழைவோரின் ஆபத்து
2. பிரதியீடுகளின் ஆபத்து
3. விநியோகஸ்தர்களின் வலு
4. கொள்வனவாளர்களின் வலு
5. தற்போதுள்ள போட்டியாளர்களுக்கிடையி லான போட்டி எதிர்ப்புணர்வு

இந்த ஐந்து போட்டிச் சக்திகளின் கூட்டு வலுவினாலேயே குறிக்கப்பட்ட நிறுவனத் தினுடைய எதிர்கால இலாபம் என்பது நிர்ணயிக்கப்படுகின்றது. இந்தக் காரணிகளின் வலுவானது நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபட்டுக் காணப்படலாம். எனினும் எந்தவொரு நிறுவனத்தினதும் தந்திரோபாய நிலைமையினையும், எதிர்காலத்தையும் மதிப்பிட்டுக்கொள்வதற்கு நிறுவனம் எந்த வகையான போட்டிச் சூழலில் இயங்குகின்றது என்பதனை அறிந்து கொள்வது அவசியமான தாகும்.

### 3.2 சந்தைப்படுத்தல் சூழல் (Marketing Environment)

சந்தைப்படுத்தல் காரணி என்னும் போது நிறுவனத்தினுடைய பொருட்கள் சேவைகளுக் கான எதிர்காலக் கேள்வி பற்றி கருத்திற்கொள்ள வேண்டும். இது போட்டிச் சூழலுடன் இணைந்ததாகவும் காணப்படுகின்றது. இங்கு பொருட்கள் சேவைகள் என்பது பாவனையாளர் பொருட்களாகவோ அன்றி கைத்தொழில் பொருட்களாகவோ காணப்படலாம்.[3]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய கேள்வி பற்றி கருதும்போது கேள்வியை ஏற்படுத்தும் சனத்தொகை பற்றி ஆராயப்பட வேண்டும். இங்கு சனத்தொகை என்பது புள்ளிவிபர ரீதியாகக் கருதப்படுவதுடன் குறிக்கப்பட்ட பொருட்கள் சேவைகளை நுகரும் நுகர்வோர்களின் மொத்த எண்ணிக்கையைக் குறிக்கின்றது. (பொதுமக்கள் ஏனைய நிறுவனங்கள்)

குறிக்கப்பட்ட பொருட்கள் தேவைகளுக்கான எதிர்கால கேள்வி மட்டத்தினை நிர்ணயிக்கின்ற சூழல் குறிகாட்டிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. சந்தையின் அளவும் அதன் வளமான தன்மையும்
2. சநதையில் நிலவும் போக்கு, அதாவது மொத்த சனத்தொகை வளர்ச்சிப் போக்கு மொத்தக் குடிசனத்தில் குறிக்கப்பட்ட சந்தைத் துண்டங்களின் போக்கு, வருமானப் போக்கு என்பன.
3. நிறுவனம் அல்லது உற்பத்திப் பொருள் வாழ்க்கை வட்ட நிலை

ஒரு சந்தையின் எதிர்கால வாய்ப்பானது சந்தையாராச்சி, எதிர்வுகூறல் என்பவற்றின் மூலம் மொத்த சனத்தொகை, குறிக்கப்பட்ட சந்தைத் துண்டத்தின் அளவு, வளர்ச்சி வீதம் மற்றும் விலை நெகிழ்ச்சி என்பவற்றை கண்டுகொள்வதன் மூலம் அறியப்படும்.

### 3.3 பொருளாதாரக் காரணி

அநேக நிறுவனங்களைப் பொறுத்தவரை சூழலின் பொருளாதாரக் கூறானது அடிப்படையானதும் விரிவான ஆய்வுக்குரியதொன்றாகவும் காணப்படுகின்றது. ஏனெனில் தேசிய பொருளாதார இலக்குகளை விளங்கிக் கொள்வதற்கும், இந்த இலக்குகள் கொள்கைகளாக மாற்றப்படும்போது, அவை நிறுவனங்களை எவ்வாறு தாக்கமுடியும் என்பதனை விளங்கிக் கொள்ளவும் இவ்வாய்வு அவசியமானதாகும்.[4]

தந்திரோபாய ஆய்வு நோக்கிற்காக பொருளாதாரச் சூழலானது உலகப் பொருளாதாரம், தேசியப் பொருளாதாரம் என இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் படுகின்றது.

#### 3.3.1 *உலகப் பொருளாதார நிலை*

உலகப் பொருளாதார நடவடிக்கைகளின் செல்வாக்குக் காரணமாக (உதாரணமாக மசகெண்ணையின் உலகவிலை) வழமையாக தேசிய பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும்போது, பரந்த உலகப் பொருளாதார அமைப்பினை கருத்திலெடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இந்த உலகப் பொருளாதார அமைப்பு ஆய்வு, பிரதான கைத்தொழில் நாடுகளின் செயற்திறனைச் சுட்டிக் காட்டும் அடிப்படைக் குறிகாட்டிகள் பற்றிய மதிப்பீடொன்றினை உள்ளடக்கும்.5 இக்குறிகாட்டிகளாவன,

1. பணவீக்க வீதம்
2. மொத்த / தேசிய உற்பத்தியின் உண்மையான வளர்ச்சி வீதம்
3. நடைமுறைக் கணக்கு மீதிகள்
4. வேலைவாய்ப்பு மட்டங்கள்
5. வட்டி வீதங்கள்

இவற்றினை குறிப்பிட்ட நிறுவனம் காணப்படும் நாட்டின் குறிகாட்டிகளுடன் ஒப்பிட்டு அவற்றின் சாதக, பாதக நிலைமைகளுக்கேற்ப தந்திரோபாயங்களை உருவாக்க வேண்டியது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.3.2. *தேசிய பொருளாதாரத்தின் நிலை* (State of National Economy)

உலகப் பொருளாதார ஆய்விலிருந்து தேசியப் பொருளாதாரக் கட்டமைப்பை மதிப்பிட முடியும். இது பின்வரும் படிமுறையமைப்பில் மேற்கொள்ளப்பட முடியும்.

1. அதிகாரத்திலுள்ள அரசின் பொருளாதார இலக்குகளும் பொருளாதாரக் கொள்கைகளில் அதன் தலையீடுகளும், இங்கு அரசின் உயர் பொருளாதாரக் கொள்கைகள் மதிப்பிடப்படும், உதாரணமாக, அரசாங்கம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல், வேலைவாய்ப்பை அதிகரித் தல் என்பவற்றுக்கு முன்னுரிமை அளிக்கக் கூடிய வகையில் செய்யப்படலாம்.

2. குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்காக அமைக்கப்பட்டு அமுலாக்கப்படும் விசேடமான கொள்கைகள், இவை பின்வருமாறு காணப்படும்.

1. இறைக் கொள்கைகள்
2. நாணயக் கொள்கைகள்
3. பணவீக்கக் கொள்கைகள்
4. நாணய மாற்று மற்றும் சென்மதிநிலுவைக் கொள்கைகள்
5. வேலையின்மை பற்றிய கொள்கைகள்
6. தனியார் மயப்படுத்தல் பற்றிய கொள்கைகள்
7. பிரதேசக் கொள்கைகள்

### 3.3.3 *பணவீக்க நிலைமை* (Inflation Stages)

பணவீக்க வீதமானது நிறுவனச் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க அளவு சூழலில் செல்வாக்குச் செலுத்தக்கூடும். உயர் பணவீக்க வீதமானது பொதுவாக நிறுவனங்களுக்கு பாதகமாகவும் அதாவது சூழல் ஆபத்தாகவும், குறைந்தளவான பணவீக்க நிலைமையானது நிறுவனங்களுக்கு சாதகமாகவும் அதாவது சூழல் வாய்ப்பாகவும் கொள்ளப்படும். எனினும் வேறுபட்ட நிறுவனங்களும், கைத்தொழில்களும் பணவீக்கம் காரணமாக வேறுபட்ட தாக்கத்தைக் கொண்டிருக்கலாம். அதாவது உயர் பணவீக்க காலம் சில நிறுவனங்களுக்கு சாதகமாகவும் காணப்படலாம். குறிப்பாக வங்கிகள் சில காலப்பகுதிகளில் இந்த வகையான சூழல் வாய்ப்புக்களைக் கொண்டிருக்கலாம்.

### 3.4. சட்ட/அரசசூழல் (Legal / Government Environment)

அரசானது பிரதேச, தேசிய, சர்வதேச ரீதியில் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் அதனது செயற்பாடு அதிகரித்து வருகின்றது. சூழல் ஆய்வு மேற்கொள்ளப்படும் போது அரச செல்வாக்கின் அளவினைக் கருத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும்.[6] உதாரணமாக கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

**பிரதேச ரீதியாக:-** உள்ளூர் வியாபார முயற்சியை ஆரம்பிப்பதற்கு

**தேசிய ரீதியாக :-** வரி விதிப்பு மட்டத்தினை தீர்மானிப்பதில் மத்திய அரசின் பங்கு

**சர்வதேசரீதியாக:-**வெளிநாட்டு இறக்கு மதிகள் மீதான தீர்வை மட்டத்தை நிர்ணயிப்பதில் ஐரோப்பிய சமூகத்தின் பங்கு

இங்கு சூழல் ஆய்வு நோக்கத்திற்காக, அரசின் பங்கானது இரண்டு விடயங்களாக பிரிக்கப்படுகின்றது.

1. அரச செயற்பாடுகள் நிறுவனங்களுக்கு உதவியாக அமைதல்
2. அரச செயற்பாடுகள் நிறுவனங்களுக்கு தடையாக அமைதல்

பின்வரும் வழிகளில் அரச செயற்பாடுகள் நிறுவனங்களுக்கு உதவியாகக் காணப்படும்.

1. நிறுவனத்தின் பொருட்கள் சேவைகளை அரசு கொள்வனவு செய்தல். உதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக கட்டிடம் அல்லது பாலம் என்பவற்றை அமைப்பதற்கு ஒப்பந்தக்காரர்களை ஏற்படுத்தல்

2. அரசு ஆராய்ச்சி அபிவிருத்தியில் ஒரு பங்காளராக செயற்படுதல்
3. கூலிச் செலவுகளைக் கட்டுப்படுத்தும் நிலையில் அரசு செயற்படுதல்.
4. பயிற்சியளித்தலில் அரசினால் வழங்கப்படும் உதவி
5. வியாபார முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு அரசினால் வழங்கப்படும் உதவி
6. புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்குபவராக அரசு செயற்படுதல்.

பின்வரும் வழிகளில் அரச செயற்பாடுகள் நிறுவனத்திற்கு தடையாகக் காணப்படலாம்.

1. புதிய ஒழுங்கு விதிகளினை உருவாக்குதல்
2. விலைக் கட்டுப்பாட்டாளராக அரசு செயற்படுதல்
3. சூழல் பாதுகாப்பாளராக அரசு செயற்படுதல்
4. வேலையின் ஊழியர்களது பாதுகாப்பு நலன் போன்றவற்றிற்கு உத்தரவாதமளிப்பவராக அரசு செயற்படுதல்
5. சம வாய்ப்புக்களை உத்தரவாதப்படுத்துவதாக அரசு செயற்படுதல்
6. தனியுரிமைக்கெதிரான போட்டியை உறுதிப்படுத்துபவராக அரசு செயற்படுதல்
7. நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாப்பவராக அரசு செயற்படுதல்
8. கைத்தொழில் அமைவிடத்தை தீர்மானிப்பவராக அரசு செயற்படலாம்.

### 3.3.5 *சமூக கலாசார சூழல்*
### (Socio - Cultural Evironment)

சமூக கலாசார சூழல் என்பது வரையறுக்கப்பட முடியாது எனக் கருதப்படுகின்ற போதிலும் , மக்கள் தங்களுடைய வாழ்க்கை நடவடிக்கைகளில் வெளிப்படுத்தும் பொதுவான எண்ணங்கள், நம்பிக்கைகள் விழுமியங்கள் என்பன சமூக கலாசார காரணி என வரையறுக்கப்படலாம்.[7]

சூழலின் சமூக கலாசார காரணியானது இரண்டு விரிவான பரப்புக்களில் நோக்கப்படலாம். அதாவது,

1. நிறுவனங்களின் பொருட்கள் சேவைகளை சமூக கலாசார காரணி எவ்வாறு பாதிக்கின்றது.
2. ஊழியர்கள் தங்கள் வேலை தொடர்பாக கொண்டுள்ள எண்ணங்களை சமூக கலாசார காரணியானது எவ்வாறு பாதிக்கின்றது.

### 3.5.1. *நிறுவனத்தின் பொருட்கள் சேவைகளில் சமூக கலாசார காரணியின்பாதிப்பு*

சூழல் ஆய்வில் இக்காரணிக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தின் அளவு நிறுவனத்தின் தொழிற்பாட்டில் தங்கியிருக்கின்றது. உதாரணமாக நிறுவனத்தின் உற்பத்திகள் விரைவாக மாற்றமடையும் சமூக உணர்வுகளுடன் தொடர்புடையனவாக இருந்தால் இக்காரணிகளின் முக்கியத்துவம் அதிகமாக இருக்கும். உதாரணமாக, ஒலிப்பதிவு நாடாக்கள், இசைத் தட்டுக்கள், தொலைக் காட்சி போன்றவற்றை உற்பத்தி செய்பவர்கள் இக்காரணிக்கு கூடியளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டியிருக்கும்.

செல்வாக்கு செலுத்துகின்ற எல்லாச் சமூக, கலாசார காரணிகளையும் பட்டியலிடுவது சூழல் ஆய்வாளர்களுக்கு கடினமாக இருக்கின்ற போதிலும் பின்வரும் காரணிகளைக் கருத்திற்கொள்ள வேண்டியனவாக குறிப்பிடலாம்.

1. கல்வி அதாவது கல்வித்தரம், கிடைப்பனவு, கல்வி கற்றோர் வீதம் என்பன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சுகாதாரம், போசாக்கு
3. குடும் அளவு
4. குடும்ப அலகுகளின் அளவு
5. சமயம்
6. புவியியல் ரீதியான போக்குவரத்து வசதி
7. உள்நாட்டுப் போக்குவரத்து வசதி
8. சமூகத்தில் பெண்களின் பங்கு

### 3.5.2 *ஊழியர்களது வேலையில் சமூக கலாசாரக் காரணியின் தாக்கம்*

நிறுவனங்களில் நிலவுகின்ற முகாமை, செயற்பாட்டு நிலைமைகளில் வேலை பற்றி எண்ணங்களில் பரந்தளவான வேறுபாடு காணப்படுகின்றது. இது சர்வதேச ரீதியாக ஒப்பிடும் போது மிக இலகுவாகக் கண்டு கொள்ளப்பட முடியும். மேலும் ஒரு நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கிடையிலேயும் இதனைத் தெளிவாக அவதானிக்கலாம். உதாரணமாக யப்பானிய வேலை ஒழுங்கினையும், மேற்கு ஐரோப்பிய வேலை ஒழுங்கினையும் ஒப்பிடும் போது இதனை இலகுவாக அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

யப்பானிய வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் அறிக்கையொன்று இதனைச் சுட்டிக் காட்டுகின்றது. மேற்கு ஐரோப்பிய நிறுவனங்களில் 75.0 சதவீதமானவை மேலதிக வேலை நேரத்திற்கு ஊழியர்களை கேட்டுக் கொள்வதுடன் அவர்களை ஒப்புக்கொள்ள வைக்க வேண்டியுள்ளது. இந்நிலைமை யப்பானிய நிறுவனங்களில். காணப்படுவதில்லை.

மேலதிக நேரவேலை செய்ய உத்தரவிடுவதில் சிக்கல்கள் உள்ளதாக மேற்கு ஐரோப்பிய நிறுவனங்கள் கருதுகின்றன. ஏனெனில் அவர்கள் வேலையினை விட தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கு கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். அவர்கள் வாழ்வதற்காக வேலை செய்தால் போதுமானது என்ற கருத்தினைக் கொண்டுள்ளார்கள். எனவே, 40% நிறுவனங்களின் கூற்றுப்படி அவர்கள் மேலதிக நேரவேலை செய்யுமாறு உத்தரவிடப்படும் போது அவர்கள் கட்டளைக்கு கீழ்ப்படிய மறுக்கின்றார்கள். ஏனெனில் அவர்கள் யப்பானியர்களைப் போன்று வேலையை வாழ்க்கையின் மையமாகக் கொள்ளவில்லை.[8]

எனவே, சூழலின் ஏனைய கூறுகளைப் போலவே தந்திரோபாய திட்டமிடலாளர்களால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக சமூக மாற்ற கூறுகளும் காணப்படுகின்றன.

### 3.6. தொழிநுட்பக் காரணி (Technical Factor)

தந்திரோபாய திட்டமிடலாளர்கள் தங்களுடைய ஆய்வின் தொழில்நுட்ப மாற்றத்தினையும் சூழலில் இதனது பரிமாணத்தையும் உள்ளடக்க வேண்டியுள்ளது. ஏனெனில் இன்று தொழில்நுட்ப மாற்றம் என்பது எங்கும் பரவியுள்ளது. உதாரணமாக அநேக நிறுவனங்கள் நுண் கணனிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பப்புரட்சி என்பவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளன. சில நிறுவனங்கள் தொழிநுட்ப மாற்றம் காரணமாக ஏனைய நிறுவனங்களை விட மிக அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன என்பது முக்கியமான விடயமாகும்.

சூழலில் ஏற்படும் இத்தகைய மாற்றங்களின் செல்வாக்கினால் உற்பத்திக் கைத்தொழில்கள் மட்டுமல்ல சேவைத்துறைத் தொழில்களும் பாரிய மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன உதாரணம் 1 . இலத்திரனியல் தகவல் தரவுகள், தகவல் பரிமாற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவை பரந்தளவில் கிடைக்கக் கூடியதாகவும் ஒப்பீட்டு ரீதியில் செலவு குறைந்ததாகவும் மாறி வருவதால் கணக்காய்வு ஆலோசனை நிறுவனங்கள் இந்தப் புதிய தொழில்நுட்ப மாற்றத்தினால் பாதிக்கப் பட்டுள்ளன.

உதாரணம் 2. நிறுவனங்கள் பிந்திய பக்ஸ் கருவிகளைப் பயன்படுத்துதல், பக்ஸ் கருவிகளின் பரவலான உபயோகம் புதிய தொழில்நுட்ப மாற்றத்தினால் ஒரு முக்கியமான காரணியாகும். முன்னர் பாவனையிலிருந்த குழு–1 வகையைச் சேர்ந்த பக்ஸ் கருவிகள் மிகவும் செலவு உயர்ந்தவையாகவும், தனிப்பக்கச் செய்தியொன்றை அனுப்புவதற்கு ஏறத்தாழ 6நிமிடங்கள் எடுத்துக்கொள்வ தாகவும் காணப்பட்டன. ஆனால் பிந்திய குழு – 3 வகையைச் சேர்ந்த பக்ஸ் கருவியானது மிகவும் சிறிதாகவும், செலவு குறைந்ததாகவும் சிறிய அளவுள்ள ஒரு பக்கத்தினை ஊடு கடத்த 60 வினாடிகளுக்கும் குறைவான நேரத்தை மட்டுமே எடுப்பதாகவும் காணப்படுகின்றது. இந்த நிலைமை குழு– 1வகை பக்ஸ் கருவிகளை பெருமளவில் கொண்டுள்ள நிறுவனத்திற்கு பாதகமானதாகும்.

### 3.7. புவியியற் சூழல்
### (Geographical Environment)

1960களிலிருந்து குறிப்பாக நிறுவ னங்கள் சர்வதேச மயமாக்கப் பட்டதிலிருந்து நிறுவனங்களின் சூழல், மற்றும் புவியியல் காரணி முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது மேலும் இன்று நிறுவனங்களின் உற்பத்திகள் உலக ளாவிய ரீதியில் ஒரினமாக இருப்பதுடன், உலக சந்தைகளில் விற்பனை செய்யப்படு வதுடன் உலகளவில் பரந்து காணப்படும் உள்ளீடுகளைக் கொண்டு அவை உற்பத்தி செய்யப்படு வதனையும் அவதானிக்கலாம்.

நிறுவனங்களின் சர்வதேச மயமாக்கல் போக்கினால் சந்தைப்படுத்தல் , உற்பத்தி, நிதி, ஆளணி தந்திரோபாயங்கள் திட்டமிடப்படும் போது தொடர்ந்து நிலவக்கூடிய உலகளாவிய பரிமாணம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். உலகளாவிய ரீதியில் தெளிவாக அறியப்பட்ட கைதொழில்களில் சர்வதேச நோக்கங்களின் முக்கியத்துவத்தை தெளிவாக இனங்காண முடியும்.

உதாரணமாக தொலைக்காட்சிப் பொருட் கள் உற்பத்தியாளர்கள், வாகன உற்பத்தியாளர் கள், விமான உற்பத்தியாளர்கள் போன்றோர் சுருக்கமாகக் கூறின் இன்று பெரும்பாலான நிறுவனங்களில் தந்திரோபாயத் திட்டமிடலாளர் கள் கடந்த காலத்தை விட எதிர்காலத்தில் குறிக்கப்பட்ட நிறுவனம் எதிர்நோக்கக்கூடிய ஆபத்துக்களையும் வாய்ப்புக்களையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

மேலே கூறப்பட்டவாறு சூழலில் ஒவ்வொரு கூறுகளும் தனித்தனி ஆய்வு செய்யப்பட்ட பின்னர் அவை கட்டம் 3 இல் நிறையளிப்புக்கு உட்படும்.

### 4.0.சூழல் காரணிகளுக்கு நிறையளித்தல்
### (Weight for Environmental Factors)

சூழல் ஆய்வின் முதலாவது கட்டத்தில் கூறுகளாக்கப்பட்டு இரண்டாவது கட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட சூழல் கூறுகளுக்கு மூன்றாவது கட்டத்தில் அவை ஆய்வின்படி நிறுவனத்துக்கு ஏற்படுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படும் தாக்கத்தின் அடிப்படையில் நிறையளிக்கப்படும்.[9] ஒவ்வொரு கூறுகளுக்கும் அளிக்கப்படும் நிறையானது பின்வருமாறு கணிக்கப்படும்.

ஆய்வு செய்யப்பட்ட ஒவ்வொரு சூழற் கூறுகளுக்கும் நிறுவனத்தில் அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் 0 தொடக்கம் 5 வரையான முழு எண்களின் அடிப்படையில் நிறையளிக்கப்படும். இவ்வாறு ஒரு சூழற் கூறானது நிறுவனத்திற்கு மிக முக்கியமானது எனக் கருதப்பட்டால் இக்காரணிக்கு 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிகளும் குறிப்பிட்ட காரணியானது சராசரி முக்கியமானது எனக் கருதப்பட்டால் 3 புள்ளிகளும் குறிப்பிட்ட காரணி எந்தவித முக்கியத்துவமும் அற்றது எனக் கருதப்பட்டால் 0 புள்ளியும் அளிக்கப்படும்.

ஒவ்வொரு காரணியினதும் முக்கியத்துவம் ஒரு முறை தீர்மானிக்கப்பட்ட பின்னர் ஆய்வுக் காலப்பகுதியில் ஒவ்வொரு காரணிகளினதும் பலத்திற்கேற்ப –5 இலிருந்து +5வரை முழு எண்களின் அளவில் நிறையளிக்கப்படும். –5 என்பது இயலுமானவரை பலமான எதிர்க்கணியச் செல்வாக்கினை செலுத்தும் என்பதனைக் குறிக்கின்றது. மாறாக புள்ளி +5 என்பது குறிப்பிட்ட சூழல் கூறு மிகப்பலமான நேர்க்கணியச் செல்வாக்கினை நிறுவனத்தில் செலுத்தும் என்பதனைக் குறிக்கின்றது. உதாரணமாக கம்பனியொன்று இலாபகரமான உற்பத்திப்பொருள் ஆக்கவுரிமையைக் கொண்டிருக்கின்ற போது அந்தப் பொருள் மிகைக் கேள்வியையும் கொண்டிருக்குமாயின் சந்தைப்படுத்தற் சூழல் கூறுக்கு +5 புள்ளி சேர்க்கப்படும். இறுதியாக 0 புள்ளி என்பது குறிப்பிட்ட காரணி நிறுவனத்தில் எந்தப் பலத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதனையும் குறிக்கின்றது.

ஒவ்வொரு காரணியினதும் முக்கியத்துவமும் பலமும் தீர்மானிக்கப்பட்ட பின்னர் தொடர்புடைய ஒவ்வொரு சூழற் காரணியுடன் தொடர்புடைய இரண்டு இலக்கங்களும் பெருக்கப்பட்டு மொத்தப் புள்ளிகள் பெறப்படும். ஒவ்வொரு பெறுமதியும் தொடர்புடைய சூழற் காரணி நிறுவனத்தில் கொண்டுள்ள மொத்த தாக்கத்தினைக் குறிக்கும் இறுதியாக இவ்வாறு பெறப்பட்ட ஒவ்வொரு சூழற் காரணிகளினதும் மொத்தப் புள்ளிகள் சூழல் மதிப்பீட்டு வரைபடம் ஒன்றில் காட்டப்பட முடியும். வரைபட ரீதியான விளக்கம் ஒன்றின் மூலம் குறிப்பிட்ட சூழல் ஆய்வானது உயிரோட்டம் உள்ளதாக ஆக்கப்படுவதுடன் மிக இலகுவாக விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

சூழல் ஆய்வினது கட்டங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்பது தொடர்பான கருதுகோள் ரீதியான உதாரணம் ஒன்று வருமாறு.

**சூழலைக் கூறுகளாக்குதல்**

இங்கு சூழல் ஆய்வினை மேற்கொள்வதற்கென திட்டமிட்டுள்ள நிறுவனம் ஒன்றுடன் தொடர்புடைய சூழல்களாக பின்வரும் சூழல் கூறுகளை அல்லது சூழற் காரணிகளைக் கருதுவோம்.

1. பொருளாதாரச் சூழல்
2. அரச சூழல்
3. போட்டிச் சூழல்
4. சந்தைப்படுத்தல் சூழல்
5. தொழில்நுட்பச் சூழல்

## 5.0 சூழல் கூறுகளை ஆய்வு செய்தல் (Analysis of Each Segment)

இங்கு கட்டம் 1 இல் தெரிவு செய்யப்பட்ட ஐந்து சூழற் கூறுகள் பற்றிய விரிவான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படும். இங்கு ஆய்வுத் திகதிக்கு முந்திய காலப்பகுதியும் அடுத்த திட்டமிடல் காலப்பகுதியும் கருத்திற் கொள்ளப்படு வதுடன் இக்காலப் பகுதியில் ஒவ்வொரு சூழற் காரணிகளினதும் தாக்கமும் எதிர்காலப் போக்கும் ஆய்வு செய்யப்படும்.

**கட்டம் – 3 ஒவ்வொரு சூழற் கூறுகளுக்கும் நிறைகளைச் சேர்த்தல்**


உதாரணமாக கட்டம் இரண்டில் ஒவ்வொரு சூழற் காரணியையும் நன்கு ஆய்வு செய்த பின்னர் கீழ்வரும் நிறைகள் சேர்க்கப்படுகின்றன எனக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சூழற் கூறு Segment) | முக்கியத்துவம் (Imortance) | பலம் (Strength) | மொத்தப் புள்ளிகள் (Over all score (Imortance X strength) |
|---|---|---|---|
| போட்டிச் சூழல் காரணி | 4 | +1 | 4 |
| சந்தைப்படுத்தல் காரணி | 1 | +2 | 3 |
| பொருளாதாரக் காரணி | 5 | −2 | −10 |
| அரச சூழல் காரணி | 2 | −3 | −6 |
| தொழில்நுட்பக் காரணி | 3 | −4 | −12 |

மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிறையளிப்புக்களை பின்வரும் சூழல் மதிப்பீட்டு வரைபடத்தில் தெளிவாகக் காட்டலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே தரப்பட்டுள்ள நிறையளிப்புக் களின் கருத்து பின்வருமாறு :

**1. போட்டிச் சூழற் கூறு**

குறிப்பிட்ட நிறுவனத்தின் போட்டிச் சூழலானது மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. எவ்வாறெனினும் இந்நிறுவனம் அதனுடைய போட்டியாளர்களை விட பலமான நிலையில் காணப்படுகின்றது. இதிலிருந்து அடுத்த திட்டமிடல் காலப்பகுதிக் கான நிறுவனத்தின் போட்டிச் சூழலானது சாதகமாக, அதாவது நேரானதாக காணப்படுவதனை உணரலாம். குறிக்கப்பட்ட இந்நிறுவனம் தன்னுடைய போட்டி அனுகூலத்தை உச்சப்படுத்துவதற்கு முயல வேண்டும்.

**2. சந்தைப்படுத்தல் சூழற் கூறு**

நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் கூறானது இங்கு முக்கியமானதொன்றாக காணப்படவில்லை. மேலும் நிறுவனம் இச் சூழற் காரணியின் தாக்கம் அடுத்த திட்டமிடல் காலப்பகுதி முழுவதும் நேரானதாக இருக்கும் என நம்புகின்றது. குறிப்பிட்ட நிறுவனம் தற்போது சந்தைப்படுத்தல் சூழலில் காணப்படும் பெரும்பாலான வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

**3. பொருளாதாரக் காரணி**

பொருளாதாரச் சூழ்நிலையானது நிறுவனத்திற்கு மிக முக்கியமானதாகக் காணப்படுவதுடன், அடுத்த திட்டமிடல் பகுதியில் இது சாதகமாகக் காணப்படவும் மாட்டாது. இங்கு தொடர்புடைய பொருளாதாரக் காரணி ஒரு ஆபத்தாகக் காணப்படுவதுடன் இந்த ஆபத்தினைக் குறைப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட முடியும் என்பதனைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

**4. அரச சூழற் காரணி**

அரச காரணியும் அடுத்த திட்டமிடல் காலப்பகுதிக்கு ஒரு ஆபத்தாகவே காணப்படு கின்ற போதும் இதனுடைய முக்கியத்துவமானது பெரிதளவாகக் காணப்படவில்லை. ஆகவே, இந்த ஆபத்தைக் குறைப்பதற்கான முயற்சிகள் ஏனைய இரு ஆபத்துகளுடனும் ஒப்பிடும் போது குறைவாகவே இருக்கும்.

**5. தொழில் நுட்பக் காரணி**

அரச காரணியைப் போலவே குறிக்கப்பட்ட நிறுவனத்தின் தொழில்நுட்பச் சூழலும் மிக முக்கியமானதாகக் கருதப்படாத போதிலும் அடுத்த திட்டமிடல் காலப்பகுதியில் நிறுவனம் பிரதான தொழில்நுட்ப ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். எனவே, தொழில்நுட்ப ஆபத்தினைக் குறைக்கக்கூடிய வகையில் நிறுவனத்தின் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

## 6.0 முடிவுரை

சிறந்த தந்திரோபாயங்களை உருவாக்கிக் கொள்வதற்கு சூழலுடன் நிறுவனம் சிறந்த பொருத்தத்தைப் பேணவேண்டியது அவசிய மாகும். வினைத்திறன் வாய்ந்த வெளிச்சூழல் ஆய்வொன்றின் மூலம் சூழல் காரணிகளால் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள், ஆபத்துக்கள் என்பதனைக் கண்டுகொள் வதுடன் வாய்ப்புக்களாயின் அவற்றைப் பயன்படுத்தத்தக்கதாகவும் ஆபத்துக்களாயின் அவற்றை முறியடிக்கத்தக்கவாறும் தந்திரோ பாயங்களை உருவாக்கிக் கொள்ள முடிகின்றது. இவ்வாறான வெளிச்சூழல் ஆய்வினை மேற்கொள்வதற்கான சிறப்பான ஒரு அணுகுமுறையாகவே மூன்று கட்ட அணுகு முறையென்பது காணப்படுகின்றது. இம் மூன்று கட்ட முறையானது உள்ளக ஆய்விலும் பிரயோகிக்கப்படக் கூடியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புக்கள்


1. Day, G.S ; Analysis for Strategic Market Decisions, West Publishing Company, 1986, pp.21 -26
2. Porter, M ; Competitive Strategy , New York Free Press, 1980, pp 41-44
3. Proctor, R.A & Pearson G.J; Strategy and Marketing, Keele University Publication 1994, pp.14 - 16.
4. Asael, H; Consumer Behaviour and Marketing Action Kent Publishing, 1987, pp. 56 - 58 .
5. Palmer, A & Worthington, I; "The Business and Marketing Environment", McGraw Hill, 1992, pp. 78 - 81.
6. Doyale, P; Marketing Management and Strategy, Prentive Hall, 1994, pp. 24 - 29
7. Ries, A & Trout, J; Positioning : The Battle of Mind, New york McGraw Hill, 1981, pp. 31 - 33.
8. Hartlgy, R.F; Marketing Mistakes, New York Wiley Publishing Ltd, 1992, pp.27 - 29
9. Von Hippel, E; The Sources of Innovation Oxford University Press, 1988, pp.46-49




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகளில் தெரிவிக்கப்படும் கருத்துகளுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர். அவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினதோ அல்லது சிந்தனை ஆசிரியர் குழுவினதோ கருத்தாக அமையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CINTANAI The Journal of the Faculty of Arts, University of Jaffna.

## *CONTENTS*

1.Tobacco Trade Between Jaffna Peninsula and Malayalam (Kerala State)

K.Arunthavarjah

2.Dreams - Hindus View

K.Anton Dias

3.Proverbs in Hinduism

R.Kailainathan

4.The Novels by the Sri Lankan Tamil Expatriates

S.Yogarajah

5."*Cattiyam Ceytal*" - A Belief Among the Jaffna Tamils

K.Visakaruban

6.An Analysis on the Problem of Evil in Philosophy

N.Gnanakumaran

7.Problems of Pre - School Children and the Ways of Handling Them.

J.Rasanayagam

8. Bronze of Goddess Parvati found in Sri Lanka

S.Krishnarajah

9.Distributional Pattern of Hindu Population - Cultural and Demographic View

K.Kugabalan

10.*Srila Sri Arumuganavalar's Ilakkanac curukkam* - An Introduction

P.Sengathirselvan.

11. The Role of the External Environmental Analysis in the Strategy Making Process

K. Thevarajah

Vol. XIV July, 2004 No. 2

Harikanan Printers,424, K.K.S Road, Jaffna, T.P:021-222 2717,4590123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org